# TNPSC தேர்வுப் பெட்டகம்

## நடப்பு நிகழ்வுகள் - செப்டம்பர் 2021

www.tnpscthervupettagam.com












SHANKAR IAS ACADEMY™
The Best IAS Academy In South India SINCE 2004

Plot No. 1742, I Floor, 18th Main Road,
Anna Nagar, Chenai - 600 040.
Phone: 04-26216435, 4353 3445, Mobile: 9444166435
www.shankariasacademy.com

# உள்ளடக்கம்

TNPSC துளிகள் ..... 14
தமிழ்நாடு செய்திகள் ..... 25
குழந்தை எழுத்தாளர்களுக்கு கவிமணி விருது ..... 25
மாரியப்பன் தங்கவேலு – வெள்ளிப் பதக்கம் ..... 25
எதிர்கால இயங்குதிறன்களுக்கான பூங்கா மற்றும் ஆடைத் தயாரிப்பு பூங்கா – தமிழக அரசு ..... 25
வலிமை மற்றும் நெய்தல் ..... 26
டாக்டர் ஜெ. ஜெயலலிதா பல்கலைக்கழகச் சட்டம் ..... 27
இளந்தளிர் இலக்கியத் திட்டம் ..... 27
தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் பெயர் மாற்றம் ..... 27
வ.உ.சி. அவர்களின் 150வது பிறந்த தினம் ..... 28
அயோத்தி தாச பண்டிதர் – மணி மண்டபம் ..... 29
சமூக நீதி நாள் ..... 29
புதிய தொல்பொருள் தளங்கள் ..... 30
தொழிலாளர்களுக்கு இருக்கைகள் - தமிழ்நாடு ..... 30
கல்வி அமைச்சகத்தின் அறிவிப்புகள் ..... 30
சுல்தான் அகமது இஸ்மாயில் குழு ..... 31
சென்னை உயர்நீதிமன்றத்திற்குப் புதிய நீதிபதிகள் ..... 32
மணிமேகலை மொழிபெயர்ப்பு ..... 32
புலமைப் பித்தன் ..... 32
பொருநை அகழ்வாராய்ச்சி ..... 33
குடியுரிமை திருத்தச் சட்டம் 2019 என்பதற்கு எதிரான தீர்மானம் ..... 35
மன்னார் வளைகுடாவில் உள்ள ஆற்றல் தீவு ..... 36
இந்து சமய அறநிலையத்துறையின் அறிவிப்புகள் ..... 36
IREDA மற்றும் TANGEDCO ..... 37
தகவல் மற்றும் விளம்பரத் துறை அறிவிப்புகள் ..... 38
கீழடி – வெள்ளி நாணயம் ..... 38
இந்தியாவை விட்டு வெளியேறும் ஃபோர்டு நிறுவனம் ..... 39
முதல் தலைமுறைப் பட்டதாரி ..... 39
சிறந்த ஆற்றல் மேலாண்மைக்கான தேசிய விருது ..... 40
மகாகவி தினம் ..... 40
மருத்துவக் கல்வித் தேர்வு – NEET ..... 41
தமிழ்நாடு பட்டியலினச் சாதியினர் மற்றும் பட்டியலினப் பழங்குடியினர் ஆணையம் ..... 42
பட்டியல் சாதியினருக்கான நல்வாழ்வு ..... 43
நகைக்கடன் தள்ளுபடி ..... 43
தமிழக உள்ளாட்சித் தேர்தல் ..... 43

காவல் துறை – புதிய அறிவிப்புகள் ........ 43
கல்மரம் ........ 44
மனிதவள மேலாண்மைத்துறை அறிவிப்புகள் ........ 44
புதிய சிலைகள் ........ 44
தமிழகத்தின் முதல் மரபணுப் பகுப்பாய்வு ஆய்வகம் ........ 45
நில அபகரிப்பு – ஜாமீன் பெற இயலாத குற்றம் ........ 45
அமர்நாத் ராமகிருஷ்ணா ........ 46
தமிழ்நாடு சட்டங்கள் ........ 46
தமிழக சட்டசபை கூட்டத் தொடர் ........ 47
பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழு ........ 47
சமூக நீதி தினம் ........ 47
ரவி – தமிழக ஆளுநர் ........ 48
பனைமர மேம்பாட்டுத் திட்டம் ........ 48
பிரான்சிஸ் கிருபா ........ 49
வகுப்புவாத அரசாணை 1921 ........ 49
இந்திரா பார்த்தசாரதி சாகித்திய அகாடமி ........ 50
மொழி பெயர்ப்பிற்கான சாகித்திய அகாடமி பரிசு ........ 51
‘கேலோ இந்தியா’ போட்டியில் சிலம்பம் ........ 51
கீழடி அகழாய்வு ........ 52
சட்டப்பேரவை மாற்றுத் தலைவர்கள் ........ 52
திருக்குறள் மொழிபெயர்ப்பு ........ 52
கி.ரா. விருது ........ 53
மீன்வளத்துறை மற்றும் விவசாயத் துறை அறிவிப்புகள் ........ 53
மக்கள் நல்வாழ்வுத் துறை அறிவிப்புகள் ........ 54
தமிழ் வளர்ச்சித்துறை அறிவிப்புகள் ........ 54
L. முருகன் – பா.ஜ.க. மாநிலங்களவை வேட்பாளர் ........ 55
டிரான்ஸ்கிச்சன் ........ 55
வெகுஜன உணவு வழங்கல் திட்டம் ........ 56
AK ராஜன் குழு ........ 56
பவித்ரா வெங்கடேஷ் ........ 57
காந்தி வேட்டி நூற்றாண்டு விழா ........ 57
1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் – தமிழ்நாடு ........ 58
முழுவதும் சூரிய சக்தியால் இயங்கும் மத்திய இரயில் நிலையம் ........ 59
ஜல் ஜீவன் திட்டம் – தமிழ்நாடு ........ 59
தேசியச் செய்திகள் ........ 60
உலகளாவிய அஞ்சல் ஒன்றியம் – இந்தியா ........ 60
அசோக் மற்றும் 7 இதர ITDC தங்கும் விடுதிகள் ........ 61
POSHAN Maah ........ 61
நீரஜ் சோப்ரா மைதானம் ........ 62

BH – தொடர் ........ 62
பிரதான் மந்திரி ஜன்தன் யோஜனா ........ 63
கடலோர காவற்படைக் கப்பல் – விக்ரஹா........ 64
ஆளில்லா விமானங்களுக்கான தாராளமயமாக்கப்பட்ட விதிகள் ........ 64
கோழிப் பண்ணைகளுக்கான புதிய விதிகள் ........ 65
பதவிப் பிரமாணம் ........ 66
இணையச் சந்தை மின்னணு வளம் (e-source) ........ 67
கடற்படைப் பயிற்சி – இந்தியா மற்றும் அல்ஜீரியா ........ 67
உலகின் மிக உயரமான திரையரங்கம் ........ 68
தேசிய ஓய்வூதிய முறையில் பதிவு வயது அதிகரிப்பு ........ 68
ரேபோ பாங்கின் 2021 உலகளாவிய 20 முன்னணி பால் பொருள் தயாரிப்பு நிறுவனங்களின் பட்டியல் ........ 69
உலகின் மிக உயரமான வாகனப் பயணத்திற்கு ஏதுவான சாலை ........ 69
தாலிபன் உடனான முதல் சந்திப்பு – இந்தியா ........ 69
NABARD மற்றும் NABFOUNDATION அமைப்பின் புதிய முன்னெடுப்பு ........ 70
மிதக்கும் ஏ.டி.எம் – தால் ஏரி ........ 70
ககன்யான் செயல்பணி பெட்டக உந்துவிசை அமைப்பு ........ 71
தனியார் துறையினால் தயாரிக்கப்பட்ட கையெறி குண்டுகள் ........ 71
சாத் முன்னெடுப்பு ........ 72
லடாக் – அரசு விலங்கு மற்றும் பறவை ........ 72
சபாத் பயிற்சி – 200 இராணுவ வீரர்கள் ........ 72
புதிய பொதுச் செயலாளர் ........ 73
பாதுகாப்புத் துறைக் கண்காட்சி 22 ........ 73
ISKCON நிறுவனரின் 125 பிறந்த நாள் ........ 74
ராயல் உறை கூழ்மம் (ஜெல்லி) ........ 75
சரியான உணவை உட்கொள்தல் நிலையம் ........ 75
சிக்சக் பர்வ் 2021 ........ 76
President's Colour விருது – இந்தியக் கடற்படை விமானப் போக்குவரத்துப் பிரிவு ........ 77
மந்தன் 2021 ........ 77
Y Break செயலி ........ 78
கிசான் களஞ்சியம் ........ 78
டெல்லி சட்டப் பேரவையில் சுரங்கப் பாதை ........ 79
கர்பி அமைதி ஒப்பந்தம் ........ 79
ஆயுஷ் ஆப்கே த்வார் ........ 80
ஒருங்கிணைந்த நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு பாதுகாப்பு தொகுதி ........ 80
நெகிழி ஒப்பந்தம் ........ 81
CORBEVAX ........ 81
பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரிவினருக்கான இட ஒதுக்கீட்டிற்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பு 82
இந்தியாவின் முதல் கடற்பசு காப்பகம் ........ 82

FSDC யின் 24 வது கூட்டம் ..... 83
டோக்கியோ பாராலிம்பிக்கில் இந்தியா ..... 84
அசோக்குமார் டாண்டன் குழு ..... 85
செய்தி ஒளிபரப்பாளர் கூட்டமைப்பு ..... 86
கொசு மீன் ..... 86
முற்காப்பு மருந்துகள் ..... 86
தேசிய ஆசிரியர் விருது 2021 ..... 86
சிக்சக் பர்வ் – 2021 ..... 87
தேசிய கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசைக் கட்டமைப்பு 2021 ..... 87
இந்தியாவில் புதிய ஆளுநர்கள் ..... 89
மரபணு மாற்றப்பட்ட சோயா (அவரை) மாவு ..... 90
டோக்லிசுமாப் ..... 91
சுவச் சர்வேக்சன் கிராமீன் 2021 ..... 91
PRANA தளம் ..... 92
கோயில் நிலங்களுக்கு கடவுளே உரிமையாளர் ..... 92
ராபி பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை ..... 92
உள்ளூர் மக்களுக்கு 75% இட ஒதுக்கீடு ..... 93
சிறந்த சுற்றுலா கிராமங்கள் ..... 93
NSCN ஒப்பந்தம் ..... 94
அவசரத் தரையிறக்க வசதி ..... 94
வான்வழிப் போக்குவரத்திற்கான 100 நாள்கள் திட்டம் ..... 95
உயிரி செங்கல்லால் ஆன இந்தியாவின் முதல் கட்டிடம் ..... 95
பாராளுமன்றச் சபாநாயகர்களின் 5வது உலக மாநாடு ..... 95
ஆத்ம நிர்பர் பாரத் முனையங்கள் ..... 96
இந்திய ரயில்வேயின் மாற்று எரிபொருள் அமைப்பு ..... 97
ஆசிய மேம்பாட்டு வங்கி – ஜார்க்கண்ட் ..... 97
Eyes in sky திட்டம் ..... 97
MRSAM ..... 98
தேசிய சிறுபான்மையினர் ஆணையம் ..... 98
டிஜிட்டல் மக்கள் தொகை கடிகாரம் ..... 99
நிபா வைரஸ் ..... 99
'Medicine from the Sky' திட்டம் ..... 100
குஜராத் மாநிலத்தின் புதிய முதல்வர் ..... 101
இருப்பிடச் சான்றிதழ் ..... 101
100% தடுப்பூசி வழங்கீடு ..... 101
இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ..... 102
இந்திய கடற்படைக் கப்பல் துருவ் ..... 102
தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம் ..... 103
பிரதான் மந்திரி ஆதர்ஷ் கிராம் யோஜனா ..... 103

ஜெயந்த் திறந்தவெளி நிலக்கரிச் சுரங்கம் ........ 104
உடான் திட்டம் ........ 104
வாகனங்களுக்கான வேக வரம்பு ........ 105
கீதா சமோதா ........ 105
சன்சத் தொலைக்காட்சி ........ 106
தேசியக் குற்றவியல் ஆவணக் காப்பகம் – அறிக்கை ........ 106
இந்தியாவில் குற்றங்கள் விகிதம் ........ 107
ஸ்புட்னிக் லைட் ........ 108
உலகளாவிய புத்த மாநாடு ........ 109
சூன்யா பிரச்சாரம் ........ 109
iRASTE ........ 110
ஹைப்போடோன்ட் சுறாக்கள் ........ 110
சூர்யா கிரண் ........ 111
உலகின் மிகப்பெரிய விரைவுச் சாலை ........ 112
வீடு தேடி நீதி வழங்கீடு ........ 112
குப்தர் காலத்தியக் கல்வெட்டுகள் ........ 112
நகர்ப்புறத் திட்டமிடல் திறனில் சீர்திருத்தங்கள் ........ 113
என்சிசி கமிட்டி ........ 113
இரயில் கௌசல் விகாஸ் யோஜனா ........ 114
NIELIT ........ 114
2.50 கோடி கோவிட்-19 தடுப்பூசிகள் வழங்கீடு ........ 114
கோர்டெலியா கடற்பயண நிறுவனம் – IRCTC ........ 115
SPIN திட்டம் ........ 116
Shining Sikh Youth of India புத்தகம் ........ 116
பாம்புக்கடி பற்றிய விழிப்புணர்விற்கான தேசிய உச்சி மாநாடு ........ 117
ப்ளூ ஃப்ளாக் (நீலக்கொடி) சான்றிதழ் ........ 117
ஐ.ஏ.எஸ். & ஐ.பி.எஸ். அதிகாரிகள் அயல்நாட்டு உயரதிகாரிகளின் பரிசுகள் ........ 118
நாகா அமைதிப் பேச்சுவார்த்தைக்கான மத்திய அரசின் இடையீட்டுப் பேச்சாளர் பொறுப்பிலிருந்து R.N. ரவி ராஜினாமா ........ 118
மாறுபக்க கொழுப்பற்ற இந்தியா – 2022 ........ 119
தேசியப் பாதுகாப்பு அகாடமியில் பெண்கள் சேர்க்கையை ஒத்தி வைக்க கோரிய மத்திய அரசின் மனு தள்ளுபடி – உச்சநீதிமன்றம் ........ 120
தாவர இனங்கள் கண்டுபிடிப்பு – 2020 ........ 120
செறிவூட்டப்பட்ட அரிசியின் உட்கரு ........ 120
நடமாடும் இசைப் பள்ளி பேருந்து ........ 121
சமுத்திர சக்தி ........ 121
சர்வதேச அணுசக்தி முகமையின் வெளியுறவுத் தணிக்கையாளர் ........ 122
தேசிய ஒற்றைச் சாளர அமைப்பு ........ 122
அர்ஜுன் பீரங்கி கொள்முதல் ........ 123

கல்வி அமைச்சகத்தின் குழுத் தலைவர் – K. கஸ்தூரிங்கன் ....124
விவசாயிகளுக்கான 12 இலக்க தனித்துவ அடையாள அட்டை ....124
உலகின் மிக உயரமான மின்சார வாகன மின்னேற்ற நிலையம் ....124
கோவிட்-19 தொற்றினால் நிகழும் ஒவ்வொரு உயிரிழப்பிற்கும் ரூ.50,000 உதவித் தொகை ....125
“தடுப்பூசி மைத்ரி” திட்டம் ....125
ஐக்கிய நாடுகள் உச்சி மாநாட்டில் இந்தியாவின் தூய ஆற்றலுக்கான உறுதிப்பாடுகள் ....125
எண்ணெய் வித்துக்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலை ....126
தேசியக் கூட்டுறவு மாநாடு ....127
அரசின் உதவித் தொகை பெறும் உரிமை – ஒரு அடிப்படை உரிமை அல்ல ....127
புற்றுநோய் பதிவுகள் மீதான இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழக அறிக்கை ....128
குலாப் புயல் ....128
4வது இந்திய அமெரிக்க சுகாதாரப் பேச்சு வார்த்தை ....129
ஆகாஷ் பிரைம் ....129
சுவச் சர்வேக்சன் ....130
**சர்வதேசச் செய்திகள் ....130**
இருபாலர் இணைக் கல்வி முறைக்கு எதிர்ப்பு – தாலிபன்கள் ....130
பெண்களுக்கு அதிகாரமளித்தல் மீதான G20 அமைச்சர்கள் மாநாடு ....130
இடா புயல் ....130
ஆப்கானிஸ்தான் மீதான தீர்மானம் (1267) ஏற்பு – UNSC ....131
FDA அனுமதி பெற்ற முதல் கோவிட்-19 தடுப்பு மருந்து ....132
BIMSTEC நாடுகளின் வேளாண் நிபுணர்களின் 8வது சந்திப்பு ....132
Mu மாற்றுரு ....133
புதிய வளர்ச்சி வங்கி – புதிய உறுப்பினர்கள் ....134
மத்திய ஆப்பிரிக்காவின் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் 2020 ....134
இந்தியப் பெருங்கடலுக்கான முதலாவது சாலை – இருப்புப் பாதைப் போக்குவரத்து இணைப்பு ....135
சர்வதேச விண்வெளி மையத்தின் அங்கமாக தொடரும் ரஷ்யா ....135
உலக சமூகப் பாதுகாப்பு அறிக்கை 2020-2022 ....136
உலகின் தலைசிறந்த தலைவர்கள் பட்டியல் - தி மார்னிங் கன்சல்ட் ....137
பஞ்ச்ஷிர் பள்ளத்தாக்கு ....137
ரஷித் ரோவர் ....138
கிரீன் விசா (பசுமை நுழைவு இசைவு) - ஐக்கிய அரபு அமீரகம் ....138
இன்ஸ்பிரேஷன்4 ....139
G20க்கான இந்தியாவின் ஷெர்பா ....139
இந்தியா மற்றும் போர்ச்சுகல் இடையே ஒப்பந்தம் ....140
ஆப்கானிஸ்தானின் புதிய அமைச்சரவை ....141
அப்தலா மற்றும் சொபெர்னா ....141
13வது BRICS உச்சி மாநாடு ....142
2021PJI ....143
மொராக்கோவுடனான கடற்பயிற்சி ....143

SHANKAR IAS ACADEMY
THE BEST IAS ACADEMY IN SOUTH INDIA SINCE 2004

TNPSC THERVU PETTAGAM
Information is a Blessing
A Shankar IAS Academy Initiative


கெகர்டாக் அவன்னார்லெக் (Qeqertaq Avannarleq) .......... 144
2021 ஆம் ஆண்டு சர்வதேச இளம் வயது சூழல்சார் வீரர் விருது .......... 144
அண்டார்டிகாவின் பழமையான பனி .......... 145
ASOSAI .......... 145
ஓர்கா – ஐஸ்லாந்து .......... 146
Gaofen-5 02 .......... 146
13வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் கருத்துரு .......... 146
2+2 அமைச்சர் உரையாடல் .......... 147
தேஜாஸ் சவுகான் .......... 147
இங்கிலாந்து – மின்சார வாகன மின்னேற்றிகள் .......... 148
உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசியப் பிராந்திய அலுவலகம் .......... 148
ஆப்பிரிக்க உணவுப் பரிசு 2021 .......... 148
பருவநிலை நடவடிக்கை மற்றும் நிதி திரட்டல் பேச்சுவார்த்தை .......... 149
தோஷன் ஆங் சங்க் .......... 149
ஈரான் மற்றும் சர்வதேச அணுசக்தி முகமை நிறுவனம் .......... 150
பருவநிலை மாற்றம் குறித்த கிரவுண்ட்ஸ் வெல் அறிக்கை .......... 150
கோவிட் தொற்றிற்கான 3வது தவணை தடுப்பூசி .......... 151
வங்காளதேசம் – 2050 ஆம் ஆண்டுக்குள் கடல் மட்ட உயர்வு .......... 151
சூடான் உடனான கடற்படைப் பயிற்சி .......... 152
QS உலகளாவிய முழுநேர முதுகலை வணிக மேலாண்மைக் கல்வி தரவரிசை .......... 152
QUAD சந்திப்பு .......... 153
இந்தியா-ஆப்பிரிக்கா பாதுகாப்புப் பேச்சுவார்த்தை .......... 154
எஸ்சிஓ உச்சி மாநாடு .......... 154
'அமைதித் திட்டம்' 2021 - 6வது பதிப்பு .......... 155
உலக ஓசோன் தினத்திற்கான கருத்துரு (16 செப்டம்பர்) .......... 156
முதல் பெண் தலைவர் – UNCTAD .......... 156
முதலாவது அனைத்து சுற்றுலா குழுவினர் – "பூமியைச் சுற்றும் பயணம்" .......... 157
TIME இதழின் 100 மிகவும் செல்வாக்குமிக்க நபர்கள் பட்டியல் .......... 158
AUKUS .......... 158
விரிவான மற்றும் முற்போக்கான பசிபிக் எல்லை கடந்த கூட்டிணைவு ஒப்பந்தம் – சீனா .......... 159
கைலாஷ் சத்யார்த்தி .......... 159
எபோலா .......... 160
பல பில்லியன் டாலர் வாய்ப்பு: உணவு அமைப்புகளை மாற்ற விவசாய ஆதரவை மீண்டும் பயன்படுத்துதல் .......... 161
ICAO .......... 161
உலகப் புத்தாக்கக் குறியீட்டுத் தரவரிசை 2021 .......... 162
தூதர்களை திரும்ப அழைக்கும் பிரான்சு – AUKUS பாதுகாப்பு ஒப்பந்தம் .......... 163
உலகின் மிக வயதான ஒத்த இரட்டையர்கள் .......... 163
உணவு தானிய உற்பத்தி – இந்தியா .......... 164

மின்சார வாகனங்களுக்கான மின்னேற்றி ....164
2050 ஆம் ஆண்டுக்குள் 3வது மிகப்பெரிய இறக்குமதி நாடாக மாற உள்ள இந்தியா ....164
உலக சுகாதார அமைப்பின் புதிய காற்றுத் தர நிர்ணய விதிமுறைகள் ....165
உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர் ....166
உணவுப் பாதுகாப்பு ஒப்பந்தம் ....166
சர்வதேசப் புத்தாக்க நிறுவன மையங்கள் தரவரிசை 2021 ....166
உலக தானக் குறியீடு – 2021 ....167
நிலவிலுள்ள பள்ளத்திற்கு மேத்யூ ஹென்சனின் பெயர் ....167
பழமையான மனித கால்தடங்கள் ....168
QUAD நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாடு – 2021 ....168
ஐக்கிய நாடுகள் பொதுச் சபை – பிரதமர் மோடி ....169
உலக சுகாதார நிதிக்கான உலக சுகாதார அமைப்பின் தூதர் ....169
AUKUS அமைப்பில் இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் இணைப்பினை அமெரிக்கா நிராகரிப்பு ..170
தன்பாலினத் திருமணம் – சுவிட்சர்லாந்து ....170
பொருளாதாரச் செய்திகள் ....171
நேரடிக் காப்பீட்டுத் தரகு நிறுவனம் – போன்பே ....171
FY22 நிதியாண்டின் முதல் காலாண்டில் இந்தியாவின் GDP வளர்ச்சி ....171
Bill Desk நிறுவனத்தினை வாங்கும் Payu நிறுவனம் ....172
CBDC திட்டம் ....172
புதிய தலைமை நிறுவனங்கள் உரிமம் மீதான குழு ....173
சிறப்பு கடன் வாங்கும் உரிமைகள் – இந்தியாவிற்கான இடஒதுக்கீடு ....173
மாற்று முதலீட்டு நிதி ....174
டிஜிட்டல் கட்டண மதிப்பீடு அட்டை ....175
PM – KUSUM திட்டம் ....175
தினை திட்டம் ....175
PMGDISHA ....175
UPI மற்றும் Paynow ....176
மாநிலங்களின் கடன் ....176
பயிர்த்தாளடி எரிப்பு மீதான மானியம் ....176
டிஜிட்டல் இந்தியா நிலப்பதிவுகளை நவீனமாக்கல் திட்டம் ....177
ஒழுங்குமுறைக் கட்டமைப்பின் கீழ் கூட்டிணைவு ....177
இராணுவத் தலைவர்களின் மாநாடு ....178
கண்காணிக்கப்படும் விமான நிலையம் ....178
ஈக்வினாக்ஸ் ....179
வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அறிக்கை – 2021 ....179
உணவு விநியோகம் – சரக்கு மற்றும் சேவை வரி ....179
'வணிகத்தை எளிதாக்கல்' தரவரிசை ....180
வாராக் கடன் வங்கி (Bad bank) அமைப்பு ....180
இந்தியாவின் முதல் யூரோ பசுமைப் பத்திரம் ....181

45வது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் ............ 182
ஆசியாமணி 2021 கருத்துக் கணிப்பு ............ 182
அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள் ............ 183
அதிவேகமாகச் சுற்றி வரும் குறுங்கோள் ............ 183
இனக் கலப்பு புரத அடிப்படையிலான கோவிட்-19 தடுப்பு மருந்து ............ 183
தாவர அடிப்படையிலான உலகின் முதல் திறன்மிகு காற்று சுத்திகரிப்பான் – “Ubreathe Life” ............ 184
மிகப்பெரிய அறிவியல் பூர்வ ஒத்துழைப்பு ............ 185
IISC மற்றும் ISRO – நுண்ணுயிர் பரிசோதனைகள் ............ 185
தொற்று மற்றும் எப்பொழுதும் நிலவும் தொற்று குறித்த நுண்ணறிவிற்கான மையம் ............ 186
சந்திரயான் – 2 ............ 186
PgSIT ............ 187
ஆசியாவின் முதலாவது கலப்பினத் தன்மை கொண்ட பறக்கும் மகிழுந்து (கார்) ............ 187
இருளாற்றல் ............ 188
குவாண்டம் தொழில்நுட்ப மையம் ............ 188
சுற்றுச்சூழல் செய்திகள் ............ 189
ஈயங்கலந்த பெட்ரோல் ஒழிப்பு ............ 189
காற்றுத்தர வாழ்வு குறியீட்டு அறிக்கை ............ 190
செந்நிற காதுடைய ஆமை ............ 191
இந்தியக் கடற்கரையின் அரிப்பு ............ 191
வானிலை, காலநிலை மற்றும் நீர் போன்றவற்றால் ஏற்படும் தீவிர நிலைகளினால் நிகழும் இறப்பு மற்றும் பொருளாதார இழப்புகளுக்கான தொகுப்பு (1970-2019) ............ 191
ஆசியா மற்றும் பசிபிக்கில் மணல் மற்றும் தூசிப் புயல்கள் போன்ற ஆபத்துகள் மீதான மதிப்பீடு . 192
இந்தியத் தொழில் கூட்டமைப்பு - National Energy Leader விருது ............ 193
அச்சுறுத்தப்பட்டப் பிரிவிலிருக்கும் உயிரினங்களின் சமீபத்திய சிவப்புப் பட்டியல் ............ 194
மகரந்த நாள்காட்டி ............ 195
சுறாக்களின் நிலை ............ 195
மெல்லிய மரபல்லி – கோவா ............ 195
மிகப்பெரிய திறந்தவெளி படர்ச்செடி வளர்ப்பிடம் ............ 196
கார்பன்டை ஆக்சைடைச் சேகரிக்கும் இந்தியாவின் முதல் ஆலை ............ 197
முரா – திராவா – தனுபே ............ 197
கருங்கரிம (கார்பன்) உமிழ்வு – சர்வதேச கடல்சார் அமைப்பு ............ 198
பருவநிலை குறிகாட்டிகள் மற்றும் நிலையான மேம்பாட்டு அறிக்கை ............ 198
யுனெஸ்கோவின் 33வது கூட்டம் ............ 199
பருவநிலை மாற்றம் 2021 : இயற்பியல் அறிவியல் அறிக்கை ............ 200
பெருங்கடல் நிலை அறிக்கை – 5 ............ 201
அறிவியலில் ஒருங்கிணைவு 2021 – உலக வானிலை அமைப்பு ............ 202
மாநிலச் செய்திகள் ............ 202
விமானப்படைப் பாரம்பரிய மையம் ............ 202
உலகத்தரமிக்க அறிவியல் நகரம் – மகாராஷ்டிரா ............ 203

ஐக்கிய நாடுகள் உலகப் புவிசார் தகவல் மாநாடு ....................203
மிகுந்த மொழிசார் வேற்றுமை ....................204
இணையதள விளையாட்டு – கர்நாடகா....................205
கர்பி அங்லாங் அமைதி ஒப்பந்தம்....................205
வதன் பிரேம் யோஜனா ....................205
சத்தீஸ்கர் குடியிருப்புச் சான்றிதழ்....................205
மாதிரி குத்தகைச் சட்டம் ....................206
மாநில மீன் – சிக்கிம்....................206
ஹதே மிளகாய் மற்றும் நமேங்லாங் மாண்டரின் ஆரஞ்சு ....................206
பஞ்சாப் மாநிலத்தின் புதிய முதல்வர் ....................207
ஐக்கிய ஜனநாயகக் கூட்டணி அரசு – நாகாலாந்து....................208
ராஜஸ்தான் கட்டாய திருமணப் பதிவு (திருத்தம்) மசோதா, 2021 ....................208
இணையதள விளையாட்டுகளைத் தடை செய்யும் மசோதா - கர்நாடகா....................208
நாகாலாந்தின் இனிப்பு வெள்ளரி....................209
அசாம் மாநிலத்தின் ஜுடிமா எனும் அரிசி மது – புவிசார் குறியீடு ....................209
பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள் ....................210
டாக்டர் பசந்த் குமார் மிஷ்ரா....................210
ரமோன் மகசேசே விருது....................211
டோர்ஜே ஆங்சுக்....................211
கடல் ஆமை வளங்காப்பிற்கான உலக விருது ....................212
ஆண்டின் சிறந்த பறவை புகைப்படக் கலைஞர் ....................213
திறன் மேம்பாட்டிற்கான சங்கத்தின் சிறந்த விருது 2021 ....................213
ஆற்றல் தலைமை விருது – 2021 ....................214
யாமின் ஹசாரிகா - வுமன் ஆஃப் சப்ஸ்டேன்ஸ் விருது ....................215
சுவாமி பிரம்மானந்த் விருது 2021 ....................215
தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருது 2021 ....................216
யுனெஸ்கோ எழுத்தறிவுப் பரிசு ....................216
ராஜ்பாஷா கீர்த்தி புரஸ்கார் ....................217
பேராசிரியர் S.K. ஜோஷி சிறந்த ஆய்வக விருது ....................217
எர்த்ஷாட் பரிசு....................217
படைப்பிரிவுத் தலைவர் S.V. சரஸ்வதி....................218
73வது எம்மி விருது 2021....................219
இமாலயத் திரைப்பட விழா – 2021 ....................219
நிலையான மேம்பாட்டு இலக்கு முன்னேற்ற விருது....................220
விமானப் படைத் தலைவர் – விவேக் ராம் சௌத்ரி ....................221
உலகளாவிய இலக்குகள் விருது 2021 ....................221
2020-21 ஆம் ஆண்டின் சிறந்த சட்டமன்ற உறுப்பினர் ....................222
CSIR புத்தாக்க விருது ....................222
ஹுனர்பாஸ் விருதுகள்....................223

விளையாட்டுச் செய்திகள் ....223
நொய்சியல் சர்வதேச ஓபன் 2021 சதுரங்கப்போட்டி ....223
டோக்கியோ பாராலிம்பிக்ஸ் 2020 – புதிய தகவல்கள் ....224
நிசாத் குமார் – வெள்ளிப் பதக்கம் ....224
பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் இரண்டு பதக்கங்களை வென்ற முதல் இந்திய பெண்மணி ....225
பிரவீன் குமார் – ஆசிய சாதனை ....225
50 மீ கலப்பு பிஸ்டெல் – டோக்கியோ பாராலிம்பிக்ஸ் ....226
ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்சிப் – இளநிலை & இளையோர் பதிவு ....226
துராந்த் கோப்பை ....227
கின்னஸ் உலக சாதனை – ரொனால்டோ ....227
அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி 2021 ....228
ஜஸ்கரன் மல்ஹோத்ரா ....228
2022 ஆம் ஆண்டின் ஆசியப் போட்டிகள் ....229
விராட் கோலி ....230
70வது கிராண்ட் மாஸ்டர் – R. ராஜா ரித்விக் ....230
மகளிருக்கான 1500 மீட்டர் ஓட்டப்பந்தயம் – தேசிய சாதனை ....231
ஆசிய ஸ்னூக்கர் சாம்பியன்சிப் 2021 ....231
பிரைம் கைப்பந்து போட்டி ....232
பிரவீன் சித்திரவேல் ....232
ரஷ்ய கிராண்ட் பிரிக்ஸ் 2021 ....233
2021 உலக வில்வித்தை சாம்பியன்சிப் ....233
முக்கிய தினங்கள் ....234
உலக தேங்காய் தினம் – செப்டம்பர் 02 ....234
தேசிய ஊட்டச்சத்து வாரம் 2021 – செப்டம்பர் 01 முதல் 07 வரை ....234
கழுகு குறித்த விழிப்புணர்விற்கான சர்வதேச தினம் – செப்டம்பர் 04 ....234
சர்வதேச தொண்டு தினம் - செப்டம்பர் 05 ....235
ஆசிரியர் தினம் - செப்டம்பர் 05 ....235
நீல வானத்திற்கான சுத்தமான காற்று சர்வதேச தினம் - செப்டம்பர் 07 ....236
சர்வதேச எழுத்தறிவு தினம் – 8 செப்டம்பர் ....236
உணவு பதப்படுத்தும் வாரம் - செப்டம்பர் 6 முதல் 12 வரை ....236
இயன்முறை சிகிச்சை தினம் – 8 செப்டம்பர் ....237
கல்வியை ஆபத்திலிருந்துப் பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் – 9 செப்டம்பர் ....237
உலகத் தற்கொலை தடுப்பு தினம் – 10 செப்டம்பர் ....238
தேசிய வனத் தியாகிகள் தினம் – 11 செப்டம்பர் ....238
தெற்கு தெற்கு ஒத்துழைப்புக்கான சர்வதேச தினம் – 12 செப்டம்பர் ....239
சர்வதேச நிரலியாளர்கள் தினம் – 13 செப்டம்பர் ....240
இமாலய தினம் – செப்டம்பர் 09 ....240
உலக மின்சார வாகன தினம் – செப்டம்பர் 09 ....240
உலக முதலுதவி தினம் – செப்டம்பர் 11 ....240

இந்தி தினம் – செப்டம்பர் 14 ........ 241
சர்வதேச ஜனநாயக தினம் – செப்டம்பர் 15 ........ 241
பொறியாளர்கள் தினம் – செப்டம்பர் 15 ........ 242
ஓசோன் அடுக்கினைப் பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் – செப்டம்பர் 16 ........ 242
உலக நோயாளிப் பாதுகாப்பு தினம் – செப்டம்பர் 17 ........ 243
உலக நிணநீர் நாளப் புற்றுநோய் விழிப்புணர்வு தினம் – செப்டம்பர் 15 ........ 243
சர்வதேச சம ஊதிய தினம் – 18 செப்டம்பர் ........ 243
உலகத் தண்ணீர் கண்காணிப்புத் தினம் – 18 செப்டம்பர் ........ 244
சர்வதேச சிவப்புப் பாண்டா தினம் – 18 செப்டம்பர் ........ 244
சர்வதேசப் பல்கலைக் கழக விளையாட்டுத் தினம் – 20 செப்டம்பர் ........ 245
இரயில்வே பாதுகாப்புப் படைத் தினம் – 20 செப்டம்பர் ........ 245
57வது இந்தியத் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தினம் – 15 செப்டம்பர் ........ 246
36வது சர்வதேச கடற்கரையைச் சுத்தப் படுத்துதல் தினம் – 18 செப்டம்பர் ........ 246
உலக மூங்கில் தினம் – 18 செப்டம்பர் ........ 247
சர்வதேச அமைதி தினம் – 21 செப்டம்பர் ........ 247
உலக மறதிநோய் (அல்சைமர்) தினம் – 21 செப்டம்பர் ........ 247
பூஜ்ஜிய உமிழ்வு தினம் – செப்டம்பர் 21 ........ 248
பாம்புக்கடி பற்றிய விழிப்புணர்விற்கான சர்வதேச தினம் – செப்டம்பர் 19 ........ 248
சர்வதேச காதுகேளாதோர் வாரம் – செப்டம்பர் 20 முதல் 26 வரை ........ 248
உலக ரோஸ் தினம் – 22 செப்டம்பர் ........ 249
உலக காண்டாமிருக தினம் – 22 செப்டம்பர் ........ 249
உலக மகிழுந்து அற்ற தினம் – 22 செப்டம்பர் ........ 250
இலையுதிர் கால சம பகல் இரவு நாள் – 23 செப்டம்பர் ........ 250
சர்வதேச சைகை மொழிகள் தினம் – 23 செப்டம்பர் ........ 250
வானிஜ்ய சப்தா – செப்டம்பர் 20 முதல் 26 வரை ........ 251
நாட்டு நலப்பணித் திட்ட தினம் – 24 செப்டம்பர் ........ 251
உலக மருந்தாளுநர் தினம் – 25 செப்டம்பர் ........ 252
அந்த்யோதயா திவாஸ் – 25 செப்டம்பர் ........ 252
ஐரோப்பிய மொழிகள் தினம் – 26 செப்டம்பர் ........ 253
உலக ஆறுகள் தினம் 2021 – 26 செப்டம்பர் ........ 253
உலக சுற்றுச்சூழல் நலன் தினம் – 26 செப்டம்பர் ........ 253
உலக கருத்தடைத் தினம் – 26 செப்டம்பர் ........ 254
அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றத்தின் 80வது நிறுவன தினம் – 26 செப்டம்பர் ........ 254
உலக சுற்றுலா தினம் – 27 செப்டம்பர் ........ 255
உலக வெறிநாய்க்கடி நோய் (ரேபிஸ்) தினம் – 28 செப்டம்பர் ........ 255
உணவு இழப்பு மற்றும் சேதம் பற்றிய சர்வதேச விழிப்புணர்வு தினம் – 29 செப்டம்பர் ........ 256
உலக இருதய தினம் – 29 செப்டம்பர் ........ 256
உலக கடல்சார் தினம் – 30 செப்டம்பர் ........ 256
சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் – 30 செப்டம்பர் ........ 257

இதரச் செய்திகள் ........ 258
உலகப் பல்கலைக்கழக தரவரிசை 2022 ........ 258
ஹருன் இந்தியா வருங்கால யூனிகார்ன் பட்டியல் – 2021 ........ 258
ZEEL மற்றும் SPNI ........ 259

# TNPSC துளிகள்

- ஸ்பேஸ் X நிறுவனமானது சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு எறும்புகள், அவகாடோ மற்றும் மனித அளவிலான எந்திர ஆயுதக் கை போன்றவற்றை விண்ணில் செலுத்தியது.
  - இது 10 ஆண்டுகளில் நாசாவிற்காக ஸ்பேஸ் X நிறுவனம் அனுப்பிய 23வது திட்டம் ஆகும்.
- உத்தரப் பிரதேச மாநில அரசானது மக்களவைப் பாராளுமன்ற உறுப்பினர் மேனகா காந்தியின் தொகுதியான சுல்தான்பூர் நகரின் பெயரை கடவுள் ராமரின் மகனுடைய பெயரின் நினைவாக குஷ் பவன்பூர் என மாற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளது.
- சர்வதேச ஆப்பிரிக்க வம்சாவளி மக்கள் தினமானது 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 அன்று முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது.
  - உலகெங்கிலும் புலம்பெயர்ந்து வாழும் ஆப்பிரிக்க மக்களின் அசாதாரணப் பங்களிப்புகளை ஊக்குவிப்பதையும், ஆப்பிரிக்க வம்சாவளியினருக்கு எதிராக நிலவும் அனைத்து வகையான பாகுபாடுகளை நீக்குவதையும் ஐக்கிய நாடுகள் அமைப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பஞ்சாபில் உள்ள அமிர்தசரஸ் என்னுமிடத்தில் அமைந்த ஜாலியன் வாலாபாக் ஸ்மரக்கின் (Jallianwala Bagh Smarak) புதுப்பிக்கப்பட்ட வளாகத்தினை பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.
  - ஜாலியன் வாலாபாக் படுகொலை நிகழ்ந்த 102வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் விதமாக இது திறந்து வைக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் 3 வகை முதலை இனங்களும் காணப்படும் ஒரே மாவட்டமாக ஒடிசாவின் கேந்திரப் பாரா (Kendrapara) மாவட்டம் மாறியுள்ளது.
  - உப்புநீர், ஆற்றுநீர் (கரியால்) மற்றும் சதுப்பு நில முதலை ஆகியவை இங்கு காணப் படுகின்றன.
- லதாம்ஸ் உள்ளான் குருவி என்பது ஆண்டிற்கு இரு முறை ஜப்பானிலிருந்து ஆஸ்திரேலியா வரை இடை விடாமல் பயணிக்கும் ஒரு நீர்ப்பறவை (கடற்கரைப் பறவை) ஆகும்.
  - ஜப்பானிய உள்ளான் குருவி எனவும் அழைக்கப்படும் இப்பறவையின் அறிவியல் பெயர் கல்லினாகோ ஹார்ட்விக்கி (Gallinago hardwickii) ஆகும்.
- BRICS நாடுகளின் தேசியப் பாதுகாப்பிற்கான பொறுப்பு வாய்ந்த ஒரு உயர் பிரதிநிதிகளின் 11வது சந்திப்பானது சமீபத்தில் நடத்தப் பட்டது.
  - 2021 ஆம் ஆண்டு BRICS உச்சி மாநாட்டிற்கு இந்தியா தலைமை வகிப்பதன் காரணமாக இந்தியாவின் தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் இந்தச் சந்திப்பினைத் தலைமையேற்று நடத்தினார்.
- இலங்கையிலுள்ள தனியார் வங்கிகளில் நிதிசார் இறக்குமதிகளுக்கான அந்நியச் செலாவணி கையிருப்பு இல்லாததனால் நாட்டில் நிலவும் உணவுப் பற்றாக்குறை காரணமாக நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.
- நடைபெற்று வரும் டோக்கியோ பாராலிம்பிக்ஸ் 2020 போட்டிகளில் P1 ஆடவர் 10 மீ ஏர் பிஸ்டல் SH1 இறுதிப் போட்டியில் இந்தியத் துப்பாக்கிச் சுடும் வீரர் சிங் ராஜ் அதானா வெண்கலப் பதக்கத்தினை வென்றுள்ளார்.

- சீனாவைச் சேர்ந்த சாவ் யாங் மற்றும் ஹுவாங் சிங் ஆகியோர் முறையே தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்றனர்.

❖ விளாடிவோஸ்டாக் எனுமிடத்தில் நடைபெற உள்ள 6வது கிழக்கத்தியப் பொருளாதார மன்ற உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக ரஷ்யா செல்லும் அரசுமுறை மற்றும் வணிகப் பிரதிநிதிகளைப் பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீர் சிங் பூரி தலைமையேற்று வழி நடத்துவார்.

- ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் அவர்களும் பங்கேற்க உள்ள இந்த கிழக்கத்தியப் பொருளாதார மன்றத்தின் முழுநீள மாநாட்டில் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் காணொலி வாயிலாக கலந்து கொள்வார்.

❖ டோக்கியோ பாராலிம்பிக்ஸ் 2020 போட்டிகளின் ஆடவர் உயரம் தாண்டுதல் T63 போட்டியில் சரத் குமார் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.

- இவர் பீகாரின் முசாஃபர்பூரில் பிறந்தவராவார்.

❖ 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 01 முதல் கோவா மாநிலம் தனது குடிமக்களுக்கு 16,000 லிட்டர் வரை இலவசமாக தண்ணீர் வழங்கும் இந்தியாவின் முதல் மாநிலமாக மாறியுள்ளது.

- இது 'இலவச தண்ணீரைப் பெற தண்ணீரைச் சேமியுங்கள்' (Save Water to Get Free Water') என்ற திட்டத்தின் கீழ் அறிமுகப் படுத்தப்பட்டது.

❖ செக் குடியரசிலுள்ள ஒலோமக் என்ற இடத்தில் நடைபெற்ற செக் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் இறுதிப் போட்டியில் உக்ரைனைச் சேர்ந்த யெவ்ஹென் ரிஷ்சேபா என்ற வீரரை (Yevhen Ryshchepa) தோற்கடித்து இந்தியாவின் முன்னணி டேபிள் டென்னிஸ் வீரர் G. சத்தியன் வெற்றி பெற்றுள்ளார்.

- இது 2016 ஆம் ஆண்டு பெல்ஜியம் ஓபன் மற்றும் 2017 ஆம் ஆண்டு ஸ்பானிஸ் ஓபன் ஆகிய போட்டிகளில் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து ITTF சேலஞ்சர் போட்டியில் பெற்ற இவரது 3வது வெற்றியாகும்.

❖ செவ்வாய்க் கிரகத்தின் மீது சுற்றித் திரியும் ஒரு விண்கலமான நாசாவின் பெர்சீவரென்ஸ் விண்கலமானது அக்கிரகத்திலிருந்து முதலாவது பாறை மாதிரிகளைப் புவிக்கு அனுப்புவதற்காக வெற்றிகரமாக சேகரித்துள்ளது.

- இதன் மூலம் பண்டைய வாழ்க்கை பற்றி இது வெளிப்படுத்தும் என நம்பப் படுகிறது.

❖ இமாச்சலப் பிரதேச மாநிலமானது தனது அனைத்துப் பதின்ம வயதினருக்கும் கோவிட்-19 தடுப்பு மருந்தின் முதல் தவணையைச் செலுத்திய முதல் மாநிலமாக மாறியுள்ளது.

❖ சவுதி அரேபியாவின் முதலாவது மகளிர் இராணுவ வீரர் படைப்பிரிவினர் ஆயுதப் படைகள் மகளிர் களப்பயிற்சி மையத்திலிருந்து பட்டம் பெற்றுள்ளனர்.

❖ 2022 ஆம் ஆண்டானது தென் கிழக்காசிய நாடுகள் கூட்டமைப்பிற்கும் (ASEAN - Association of Southeast Asian Nations) இந்தியாவிற்கும் இடையேயான 30 ஆண்டு காலத் தொடர்பினைக் குறிக்கிறது.

- மேலும் இந்த ஆண்டு ASEAN – இந்தியா நட்பு வருடமாகவும் நிர்ணயிக்கப் பட்டு உள்ளது.

❖ 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 27 அன்று 1 கோடிக்கும் மேலான அளவில் கோவிட் 19 தடுப்பூசிகளைச் செலுத்திய வகையில் இந்தியா தனது கோவிட் தடுப்பு மருந்து இயக்கத்தில் ஒரு புதிய மைல்கல்லை அடைந்துள்ளது.

- இது ஒற்றை நாளில் அதிக எண்ணிக்கையில் தடுப்பூசி செலுத்தப்பட்ட ஒரு தினமாகும்.

❖ கோவிட் C..I.2. மாற்றுருவானது முதன்முதலில் தென் ஆப்பிரிக்காவில் கண்டறியப் பட்டுள்ளது.

- C..I.2. மாற்றுருவானது அதிக தொற்றுப் பரவல் மிக்கதாகவும் தடுப்பூசிகளால் வழங்கப் படும் எதிர்ப்புத் திறனிலிருந்து விடுபடும் திறன் உள்ளதாகவும் இருக்கும் என ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

❖ 2020 ஆம் ஆண்டு பாராலிம்பிக்ஸ் போட்டியில், இந்தியாவின் சிறந்த வில்வித்தை வீரர் ஹர்வீந்தர் சிங் ஆடவருக்கான தனிநபர் வளை வில்வித்தைப் பிரிவில் (recurve open) வெண்கலப் பதக்கத்தினை வென்றுள்ளார்.

- 31 வயதான இவர் பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் பதக்கம் வென்ற இந்தியாவின் முதல் வில்வித்தை வீரராவார்.

❖ 2020-21 ஆம் ஆண்டு சர்வதேச பருவநிலை உச்சி மாநாட்டின் ஓர் அங்கமாக ஒரு முக்கிய மாநாட்டினை இந்தியா நடத்த உள்ளது.

- தூய ஆற்றலை (clean energy) நோக்கிய இந்தியாவின் பரிமாற்றத்திற்கான ஒரு பேச்சுவார்த்தையைக் கட்டமைப்பதற்காக இது நடத்தப்பட உள்ளது.

❖ இந்தியப் பொதுத்துறை நிறுவன பொறியியலாளர்கள் நிறுவனத்தின் முதல் பெண் தலைவராகவும் அதன் மேலாண்மை இயக்குநராகவும் வர்த்திகா சுக்லா என்பவர் பொறுப்பேற்றார்.

❖ சாகித்திய அகாதெமியால் வழங்கப் படுகின்ற பால சாகித்திய புரஷ்கர் விருதிற்குத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள பாலபாரதிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்தார்.

- மரபாச்சி சொன்ன ரகசியம் என்ற ஒரு தமிழ் படைப்பிற்காக இவருக்கு இந்த விருதானது வழங்கப் படுகிறது.

❖ சட்டமன்ற உறுப்பினர்/பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக பதிவாகியுள்ள குற்றவியல் வழக்குகளை திரும்பப் பெறும் முன், அது தொடர்பான உயர் நீதிமன்றத்தின் அனுமதியை அரசு பெற வேண்டும் என உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

❖ சமீபத்தில் ஹங்கேரியின் புதாபெஸ்டில் நடைபெற்ற 2021 ஆம் ஆண்டு உலக டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வளர்ந்து வரும் இணை வீரர்களான G. சத்தியன் மற்றும் மணிகா பத்ரா ஆகியோர் கலப்பு இரட்டையர் பிரிவில் பட்டத்தை வென்று உள்ளனர்.

❖ சீனா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளில் உற்பத்தியாகும் அல்லது அங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படும் அடர்த்தியான இழைகள் மீதான பொருள் குவிப்பு வரியினை அரசு சமீபத்தில் ரத்து செய்துள்ளது.

- மூங்கில் இழை தவிர்த்து அடர் இழைகள் (viscose staple fibre) மீதான பொருள் குவிப்பு வரியை அரசு ரத்து செய்துள்ளது.

❖ சிங்கப்பூர்-இந்தியா கடல்சார் இருதரப்புப் பயிற்சியின் (சிம்பெக்ஸ்) 28 வது பதிப்பு தென் சீனக் கடலில் நடைபெற்றது.

❖ ஆசிய வளர்ச்சி வங்கியானது தமிழ்நாட்டில் நகர்ப்புற ஏழைகளுக்கான நீடித்த ஒரு வீட்டுவசதித் திட்டத்திற்காக வேண்டி 150 மில்லியன் டாலர் மதிப்பிலான ஒரு கடனுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

- மேற்கு இரயில்வேயானது முதலாவது டெக்ஸ்டைல் சரக்கு ரயிலை குஜராத்தின் சூரத்திலிருந்து பீகாரின் முசாபர்பூர் வரை இயக்குகிறது.
- கோவிட் -19 தொற்றுக்கு எதிராக ஒரு கோடி தடுப்பூசிகளைச் செலுத்திய முதல் மாவட்டமாக மும்பை உருவெடுத்துள்ளது.
- ஜப்பானின் பிரதமர் யோஷிஹிடே சுகா அவர்கள், அடுத்து நடக்கவிருக்கும் லிபரல் டெமாக்ரடிக் கட்சியின் தலைவர் பதவிக்கான போட்டியில் பங்கேற்க மாட்டார்.
    - ஷின்சோ அபே ராஜினாமா செய்த பிறகு இவர் 2020 ஆம் ஆண்டில் அந்த நாட்டின் பிரதமராக நியமிக்கப்பட்டார்.
- விலங்குகள் மரபணு வளங்களுக்கான தேசியப் பணியகமானது மண்டா வகை எருமை இனத்தை இந்தியாவில் காணப்படும் 19வது தனித்துவமான எருமைகளின் இனமாக அங்கீகரித்துள்ளது.
    - இது கிழக்குத் தொடர்ச்சி மலை மற்றும் ஒடிசாவின் கோராபுட் பகுதியில் உள்ள பீடபூமியில் காணப்படுகிறது.
- விமானப் படையின் தலைமைத் தளபதி ஏர் மார்ஷல் ஆர்.கே.எஸ் பதௌரியா ஹவாயில் உள்ள ஹிக்காம் - ஜாயிண்ட் பேஸ் பேர்ல் துறைமுகத்தில் மூன்று நாள் நடைபெறும் பசிபிக் விமானப் படையின் தலைமை தளபதிகள் கருத்தரங்கு 2021 எனும் நிகழ்வில் கலந்து கொண்டார்.
    - இந்த நிகழ்வு "Enduring Cooperation towards Regional Stability" (பிராந்திய நிலைப்புத் தன்மையை நோக்கி ஒத்துழைப்பை நீட்டிப்பது) என்ற கருத்துருவைக் கொண்டு நடைபெற்றது.
- ஆஸ்திரேலியாவில் இந்தியக் கடற்படை மற்றும் ராயல் ஆஸ்திரேலியக் கடற்படை ஆகியவற்றுக்கு இடையேயான இருதரப்புக் கடற்படைப் பயிற்சியான AUSINDEX என்ற பயிற்சியின் 4வது பதிப்பு தொடங்கியது.
- எல் சால்வடார் நாடானது பிட்காயினை அதிகாரப்பூர்வ நாணயமாக அறிவித்த உலகின் முதல் நாடாகும்.
- காலநிலை செயல் திட்டத்தினைச் செயல்படுத்தும் முதல் தெற்காசிய நகரம் மும்பை ஆகும்.
    - C40 நகரங்களின் காலநிலை தலைமைக் குழுவில் மும்பை இணைந்ததைத் தொடர்ந்து இது நடைபெற்றது.
- சத்துணவு மையத்தில் சமையல் செய்வோர் மற்றும் சமையல் உதவியாளர்களின் ஓய்வு பெறும் வயதானது 58 வயதிலிருந்து 60 வயதாக உயர்த்தப்படும் என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- 1200 ஆண்டுகள் பழமையான துர்கா தேவியின் சிற்பம் ஒன்று ஜம்மு-காஷ்மீர் மாநிலம் ஜீலம் நதியில் ஸ்ரீநகரில் உள்ள பாண்ட்ரேதன் என்னுமிடத்தில் இருக்கும் இருந்து மீட்கப்பட்டது.
- உத்தரகாண்ட் மாநில ஆளுநர் பேபி ராணி மௌரியா தனது ராஜினாமா கடிதத்தை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்களிடம் சமர்ப்பித்தார்.
- சென்னை அண்ணா சாலையில் கருணாநிதியின் சிலை நிறுவப்படும் என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.
    - அண்ணா சாலையில் நிறுவப்பட்ட கருணாநிதியின் சிலை 1987 ஆம் ஆண்டு

டிசம்பர் 24, அன்று எம்.ஜி.ராமச்சந்திரனின் மறைவைத் தொடர்ந்து சேதப் படுத்தப் பட்டது.

- ❖ மெக்சிகோ நாட்டின் உச்ச நீதிமன்றமானது கருக்கலைப்பினை சட்ட விரோதம் அற்றதாக அறிவித்து, கருவுறுதலைத் தடுக்கும் செயல்முறைகள் மீதான குற்றவியல் தண்டனைகளை அரசியலமைப்பிற்கு முரணானதாக அறிவித்தது.
- ❖ இரயில்கள் தாமதமாக வந்தால் பயணிகளுக்கு இந்திய இரயில்வே இழப்பீடு வழங்க வேண்டுமென உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- ❖ அசாம் மாநில அரசானது 2030 ஆம் ஆண்டுக்குள் புதைபடிம எரிபொருள்களில் இயங்கும் வாகனங்களின் பயன்பாட்டினைப் படிப்படியாக குறைப்பதற்காக மின்சார வாகனக் கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ❖ இந்தியாவின் மிக உயரமான காற்றுச் சுத்திகரிப்புக் கோபுரமானது சண்டிகர் ஒன்றியப் பிரதேசத்தில் திறக்கப்பட்டுள்ளது.
  - இது நாட்டின் மிக உயரமான காற்றுச் சுத்திகரிப்பு கோபுரமாகும்.
- ❖ சீனா ஆப்கானிஸ்தான் நாட்டிலுள்ள தாலிபன் அரசினை ஆதரித்து ஆப்கானிஸ்தான் நாட்டிற்காக 31 மில்லியன் அமெரிக்க டாலர்களை நிதி உதவியாக வழங்கியுள்ளது.
- ❖ முதலாவது T20 உலகக் கோப்பையை வென்ற இந்திய அணியின் தலைவராக இருந்த முன்னாள் இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் M.S. தோனி வரவிருக்கும் 2021 ஆம் ஆண்டு T20 உலகக் கோப்பைப் போட்டிக்கான அணியை வழிநடத்துபவராக (team mentor) இந்திய அணியில் மீண்டும் இணைந்துள்ளார்.
- ❖ புவி அறிவியல் துறையில் இந்தியா மற்றும் ரஷ்யா ஆகியவற்றுக்கு இடையேயான ஒத்துழைப்பு மீதான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ நடிகை தமன்னா பாட்டியா 'Back to the Roots' என்ற தனது புத்தகத்தினை வெளியிட்டு உள்ளார்.
  - பிரபல வாழ்க்கைமுறைப் பயிற்சியாளர் லூக் கௌடின் ஹோ என்பவருடன் இணைந்து இவர் இப்புத்தகத்தினை எழுதியுள்ளார்.
- ❖ ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஷான் டெயிட் (Shaun Tait ) புதுச்சேரி கிரிக்கெட் அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக நியமிக்கப் பட்டு உள்ளார்.
  - இவர் சமீபத்தில் ஆப்கானிஸ்தான் அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளராக 5 மாதக் காலத்திற்கு நியமிக்கப்பட்டார்.
- ❖ உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட இந்தியாவின் முதலாவது அதிக சாம்பல் கூறுகளைக் கொண்ட நிலக்கரி வாயுவாக்கல் செயல்முறையை அடிப்படையாகக் கொண்ட மெத்தனால் உற்பத்தி ஆலையானது ஹைதராபாத்திலுள்ள பாரத் கனரக மின்சாரப் பொருட்கள் உற்பத்தி நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தில் திறக்கப்பட்டுள்ளது.
  - இதற்கு நிதி ஆயோக், இந்தியப் பிரதமர் அலுவலகம் மற்றும் நிலக்கரி அமைச்சகம் ஆகியவற்றின் முன்னெடுப்பினால் அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையினால் நிதி உதவி வழங்கப்படுகிறது.
- ❖ அரசியலமைப்பின் 275வது சட்டப்பிரிவின் கீழ் 17 மாநிலங்களுக்கு ரூ.9871 கோடி மதிப்பிலான வருவாய்ப் பற்றாக்குறை மானியத்தின் 6வது மாதத் தவணையினை நிதி அமைச்சகம் வழங்கியது.

  - இவை 15வது நிதி ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் 2021-22 ஆம் ஆண்டுக்கு 17 மாநிலங்களுக்கு வழங்கப்பட்டது.

- ❖ டோக்கியோ விளையாட்டுகளுக்கு வீரர்களை அனுப்பத் தவறியதால், சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியானது (ஐஓசி) வட கொரியாவை 2022 ஆம் ஆண்டின் இறுதி வரை போட்டிகளில் பங்கேற்பதில் இருந்து தடை விதித்துள்ளது.
  - சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் இந்த முடிவானது வட கொரியாவால் பெய்ஜிங் குளிர்கால விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க முடியாது என்பதைத் தெரிவிக்கிறது.
- ❖ பாஜகவின் தலைவரான விஜய் ரூபானி அவர்கள் குஜராத் மாநில முதல்வர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.
- ❖ இந்தியாவும் ஜப்பானும் தங்கள் ஆறாவது கடல்சார் விவகாரம் சார்ந்த ஒரு பேச்சு வார்த்தையை நடத்தியது.
  - இதன் முதல் பதிப்பானது 2013 ஆம் ஆண்டில் புது தில்லியில் நடத்தப் பட்டது.
- ❖ எழுத்தாளர் சூசன்னா கிளார்க் என்பவர் 'பிரனேசி' என்ற அவருடைய ஒரு புதினத்திற்காக 2021 ஆம் ஆண்டின் புனைவுக் கதைக்கான மகளிர் பரிசினை வென்று உள்ளார்.
- ❖ இந்திய குழிப் பந்தாட்ட வீரரான ஜீவ் மில்கா சிங் மதிப்புமிக்க 10 ஆண்டுகால துபாய் நுழைவு இசைவுச் சீட்டினைப் பெற்ற உலகின் முதல் தொழில்முறைக் குழிப்பந்தாட்ட வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- ❖ மஹேந்திரா & மஹேந்திரா நிறுவனத்தின் முன்னாள் மேலாண்மை இயக்குநர் பவன் குமார் கோயங்கா, இந்திய தேசிய விண்வெளி மேம்பாட்டு அங்கீகார மையத்தின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- ❖ உத்தரப் பிரதேச மாநிலத்தின் அலிகார் எனுமிடத்தில் அமைக்கப்பட உள்ள ராஜா மஹேந்திர பிரதாப் சிங் மாநிலப் பல்கலைக்கழகத்திற்கு பிரதமர் மோடி அவர்கள் அடிக்கல் நாட்டியுள்ளார்.
  - ஆரிய பீஷ்வா என்றும் அறியப்படும் பிரதாப் சிங் 1911 ஆம் ஆண்டு நடைபெற்ற பால்கன் போரில் அங்கம் வகித்தவராவார்.
- ❖ அதிகாரிகள் தரநிலையிலான பணிகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டினை 30 சதவீதத்திலிருந்து 40 சதவிகிதமாக தமிழக அரசு உயர்த்தியுள்ளது.
- ❖ Colexion என்ற ஒரு மிகப்பெரிய உரிமம் பெற்ற பரிமாற்றம் செய்ய இயலாத அனுமதித் தளமானது தனது முறையான தொடக்கத்தினை அறிவித்துள்ளது.
  - Colexion என்பது விளையாட்டு, பொழுதுபோக்கு மற்றும் கலை ஆகிய துறைகளுக்கான பரிமாற்றம் செய்ய இயலாத அனுமதி வழங்கும் ஒரு தளமாகும்.
- ❖ சுவர்ணிம் விஜய் வர்ஸ் மஷால் (அ) வெற்றி தீபமானது அருணாச்சலப் பிரதேசம் மாநிலத்திலுள்ள தஹூங் எனுமிடத்தை வந்தடைந்தது.
  - 1971 ஆம் ஆண்டு இந்திய-பாகிஸ்தான் போரில் பெற்ற வெற்றியின் 50வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் இந்த வெற்றி தீபமானது நாடு முழுவதும் கொண்டு செல்லப்பட்டது.
- ❖ உச்சநீதிமன்றமானது ஒரு பணியாளர் தன்னைக் குறிப்பிட்ட இடத்திற்கு மாற்றுமாறு வலியுறுத்த இயலாது என்றும், தேவையைக் கருத்தில் கொண்டு முதலாளி மட்டுமே ஊழியர்களை இடம் மாற்ற இயலும் என்றும் தீர்ப்பளித்துள்ளது.

- ஹைதராபாத்தைச் சேர்ந்த விண்வெளி தொழில்நுட்பப் புத்தாக்க நிறுவனமான ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் (Skyroot Aerospace) நிறுவனம், இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்துடன் முறையான ஒப்பந்தத்தில் ஈடுபட்ட முதல் தனியார் நிறுவனமாக மாறியுள்ளது.
  - ஸ்கைரூட் ஏரோஸ்பேஸ் நிறுவனமானது விண்வெளிக்குச் சிறிய செயற்கைக் கோள்களை ஏந்திச் செல்லக் கூடிய விக்ரம் ரக ராக்கெட்டுகளைக் கட்டமைத்து வருகிறது.
- பா.ஜ.க பாராளுமன்ற உறுப்பினர் சுப்ரமணிய சுவாமி தாம் எழுதிய இந்தியாவில் மனித உரிமைகள் மற்றும் தீவிரவாதம் என்று தலைப்பிடப்பட்ட ஒரு புத்தகத்தை வெளியிட்டார்.
- மேற்கு ஒடிசாவில் நௌகாய் ஜுஹார் (Nuakhai Juhar) எனப்படும் விவசாயத் திருவிழா கொண்டாடப்பட்டது.
  - இது இப்பருவத்தின் புதிய நெற்பயிர் பருவக் காலத்தை வரவேற்கும் விதமாக மேற்கு ஒடிசா மற்றும் தெற்கு சத்தீஸ்கர் பகுதி மக்களால் கொண்டாடப்படும் ஒரு பயிர்த் திருவிழாவாகும்.
- ஜோமாட்டோ நிறுவனத்தின் இணை நிறுவனர் கௌரவ் குப்தா அந்நிறுவனத்தில் அவர் ஆற்றியப் பணியிலிருந்து விலகியுள்ளார்.
- Paytm என்ற பணவழங்கீட்டு வங்கி நிறுவனமானது டெல்லி மெட்ரோ ரயில் நிறுவனக் கழகத்துடன் இணைந்து நாட்டின் முதல் FastTag அடிப்படையிலான மெட்ரோ வாகன நிறுத்த வசதியை நிறுவியுள்ளது.
- தெலுங்கானா அரசானது காலோஜி நாராயண ராவ் அவர்களின் 100வது பிறந்த நாளான செப்டம்பர் 09 ஆம் தேதியினை "தெலுங்கானா மொழி தினமாக" அறிவித்து உள்ளது.
- ஒரு கால பூஜை நடத்தப் படும் ஆலயங்களின் (ஒரு நாளைக்கு ஒரு முறை மட்டுமே பூஜைகள் நடத்தப் படும்) 12,959 அர்ச்சகர்கள் மற்றும் பட்டாச்சாரியர்களுக்கு தலா ரூ.1000 மாதாந்திர ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தினை முதல்வர் ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.
- தமிழ்நாடு மெர்க்கன்டைல் (வணிகம்) வங்கியானது (Tamilnadu Mercantile Bank) தனது 100வது நிறைவு ஆண்டினை கொண்டாடியது.
  - 1921 ஆம் ஆண்டில் தூத்துக்குடியில் நாடார் வங்கியாக தொடங்கப்பட்ட இந்த வங்கியின் பெயர் 1962 ஆம் ஆண்டில் தமிழ்நாடு வணிக வங்கி எனப் பெயர் மாற்றப் பட்டது.
- தொலைத்தொடர்பு துறையில் தன்னிச்சையான வசதி மூலம் 100% அந்நிய நேரடி முதலீட்டினை அனுமதிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.
- "சமூக நீதி" என்ற புதிய ஒரு பாடத் திட்டமானது சென்னைப் பல்கலைக்கழகத்தில் அடுத்தக் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்படும்.
- தமிழ்நாடு திறந்தவெளிப் பல்கலைக்கழகத்தில் "அண்ணாவின் தமிழியம்" என்ற ஒரு புதிய குறுகிய காலப் படிப்பானது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- BRICS நாடுகளின் வரி ஆணையங்களின் தலைவர்களுடைய ஒரு சந்திப்பானது இந்தியாவின் தலைமையின் கீழ் நடத்தப் பட்டது.
  - இது "கோவிட் – 19 தொற்றினால் ஏற்பட்ட சவால்களுக்கு மத்தியிலும் இந்த டிஜிட்டல் சகாப்தத்திலும் வரி நிர்வாகத்தின் வணிகச் செயல்முறைகளை மறு வரையறை செய்தல்" என்ற பரந்த ஒரு கருத்துருவுடன் இந்தச் சந்திப்பு நடத்தப் பட்டது.

- பேரிடர் அபாயக் குறைப்பு மற்றும் மேலாண்மைத் துறையில் ஒத்துழைப்பு குறித்து இத்தாலி நாட்டுடனான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- MyGovIndia தளமானது இந்தியப் புத்தாக்க நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பத் தொழில் முனைவோர்களுக்காக “கோளரங்கப் புதுமை சவாலை” (Planetarium Innovation Challenge) தொடங்கியுள்ளது.
- கலிபோர்னியாவில் ஏற்பட்ட இரண்டு காட்டுத் தீயானது சிக்வோயா தேசியப் பூங்காவினூடே (Sequoia National Park) பரவி வருகின்றது.
  - அமெரிக்காவின் சியரா நெவாடா உலகின் மிகப்பெரிய மரத்தின் வாழ்விடமாக உள்ளது.
- நாகாலாந்து மாநிலத்தின் முதலாவது மற்றும் இந்தியாவின் 61வது இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்கா மையமானது கொஹிமாவில் திறக்கப்ப ட்டது.
- ஹங்கேரி நாடானது பிட்காயின் முறையை நிறுவியவரான சதோஷி நாகமோட்டோ (Satoshi Nakamoto) என்பவரின் உருவச் சிலையை புதாபெஸ்ட் என்னுமிடத்தில் நிறுவி உள்ளது.
- நிதி ஆயோக் அமைப்பானது இந்தியாவிலுள்ள 112 உயர் லட்சிய மாவட்டங்களிலுள்ள மாணாக்கர்களுக்கு இலவசக் கல்வியை வழங்குவதற்காக வேண்டி BYJU’S எனும் நிறுவனத்துடன் கை கோர்த்துள்ளது.
- Yahoo நிறுவனமானது டின்டர் (Tinder) நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியாக இருந்த ஜிம் லான்சோன் என்பவரை யாகூ (Yahoo) நிறுவனத்தின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக நியமித்துள்ளது.
- காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கேப்டன் அமரிந்தர் சிங் தனது பஞ்சாப் முதல்வர் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.
- 6வது பிரிக்ஸ் இளம் விஞ்ஞானிகள் மன்றத்தை இந்திய அறிவியல் மற்றும் தொழில் நுட்பத் துறையானது பெங்களூருவின் தேசிய மேம்பாட்டு ஆய்வுக் கழகத்துடன் இணைந்து நடத்தியது.
- பாரத் மிகுமின் நிறுவனமானது இந்தியாவின் மிகப்பெரிய மிதக்கும் சூரிய ஒளி மின்னழுத்த ஆலையை ஆந்திராவில் தொடங்க முடிவு செய்துள்ளது.
- 2022 ஆம் ஆண்டிற்குள் 175 ஜிகாவாட் அளவிற்குப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் திறன் மற்றும் 2030 ஆம் ஆண்டிற்குள் 450 ஜிகாவாட் அளவிற்குப் புதுப்பிக்கத் தக்க ஆற்றல் உற்பத்தித் திறன் என்ற ஒரு லட்சிய இலக்கை இந்தியா நிர்ணயித்துள்ளது.
- டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (டிசிஎஸ்) நிறுவனமானது 200 பில்லியன் டாலர் என்ற மதிப்பிலான சந்தை மூலதனத்தைத் தாண்டிய இரண்டாவது இந்திய நிறுவனம் ஆகும்.
  - 2020 ஆம் ஆண்டில், ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் இந்த மைல்கல்லைத் தாண்டிய முதல் இந்திய நிறுவனம் ஆகும்.
- இங்கிலாந்தைத் தளமாகக் கொண்ட ஒரு நிதி வெளியீட்டு இதழான யூரோமணி என்ற இதழால் டிபிஎஸ் வங்கியானது உலகின் சிறந்த வங்கி (தொடர்ந்து 4 வது முறை) என்று பெயரிடப்பட்டுள்ளது.
  - சிங்கப்பூரைத் தலைமையிடமாகக் கொண்ட டிபிஎஸ் வங்கியானது உலகின் சிறந்த டிஜிட்டல் வங்கி என்ற பெயரையும் பெற்றுள்ளது.

- அரசு மருத்துவமனைகளில் முதன்முறையாக தானியங்கி மருந்து தரும் இயந்திரங்கள் சென்னையில் ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை, பெரியார் நகர் புறநகர் அரசு மருத்துவமனைகளில் அமைக்கப் படவுள்ளது.
- இந்தியாவின் முதல் தானியங்கி மருந்து விற்பனை இயந்திரம் கோவையில் திறக்கப்பட்டுள்ளது.
- திருவண்ணாமலை அரசு கலைக்கல்லூரி கலைஞர் அரசு கலை கல்லூரி என மாற்றப்படும் என உயர்கல்வி அமைச்சர் பொன்முடி தமிழ்நாடு சட்டப்பேரவையில் தெரிவித்தார்
- காய்கறி கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரித்து பயன்படுத்தும் சிவகங்கை மாவட்டம் காஞ்சிரங்கால் ஊராட்சிக்கு பிரதமர் மோடி பாராட்டு தெரிவித்தார்.
- சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் முழு உறுப்பினராக ஈரான் நாடு அதிகாரப் பூர்வமாக இணைக்கப்பட்டது.
  - ஈரான் நாட்டினை இந்த அமைப்பின் ஒரு முழு உறுப்பினராக இணைப்பதற்கான முடிவானது தஜிகிஸ்தானின் துசான்பேவில் நடைபெற்ற சாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு தலைவர்களின் 21வது உச்சி மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.
- கனட நாட்டின் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மூன்றாவது முறையாக அந்நாட்டின் பிரதமர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.
  - இவர் 2015 ஆம் ஆண்டு முதல் பிரதமர் பொறுப்பினை வகித்து வருகிறார்.
- இந்தியாவைச் சேர்ந்த D. குகேஷ் நார்வே செஸ் ஓபன் 2021 போட்டியின் மாஸ்டர்ஸ் பிரிவில் வெற்றி பெற்றுள்ளார்.
- இந்திய நாட்டைச் சேர்ந்த ஸ்னூக்கர் வீரரான பங்கஜ் அத்வானி IBSF-6 ரெட் ஸ்னூக்கர் உலகக் கோப்பைப் போட்டியில் தனது 24வது உலக அளவிலான பட்டத்தினை வென்று உள்ளார்.
  - இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் நாட்டின் பாபர் மஸீஹ் என்பவரை வீழ்த்தி இவர் வெற்றி பெற்றார்.
- 2022 ஆம் ஆண்டில் பெய்ஜிங்கில் நடைபெற உள்ள ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் போட்டிகளுக்கான ஒரு அதிகாரப்பூர்வ முழக்கமானது “Together for a shared future” என்பதாகும்.
- ‘Batsman’ என்ற ஒரு சொற்கூறினைப் பாலினச் சமநிலையைக் குறிக்கும் வகையில் ‘Batter’ என்று MCC அமைப்பு மாற்றியுள்ளது.
  - MCC என்பதன் விரிவாக்கம் Marylebone Cricket Club என்பதாகும்.
- ஒடிசா மாநிலமானது கலிங்கா மைதானத்தில் ஆடவருக்கான ஹாக்கி ஜுனியர் உலகக் கோப்பைப் போட்டியை நடத்த உள்ளது.
  - இந்திய அணி வெற்றி பெற்ற 2016 ஆம் ஆண்டில் நடைபெற்றப் போட்டியை லக்னோ நடத்தியது.
- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய ஆணையத்தின் 3வது மாநில உணவுப் பாதுகாப்புக் குறியீட்டினை மத்திய அமைச்சர் மான்சுக் மாண்டவ்யா வெளியிட்டுள்ளார்.
  - இது உணவுப் பாதுகாப்பு தொடர்பான 5 அளவுருக்களின் அடிப்படையில் மாநிலங்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கான ஒரு குறியீடாகும்.

- 1961 ஆம் ஆண்டு வருமான வரிச் சட்டத்தின் விதிமுறைகளை நிதி அமைச்சகம் தளர்த்தியுள்ளது.
    - இது பட்டியலினப் பழங்குடியினர் சமூகத்தின் ஓர் உறுப்பினருக்கு பட்டியலிடப் பட்ட வங்கிகளினால் வழங்கப்படும் வட்டி வழங்கீடு மீதான வருமான வரிப் பிடித்தத்துடன் தொடர்புடையதாகும்.
- கோழிக்கோடு பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள கல்லூரிகளில் சேர விரும்பும் மாணவர்கள், தங்களது திருமணத்தின் போது வரதட்சணை கொடுக்கவோ, கேட்கவோ அல்லது ஏற்றுக் கொள்ளவோ மாட்டோம் என்ற அறிவிப்பில் கையெழுத்திட வேண்டும்.
- கோவிட்-19 வைரசின் டெல்டா மாற்றுருவானது உலகின் இதுவரையில் பரவலாக காணப்படும் ஒரு வகையாகும்.
    - இது ஆல்ஃபா, பீட்டா, காமா போன்ற பல்வேறு மாற்றுருக்களை விஞ்சியுள்ளது.
- வங்காளதேசத்தைச் சேர்ந்த ஃபைரூஸ் ஃபைசா பீதர் என்பவர் பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளையின் 2021 ஆம் ஆண்டு சேஞ்ச்மேக்கர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
    - தனிப்பட்ட அனுபவத்தின் மூலம் அல்லது தலைமைப் பதவியை பயன்படுத்தி மாற்றத்தை ஊக்குவித்த ஒரு நபருக்கு இந்த விருதானது அங்கீகாரம் அளிக்கிறது.
- நாசா நிறுவனத்தின் ஹப்பிள் தொலைநோக்கியானது 6 மிகப்பெரிய செயலற்ற அண்டங்களைக் கண்டறிந்துள்ளது.
    - இந்த அண்டங்களில், நட்சத்திரங்களை உருவாக்கத் தேவையான குளிர்ந்த ஹைட்ரஜன் வாயுவானது தீர்ந்து விட்டது.
- காதி மற்றும் கிராமத் தொழில்துறை ஆணையமானது முதன்முறையாக துசார் பட்டு நூல் உற்பத்தி மையத்தை அமைப்பதற்கான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு முன்னெடுப்பினைத் தொடங்கியுள்ளது.
    - இந்த மையமானது ஒடிசாவில் கட்டாக் மாவட்டத்தில் சௌதார் என்னுமிடத்தில் அமைக்கப்பட உள்ளது.
- தமிழக மாநிலத்தில் தொழில்முறைப் படிப்புகளுக்கான 7.5% இடஒதுக்கீட்டின் கீழ் தொழில்முறைப் படிப்புகளில் சேரும் மாணவர்களுடைய கல்விக் கட்டணத்தைத் தமிழக அரசே ஏற்கும்.
    - 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணாக்கர்கள் இந்தப் புதிய இட ஒதுக்கீட்டின் மூலம் பயன்பெறுவர்.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது செப்டம்பர் 26 ஆம் தேதியினை அணு ஆயுதங்களை ஒழிப்பதற்கான ஒரு சர்வதேச தினமாக அனுசரிக்கின்றது.
    - உலகளாவிய அணு ஆயுதக் குறைப்பினை உலக நாடுகள் ஒரு முன்னுரிமையாக மீண்டும் உறுதிப்படுத்த இந்த நாள் ஒரு வாய்ப்பை வழங்குகிறது.
- சீனாவின் மத்திய வங்கியானது இணைய சங்கேதப் பணப் பரிமாற்றங்களை சட்ட விரோதமாக அறிவித்துள்ளது.
- FASTER (மின்னணுப் பதிவுகளின் விரைவான மற்றும் பாதுகாப்பான பரிமாற்றம்) எனப்படும் மின்னணு அமைப்பினை உச்சநீதிமன்றம் அங்கீகரித்துள்ளது.
    - மின்னணு முறையில் அங்கீகரிக்கப்பட்ட நகல்களை நீதிமன்றத்திலிருந்து சிறைச் சாலைகளுக்கு மாற்ற இந்த FASTER அமைப்பானது பயன்படுத்தப் படும்.

- டெக்சாஸ், ஃப்ளோரிடா, நியூ ஜெர்சி, ஒஹாயோ மற்றும் மாசாசுசெட்ஸ் உள்ளிட்ட பல அமெரிக்க மாகாணங்கள் அக்டோபர் மாதத்தினை இந்துப் பாரம்பரிய மாதமாக அறிவித்துள்ளன.
  - இந்துத்துவமானது அதன் தனித்துவமான வரலாறு மற்றும் பாரம்பரியத்தின் மூலம் அமெரிக்காவிற்கு 'பெரிதும் பங்காற்றியுள்ளதாக' அவை கூறுகின்றன.
- மகளிர் உரிமைகளுக்கான ஆர்வலரும், பிரபல எழுத்தாளருமான பஞ்சாபின் கமலா பசின் என்பவர் புற்றுநோயுடனான தனது போராட்டத்தில் உயிரிழந்தார்.
  - புகழ்பெற்றக் கவிஞரும் எழுத்தாளருமான இவர் பாலினக் கோட்பாடு மற்றும் பெண்ணியம் குறித்து பல புத்தகங்களை எழுதியுள்ளார்.
- 99வது இராணுவப் பொறியியல் பணிகள் நிறுவன தினமானது 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 அன்று அனுசரிக்கப் பட்டது.
  - இராணுவப் பொறியியல் பணிகளானது பாதுகாப்புத் துறை அமைச்சகத்துடன் தொடர்புடைய அமைப்புகள் மற்றும் ஆயுதப் படைகளுக்கு பின்னணியிலான ஆதரவினை வழங்குகிறது.
- ஐக்கிய நாடுகள் அமைப்பினால் நிர்ணயிக்கப்பட்ட உலகளாவியத் தகவல் அணுகலுக்கான சர்வதேச தினமானது ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 28 அன்று அனுசரிக்கப் படுகின்றது.
  - இந்த ஆண்டுக்கான இத்தினத்தின் கருத்துரு, "The Right to know – Building Back Better with Access to Information" என்பதாகும்.
- இந்திய நாட்டைச் சேர்ந்த சானியா மிர்சா மற்றும் சீன நாட்டைச் சேர்ந்த சாங் குவாய் ஆகியோர் இணைந்து ஒஸ்ட்ராவா ஓபன் போட்டியில் மகளிர் இரட்டையர் பிரிவிற்கான இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றனர்.
  - இப்போட்டியானது செக் குடியரசு நாட்டின் ஒஸ்ட்ராவா என்னுமிடத்தில் நடத்தப் பட்டது.
- மூத்தச் சட்டமன்ற உறுப்பினரான நிமாபென் ஆச்சாரியா சமீபத்தில் குஜராத் மாநிலச் சட்டசபையின் முதல் பெண் சபாநாயகராக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப் பட்டார்.
- தற்போது பாலைநிலமாக காணப்படும் ஆஸ்திரேலியாவின் பின்பா ஏரிக்கு அருகே பண்டையக் கால கழுகின் எஞ்சிய பாகங்களை அறிவியலாளர்கள் அகழ்ந்தெடுத்து உள்ளனர்.
  - இந்தப் பிரம்மாண்ட பறவையானது 25 மில்லியன் ஆண்டுகள் பழமையானது என்று நம்பப் படுகிறது.
- செப்டம்பர் 29 ஆம் தேதியானது இந்தியாவில் தேசிய காபி தினமாக அனுசரிக்கப் படுகிறது.
- சர்வதேச இறை நிந்தனை தினம் அல்லது சர்வதேச இறை நிந்தனை உரிமைகள் தினம் எனவும் அழைக்கப்படும் இறை நிந்தனை தினமானது செப்டம்பர் 30 அன்று அனுசரிக்கப் படுகிறது.
  - இத்தினமானது தனிநபர்கள் மற்றும் குழுவினருக்கு இறை நிந்தனைச் சட்டங்கள் குறித்த கல்வியையும் கருத்துச் சுதந்திரத்திற்கானப் பாதுகாப்பினையும் வழங்கச் செய்கிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## குழந்தை எழுத்தாளர்களுக்கு கவிமணி விருது

- குழந்தைகளின் எழுத்தார்வத்தை ஊக்குவிக்கும் வண்ணம் 18 வயதிற்கு உட்பட்ட எழுத்தாளர்களில் 3 சிறந்த எழுத்தாளர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு 'கவிமணி விருது' தமிழ்நாடு அரசால் வழங்கப்படும்.
- இதில் ரூ.25,000 ரொக்கம், சான்றிதழ், மற்றும் கேடயம் ஆகியன வழங்கப்படும்.

## மாரியப்பன் தங்கவேலு – வெள்ளிப் பதக்கம்


- மாரியப்பன் தங்கவேலு 2020 ஆம் ஆண்டு டோக்கியோ பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் ஆடவருக்கான உயரம் தாண்டுதல் போட்டியில் 1.86 மீ உயரம் வரை தாண்டினார்.
- இதற்காக அவர் வெள்ளிப் பதக்கத்தினை பெற்றார்.
- இவர் தமிழ்நாட்டிலுள்ள சேலம் மாவட்டத்தின் பெரிய வடக்கம்பட்டி கிராமத்தில் பிறந்தவராவார்.
- 2016 ஆம் ஆண்டின் ரியோ பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் ஆடவருக்கான உயரம் தாண்டுதல் போட்டியில் இவர் தங்கப் பதக்கம் வென்றார்.




## எதிர்கால இயங்குதிறன்களுக்கான பூங்கா மற்றும் ஆடைத் தயாரிப்பு பூங்கா – தமிழக அரசு

- விருதுநகர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த ஆடைத் தயாரிப்புப் பூங்கா, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இயங்குதிறன் பூங்கா (mobility park) மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தில் SIPCOT தொழில்துறைப் பூங்கா ஆகியவை தமிழகச் சட்டமன்றத்தில் தமிழக அரசினால் அறிவிக்கப் பட்ட முக்கிய அறிவிப்புகளுள் இடம் பெற்றுள்ளன.

- விருதுநகர் மாவட்டத்திலுள்ள குமாரலிங்கபுரத்தில் திறக்கப்பட உள்ள ஆடைத் தயாரிப்புப் பூங்காவானது தென் மாவட்டங்களில் பொருளாதார மேம்பாட்டினை அதிகரிக்கும்.
- கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள சூளகிரியில் ஒரு எதிர்கால இயங்குதிறன் பூங்காவினைத் திறப்பதற்கான SIPCOT நிறுவனத்தின் இந்த முயற்சியானது இந்தியாவிலேயே இது போன்ற வகையிலான முதல் முயற்சியாகும்.
- திருவள்ளூர் மாவட்டத்திலுள்ள ஊத்துக்கோட்டை அருகேயுள்ள செங்காந்தகுளம் என்னுமிடத்தில் அமைக்கப்பட உள்ள SIPCOT தொழில்துறைப் பூங்காவானது சுமார் 3,000 நபர்களுக்கு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை நல்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.
- காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள நெமிலி என்னுமிடத்தில் “Ready Built Factory” என்ற ஒரு தொழிற்சாலையை அரசு நிறுவ உள்ளது.
- கரூர் மாவட்டத்தில் ஒரு அதிநவீன ஜவுளிப் பூங்காவானது திறக்கப்படும்.




## வலிமை மற்றும் நெய்தல்

- தமிழ்நாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனமானது (Tamil Nadu Cement Corporation Limited – TANCEM) ஏற்கனவே உள்ள ‘அரசு’ (Arasu) எனும் தயாரிப்போடு கூடுதலாக “வலிமை” (சிமெண்ட்) என்ற புதிய தயாரிப்பினை அறிமுகப்படுத்த உள்ளது.

- TANCEM என்பது ஒரு மாநிலப் பொதுத்துறை அலகாகும்.
- அதே போன்று தமிழ்நாடு உப்பு கார்ப்பரேஷன் நிறுவனமும் 'நெய்தல்' என்ற தயாரிப்புப் பெயரின் கீழ் அயோடின் கலந்த படிக உப்பு, சுத்திகரிக்கப்பட்ட அயோடின் கலந்த உப்பு மற்றும் இரட்டிப்பு இரும்பு மற்றும் அயோடின் செறிவூட்டப்பட்ட உப்பினை அறிமுகப்படுத்த உள்ளது.

## டாக்டர் ஜெ. ஜெயலலிதா பல்கலைக்கழகச் சட்டம்

- டாக்டர் ஜெ. ஜெயலலிதா பல்கலைக்கழகச் சட்டத்தினை ரத்து செய்வதற்கான ஒரு மசோதாவினை தமிழக அரசு அறிமுகம் செய்துள்ளது.
- இது அண்ணாமலை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படும்
- அண்ணாமலை பல்கலைக்கழகத்தினை ஓர் ஒருங்கிணைந்த கல்வி நிறுவனம் என்ற நிலையிலிருந்து ஒரு இணை வகைப் பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கான 2013 ஆம் ஆண்டின் அண்ணாமலை பல்கலைக்கழகச் சட்டத்தினைத் திருத்தச் செய்வதற்கான மற்றொரு மசோதாவும் அறிமுகப்படுத்தப்பட்டது.
- அண்ணாமலை பல்கலைக்கழகமானது விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களிலுள்ள இணைக் கல்லூரிகளை (கலை மற்றும் அறிவியல்) இணைத்து ஓர் இணை வகை கல்லூரியாக மாற்றப்பட உள்ளது.
- அரசானது பாரதிதாசன் பல்கலைக்கழகச் சட்டத்தினைத் திருத்துவதற்கான ஒரு மசோதாவினையும் அறிமுகப் படுத்தியுள்ளது.
- இதன் விளைவாக பாரதிதாசன் பல்கலைக்கழகமானது இனி மயிலாடுதுறையிலுள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான ஒரு இணைப் பல்கலைக்கழகமாக செயல்படாது.

## இளந்தளிர் இலக்கியத் திட்டம்

- குழந்தைகளின் படைப்பாற்றலை மேம்படுத்தவும் (பேச்சாற்றல், எழுத்தாற்றல், ஓவியம் தீட்டும் ஆற்றல்) நன்னெறிக் கல்வியைக் கற்பிக்கவும் மற்றும் அறம்சார் சமூக விழுமியங்களை வளர்த்தெடுக்கவும் வேண்டி இளந்தளிர் இலக்கியத் திட்டம் செயல்படுத்தப் படும்.
- இத்திட்டத்தின் கீழ், முதல்கட்டமாக 100 குழந்தை இலக்கிய நூல்கள் தமிழ்நாடு பாட நூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தால் வெளியிடப்படும்.

## தமிழ்நாடு குடிசைமாற்று வாரியத்தின் பெயர் மாற்றம்

- முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியமானது இனி தமிழ்நாடு நகர்வாழிட மேம்பாட்டு வாரியம் என அழைக்கப்படும் என அறிவித்துள்ளார்.
- 1971 ஆம் ஆண்டு மாநில முதல்வராக மு.கருணாநிதி பதவி வகித்த போது குடிசை மாற்று வாரியம் தொடங்கப் பட்டது எனவும் அவர் தெரிவித்தார்.




## வ.உ.சி. அவர்களின் 150வது பிறந்த தினம்



- வ.உ.சி. அவர்களின் 150வது பிறந்த தினம் 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 05 அன்று கொண்டாடப் பட்டது.

***முக்கிய அறிவிப்புகள்***

- வ.உ.சி. அவர்களின் மார்பளவு வரையிலான உருவச் சிலையானது சென்னையில் உள்ள காந்தி மண்டபத்தில் திறக்கப்படும்.
- தூத்துக்குடி நகரிலுள்ள கலைநயமிக்க மேலப்பெரிய பருத்திச் சாலையானது வ.உ.சி. சாலை எனப் பெயர் மாற்றப்படும்.
- கப்பல் கட்டுதல் மற்றும் அது தொடர்பான துறைகளில் சிறந்து விளங்கும் தமிழருக்கு வருடாந்திரக் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருதானது வழங்கப்படும்.
- வ.உ.சி. அவர்களின் நினைவு தினமான நவம்பர் 18 ஆம் தேதியானது தியாகிகள் தினமாக அனுசரிக்கப்படும்.
- இந்த ஆண்டு செப்டம்பர் 05 முதல் அடுத்த ஆண்டு செப்டம்பர் 05 வரையிலான காலக் கட்டத்தில் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் கட்டப்படும் அனைத்து அரசுக் கட்டிடங்களுக்கும் வ.உ.சி. அவர்களுடைய பெயர் சூட்டப்படும்.


## அயோத்தி தாச பண்டிதர் – மணி மண்டபம்

- தமிழக மாநில அரசானது வடசென்னையில் அயோத்தி தாச பண்டிதர் மணி மண்டபத்தினைக் கட்டமைக்க உள்ளது.
- 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சமூக சீர்திருத்தவாதியின் 175வது பிறந்தநாளைக் குறிக்கும் விதமாக இது அறிவிக்கப்பட்டுள்ளது.
- இவர் 1891 ஆம் ஆண்டில் திராவிட மகாஜன சபையை நிறுவினார்.
- இவர் ஒரு பைசா தமிழன் என்ற வார இதழை நிறுவி, பின்னர் அதனைத் தமிழன் என்ற பெயரில் நடத்தினார்.



## சமூக நீதி நாள்

- சமூக சீர்திருத்தவாதியும் திராவிடர் கழகத்தை நிறுவியவருமான 'பெரியார்' ஈ.வே. ராமசாமி அவர்களின் பிறந்த நாளானது ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 17 அன்று தமிழகத்தில் சமூக நீதி தினமாக அனுசரிக்கப்படும்.
- இந்திய அரசியலமைப்பின் முதல் சட்டத் திருத்தமானது பாராளுமன்றத்திற்கே செல்லாத பெரியார் அவர்களால் நிறைவேற்றப் பட்டது.
- சமூக நீதி நாள் அன்று சுயமரியாதை, பகுத்தறிவு, சகோதரத்துவம், சமத்துவம், மனிதாபிமானம் மற்றும் சமூக நீதி கொள்கைகளைப் பின்பற்ற வேண்டி உறுதிமொழி எடுக்கப் படும்.



## புதிய தொல்பொருள் தளங்கள்

- தமிழ்நாடு மாநில அரசு விருதுநகர் மாவட்டத்தில் வெம்பக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டத்தில் துலுக்கார்பட்டி மற்றும் தர்மபுரி மாவட்டத்தில் பெரும்பாலை ஆகிய மூன்று புதிய இடங்களில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சியை மேற்கொள்ளும்.
- கீழடி, சிவகளை, மயிலாடும்பாறை மற்றும் கங்கைகொண்ட சோழபுரம் ஆகிய இடங்களில் ஏற்கனவே மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளுடன் சேர்த்துக் கூடுதலாக இது மேற்கொள்ளப்படும்.
- தாமிரபரணியின் கரையில் உள்ள பகுதிகளிலும் மற்றும் கற்காலத் தளங்களிலும் அறிவியல் தள ஆய்வுகளை 2021-22 காலப்பகுதியில் அரசாங்கம் மேற்கொள்ளும்.
- தொல்லியல் நிறுவனமானது மறுசீரமைக்கப்பட்டு தமிழ்நாடு தொல்லியல் மற்றும் அருங்காட்சியியல் நிறுவனம் எனப் பெயர் மாற்றப்படும்.
- மதுரை மாவட்டத்தின் முதலைக் குளம் மற்றும் அரிட்டாபட்டி, சிவகங்கை மாவட்டத்தின் பூலாங்குறிச்சி, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள தேகனூர்பட்டி மற்றும் தொண்டூர் ஆகிய பழமையான கல்வெட்டுகள் காணப்படும் இடங்களானது பாதுகாக்கப் பட்ட நினைவுச் சின்னங்களாக அறிவிக்கப் படும்.
- புகழ்பெற்ற தமிழ் மன்னர் இராஜராஜ சோழன் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள புத்த விகாரங்களின் வரலாற்றை வெளிச்சத்திற்குக் கொண்டு வரும் 'லைடன் தகடுகளை' (Leiden plate) நெதர்லாந்தில் இருந்து மீட்டுக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப் படும்.
- இந்தியத் தொல்லியல் துறையின் அதிகாரப்பூர்வ வெளியீடான எபிக்ராபியா இண்டிகாவில் இடம் பெற்றுள்ள 'அன்பில் தகடுகள்' கண்டுபிடிக்க முயற்சிகள் எடுக்கப் படும்.

## தொழிலாளர்களுக்கு இருக்கைகள் - தமிழ்நாடு

- மாநிலம் முழுவதும் உள்ள கடைகள் மற்றும் காட்சியகங்களில் நின்று கொண்டு வேலை செய்யும் ஊழியர்களுக்கு இருக்கை வசதிகளை வழங்குவது கட்டாயமாகும்.
- இது தனியார் துறை விவகாரங்களில் அரசின் நேரடித் தலையீடு ஆகும்.
- தமிழ்நாடு கடைகள் மற்றும் ஸ்தாபனங்கள் சட்டம், 1947 என்ற ஒரு சட்டத்தைத் திருத்துவதற்காக தொழிலாளர் நலம் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் அவர்களால் இதற்காக ஒரு மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது.
- இத்திட்டம் கேரளாவில் தொடங்கப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 4 அன்று ஊழியர்களுக்கான இருக்கை வசதிகளை வழங்கிடுவதற்கான ஒரு திட்டத்தை மாநிலத்தின் தொழிலாளர் ஆலோசனைக் குழு ஒருமனதாக அங்கீகரித்தது.


## கல்வி அமைச்சகத்தின் அறிவிப்புகள்

- தமிழக மாநில அரசானது வழக்கமானப் பள்ளி நேரத்திற்குப் பிறகு VI முதல் XII வரையிலான வகுப்புகளில் பயில்வோருக்கு ஆங்கில மொழிப் பயிற்சி (ஸ்போக்கன் இங்கிலிஷ்) வகுப்புகளை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளது என மாநிலப் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்கள் கூறியுள்ளார்.

- புகழ்பெற்ற தமிழ் படைப்புகள் மற்ற திராவிட மொழிகளிலும், திராவிட மொழிப் படைப்புகள் தமிழிலும் மொழி பெயர்க்கப்படும் (பொன்னியின் செல்வன் மற்றும் வைக்கம் போராட்டம்: தமிழிலிருந்து ஆங்கிலம்; கலைஞர் கருணாநிதியின் திருக்குறள் மீதான உரை (தமிழிலிருந்து தெலுங்கு); டி ஜானகிராமன் சிறுகதைகள் (தமிழிலிருந்து கன்னடம்).
- கரகாட்டம், கும்மி, சிலம்பாட்டம், ஒயிலாட்டம், காவடியாட்டம், நாட்டுப்புறப் பாடல்கள், மல்யுத்தம் போன்றப் பாரம்பரியக் கலைகள் குறித்து மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.
- சென்னையில் உள்ள கன்னிமாரா பொது நூலகம் நவீனப்படுத்தப்படும்.
- குழந்தைகளுக்கு எதிரான முறைகேடுகள் தடுப்பு வாரமானது ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் 15 முதல் 22 வரை அனைத்துப் பள்ளிகளிலும் கடைபிடிக்கப்பட வேண்டும்.
- 2025 ஆம் ஆண்டிற்குள் உலகளாவிய அடிப்படை எழுத்தறிவு மற்றும் கணிதத்தைக் கற்பிக்க வேண்டி பள்ளிகள் முழுமையாகத் திறக்கப்படும் போது ‘எண்ணும் எழுத்தும்’ என்ற ஒரு திட்டமானது தொடங்கப்படும்.
- சேலம், திருவண்ணாமலை, மயிலாடுதுறை மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்திற்காக வேண்டி மேலும் நான்கு மண்டல மையங்கள் அமைக்கப்படும்.
- கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முனைவர் படிப்பிற்கான திட்டங்கள் வழங்கப் படுவதோடு கட்டிடக் கலை மற்றும் இயந்திரப் பொறியியல் ஆகிய படிப்புகளில் பட்டயப் படிப்புகள் அடுத்த ஆண்டு தமிழில் தொடங்கப்படும்.

## சுல்தான் அகமது இஸ்மாயில் குழு

- ஹைட்ரோ கார்பன் திட்டங்களை ஆய்வு செய்ய ஏழு பேர் கொண்ட ஒரு குழுவை தமிழக அரசு அமைத்துள்ளது.
- இதற்கு மாநில வளர்ச்சிக் கொள்கை மன்றத்தின் பகுதி நேர உறுப்பினர் சுல்தான் அகமது இஸ்மாயில் அவர்கள் தலைமை தாங்குவார்.



## சென்னை உயர்நீதிமன்றத்திற்குப் புதிய நீதிபதிகள்

- சென்னை உயர்நீதிமன்றம் நான்கு புதிய நீதிபதிகளை நியமிக்க உள்ளது.
- அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையான 75 என்ற எண்ணிக்கைக்கு எதிராக இது தற்போதைய எண்ணிக்கையை 60 ஆக உயர்த்தும்.
- நீதிபதி எஸ் ஸ்ரீமதி அவர்களின் நியமனத்தால், நீதிமன்றத்தில் பெண் நீதிபதிகளின் எண்ணிக்கை 14 ஆக உயரும் (நாட்டிலே அதிகமான எண்ணிக்கை).
- டி. பரதச் சக்கரவர்த்தி, ஆர் விஜயகுமார் மற்றும் முகமது ஷஃபிக் ஆகியோர் உச்ச நீதிமன்றக் குழுவால் (கொலீஜியம்) பரிந்துரைக்கப்பட்ட மற்ற மூன்று வழக்கறிஞர்கள் ஆவர்.

## மணிமேகலை மொழிபெயர்ப்பு

- தமிழ் இலக்கியத்தின் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை ஆனது 18 கிழக்கத்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட உள்ளது.
- இது தாய், சீனம், ஜப்பானியம், கொரியம், பர்மியம், மலாய், வியட்நாமியம், சிங்களம், கம்போடியம், இந்தோனேசியம் மற்றும் மங்கோலியம் ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்படும்.
- மணிமேகலை 1,500 ஆண்டுகளுக்கு முன்பு சீத்தலைச் சாத்தனாரால் எழுதப் பட்டது.
- மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனமானது அதை மொழிபெயர்க்கும் பொறுப்பை ஏற்றுள்ளது.
- மணிமேகலை காப்பியமானது பௌத்தம் மற்றும் சமணத்தின் சித்தாந்தங்களை உள்ளடக்கியதாகும்.




## புலமைப் பித்தன்

- பாடலாசிரியரும் கவிஞருமான புலமைப்பித்தன் சென்னையில் காலமானார்.
- அவர் 1935 ஆம் ஆண்டில் கோயம்புத்தூரில் பிறந்தார்
- புலமைப்பித்தன் அவர்கள் தமிழ்நாடு சட்ட மேலவையின் துணைத் தலைவராகப் பணியாற்றியவர் ஆவார்.




## பொருநை அகழ்வாராய்ச்சி




- திருநெல்வேலியில் 15 கோடி செலவில் 'பொருநை அருங்காட்சியகம்' எனும் பெயர் கொண்ட அருங்காட்சியகம் ஒன்றினை அமைக்க உள்ளதாக முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- திருநெல்வேலி மாவட்டம் சிவகளையில் ஒரு முதுமக்கள் தாழியில் மண்ணுடன் கூடிய நெல்மணிகள் கண்டுபிடிக்கப்பட்டன.
- கரிமக் காலக் கணிப்பு முறையானது அதனை கிமு 1155 ஆண்டைச் சேர்ந்தது என்று கணித்துள்ளது.
- இது தொடர்பான ஒரு சோதனை அறிக்கையை அமெரிக்காவின் மியாமியில் உள்ள பீட்டா பகுப்பாய்வு சோதனை ஆய்வகம் வெளியிட்டது.

- இந்தக் கண்டுபிடிப்பானது பொருநை ஆறு (தாமிரபரணியின் பண்டையப் பெயர்) நாகரிகம் 3,200 ஆண்டுகளுக்கு முந்தையது என்பதை நிறுவியுள்ளது.
- தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளில் கண்டுபிடிக்கப்பட்ட மிகப் பழமையான காலம் இதுவேயாகும்.
- இது 2,600 ஆண்டுகள் பழமையானதாகக் கருதப்படும் வைகை நதி நாகரிகத்தை விட மிகவும் பழமையானது ஆகும்.
- கீழடியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியானது, கங்கை நாகரிகத்திற்குச் சமமான காலத்தில் வைகை ஆற்றங்கரையில் ஒரு நகர்ப்புற நாகரிகம் இருந்தது என்பதையும் காண்பித்துள்ளது.
- சமீபத்தியக் கண்டுபிடிப்பானது விந்திய மலையின் தெற்கில் உள்ள நாகரிகங்களுக்கும் சிந்து சமவெளி நாகரிகத்திற்கும் இடையிலான இடைவெளியை மீண்டும் குறைத்துள்ளது.
- முன்னர் தென்னிந்தியாவில் நகர நாகரிகம் எதுவும் இல்லை என்று நம்பப்பட்டது.
- இந்திய துணைக் கண்டத்தில் முதல் நகரமயமாக்கல் சிந்து சமவெளி நாகரிகத்தில் நடந்தது.
- இரண்டாவது நகரமயமாக்கல் மௌரியர் காலத்தின் முடிவில் கங்கைக் கரையில் நிகழ்ந்தது.
- மௌரியர் காலத்திற்கு முன்பே, ஆதிச்சநல்லூரில் வெள்ளி நாணயங்கள் இருந்தன என்று தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- ஆதிச்சநல்லூர், கொற்கை மற்றும் சிவகளை ஆகிய தளங்கள் அனைத்தும் தற்போது தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள பண்டைய பொருநை நதியின் (தாமிரபரணி ஆறு) ஆற்றங்கரையில் உள்ள தளங்கள் ஆகும்.
- முன்னதாக, ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சியில் கிமு 980 ஆம் ஆண்டிலும் கூட ஒரு நாகரிகம் செழித்து வளர்ந்தது என்று தெரிய வைத்தது.
- ஆதிச்சநல்லூர் மற்றும் சிவகளை ஆகியவை வாழ்விடங்களாக இருந்துள்ள அதே சமயம், கொற்கை துறைமுகமாக இருந்துள்ளது.
- தமிழ் வேர்களைத் தேடி மற்ற மாநிலங்கள் மற்றும் மற்ற நாடுகளில் தொல்பொருள் அகழ்வாராய்ச்சி மேற்கொள்ளப் படும் என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.
- முதற்கட்டமாக, கேரளாவில் பட்டணம் என்று அழைக்கப்படும் முசிறி என்ற ஒரு பழமையான துறைமுகத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.
- இதே போன்ற ஆய்வுகள் ஆந்திராவின் வெங்கி, கர்நாடகாவின் தலைக்காடு மற்றும் ஒரிசாவின் பாலூர் ஆகிய இடங்களில் நடைபெறும்.
- எகிப்தில் உள்ள பெர்னிகா அனெக்கே மற்றும் குசேர் அல்-காதிம் ஆகிய இடங்களில் மாநிலத் தொல்லியல் துறை ஆராய்ச்சியினை நடத்தும்.
- இது ஒரு காலத்தில் ரோமானியப் பேரரசின் ஒரு பகுதியாகவும் மேலும் ஓமனில் உள்ள கோர் ரோரி என்ற ஆட்சியிலும் இருந்தது.
- இது அந்த நாடுகளுடன் தமிழர்களின் வர்த்தக உறவை ஏற்படுத்துவதற்காக வேண்டி அமைக்கப் பட்டது.
- இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா மற்றும் வியட்நாம் போன்ற சோழ மன்னர் இராஜேந்திரன் ஆதிக்கம் செலுத்திய தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் ஆய்வுகள்

நடத்தப் படும்.




## குடியுரிமை திருத்தச் சட்டம் 2019 என்பதற்கு எதிரான தீர்மானம்

- குடியுரிமை திருத்தச் சட்டம், 2019 என்ற சட்டத்தை ரத்து செய்ய மத்திய அரசை வலியுறுத்தும் ஒரு தீர்மானத்தை தமிழக சட்டசபை ஏற்றுக் கொண்டுள்ளது.
- இதன் மூலம் குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிரான தீர்மானங்களை நிறைவேற்றியதில் தமிழ்நாடு மாநிலமானது கேரளா மற்றும் மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களுடன் சேர்ந்துள்ளது.
- குடியுரிமை திருத்தச் சட்டத்தின் நோக்கம், பாகிஸ்தான், வங்காளதேசம் மற்றும் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த, இந்து, சீக்கியர், சமணர், பௌத்தர், பார்சி மற்றும் கிறிஸ்தவர் – போன்ற சமயங்களைச் சேர்ந்த துன்புறுத்தப்பட்ட சிறுபான்மைச் சமூகத்தினருக்கு இந்தியக் குடியுரிமையை வழங்குவதாகும்.
- திரிபுரா, மிசோரம், அசாம் மற்றும் மேகாலயா போன்ற பழங்குடியினர் வாழும் பகுதிகள் அரசியலமைப்பின் 6வது அட்டவணையில் சேர்க்கப் பட்டுள்ள ஒரு காரணத்தால், இந்தச் சட்டமானது அந்தப் பகுதிகளுக்குப் பொருந்தாது.

- மேலும், 1873 ஆம் ஆண்டின் வங்காளக் கிழக்கு எல்லைக் கட்டுப்பாடு என்பதின் கீழ் அறிவிக்கப்பட்ட உள்நாட்டு நுழைவு அனுமதியின் கீழ் வரும் பகுதிகளுக்கும் இது பொருந்தாது.

## மன்னார் வளைகுடாவில் உள்ள ஆற்றல் தீவு




- மன்னார் வளைகுடாவில் ஓர் ஆற்றல் தீவை உருவாக்க தமிழ்நாடு மற்றும் டென்மார்க் ஆகியன திட்டமிட்டுள்ளன.
- இந்தியாவின் முதலாவது கடலில் மிதக்கும் காற்றாலைப் பூங்கா இதுவாகும்.
- மன்னார் வளைகுடா ஆனது இலங்கையின் மேற்கு கடற்கரைக்கும் இந்தியாவின் தென்கிழக்கு முனைக்கும் இடையில் அமைந்துள்ளது.

## இந்து சமய அறநிலையத்துறையின் அறிவிப்புகள்

- கொளத்தூர், கீழ்ப்பாக்கம், விளாத்திக் குளம், தொப்பம்பட்டி, அணைக்கட்டு, கலசப் பாக்கம், திருக்காட்டுப்பள்ளி, லால்குடி, கடையம் மற்றும் திருச்செங்கோடு ஆகிய இடங்களில் ரூ.150 கோடி செலவில் மேலும் 10 கல்லூரிகளை இந்து சமய அறநிலையத்துறை தொடங்க உள்ளது.
- சென்னை, பழனி மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் ரூ.5 கோடி செலவில் முதியோர் இல்லங்கள் நிறுவப்படும்.
- ஆலயத்தின் திருமண மண்டபத்தில் திருமணம் நிகழ்த்தப்பட்டால் அதற்காக பராமரிப்புக் கட்டணம் மட்டும் செலுத்த வேண்டும்.
- முடியிறக்கும் சடங்கும் இலவசமாக்கப் பட்டுள்ளது எனவே அந்தத் தொகையைக் கோவில் நிர்வாகமே செலுத்தும்.
- கோவில் அர்ச்சகர்கள் மற்றும் ஊழியர்களுக்குப் பொங்கல் பண்டிகையின் போது புதிய ஆடைகள் வழங்கப் படும்.

- திருச்சி அருகே சமயபுரத்திலுள்ள புகழ்பெற்ற அருள்மிகு மாரியம்மன் கோவிலில் நாள் முழுவதும் 'அன்னதானம்' வழங்கும் முறையானது அறிமுகப்படுத்தப் படும்.
- ஸ்ரீரங்கத்தில் உள்ள ஸ்ரீரங்கநாதசாமி ஆலயத்தையடுத்து திருச்சி மாவட்டத்தில் நாள் முழுவதும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் 2வது பெரிய கோயிலாக இது மாறும்.
- சமயபுரம் கோயில் மட்டுமின்றி, திருத்தணி மற்றும் திருச்செந்தூர் ஆகிய ஊர்களிலுள்ள ஸ்ரீசுப்ரமணிய சுவாமி கோயில்களிலும் இந்தத் திட்டம் செயல்படுத்தப் படும்.
- சமயபுரம் மாரியம்மன் கோயிலில் அன்னதானம் வழங்கும் முறை 2002 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- திருச்செந்தூர் ஆலயத்தினைச் சீரமைக்க ரூ.150 கோடியையும் பெரிய பாளையத்திலுள்ள பவானி அம்மன் ஆலயத்தைச் சீரமைக்க ரூ.250 கோடியையும் அமைச்சர் அறிவித்தார்.
- பழனி, சமயபுரம், திருவண்ணாமலை, திருத்தணி மற்றும் ராமேஷ்வரம் ஆகிய இடங்களிலுள்ள கோயில்களில் போதுமான வசதியை நிறுவுவதற்கு ரூ.250 கோடி நிதி வழங்கப் படும்.
- கோயில்களில் பக்தர்கள் வழங்கிய சிறுசிறு ஆபரணங்களை உருக்கி தங்கக் கட்டிகளாக மாற்றி, அவற்றை வங்கிகளில் வைத்து கோயில்களின் வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்களுக்கு நிதி திரட்ட அதனை மாநில அரசு பயன்படுத்தும்.
- திருத்தணி, பழனி, சமயபுரம் மற்றும் திருச்செந்தூர் ஆகிய ஊர்களிலுள்ள பெரிய கோயில்களில் தங்க ஆபரணங்கள் அதிகளவில் உள்ளன.
- 2000 கிலோகிராம் எடையிலான தங்க ஆபரணங்களை இதன் மூலம் தங்கக் கட்டிகளாக மாற்ற இயலும்.
- இத்துறையானது 1978 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரை இப்பணியைச் செய்து வந்தது.

## IREDA மற்றும் TANGEDCO



- இந்தியப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மேம்பாட்டு நிறுவனமானது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் விநியோகக் கழகத்துடன் ஓர் ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
- புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திட்டங்களை மேம்படுத்துதல் மற்றும் நிதி திரட்டுதல் போன்றவற்றில் தொழில்நுட்ப நிபுணத்துவங்களை வழங்குவதற்காக வேண்டி இந்த ஒப்பந்தமானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

- அடுத்த 10 ஆண்டுகளில் TANGEDCO தனது ஆற்றல் ஆதாரங்களை 25,000 மெகாவாட் வரை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளது.
- இதில் 20,000 மெகாவாட் சூரிய ஆற்றல், 3000 மெகாவாட் நீர்மின் ஆற்றல் மற்றும் 2000 மெகாவாட் வாயு சுழலிகளால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் போன்றவை அடங்கும்.
- சராசரி தேவையான 15000 மெகாவாட் எனும் போது தனது அனல்மின் நிலையத்தில் உற்பத்தியாகும் ஆற்றல் 4320 மெகாவாட் மட்டுமே ஆகும்.

## தகவல் மற்றும் விளம்பரத் துறை அறிவிப்புகள்

- தகவல் மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் M.P. சாமிநாதன் தமிழக சட்டப் பேரவையில் சில அறிவிப்புகளை வெளியிட்டார்.
- பத்திரிக்கையாளர்கள் நல வாரியம் அமைக்கப்படும் என அவர் அறிவித்தார்.
- அடித்தட்டு மக்களின் மேம்பாட்டிற்காக பங்காற்றும் பத்திரிக்கையாளர்களுக்கு கலைஞர் எழுதுகோல் விருதானது வழங்கப்படும்.
- நோபல் பரிசு பெற்ற ரபிந்திரநாத் தாகூர் மற்றும் முன்னாள் குடியரசுத் தலைவர் A.P.J. அப்துல்கலாம் ஆகியோரின் உருவச்சிலைகள் முறையே சென்னையிலுள்ள புகழ் மிக்க ராணி மேரிக் கல்லூரி மற்றும் அண்ணா பல்கலைக்கழகத்தில் நிறுவப்படும்.
- அப்துல்கலாம் அவர்கள் 2002 ஆம் ஆண்டு ராஷ்டிரபதி பவன் செல்வதற்கு முன்பாக அண்ணா பல்கலைக் கழகத்தின் விடுதியில் தங்கியிருந்து கல்லூரி மாணவர்களுக்கு அறிவுரை வழங்கியது குறிப்பிடத் தக்கதாகும்.
- சென்னையிலுள்ள கிண்டியில் அமைந்துள்ள காந்தி மண்டபத்தில் விடுதலைப் போராட்ட வீரர்கள் வீரபாண்டியக் கட்டபொம்மன் மற்றும் மருது சகோதரர்களின் உருவச் சிலைகள் நிறுவப்படும்.
- கடலூர் மற்றும் அரியலூர் ஆகிய இடங்களில் முறையே அஞ்சலை அம்மாள் மற்றும் கீழப்பழுவூர் சின்னசாமி ஆகியோரின் சிலைகள் நிறுவப்படும்.
- C.N. அண்ணாதுரை, மு, கருணாநிதி, M.G. ராமச்சந்திரன் மற்றும் J. ஜெயலலிதா ஆகியோரின் அமைச்சரவையில் பணியாற்றிய திராவிடப் போராளியான V.R. நெடுஞ் செழியன் அவர்களின் நினைவாக சேப்பாக்கத்திலுள்ள அரசு விருந்தினர் மாளிகையில் அவருக்குச் சிலை நிறுவப்படும்.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி, மூவலூர் ராமாமிர்தம், மற்றும் டாக்டர் மு. வரதராசனார் ஆகியோரின் நினைவாக அவர்களது உருவச்சிலைகள் முறையே புதுக்கோட்டை, மயிலாடுதுறை மற்றும் ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களில் நிறுவப்படும்.

## கீழடி – வெள்ளி நாணயம்


- கீழடியிலிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட சில வெள்ளி நாணயங்கள் சமீபத்தில் கண்டெடுக்கப் பட்டுள்ளன.
- இந்த நாணயங்களில் சூரியன், நிலவு, எருது போன்ற ஒரு விலங்கு மற்றும் வடிவியல் வடிவங்கள் போன்றவை பொறிக்கப்பட்டிருந்தன.
- இந்த நாணயங்கள் கி.மு. 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என இது பற்றிய ஆய்வுகளில் தெரிய வருகிறது.

- இது பண்டைய மௌரியப் பேரரசிற்கும் முந்தைய காலத்தைச் சேர்ந்ததாகும்.
- கீழடி அகழாய்வுகள், தமிழகத்தில் கி.மு. 600 ஆண்டுகளில் விரிவான கல்வியறிவு பரவியிருந்ததைக் காட்டுகின்றன.
- எனவே, 2600 ஆண்டுகளுக்கு முன்பு கூட தமிழகத்தின் பொது மக்களிடம் படிப்பறிவு இருந்தது என்று கண்டறியப்பட்டுள்ளது.



## இந்தியாவை விட்டு வெளியேறும் ஃபோர்டு நிறுவனம்

- அமெரிக்க கார் உற்பத்தி நிறுவனமான ஃபோர்டு இந்தியாவில் தனது கார் தயாரிப்பினை நிறுத்த உள்ளது.
- இது குஜராத் (சனாத்) மற்றும் தமிழ்நாடு (மறைமலைநகர்) ஆகிய மாநிலங்களிலுள்ள தனது ஆலைகளை மூட உள்ளது.
- 2017 ஆம் ஆண்டில் ஜெனரல் மோட்டார்ஸ் நிறுவனமானது இந்தியாவில் தனது கார் தயாரிப்பினை நிறுத்தியது.
- 2020 ஆம் ஆண்டில் அமெரிக்க இருசக்கர வாகன உற்பத்தி நிறுவனமான ஹார்லீ-டேவிட்சன் இந்தியாவில் தனது உற்பத்தியினை நிறுத்தியது.




## முதல் தலைமுறைப் பட்டதாரி

- பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர் மரபினர் சமூகத்தின் மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு உதவித் தொகையைப் பெற ஒருவர் "முதல் பட்டதாரி' ஆக இருக்க வேண்டும் என்ற ஒரு நிபந்தனையானது "முதல் தலைமுறைப் பட்டதாரி" எனத் திருத்தப்பட உள்ளது.

- இதைச் செயல்படுத்துவதன் மூலம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலரும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெற இயலும்.
- பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலத் துறை அமைச்சர் S.S. சிவசங்கர் இந்த அறிவிப்பினை வெளியிட்டார்.
- "செம்மொழி நூலகம்" நிறுவப்படும் எனவும் அவர் அறிவித்தார்.

## சிறந்த ஆற்றல் மேலாண்மைக்கான தேசிய விருது

- திருச்சியிலுள்ள பொன்மலை இரயில் பட்டறையானது சிறந்த ஆற்றல் மேலாண்மை என்பதற்கான 22வது தேசிய விருதினைப் பெற்றுள்ளது.
- இது இந்தியத் தொழில்துறைக் கூட்டமைப்பினால் நிறுவப்பட்டது.
- இந்த ஆண்டு இந்த விருதினைப் பெற்ற ஒரே இந்திய இரயில் பட்டறை இதுவேயாகும்.

## மகாகவி தினம்

- புரட்சிகரமான கவிஞரும் சுதந்திரப் போராட்ட வீரருமான சுப்பிரமணிய பாரதியாரின் நினைவு தினமான செப்டம்பர் 11 அன்று 'மகாகவி' தினமாக கொண்டாடப் படும்.
- பாரதியின் 100வது நினைவு தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் இதனை அறிவித்தார்.
- பாரதியின் கவிதைகள் மற்றும் கட்டுரைகளின் தொகுப்பானது "மனத்தில் உறுதி வேண்டும்" என்ற தலைப்பின் கீழ் புத்தகமாக வெளியிடப்படும்.
- உலகத் தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து 'பாரெங்கும் பாரதி' (எல்லா இடங்களிலும் பாரதி) என்ற தலைப்பில் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படும்.
- பாரதியாரின் புத்தகங்களைத் தொகுக்க 'பாரதியால்' எனும் ஒரு தனிப் பிரிவு அமைக்கப்படும்.
- ஊரக வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்படும் பெண்கள் வாழ்வாதாரப் பணிக்கு பாரதியாரின் பெயரிடப்படும்.
- "பாரதி இளம் கவிஞர் விருது" என்ற ஒரு விருது பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான கவிதைப் போட்டி மூலம் வழங்கப்படும்.
- ஒரு நூற்றாண்டுக்கு முன்பு உத்தரப் பிரதேசத்தின் வாரணாசியில் பாரதி வசித்த வீட்டைப் பராமரிக்க நிதி உதவி வழங்கப்படும்.
- வாரணாசியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகமானது பாரதியின் நினைவாக தமிழ் ஆய்வுகளுக்கான ஒரு இருக்கையைப் பெறும் என்று பிரதமர் மோடி அறிவித்து உள்ளார்.
- மேலும், "உலகின் பழமையான மொழியான தமிழ் மொழிக்குச் சொந்தமான நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது" என்றும் மோடி கூறினார்.

*பாரதி பற்றி*


- 1917 ஆண்டு ரஷ்யப் புரட்சி அல்லது போல்ஷிவிக் புரட்சியின் பெருமையைப் பாடிய முதல் ஆசியக் கவிஞர் பாரதி ஆவார்.

- 1908 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கைது நடவடிக்கையில் இருந்து தப்பிப்பதற்காக சுப்பிரமணிய பாரதி புதுச்சேரிக்கு (அப்போது ஒரு பிரெஞ்சு காலனி) தப்பிச் செல்ல வேண்டியிருந்தது.
- பாரதி சுதேசமித்ரன் செய்தித்தாளில் உதவி ஆசிரியராக பணியாற்றினார்.
- பாரதி 1921 செப்டம்பர் 11 அன்று சென்னையில் காலமானார்.
- பாரதி தனது கடைசி உரையை ஈரோட்டில் உள்ள கருங்கல்பாளையம் நூலகத்தில் நிகழ்த்தினார்.
- பாரதியின் கடைசி வருடங்கள் சென்னை திருவல்லிக்கேணியில் உள்ள வீட்டில் கழிந்தது.
- முன்னாள் முதல்வர் சி.என். அண்ணாதுரை அவர்கள் பாரதியாரை முதலில் 'மக்கள் கவி' (மக்களின் கவிஞர்) என்று அழைத்தார்.
- வா.ரா அவர்கள், எல்லாக் காலத்திலும் சிறந்த கவிஞரான "மகாகவி பாரதியார்" பற்றி ஓர் உன்னதமான தமிழ் சுயசரிதையினை எழுதினார்.



## மருத்துவக் கல்வித் தேர்வு – NEET

- தமிழக சட்டசபையானது தமிழக இளங்கலை மருத்துவப் படிப்பு சேர்க்கைக்கான மசோதாவினை நிறைவேற்றியது.



- தமிழக மாநில மாணவர்களுக்காக நீட் தேர்வு அடிப்படையில் மருத்துவச் சேர்க்கை நடைபெறுவதை நிறுத்த இந்த மசோதா விழைகிறது.
- இது பொதுப் பட்டியலில் நிறைவேற்றப்பட்ட ஒரு மத்திய அரசின் சட்டத்தின் மீது சவால் விடுக்கின்றது.
- இது குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற உள்ளது.

## தமிழ்நாடு பட்டியலினச் சாதியினர் மற்றும் பட்டியலினப் பழங்குடியினர் ஆணையம்

- முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பட்டியலினச் சாதியினர் மற்றும் பட்டியலினப் பழங்குடியினருக்காக வேண்டி ஒரு குழுவினை அமைக்கச் செய்வதற்கான ஒரு மசோதாவினை (2021 ஆம் ஆண்டு தமிழக மாநில பட்டியலினச் சாதியினர் மற்றும் பட்டியலினப் பழங்குடியினர் ஆணைய மசோதா) தாக்கல் செய்தார்.
- இந்த ஆணையமானது 1908 ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் விசாரணைகளை மேற்கொள்ளும் உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.
- இது தலைவர், துணைத் தலைவர் மற்றும் 5 இதர உறுப்பினர்களையும் கொண்டு இருக்கும்.
- அவற்றுள் மூவர் பட்டியலினச் சாதியினர் பிரிவினராகவும், இருவர் பட்டியலினப் பழங்குடியினர் பிரிவினராகவும் ஒரு பெண் உறுப்பினரும் நியமிக்கப்படுவர்.
- இந்த ஆணையமானது தன்னிச்சையாகவோ அல்லது பாதிக்கப்பட்ட நபர் (அ) அவரது சார்பாக ஏதேனும் ஒரு நபர் அளித்த ஒரு மனுவின் பேரிலோ விசாரணையினை மேற்கொள்ளும்.
- இது 1955 ஆம் ஆண்டு உரிமையியல் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டு பட்டியலினச் சாதியினர் மற்றும் பட்டியலினப் பழங்குடியினர் (வன்கொடுமை) தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் வழங்கப்பட்ட எந்த உரிமையும் மீறப்படுதல் மீதான புகார்களை விசாரணை செய்யும்.
- நிறுவப்பட உள்ள இந்த மாநில ஆணையம் செயல்படத் தொடங்கும் வரையில் தேசிய பட்டியலினச் சாதியினர் மற்றும் பட்டியலினப் பழங்குடியினர் ஆணையம் தொடர்ந்து செயல்படும்.
- இத்தகைய உரிமை மீறல்களைத் தடுப்பதில் அலட்சியம் காட்டும் அரசு ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த ஆணையமானது பரிந்துரை செய்யலாம்.
- இந்த வகுப்பினரின் நலன் கருதி வெவ்வேறு சட்டங்களில் உள்ள பாதுகாப்பு விதிகளை இந்த ஆணையம் விசாரித்து அதனைக் கண்காணிக்கும் எனவும் அதற்கான விழிப்புணர்வை மேம்படுத்தும் எனவும் எதிர்பார்க்கப் படுகிறது.
- இந்தச் சமுதாயத்தினர் தொடர்பான திட்டச் செயல்களில் மாநில அரசு இந்த ஆணையத்துடன் கலந்தாலோசிக்கும்.
- பாகுபாட்டினைத் தவிர்ப்பதற்காக வேண்டி ஆராய்ச்சிப் பணிகளையும் இந்த ஆணையம் ஈடுபடும்.

## பட்டியல் சாதியினருக்கான நல்வாழ்வு

- ❖ பொது இடுகாடுகள் அல்லது கல்லறைகளை நடைமுறைப்படுத்தும் ஊராட்சிகளுக்கு ரூ.10 லட்சம் ஊக்கத் தொகையானது சன்மானமாக வழங்கப்படும் என முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.
- ❖ சேலம், கிருஷ்ணகிரி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் அதிக வழக்குகள் நிலுவையில் இருப்பதால் அங்கு மேலும் 4 புதிய சிறப்பு நீதிமன்றங்கள் நிறுவப்படும் எனவும் அவர் அறிவித்தார்.
- ❖ ஆதி திராவிடர் நலத்துறையினால் இயக்கப்படும் பள்ளிகள் மாநிலப் பள்ளிக் கல்வித் துறையின் வழிகாட்டுதலின் கீழான பிரதான அமைப்பிற்குக் கொண்டு வரப்படும்.

## நகைக்கடன் தள்ளுபடி

- ❖ கூட்டுறவு நிறுவனங்களிலிருந்துப் பொருளாதாரத்தில் பிற்படுத்தப்பட்டப் பிரிவினர் பெற்ற 5 சவரன் வரையிலான நகைக் கடன்கள் தள்ளுபடி செய்யப்படும் என தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.
- ❖ இதற்காக ரூ. 6000 கோடி தொகையினை மாநில அரசு ஒதுக்க உள்ளது.

## தமிழக உள்ளாட்சித் தேர்தல்

- ❖ மாநிலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட 9 மாவட்டங்களில் கிராம உள்ளாட்சித் தேர்தல்களை நடத்துவதற்கான தேதிகளை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் வி. பழனிகுமார் அறிவித்தார்.
- ❖ காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் தேர்தல்கள் நடத்தப்படும்.
- ❖ அக்டோபர் 06 மற்றும் அக்டோபர் 09 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக தேர்தல் நடத்தப் பட்டு அக்டோபர் 12 ஆம் தேதியன்று வாக்கு எண்ணிக்கை நடைபெறும்.
- ❖ மாவட்ட ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியம் ஆகியவற்றிற்கான தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் போன்ற பதவிகளுக்கான மறைமுகத் தேர்தல்கள் அக்டோபர் 22 அன்று நடைபெறும்.

## காவல் துறை – புதிய அறிவிப்புகள்

- ❖ முன்னாள் முதல்வர் C.N. அண்ணாதுரை அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு செப்டம்பர் 15 அன்று 700 ஆயுள் தண்டனைக் கைதிகளை விடுதலை செய்வதாக முதல்வர் ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.
- ❖ ஆவடி மற்றும் தாம்பரம் ஆகியவை காவல்துறை ஆணையரகமாக தரம் உயர்த்தப் படும் எனவும் அவர் அறிவித்தார்.
- ❖ காவல்துறையைச் சீர்திருத்துவதற்காக ஒரு காவல் ஆணையத்தினை அமைக்கவும் அவர் முன்மொழிந்தார்.
- ❖ இணையவழிக் குற்றங்களை ஒழிக்கவும் அதற்கான பயிற்சிகளை வழங்கவும் மாநில இணையவழி குற்றப் புலனாய்வு மையம் ஒன்று அமைக்கப்படும் எனவும் அவர் அறிவித்தார்.

- மீனவச் சமூகத்தினைச் சேர்ந்த 1000 இளைஞர்கள் கடலோரக் காவல்படையுடன் இணைந்து பணியாற்றும் வகையில் நியமிக்கப் படுவர்.
- சமூகம் மற்றும் பொருளாதார ரீதியில் பிற்படுத்தப் பட்ட நிலையிலுள்ள குழந்தைகள் சமூக விரோதம் மற்றும் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடாமல் இருக்க சிறுவர் மற்றும் பெண்கள் குழுக்கள் அமைக்கப்படும்.
- இரண்டாம் நிலைக் காவலர் முதல் தலைமைக் காவலர் வரை காவல்துறை ஊழியர்களுக்கு வாராந்திர விடுமுறை அளிக்கப்படும்.
- ஒவ்வொரு காவல் நிலையத்திலும் வரவேற்பாளர்கள் நியமிக்கப்படுவர்.

## கல்மரம்

- புதுக்கோட்டையில் 10 கோடி ஆண்டுகள் பழமையான கல்மரம் கண்டெடுக்கப் பட்டு உள்ளது.
- இந்தக் கல்மரமானது, சுமார் 10 கோடி ஆண்டுகளுக்கு முந்தைய கிரெட்டேசியஸ் காலத்தைச் சேர்ந்தது.
- அதாவது, தற்போதுள்ள பூக்கும் தாவரங்களான ஆஞ்சியோஸ்பெர்முக்கு முந்தைய ஜிம்னோஸ்பெர்ம் வகையை இது சேர்ந்ததாகும்.
- இது ஒரு அரிய தொல்லியல் பொருளாக கருதப்படுகிறது.
- விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே உள்ள பாக்கம் கிராமத்தை ஒட்டிய சஞ்சீவி மலையில் 1300 ஆண்டுகள் பழமையான பல்லவர் காலத்திய ஓவியம் கண்டறியப் பட்டுள்ளது.

## மனிதவள மேலாண்மைத்துறை அறிவிப்புகள்

- நேரடி நியமனம் மூலம் நடைபெறும் அரசுப் பணி நியமனங்களில் பெண்களுக்கான இடஒதுக்கீடு 30% என்ற அளவிலிருந்து 40% என்ற அளவாக உயர்த்தப்படுகிறது என தமிழக அரசு அறிவித்து உள்ளது.
- அனைத்துப் போட்டித் தேர்வுகளிலும் தமிழ் மொழிப் பாடம் தகுதித் தேர்வில் கட்டாய மாக்கப்படும்.
- கொரோனா பெருந்தொற்று காரணமாக தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் போன்ற பணியாளர் தேர்வு முகமைகளால் நடத்தப்படும் அரசு பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் தாமதமானதால் நேரடி நியமன வயது உச்ச வரம்பு 2 ஆண்டுகள் உயர்த்தப்படும் என்று தெரிவிக்கப் பட்டு உள்ளது.

## புதிய சிலைகள்

- சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரரர் மலையாண்டி வெங்கிடு பதி எத்தலப்ப நாயக்கர் அவர்களுக்கு திருப்பூர் மாவட்டத்தில் திருவுருவச் சிலை ஒன்றை அமைக்க இரண்டு கோடியே அறுபது இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டது.
- சென்னை மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் டாக்டர் ப.சுப்பராயன் அவர்களுக்கு சென்னையில் முழு திருவுருவச் சிலையும் நாமக்கல் நகரில் அரங்கமும் அமைக்கப் படும்.

- கீழ்பவானி பாசனத் திட்டம் உருவாக காரணமாக இருந்த உத்தம தியாகி ஈஸ்வரன் அவர்களுக்கு ஈரோடு மாவட்டத்தில் ஒரு திருவுருவச் சிலை அமைக்கப் படும்.
- முன்னாள் அமைச்சர் மறைந்த கோவிந்தசாமி அவர்களுக்கு விழுப்புரம் மாவட்டத்தில் திரு உருவச் சிலையுடன் ஒரு அரங்கம் அமைக்கப்படும்.

## தமிழகத்தின் முதல் மரபணுப் பகுப்பாய்வு ஆய்வகம்

- சென்னை DMS அலுவலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மரபணுப் பகுப்பாய்வு ஆய்வகத்தினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.
- முதன்முறையாக ஒரு மாநிலம் தனது சொந்த மரபணு ஆய்வகத்தை நிறுவியுள்ளது.
- இந்த ஆய்வகமானது SARS-Cov-2 வைரசின் மாற்றுருக்களைக் கண்டறிய வேண்டி அதிகாரிகளுக்கு உதவும்.
- கர்நாடகா மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் உள்ள மத்திய அரசினால் நடத்தப் படும் மரபணுப் பகுப்பாய்வு ஆய்வகங்களுக்கே கோவிட்-19 மாதிரிகள் இது வரை அனுப்பப்பட்டன.
- மத்திய அரசின் பரிந்துரைகளின் படி, தமிழக அரசானது அனைத்து மாதிரிகளையும் பெங்களூருவில் உள்ள இன்ஸ்டெம் (Instem) என்னும் நிறுவனத்திற்கு அனுப்பி வந்தது.
- இன்ஸ்டெம் என்பது INSACOG மன்றத்தின் (கோவிட் மாதிரிகளில் மாற்றுருக்களைக் கண்டறியும் 10 ஆய்வகங்களை கொண்ட மன்றமாகும்) ஓர் அங்கமாகும்.




## நில அபகரிப்பு – ஜாமீன் பெற இயலாத குற்றம்

- தமிழக அரசானது, மதம் மற்றும் சமய நிறுவனங்களின் சொத்துக்களை அத்துமீறி அபகரிப்பதை ஜாமீன் பெற இயலாத ஒரு குற்றமாக அறிவித்துள்ளது.
- தமிழகச் சட்டமன்றமானது இது தொடர்பான ஒரு மசோதாவினை நிறைவேற்றி உள்ளது.
- இந்த மசோதாவானது 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை சட்டத்தைத் திருத்த முனைகிறது.
- மதம் மற்றும் சமய நிறுவன விவகாரங்களில் ஈடுபாடு உடைய எவரும் ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் கோவில் நில ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக புகார் அளிக்க ஒரு வாய்ப்பினை இது அளிக்கிறது.
- மதம் மற்றும் சமய நிறுவன விவகாரங்களில் ஈடுபாடு உள்ள எந்தவொரு நபரும் இது தொடர்பாக குற்றவியல் புகார்களை அளிக்கலாம் என்று இது கூறுகிறது.

- இந்த மசோதா நிறைவேற்றப்படும் வரை கோயில் நிலங்களை அபகரிப்பதற்கு எதிரான புகார்களை பதிவு செய்வதற்கு வேண்டி இந்து சமய அற நிலையத் துறையின் ஆணையருக்கு மட்டுமே அதிகாரம் இருந்தது.

## அமர்நாத் ராமகிருஷ்ணா

- தொல்லியல் துறைக் கண்காணிப்பு நிபுணர் K. அமர்நாத் ராமகிருஷ்ணன் இந்தியத் தொல்லியல் துறையின் சென்னை வட்டத்திற்கு இடமாற்றம் செய்யப் பட்டார்.
- இவர் கீழடி அகழாய்வுகளின் முதல் இரண்டு கட்டங்களை மேற்பார்வையிட்டார்.
- தற்போது இவர் கோவா வட்டத்தில் தொல்லியல் ஆய்வாளராகப் பணியாற்றி வருகிறார்.



## தமிழ்நாடு சட்டங்கள்

- தமிழக சட்டசபையானது ஒரு மசோதாவினை, தமிழ்நாடு ஊதிய வழங்கீட்டுச் சட்டம், 1951 என்ற சட்டத்தின் மீது நிறைவேற்றியுள்ளது.
- கடந்த ஆண்டில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்ட அறிவிப்புகளுக்கு இது ஒரு செயல் வடிவத்தினைக் கொடுக்கும்.
- இந்த மசோதாவினை அமைச்சர் துரைமுருகன் (சட்டமன்றத் துறைப் பொறுப்பினை வகிக்கிறார்) சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தினார்.
- கடந்த ஆண்டு மார்ச் 24 அன்று, அப்போதைய முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள், ஒரு சட்டமன்ற உறுப்பினரின் குடும்பத்திற்கு வழங்க வேண்டிய மொத்தக் கொடுப்பனவானது ரூ.2 லட்சத்திலிருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தப்படும் என அறிவிக்கச் செய்தார்.
- முன்னாள் சட்டப்பேரவை (சட்டசபை) உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற மேலவை உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டிய ஓய்வூதியமானது 20,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தப்படும் எனவும் அவர் அறிவித்தார்.
- உயிரிழந்தச் சட்டப்பேரவை மற்றும் சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் சட்டப் பூர்வ வாரிசுகளுக்கு வழங்க வேண்டிய குடும்ப ஓய்வூதியமானது ரூ.10,000லிருந்து ரூ.12,500 ஆக உயர்த்தப்படும்.
- முந்தைய அ.தி.மு.க. ஆட்சியின் போது இயற்றப்பட்ட ஒப்பந்த விவசாயம் தொடர்பான சட்டத்தை ரத்து செய்வதற்கான ஒரு மசோதாவும் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு வேளாண் உற்பத்தி மற்றும் கால்நடை ஒப்பந்த விவசாயம் மற்றும் சேவைகள் (மேம்பாடு மற்றும் வசதி) ரத்து மசோதா அறிமுகப்படுத்தப் பட்டது.
- தமிழக அரசின் 2019 ஆம் ஆண்டு ஒப்பந்த விவசாயம் மற்றும் சேவைகள் சட்டமானது மத்திய அரசினால் முன்வைக்கப்பட்ட ஒரு மாதிரி மசோதாவினை அடிப்படையாகக் கொண்டது.


## தமிழக சட்டசபை கூட்டத் தொடர்

- தமிழக சட்டசபையின் நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடரானது ஆகஸ்ட் 13 அன்று தொடங்கியது.
- பின்னர் செப்டம்பர் 13 அன்று சபாநாயகர் அப்பாவு அவர்களால் தேதி குறிப்பிடாமல் அவை ஒத்தி வைக்கப் பட்டது.
- சுதந்திரத்திற்குப் பிறகு மாநிலச் சட்டமன்றத்தில் ஆங்கிலோ – இந்திய சமூகத்தைச் சேர்ந்த ஒரு சட்டமன்ற உறுப்பினர் நியமிக்கப்படாதது இதுவே முதல்முறையாகும்.
- 2019 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட 104வது அரசியலமைப்பு திருத்தச் சட்டம் மக்களவையிலும் நாட்டின் அனைத்துச் சட்டமன்றங்களிலும் ஆங்கிலோ இந்தியர் கொண்டிருந்த பிரதிநிதித்துவத்தினை ரத்து செய்தது.

## பல்கலைக்கழக ஆட்சிமன்றக் குழு

- சபாநாயகர் பல சட்டசபை உறுப்பினர்களை பல்வேறு பல்கலைக் கழகங்களின் ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்களாக நியமித்துள்ளார்.
- அனைத்து சட்டசபை உறுப்பினர்களும் 3 ஆண்டுகள் வரை இப்பதவியினை வகிப்பர்.
- இந்தக் காலகட்டத்தின் போது அவர்கள் சட்டசபை உறுப்பினர் பொறுப்பிலிருந்து பதவி விலகினால் இக்குழுவிலும் அவர்களுடைய பதவிக் காலம் முடிவடையும்.

## சமூக நீதி தினம்




- தமிழக அரசானது ஈ.வெ. ராமசாமி பெரியார் அவர்களுடைய 143வது பிறந்தநாளான செப்டம்பர் 17 ஆம் தேதியினை சமூக நீதி தினமாக கொண்டாடியது.

- முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு சமூக நீதிசார் உறுதிமொழியை வழங்கினார்.

## ரவி – தமிழக ஆளுநர்

- சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சிப் பானர்ஜி அவர்கள் ஆர்.என். ரவி அவர்களுக்கு ஆளுநராகப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- இவர் தமிழகத்தின் 15வது (1969 ஆம் ஆண்டிலிருந்து) ஆளுநராகப் பதவி ஏற்றுள்ளார்.



## பனைமர மேம்பாட்டுத் திட்டம்

- முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் இத்திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இதனை ஊக்குவிப்பதற்காக வேண்டி சபாநாயகர் அப்பாவு அவர்கள் ஒரு லட்சம் பனை விதைகளை வழங்கினார்.
- பனை மரமானது தமிழகத்தின் மாநில மரமாகும்.




- இத்திட்டத்தின் கீழ், 76 லட்சம் பனை விதைகள் மற்றும் ஒரு லட்சம் பனை மரக் கன்றுகள் வேளாண் துறையின் முழு மானியத்துடன் விவசாயிகளுக்கு வழங்கப் படும்.
- இவை ஏரிகள் மற்றும் குளங்களின் கரைகளில் நடப்படும்.
- இந்தப் பணியின் ஒரு பகுதியாக, தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கிள்ளிகுளம் எனும் இடத்தில் அமைந்துள்ள அரசு வேளாண் கல்லூரியில் பனை மரங்கள் குறித்த ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் படும்.

## பிரான்சிஸ் கிருபா



- ❖ பிரபல தமிழ் எழுத்தாளரும் தமிழ் கவிஞருமான பிரான்சிஸ் கிருபா சமீபத்தில் சென்னையில் காலமானார்.
- ❖ இவர் திருநெல்வேலி மாவட்டத்தின் நாங்குநேரி அருகே உள்ள பத்தினிப்பாறை என்ற கிராமத்தைச் சேர்ந்தவராவார்.
- ❖ இவர் காமராஜரின் வாழ்க்கை வரலாற்றுப் படத்திற்கான திரைக்கதை மற்றும் வசனங்களை எழுதியவராவார்.

## வகுப்புவாத அரசாணை 1921



Government of Madras

PUBLIC DEPARTMENT

G.O. No. 613, 16th September 1921

Public Services

Non-Brahmans—Appointment of—Instructions issued.

Order—No. 613, Public, dated 16th September 1921.

In order to increase the proportion of posts in Government offices held by non-Brahmans, the Government direct that the principle prescribed for the Revenue Department in Board's Standing Order No. 128 (2), on the subject of the distribution of appointments among various castes and communities, should be extended to appointments of all grades in the several departments of Government. All heads of departments and other officers empowered to make appointments are requested to adhere strictly to this principle in filling up vacancies in future.

2. Heads of departments, Collectors and District Judges are requested to submit to Government half-yearly returns showing, in respect to their own offices and the subordinate offices under their control, the number of men newly entertained in the permanent service during the half-year and classifying them under the following heads:—

(1) Brahmans.
(2) Non-Brahman Hindus.
(3) Indian Christians.
(4) Muhammadans.
(5) Europeans and Anglo-Indians.
(6) Others.

The returns should be submitted not later than the 15th of January and 15th of [illegible] of each year. The first return should be for the half-year ending 31st December 1921.


(By order of the Governor in Council)

[illegible]
Acting Chief Secretary.

To all heads of departments under the Chief Secretary including Collectors and District and Sessions Judges.
Copy to the departments of the Secretariat [illegible]
Editorial Table.

- இது 100 ஆண்டுகளுக்கு முன்பு இந்த நாளில் (செப்டம்பர் 16) நீதிக் கட்சி மாகாண அரசாங்கத்தால் வழங்கப் பட்டது.
- அது இந்தியக் கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் மற்றும் ஆதி-திராவிடர் ஆகியோரை உள்ளடக்கிய பிராமணரல்லாதோர் மாகாணச் சேவைகளில் வகிக்கும் பதவிகளின் விகிதத்தை அதிகரிக்க முயன்றது.
- இது பிராமணரல்லாதவர்களுக்கு அதிகாரம் அளிப்பதோடு நிர்வாகம் மற்றும் அரசியலில் அவர்களுக்கு வேண்டிய இடத்தைப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பி.ஆர். அம்பேத்கர் தலித்துகளுக்கான அரசியல் இட ஒதுக்கீட்டை 1919 ஆம் ஆண்டில் சவுத்பரோ குழுவிடம் (Southborough Committee) கோரினார்.
- 1928 ஆம் ஆண்டில், சுப்பராயன் ஆட்சியின் கீழ் அப்போதையக் கல்வி அமைச்சராக இருந்த முத்தையா முதலியார் 1921 ஆம் ஆண்டின் ஆணையை அமல்படுத்த ஒரு வகுப்புவாத அரசாணையை அறிமுகப் படுத்தினார்.

## இந்திரா பார்த்தசாரதி சாகித்திய அகாடமி



- சாகித்திய அகாடமி தனது உயரிய கௌரவ தோழமைத் திட்டத்திற்கு வேண்டி 25 வருட இடைவெளிக்குப் பிறகு இந்திரா பார்த்தசாரதி என்ற ஒரு தமிழ் எழுத்தாளரைத் தேர்வு செய்துள்ளது.
- இவர் பொதுவாக இ.பா. என்று அழைக்கப்படுகிறார்.
- ஜெயகாந்தன் (62 வயது) 1996 ஆம் ஆண்டில் அகாடமியின் இந்த தோழமைத் திட்டத்தில் இணைந்த இளம் வயது நபர் ஆவார்.
- இவருக்கு முன்பாக தமிழ் எழுத்துத் துறையிலிருந்து இருவர் மட்டுமே தேர்வாகினர்.
- அவர்கள் ராஜாஜி (அ) இராஜகோபாலாச்சாரி (1969) மற்றும் T.P. மீனாட்சிசுந்தரம் (1975) ஆகியோர் ஆவர்.
- V. ராகவன் (1979) மற்றும் K.R. ஸ்ரீனிவாச ஐயங்கார் (1985) ஆகிய இரு தமிழர்களும் தோழமைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டாலும் சமஸ்கிருதம் மற்றும் இந்திய ஆங்கில மொழிப் படைப்புகளுக்கு வேண்டி அவர்கள் ஆற்றியப் பங்களிப்பிற்காகவே அது வழங்கப் பட்டது.

- இந்திரா பார்த்தசாரதி 16 நாவல்கள், 10 நாடகங்கள் மற்றும் 6 சிறுகதைத் தொகுப்புகள் உட்பட 40க்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார்.
- இவரது அரசியல் கருப்பொருள் குறித்தப் படைப்புகளுக்காக வேண்டி இவர் பெரிதும் குறிப்பிடப் படுகிறார்.
- அவர் ராமானுஜர் நாடகத்தை தனது மகத்தான படைப்பாகக் கருதுகிறார்.
- 1968 ஆம் ஆண்டு 42 ஏழை விவசாயிகள் கொல்லப்பட்ட கீழவெண்மணிப் படு கொலையின் பின்னணி பற்றி எழுதப் பட்ட குருதிப்புனல் என்ற அவரது படைப்பானது 1977 ஆம் ஆண்டில் அவருக்கு சாகித்திய அகாடமி விருதினைப் பெற்று தந்தது.
- பாரதிய பாஷா பரிஷத் விருது மற்றும் சரஸ்வதி சம்மான் உள்ளிட்ட பல மதிப்பு மிக்க விருதுகளை இவர் பெற்றுள்ளார்.
- சாகித்திய மற்றும் சங்கீத நாடக அகாடமி விருதுகளைப் பெற்ற ஒரே தமிழ் எழுத்தாளர் இவராவார்.

## மொழி பெயர்ப்பிற்கான சாகித்திய அகாடமி பரிசு

- 2020 ஆம் ஆண்டிற்கான மொழி பெயர்ப்பிற்கான சாகித்திய அகாடமி பரிசிற்கு TES ராகவன் மற்றும் K. செல்லப்பன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- திருக்குறளை இந்தியில் மொழி பெயர்த்ததற்காக TES ராகவன் இப்பரிசிற்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.
- வங்காள மொழியில் ரபிந்திரநாத் தாகூர் எழுதிய கோரா எனும் புதினத்தை தமிழில் மொழி பெயர்த்ததற்காக K. செல்லப்பன் இப்பரிசிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## 'கேலோ இந்தியா' போட்டியில் சிலம்பம்

KHELO INDIA

- மத்திய இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் 'கேலோ இந்தியா' என்ற திட்டத்தின் 'விளையாட்டுப் போட்டிகள் மூலம் உள்ளடக்கத்தினை ஊக்குவித்தல்' என்ற முன்னெடுப்பின் கீழ் சிலம்பக் கலையானது அங்கீகரிக்கப் பட்டு உள்ளது.
- சிலம்பம் என்பது தமிழர்களால் உருவாக்கப்பட்ட ஓர் இந்தியத் தற்காப்புக் கலை ஆகும்.

## கீழடி அகழாய்வு

- சிவகங்கை மாவட்டம் கீழடியில் நடைபெற்று வரும் அகழ்வாய்வில், தந்தத்தால் செய்யப்பட்ட பகடை கண்டெடுக்கப் பட்டு உள்ளது.
- இந்த பகடை 4 கிராம் எடையும், 1 புள்ளி 5 செ.மீ கன சதுரமும் கொண்டு ஆறு பக்கங்களிலும் 6 புள்ளிகள் குறிப்பிடப் பட்டுள்ளன.
- ஏற்கனவே நடைபெற்ற முதல்கட்ட அகழ்வாய்வின்போது தந்தத்தில் ஆன சீப்பு கிடைத்தது.
- பின்னர், 6ம் நூற்றாண்டை சேர்ந்த வெள்ளி நாணயம் கண்டெடுக்கப்பட்ட நிலையில், சமீபத்தில் கீழடி அருகே அகரம் பகுதியில் நடைபெற்று வரும் அகழ்வாய்வில் தங்கக் கம்மல் கண்டெடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.
- 13 எழுத்துக்கள்(தமிழி) அடங்கிய பானை ஓடுகள் கண்டறியப்பட்டுள்ளன. பானையில் முட்கள் கொண்டு எழுதியிருக்கலாம்.
- இதற்கு முன்பு ஆதன், உதிரன் என்ற பெயர் கொண்ட ஓடுகள் கிடைத்தன.
- அதிகபட்சமாக வரிவடிவ எழுத்துகள் 7 அடங்கிய பானை ஒடு கிடைத்த நிலையில் 13 எழுத்துக்கள் கொண்ட இந்த ஓட்டால் கல்வியறிவு மிக்க மக்கள் இங்கு வாழ்ந்ததற்குச் சான்றாகக் கருதப்படுகிறது.
- மேலும் கீழடியில் சிவப்பு நிற தானிய கொள்கலன் கண்டெடுக்கப் பட்டு உள்ளது
- இந்த பானை கிடைத்த குழியில் மேலும் ஐந்து பானைகள் கிடைத்துள்ளன.

## சட்டப்பேரவை மாற்றுத் தலைவர்கள்

- தமிழக சட்டப்பேரவையில் தலைவர் இல்லாதபோது பேரவையை நடத்த மாற்றுத் தலைவர்கள் 4 பேர் செயல்படுவர் என்று சபாநாயகர் அப்பாவு அறிவித்துள்ளார்.
- மாற்றுத் தலைவர்களாக அன்பழகன், எஸ்.ஆர்.ராஜா, உதயசூரியன் மற்றும் டி.ஆர்.பி.ராஜா ஆகிய 4 பேர் செயல்படுவர்.

## திருக்குறள் மொழிபெயர்ப்பு

- நரிக்குறவர் இன மக்கள் பேசும் வாக்ரிபோலி மொழி உள்பட பத்து மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகள் வெளியிடப்படவுள்ளதாக செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தெரிவித்துள்ளது.
- மத்திய கல்வி அமைச்சகம், திருக்குறளை இந்திய அரசமைப்பின் எட்டாவது அட்டவணையில் உள்ள 21 மொழிகளில் மொழிபெயர்க்கும் திட்டத்தைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்துக்கு வழங்கியுள்ளது.
- இந்த நிறுவனம், ஏற்கெனவே பஞ்சாபி (2012), மணிப்புரி (2012), தெலுங்கு (2014), கன்னடம் (2014), குஜராத்தி (2015) ஆகிய மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகளை வெளியிட்டுள்ளது.
- இதன் தொடர்ச்சியாக வரும் அக்டோபர் மாதம் மலையாளம், மராத்தி, ஒடியா, ஹிந்தி, நேபாளி, உருது, அரபி, பாரசீகம், வாக்ரிபோலி (நரிக்குறவர் மொழி), படுகு ஆகிய பத்து மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புகள் வெளியிடப்படவுள்ளன.

- அந்த வகையில் உ.வே.சாமிநாதையர் நாட்குறிப்பு, உ.வே.சாமிநாதையர் அருஞ்சொல் அகராதியும் சங்கநூற் சொல்லடைவும், நற்றிணை (கன்னட மொழிபெயர்ப்பு), தொல்காப்பியம் (ஹிந்தி மொழிபெயர்ப்பு), பதிற்றுப்பத்து (கன்னட மொழிபெயர்ப்பு) ஆகியவை உள்ளிட்ட 20 நூல்கள் வெளியிடப் படவுள்ளன.

## கி.ரா. விருது

- கோவை விஜயா பதிப்பகத்தின் விஜயா வாசகர் வட்டத்தின் 2021-ம் ஆண்டுக்கான கி.ரா. விருது பிரபல எழுத்தாளர் கோணங்கிக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- தமிழ் நவீன இலக்கியத்தின் மாய யதார்த்தவாத கதை சொல்லியாக அறியப்படும் எழுத்தாளர் கோணங்கி கோவில்பட்டியைச் சேர்ந்தவர்.
- கரிசல் இலக்கிய பிதாமகர் என்று போற்றப்படும் எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் பெயரில் ஆண்டு தோறும் சிறந்த படைப்பாளாருக்கு கி.ரா. விருதும், ரூ.5 லட்சம் பரிசு தொகையும் வழங்கப்படுகிறது.
- இந்த கி.ரா. விருதை சக்தி மசாலா நிறுவனம் வழங்குகிறது.
- கடந்த 5 ஆண்டுகளாக கோவை விஜயா பதிப்பகத்தின் விஜயா வாசகர் வட்டம் சார்பில் சிறந்த படைப்பாளரைத் தேர்வு செய்து ஜெயகாந்தன் விருது, கவிஞர் மீரா விருது, புதுமைப்பித்தன் விருது, சிறந்த அரசு நூலகருக்கு சக்தி வை கோவிந்தன் விருது, சிறந்த புத்தக விற்பனையாளருக்கு வானதி திருநாவுக்கரசு விருது ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது.

## மீன்வளத்துறை மற்றும் விவசாயத் துறை அறிவிப்புகள்

- நாகை மாவட்டம் நாகூரில் நெய்தல் பாரம்பரியப் பூங்கா 2021-2022ம் ஆண்டில் ரூ.2 கோடி நிதியில் அமைக்கப்படும்.
- சென்னை கொளத்தூரில் வண்ண மீன் வர்த்தக மையம் அரசு மற்றும் தனியார் பங்களிப்புடன் சர்வதேச தரத்தில் நிறுவப்படும்.
- வேளாண் சட்டத்துக்கு எதிராக சட்டமன்றத்தில் தீர்மானம் ஒன்றைக் கொண்டு வரும் 7வது மாநிலம் தமிழகம் ஆகும்.
- ஏற்கெனவே கேரளா, சத்தீஸ்கர், பஞ்சாப், ராஜஸ்தான் உள்ளிட்ட 7 மாநிலங்கள் வேளாண் சட்டங்களுக்கு எதிராக தீர்மானம் கொண்டு வந்திருக்கிறது.
- விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர், வல்லம், திருப்பத்தூர் மாவட்டம் மாதனூர், தருமபுரி மாவட்டம் அரூர் ஆகிய 4 இடங்களில் வேளாண் விரிவாக்க மையம் அமைக்கப்படும்
- திருப்பூரில் புதிய விதைப் பரிசோதனை நிலையம் அமைக்கப்படும்
- கிராமங்களுக்கு சென்று விவசாயிகளின் குறைகளை கேட்க 'விவசாயிகளுடன் ஒருநாள் திட்டம்' செயல்படுத்தப்படும்.
- தர்மபுரி, கடலூர், ராணிப்பேட்டை, திருவாரூரில் 4 அங்கக உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் உருவாக்கப்படும்
- தஞ்சாவூர் மாவட்டத்தில் கால்நடை தீவனம் தயாரிக்கும் தொழிற்சாலை நிறுவப்படும்

- திருநெல்வேலி மாவட்டம்,அபிகேசம்பட்டி கால்நடைப்பண்ணையில் நாட்டுக் கோழி இனப்பெருக்க பண்ணை மற்றும் கோழிக்குஞ்சுப் பொரிப்பகம் நிறுவப்படும்.
- செல்லப்பிராணிகளுக்கான பன்னோக்கு மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம் சென்னை நந்தனத்தில் நிறுவப்படும்
- தருமபுரி, கிருஷ்ணகிரியை இருப்பிடமாக கொண்ட திருக்கச்சிருப்பு செம்மறி ஆட்டினத்துக்கான ஆராய்ச்சி நிலையம் தருமபுரியில் 800 ஏக்கரில் அமைக்கப்படும்.
- மாதவரம் கோழியின ஆராய்ச்சி நிலையத்தில் தமிழ்நாட்டின சிறுவிடை கோழியினத்தை பாதுகாப்பதற்கான வள மையம் நிறுவப்படும்.
- தஞ்சாவூர், ஒரத்தநாடு கால்நடை மருத்துவக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் தமிழகத்தின் பட்டணம் செம்மறி ஆட்டின வள மையம் நிறுவப் படும்.
- உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களின் பொருட்களை சந்தைப்படுத்த கோவை, மதுரை, திருச்சி, சேலம் மாநகராட்சி பகுதிகளில் ரூ.8 கோடி செலவில் 50 சிறப்பு அங்காடிகள் அமைக்கப்படும்.
- வேளாண் இயந்திரங்களை கிராம பகுதிகளிலேயே பழுதுபார்க்க ஏதுவாக திருச்சி, குமுளூர் வேளாண் பொறியியல் கல்லூரியில் வேளாண் பொறியியல் பட்டப்படிப்பு தொடங்கப்படும்.
- கரூர், நாகை (கீழ்வேளூர்), சிவகங்கை (செட்டிநாடு) ஆகிய மாவட்டங்களில் அரசு வேளாண்மைக் கல்லூரிகள் துவங்கப்படும்.

## மக்கள் நல்வாழ்வுத் துறை அறிவிப்புகள்

- சென்னை ராஜீவ் காந்தி மருத்துவமனையில் ரத்த சிவப்பணுக்கள் உறைநிலை சேமிப்பு அலகு ஏற்படுத்தப்படும்.
- 'சற்றே குறைப்போம்' திட்டத்தின் கீழ் சர்க்கரை, உப்பு, எண்ணெய் பயன்பாட்டை குறைக்க விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.
- இந்தியாவிலேயே முதல் முறையாக சென்னைக்கு அருகில் சித்த மருத்துவ பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்படும்.
- தமிழகத்திலேயே முதல் முறையாக, 24 மணி நேரமும் செயல்படும் செவிலியர் கண்காணிப்பு மையம் ஏற்படுத்தப்படும்.

## தமிழ் வளர்ச்சித்துறை அறிவிப்புகள்

- சட்டப்பேரவையில் தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாடு மற்றும் தொல்லியல் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு இவற்றை வெளியிட்டார்.
- தமிழ் அறிஞர்களில் நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டு பரிவுத் தொகை வழங்கப்படும்.
- இதன்படி, முனைவர் தொ.பரமசிவன், சிலம்பொலி சு.செல்லப்பன், புலவர் இளங்குமரனார், முருகேச பாகவதர், சங்கரவள்ளி நாயகம், புலவர் செ.இராசு ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படும்.
- திருக்கோயில்களில், தேவாரம், திருவாசம், நாலாயிர திவ்விய பிரபந்தம் ஆகியவற்றோடு திருக்குறள் வகுப்புகளும் நடத்தப்படும்.

- 'தீராக் காதல் திருக்குறள்' என்ற பெயரில் ஊடகங்கள் வாயிலாக தீந்தமிழ் நடத்தப்படும்.
- வெளிநாடு மற்றும் வெளி மாநிலங்களில் வாழும் தமிழர்களுக்குத் தமிழ் கற்பிக்க ரூ. 1 கோடி நிதி ஒதுக்கி 'தமிழ் பரப்புரைக் கழகம்' உருவாக்கப்படும்.
- குறிப்பாக, தமிழில் பெயர் எழுதும் போது முன் எழுத்தையும் (Initials) தமிழில் எழுத வேண்டும் என அமைச்சர் வலியுறுத்தினார்.

## L. முருகன் – பா.ஜ.க. மாநிலங்களவை வேட்பாளர்




- மத்திய இணை அமைச்சர் L. முருகனை, தாவார்சந்த் கேஹ்லாட் ராஜினாமா செய்த மத்தியப் பிரதேச மாநிலத்தின் ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவிக்கான வேட்பாளராக பா.ஜ.க நிறுத்தியுள்ளது.
- முருகன் ஜூலை மாதம் வரையில் தமிழக பா.ஜ.க பிரிவிற்குத் தலைமை தாங்கினார்.
- பின்னர் அவர் தகவல் மற்றும் ஒளிபரப்பு மற்றும் மீன்வளம், கால்நடை மற்றும் பால்வள அமைச்சகத்தின் இணை அமைச்சராக பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் மத்திய அமைச்சரவையில் இணைக்கப்பட்டார்.
- இதுவே அவர் ஆறு மாதத்தில் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தைத் தருவித்தது.
- கெஹ்லாட் கர்நாடக மாநிலத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டதையடுத்து மத்தியப் பிரதேச மாநிலங்களவை உறுப்பினர் பதவி காலியானது.

## டிரான்ஸ்கிச்சன்

- மதுரையிலுள்ள கோரிப்பாளையம் அருகே திருநங்கைச் சமுதாயத்தினரால் நடத்தப் படும் டிரான்ஸ் கிச்சன் என்ற உணவகம் திறக்கப்பட்டுள்ளது.
- இது அந்த நகரில் இந்த வகையிலான முதல் முன்னெடுப்பாகும்.

- ஸ்வஸ்தி என்ற அமைப்பானது ஆரோக்கியம், விருத்தி மற்றும் ஸ்ரீலஷ்மி பெண்கள் முன்னேற்றச் சங்கம் ஆகிய அமைப்புகளுடன் இணைந்து இந்த முன்னெடுப்பிற்கு நிதி வழங்கியுள்ளது.




## வெகுஜன உணவு வழங்கல் திட்டம்

- முதல்வர் M.K. ஸ்டாலின் அவர்கள் முழுநேர அன்னதானம் வழங்கும் திட்டம் ஒன்றினைத் தொடங்கி வைத்தார்.
- இந்த திட்டமானது திருச்செந்தூரிலுள்ள சுப்ரமணிய சுவாமி ஆலயம், சமயபுரம் மாரியப்பன் ஆலயம் மற்றும் திருத்தணியிலுள்ள சுப்ரமணிய சுவாமி ஆலயம் ஆகியவற்றில் தொடங்கப் பட்டுள்ளது.
- இத்திட்டத்தின் கீழ் காலை 8 மணி முதல் இரவு 10 மணி வரை என எந்த நேரத்திலும் பக்தர்கள் உணவினைப் பெற இயலும்.
- ஸ்ரீரங்கத்திலுள்ள அருள்மிகு ரங்கநாதர் ஆலயம் மற்றும் பழனியில் உள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி ஆலயம் ஆகியவை தற்போது முழுநேர அன்னதானத் திட்டம் செயல்படுத்தப் பட்டு வரும் மற்ற இரண்டு கோயில்களாகும்.

## AK ராஜன் குழு

- நீட் தேர்வின் தாக்கம் குறித்து 165 பக்கங்கள் கொண்ட ஒரு அறிக்கையானது ஓய்வு பெற்ற நீதிபதி A.K. ராஜன் தலைமையிலான குழுவினால் சமர்ப்பிக்கப் பட்டது.
- நீட் தேர்வினை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென அந்த அறிக்கையில் கூறப் பட்டுள்ளது.
- ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் மருத்துவர் நியமனத்தில் பற்றாக்குறையை ஏற்படுத்துவதால் நீட் தேர்வானது தமிழக சுகாதார உள்கட்டமைப்பைப் பாதிக்கும் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- கிராமப்புற மற்றும் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் மருத்துவக் கல்வியைப் பெற இயலாமல் போகலாம் என்றும் இந்த அறிக்கை கூறுகிறது.
- நீட் தேர்விற்கு முன்னதாக தமிழ்வழிக் கல்வி பயின்ற மாணவர்களுக்கு 14.44 சதவீதமாக வழங்கப்பட்ட MBBS சேர்க்கை வீதமானது 2020-21 ஆம் ஆண்டில் 1.7 சதவீதமாக குறைந்து விட்டது எனவும் இந்தக் குழு சுட்டிக் காட்டியுள்ளது.

Table 7.14.MBBS Admission for the Period 2010-11 to 2020-21: pre-NEET and post-NEET period

| Academic Year | MBBS Seats (Govt&SF) | Board of Education | | | Medium of Instruction | | Type of Management | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | State Board | CBSE | Others | Tamil | English | Govt. | Private |
| 2010-2011 | 2349 | 2332 | 14 | 3 | 465 | 1884 | - | - |
| 2011-2012 | 2543 | 2533 | 2 | 8 | 459 | 2084 | - | - |
| 2012-2013 | 2707 | 2692 | 12 | 3 | 503 | 2204 | - | - |
| 2013-2014 | 3267 | 3251 | 4 | 12 | 570 | 2697 | - | - |
| 2014-2015 | 3147 | 3140 | 2 | 5 | 602 | 2545 | 38 | 3109 |
| 2015-2016 | 3015 | 2996 | 2 | 17 | 510 | 2500 | 36 | 2979 |
| 2016-2017 | 3608 | 3544 | 35 | 29 | 537 | 3071 | 34 | 3574 |
| 2017-2018 | 3517 | 2303 | 1113 | 101 | 56 | 3461 | 3 | 3514 |
| 2018-2019 | 3638 | 2626 | 894 | 118 | 119 | 3519 | 5 | 3633 |
| 2019-2020 | 4202 | 2762 | 1368 | 72 | 71 | 4131 | 6 | 4196 |
| 2020-2021 (92.5%) | 4129 | 2453 | 1604 | 72 | 82 | 4047 | 11 | 4118 |
| 2020-2021 (7.5%) | 336 | 336 | 0 | 0 | 217 | 119 | 336 | 0 |

## பவித்ரா வெங்கடேஷ்

- தமிழ்நாட்டைச் சேர்ந்த பவித்ரா வெங்கடேஷ் 60வது தேசிய ஓபன் தடகளப் போட்டியின் போல் வால்ட் என்ற பிரிவில் தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- இந்த போட்டியானது வாரங்கல் எனுமிடத்தில் உள்ள ஜவஹர்லால் நேரு மைதானத்தில் நடத்தப் பட்டது.
- சேலத்தைச் சேர்ந்த 19 வயதான இவர் 3.90 மீட்டர் தொலைவில் எல்லையை எட்டினார்.

## காந்தி வேட்டி நூற்றாண்டு விழா



- மகாத்மா காந்தி வேட்டியணிவதை தனது உடைப் பழக்கமாக மாற்றியதன் நூற்றாண்டானது செப்டம்பர் 22 அன்று கொண்டாடப்பட்டது.
- 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் 22 அன்று மதுரையில் நடந்த ஒரு நிகழ்வு காந்தியினை வேட்டி அணிய வைத்தது.
- இந்த நிகழ்வை, நினைவு கூறும் வகையில், 'தோதி 100' எனப்படும் ஒரு பெரிய நிகழ்ச்சியினை ராம்ராஜ் காட்டன் நிறுவனம் திருப்பூரில் ஏற்பாடு செய்தது.
- இந்த விழாவில் 100 தியாகிகள் மற்றும் 100 நெசவாளர்களுக்கு விருதளிக்கப்பட்டு 100 மரக்கன்றுகள் நடப்பட்டன.
- சென்னையிலுள்ள கலாக்ஷேத்ரா அறக்கட்டளையைச் சார்ந்த நடனக் கலைஞர்கள் 'காந்திய வழியில் ராம்ராஜ்' என்ற பாரம்பரிய நடன பாணியிலான நாடகத்தினை நிகழ்த்தினர்.

## 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் – தமிழ்நாடு




- 9 ஆண்டுகளில் தமிழகத்தின் ஏற்றுமதியினை நான்கு மடங்காக்குவதன் மூலம் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாறுதல் என்ற ஒரு இலக்கினை அடையச் செய்வதற்காக பொருளாதார வளர்ச்சிக்கான ஒரு 5 ஆண்டு செயல்திட்டத்தினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.
- இதற்காக தமிழக அரசானது இரு முனை அணுகுமுறையைப் பின்பற்ற உள்ளது.
  - ஏற்றுமதி ஊக்குவிப்பு (மேம்பாடு) மற்றும்
  - ஏற்றுமதியினைப் பல்வகைப்படுத்துதல்
- இது 2030 ஆம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற இலக்கினை அடைவதற்கானதாகும்.
- தமிழக மாநிலமானது ஏற்றுமதியை அதிகரிப்பதற்காக அரசு தலைமைச் செயலாளர் தலைமையின் கீழ் ஒரு ஏற்றுமதி மேம்பாட்டுச் சபை ஒன்றினை அமைக்கிறது.
- ஒரே கட்டத்தில் மணசெல்லூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் இரண்டு பொருளாதார வேலைவாய்ப்புப் பகுதிகளை உருவாக்கும் பணியையும் தமிழக அரசு செய்து வருகிறது.

- இந்தியாவில் தமிழ்நாடு ஏற்றுமதி செய்வதில் மூன்றாம் இடத்தில் உள்ளது.
- இத்திட்டத்தின் முழக்கம் தமிழ்நாட்டில் தயாரிக்கப் பட்டது மற்றும் ஏற்றுமதியில் ஏற்றம் என்பதாகும்.

## முழுவதும் சூரிய சக்தியால் இயங்கும் மத்திய இரயில் நிலையம்

- புரட்சித்தலைவர் டாக்டர் M.G. ராமச்சந்திரன் மத்திய அல்லது சென்னை மத்திய இரயில் நிலையமானது இரயில் நிலையத்தின் நடைமேடைப் பகுதிகளின் கூரைகளில் நிறுவப் பட்டுள்ள சூரியசக்தி மின்தகடுகள் மூலம் பெறப்படும் ஆற்றலைக் கொண்டு ஒரு நாளைக்குத் தேவையான முழு மின்சாரத் தேவையையும் பூர்த்தி செய்துள்ளது.
- இந்த இரயில் நிலையமானது தெற்கு இரயில்வே மண்டலத்தின் கீழ் வருகிறது.
- இந்த நிலையத்தில் 1.5 MW அளவிலான சூரியசக்திக் கட்டமைப்பானது நிறுவப் பட்டு உள்ளது.
- இந்திய இரயில்வே அமைப்பில் 'ஆற்றல் நடுநிலைமை உடைய நிலையங்கள்' என்றக் கருத்தினை முதன்முதலில் கொண்டு வந்தது தெற்கு இரயில்வே மண்டலமாகும்.



## ஜல் ஜீவன் திட்டம் – தமிழ்நாடு

- மத்திய ஜல் ஜீவன் சக்தித் துறை இணை அமைச்சர் பிரகலாத் சிங், ஜல்ஜீவன் திட்டத்தினை அமல்படுத்தியதற்காக தமிழக மாநிலத்திற்குப் பாராட்டுகளை வழங்கி உள்ளார்.
- அரசுப் பள்ளிகள், அங்கன்வாடிகள், ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு அலுவலகக் கட்டிடங்களில் 100% குடிநீர் குழாய் இணைப்புகளை வழங்குவதை படேல் பாராட்டினார்.




# தேசியச் செய்திகள்

## உலகளாவிய அஞ்சல் ஒன்றியம் – இந்தியா

UPU UNIVERSAL POSTAL UNION

- கோட் டி ஐவோரியின் அபிட்ஜானில் நடைபெற்ற 27வது UPU (காங்கிரஸ்) மாநாட்டில் உலகளாவிய அஞ்சல் ஒன்றியத்தின் இரு முக்கிய அமைப்புகளின் உறுப்பினர் பொறுப்பிற்காக நடத்தப்பட்ட தேர்தலில் இந்தியா வென்றுள்ளது.
- அதில் நிர்வாகச் சபைக்கு இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- நிர்வாகச் சபைக்கான தேர்தலில் தெற்காசியா மற்றும் ஓசியானியா பகுதிகளில் (Oceania region) இந்தியா அதிக வாக்குகளைப் பெற்றது.
- இது தவிர அஞ்சல் செயல்பாட்டுச் சபைக்கும் இந்தியா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- இந்தியா தற்போது, உலகளாவிய அஞ்சல் ஒன்றியத்தில் ஒத்துழைப்பினை வலுப்படுத்த அனைத்து நாடுகளுடன் இணைந்து செயல்படும்.

## அசோக் மற்றும் 7 இதர ITDC தங்கும் விடுதிகள்

- அரசின் பணமாக்கல் திட்ட இலக்கின் கீழ் 'வெகுவாக பயன்படுத்தப்படாத பொதுத் துறை சொத்துக்களான' அசோக் என்ற 5 நட்சத்திர தங்கும் விடுதியானது நான்கு ஆண்டுகளுக்குத் தனியாரிடம் குத்தகைக்கு விடப்படும்.
- தேசியப் பணமாக்கல் தொடர் திட்டத்தில் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் குறிப்பிட்ட எட்டு இந்தியச் சுற்றுலா மேம்பாட்டுக் கழகச் சொத்துக்களுள் அசோக் மற்றும் சாம்ராட் ஆகிய தங்கும் விடுதிகளும் அடங்கும்.

***அசோக் குழும தங்கும் விடுதிகள்***

- இவை கடந்த 40-50 ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட ஒரு தனித்த (பிராண்ட்) மதிப்புடன் கூடிய இந்தியச் சுற்றுலா மேம்பாட்டுக் கழகத்தின் கீழான முன்னணி தங்கும் விடுதிகள் ஆகும்.
- பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப் படும் அனைத்து அரசு நிகழ்வுகளுக்கும் இந்த விடுதிகள் ஒரு முக்கிய அரங்கமாக உள்ளன.

## POSHAN Maah




- மத்திய மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டு அமைச்சகமானது 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் கருத்துருவுடன் கூடிய POSHAN Maah என்ற நிகழ்வினை ஏற்பாடு செய்து கொண்டாடுவதற்குத் திட்டமிட்டுள்ளது.
- போஷான் அபியான் திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டின் செப்டம்பர் மாதமானது போஷான் மாஹ் (POSHAN Maah) நிகழ்வாக அனுசரிக்கப் படுகிறது.
- சமூக ஒருங்கிணைப்பை உறுதி செய்தல் மற்றும் மக்களின் பங்கேற்பினை அதிகரித்தல் போன்றவற்றிற்காக இந்நிகழ்வானது அனுசரிக்கப்படுகிறது.

## நீரஜ் சோப்ரா மைதானம்

- புனேவிலுள்ள ராணுவ விளையாட்டு நிறுவனத்திற்கு வருகை புரிந்த மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அந்த நிறுவனத்தின் மைதானத்திற்கு "நீரஜ் சோப்ரா மைதானம்" எனப் பெயரிட்டார்.
- 11 விளையாட்டுத் துறைகளின் நம்பிக்கைக்குரிய விளையாட்டு வீரர்களை அடையாளம் கண்டு அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதே இந்திய இராணுவத்தின் (விளையாட்டுத் துறையில்) முழு கவனமாகும்.
- இந்திய இராணுவத்தின் "மிஷன் ஒலிம்பிக்ஸ்" என்ற திட்டம் ஆனது 2001 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது ஒலிம்பிக் மற்றும் இதர பிற சர்வதேசப் போட்டிகளில் பதக்கம் வெல்லும் வகையிலான பயிற்சியினை வழங்கும் நோக்கோடு தொடங்கப்பட்டது.

*குறிப்பு*

- ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற நீரஜ் சோப்ராவிற்கு கௌரவமளிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட் 07 ஆம் தேதியன்று ஈட்டி எறிதல் தினமாக அனுசரிக்கப் படும் என இந்திய தடகளக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.




## BH – தொடர்

- சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சகமானது தடையற்ற வாகனப் போக்குவரத்து என்ற ஒரு வசதியினை வழங்குவதற்காக BH-தொடர் என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது.
- இந்தப் பிரிவு முத்திரை கொண்ட வாகனங்களின் உரிமையாளர்கள் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு இடம் பெயர்கையில் இனி அந்த வாகனத்திற்கு என்று ஒரு புதிய பதிவு முத்திரையினைப் பெற வேண்டிய அவசியம் இருக்காது.
- இந்தத் தொடரின் கீழான வாகனப் பதிவு வசதியானது பாதுகாப்புத் துறை ஊழியர்கள், மத்திய (அ) மாநில அரசு ஊழியர்கள், 4 (அ) அதற்கு மேற்பட்ட மாநிலங்கள் (அ) ஒன்றியப் பிரதேசத்தில் அலுவலகத்தைக் கொண்டுள்ள மத்திய (அ) மாநில பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் (அ) அமைப்புகளுக்குத் தன்னார்வ அடிப்படையில் கிடைக்கப் பெறும்.

- 1988 ஆம் ஆண்டு மோட்டார் வாகனச் சட்டத்தின் 47வது பிரிவில், ஒரு வாகனத்தினை அது பதிவு செய்யப்பட்ட மாநிலத்தைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் 12 மாதங்களுக்கு மேல் ஒருவர் உபயோகிக்க இயலாது எனக் கூறப்பட்டுள்ளது.
- அதற்கு பதிலாக அந்த 12 மாதத்திற்குள் புதிய மாநிலத்தின் பதிவு ஆணையத்திடம் ஒரு புதிய பதிவினைச் செய்து கொள்ளலாம்.
- இந்த சிரமத்தைக் கருத்தில் கொண்டு இந்தப் புதிய BH தொடரானது தொடங்கப் பட்டுள்ளது.




## பிரதான் மந்திரி ஜன்தன் யோஜனா




- பிரதான் மந்திரி ஜன்தன் யோஜனா திட்டத்தின் கீழ் வங்கிக் கணக்குகளின் எண்ணிக்கையானது ரூ.1.46 லட்சம் கோடி மதிப்பிலான மொத்த வைப்புத் தொகையுடன் 43 கோடி கணக்குகளாக உயர்ந்துள்ளது.
- ஒரு முதன்மையான நிதி உள்ளடக்கத் திட்டமான பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா செயல்படுத்தப்பட தொடங்கி ஏழு ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.
- இத்திட்டமானது 2014 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 அன்று சுதந்திர தினத்தில் உறையாற்றிய போது பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் அறிவிக்கப்பட்டது.
- நிதி உள்ளடக்கத்தினை முழுமையாக கொண்டு வரும் நோக்கத்தோடு ஆகஸ்ட் 28 அன்று இத்திட்டம் தொடங்கப்பட்டது.

- வங்கிச் சேவை, கடன்பெறுதல், காப்பீடு, பணம் அனுப்புதல் மற்றும் ஓய்வூதியம் உள்ளிட்ட நிதியியல் சேவைகளை மக்கள் மலிவு விலையில் அணுகச் செய்வதற்காக இத்திட்டமானது தொடங்கப்பட்டது.

## கடலோர காவற்படைக் கப்பல் – விக்ரஹா

- விக்ரஹா எனப்படும் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஒரு கடலோரக் காவற்படைக் கப்பலினைப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் தமிழகத்தில் சென்னையில் தொடங்கி வைத்தார்.
- இந்த 98 மீட்டர் நீளம் கொண்ட கப்பலானது ஆந்திரப் பிரதேசத்தின் விசாகப் பட்டினத்தில் (வைசாக்) பணியமர்த்தப்படும் என பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்து உள்ளது.
- இந்தக் கப்பலானது லார்சன் & டியூப்ரோ என்ற ஒரு கப்பல் கட்டும் நிறுவனத்தினால் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு கட்டமைக்கப்பட்டது.




## ஆளில்லா விமானங்களுக்கான தாராளமயமாக்கப்பட்ட விதிகள்


- மத்திய வான்வழிப் போக்குவரத்து அமைச்சகமானது ஆளில்லா விமானங்களுக்கான தாராள மயமாக்கப்பட்ட விதிகளை அறிவித்தது.
- இந்தத் தாராள மயமாக்கப்பட்ட விதிகள் 2021 ஆம் ஆண்டு ஆளில்லா விமான அமைப்பு விதிகளுக்குப் பதிலாக செயல்படுத்தப்படும்.
- டிஜிட்டல் ஸ்கை என்ற ஒரு தளமானது பயனாளிகளுக்கு ஏதுவான ஒரு ஒற்றைச் சாளர அமைப்பாக உருவாக்கப்படும்.

***டிஜிட்டல் ஸ்கை தளம்***

- இது வான்வழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் ஒரு முன்னெடுப்பாகும்.
- No Permission, No take-off போன்ற ஆளில்லா விமான கட்டமைப்புகளுக்காக வேண்டிய ஆதரவை வழங்குவதற்காக பாதுகாப்பான மற்றும் மதிப்பிடக் கூடிய ஒரு தளத்தினை இது வழங்க முயல்கிறது.
- இது டிஜிட்டல் முறையில் விமான அனுமதியை வழங்கவும், ஆளில்லா விமானச் செயல்பாடுகள் மற்றும் போக்குவரத்தினை திறம்பட்ட முறையில் நிர்வகிக்கச் செய்தல் ஆகியவற்றிற்காகவும் வேண்டி வடிவமைக்கப்பட்டுள்ளது.




## கோழிப் பண்ணைகளுக்கான புதிய விதிகள்




- ❖ வேளாண் அமைச்சகத்தின் கீழான கால்நடை வளர்ப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத் துறையானது கோழிப் பண்ணைகளுக்கான ஒரு புதிய வழிகாட்டுதல் தொகுப்பினை வெளியிட்டுள்ளது.
- ❖ பண்ணையிலுள்ள கோழிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து இது கோழிப் பண்ணைகளை வகைப்படுத்துகிறது.
  - சிறு பண்ணை – 5000 முதல் 25000 வரையிலான கோழிகள்
  - நடுத்தரப் பண்ணை – 25000 முதல் 1 லட்சம் வரையிலான கோழிகள்
  - பெரிய பண்ணை – 1 லட்சத்திற்கும் மேலான கோழிகள்
- ❖ ஒரு பண்ணையானது,
  - குடியிருப்புப் பகுதியிலிருந்து 500 மீட்டருக்கு அப்பாலும்,
  - ஆறுகள், ஏரிகள், கால்வாய்கள் மற்றும் குடிநீர் ஆதாரங்களிலிருந்து 100 மீட்டர் தொலைவிலும்
  - தேசிய நெடுஞ்சாலையிலிருந்து 100 மீட்டர் தொலைவிலும் மற்றும்
  - கிராம நடைபாதைகள் மற்றும் கிராமச் சாலைகளிலிருந்து 10-15 மீட்டர்கள் தொலைவிலும் அமைக்கப்பட வேண்டும்.

- இந்தப் புதிய விதிமுறையின் கீழ், நடுத்தர அளவிலான கோழிப் பண்ணையினை வைத்துள்ள ஒரு உரிமையாளர் தண்ணீர்ச் சட்டம், 1974 மற்றும் காற்றுச் சட்டம், 1981 ஆகியவற்றின் கீழ் மாநில மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்திடமிருந்து ஒரு அனுமதி சான்றிதழைப் பெற வேண்டும்.
- இந்த அனுமதியானது 15 ஆண்டுகளுக்குச் செல்லுபடி ஆகும்.
- கால்நடை வளர்ப்புத் துறையானது மாநிலம் மற்றும் மாவட்டங்கள் அளவில் இந்த வழிகாட்டுதல்களை அமல்படுத்துவதற்கான பொறுப்பினைக் கொண்டதாகும்.

## பதவிப் பிரமாணம்

- இந்தியத் தலைமை நீதிபதி N.V. ரமணா அவர்கள் 3 பெண் நீதிபதிகள் உட்பட 9 புதிய நீதிபதிகளுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- இந்த 9 புதிய நீதிபதிகளுள் நீதிபதி விக்ரம் நாத், நீதிபதி B.V. நாகரத்னா மற்றும் நீதிபதி P.S. நரசிம்மா ஆகிய மூன்று நீதிபதிகள் அடுத்தடுத்து இந்தியத் தலைமை நீதிபதி பொறுப்பினை ஏற்க உள்ளனர்.
- இந்த 9 நீதிபதிகளின் நியமனத்தோடு உச்ச நீதிமன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கையான 34 என்ற அளவில் இந்தியத் தலைமை நீதிபதியோடுச் சேர்த்து 33 ஆக உயர்ந்துள்ளது.
- உச்ச நீதிமன்றத்தில் இதுவே பெண் நீதிபதிகள் அதிக அளவில் உள்ள ஒரு எண்ணிக்கையாகும் (4 நீதிபதிகள்).
- உச்ச நீதிமன்றத்தில் ஒரே சமயத்தில் ஒன்பது நீதிபதிகள் பதவியேற்பது இதுவே முதன்முறையாகும்.
- மேலும், ஒரு பதவியேற்பு நிகழ்வினை நேரடியாக ஒளிபரப்ப உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்தது இதுவே முதன்முறையாகும்.

*குறிப்பு*

- கடந்த 71 ஆண்டுகளில் இன்று வரை எட்டு பெண் நீதிபதிகள் மட்டுமே நியமிக்கப் பட்டுள்ளனர்.
- முதல் பெண் நீதிபதியான M. பாத்திமா பீவி 1989 ஆம் ஆண்டில் நியமிக்கப் பட்டார்.
- நீதிபதி இந்திரா பானர்ஜி உச்ச நீதிமன்றத்தில் நீண்ட காலமாகப் பணியாற்றி வரும் ஒரு பெண் நீதிபதி ஆவார்.



## இணையச் சந்தை மின்னணு வளம் (e-source)

- சென்னையிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது மின்னணுக் கழிவுகளை கையாளுவதற்குப் பயன்படுத்தப்படும் வகையில் e-source (மின்னணு வளம்) எனப்படும் இணையத் தளம் ஒன்றினை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.
- முறையான மற்றும் முறைசாரா நாடுகளின் பங்குதாரர்களை இணைப்பதன் மூலம் மின்னணுக் கழிவுகளைக் கையாளுவதற்கு 'e-source' தளம் பயன்படுத்தப்படும்.
- மின்சாரம் மற்றும் மின்னணு உபகரணக் கழிவுகளுக்கான இணையச் சந்தையாக செயல்படுவதற்கான ஒரு பரிமாற்றத் தளமாக 'e-source' தளம் செயல்படும்.
- இந்திய – ஜெர்மானிய நீடித்த வளர்ச்சி மையமானது (Indo-German Centre on Sustainability) இந்த முன்னெடுப்பிற்குத் தலைமை தாங்குகிறது.




*The ecosystem being envisaged under the 'e-Source' initiative of IGCS, IIT Madras*

## கடற்படைப் பயிற்சி – இந்தியா மற்றும் அல்ஜீரியா



- இந்தியா மற்றும் அல்ஜீரியா நாட்டுக் கடற்படைகள் அல்ஜீரியக் கடற்கரையில் தங்களது முதலாவது கடற்படைப் பயிற்சியினை மேற்கொண்டன.
- இருநாடுகளுக்கிடையேயான கடல்சார் ஒத்துழைப்பின் மீதான அதிகரிப்பினை இப்பயிற்சியானது பிரதிபலிக்கிறது.
- இந்தியா சார்பாக ரேடார் கருவிக்குப் புலப்படாத ஐ.என்.எஸ். தாபார் என்ற கப்பலும் அல்ஜீரியா சார்பாக ANS இசாகர் என்னும் அந்நாட்டுக் கடற்படைக் கப்பலும் இப்பயிற்சியில் ஈடுபட்டன.

## உலகின் மிக உயரமான திரையரங்கம்




- உலகின் மிக உயரமான திரையரங்கமானது லடாக்கில் திறக்கப் பட்டுள்ளது.
- அதன் முதலாவது நடமாடும் டிஜிட்டல் திரையரங்கமானது லே பகுதியில் 11,562 அடி உயரத்தில் உள்ள பால்டன் என்ற பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.
- காற்றுப் பை போன்ற உப்பக் கூடிய கூடாரம் வகையிலான இந்தத் திரையரங்கம் -28° டிகிரி செல்சியஸ் வெப்பநிலையிலும் இயங்கக் கூடியதாகும்.
- இந்தியாவின் தொலைதூரப் பகுதிகளுக்கும் வேண்டி திரையரங்க அனுபவத்தினைக் கொண்டு சேர்க்கும் நோக்கத்தோடு இந்த முன்னெடுப்பானது தொடங்கப்பட்டது.

## தேசிய ஓய்வூதிய முறையில் பதிவு வயது அதிகரிப்பு

- ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது தேசிய ஓய்வூதிய முறையில் (National Pension System – NPS) பதிவு செய்வதற்கான வயது வரம்பினை 65 வயதிலிருந்து 70 வயதாக உயர்த்தியுள்ளது.
- இதற்கு முன்பு NPS முறையில் முதலீடு செய்வதற்கான வயது வரம்பு 18 முதல் 65 வயதாக இருந்தது.
- இது தற்போது 18 முதல் 70 வயதாக திருத்தப்பட்டுள்ளது.
- திருத்தப்பட்ட விதிமுறைகளின் படி, தமது 65 முதல் 70 வரையிலான வயதுகளில் உள்ள இந்தியாவில் வசிக்கின்ற இந்தியக் குடிமகன் (அ) வெளிநாட்டில் வசிக்கின்ற இந்தியக் குடிமகன், வெளிநாடு வாழ் இந்தியக் குடிமக்கள் போன்ற எவரும் NPS அமைப்பில் இணைந்து தனது 75வது வயது வரை NPS கணக்கினைத் தொடரலாம் அல்லது ஒத்தி வைக்கலாம்.

- ஒரு நபர் 65 வயதிற்குப் பிறகு NPS முறையில் இணைந்தால் 3 ஆண்டுகளுக்குப் பிறகு அவர் சாதாரணமாக வெளியேறலாம் (Normal Exit).




## ரேபோ பாங்கின் 2021 உலகளாவிய 20 முன்னணி பால் பொருள் தயாரிப்பு நிறுவனங்களின் பட்டியல்

- குஜராத் கூட்டுறவுப் பால் சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பான அமுல் நிறுவனம் இப்பட்டியலில் 18வது இடத்தில் உள்ளது.
- 2020 ஆம் ஆண்டின் பட்டியலில் அமுல் நிறுவனம் 16வது இடத்தில் இருந்தது.
- பிரான்சு நாட்டில் அமைந்துள்ள பால்பொருள் நிறுவனமான லாக்டைல்ஸ் உலகின் மிகப்பெரிய பால்பொருள் நிறுவனமாக இப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.
- பல தசாப்தங்களாக இப்பட்டியலில் முதலிடம் வகித்து வந்த சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த உலகளாவிய நிறுவனமான நெஸ்லேயினை இது பின்னுக்குத் தள்ளியுள்ளது.
- ரேபோ பாங்கின் உலகளாவிய 20 முன்னணி பால்பொருள் தயாரிப்பு நிறுவனங்கள் அறிக்கையானது, இத்துறை சார்ந்த நிறுவனங்களின் விற்பனைத் தரவு மற்றும் நிதியியல் அறிக்கைகளின் அடிப்படையில் தரப்படுத்துவதற்காக வேண்டி ஆண்டு தோறும் வெளியிடப் படுகிறது.

## உலகின் மிக உயரமான வாகனப் பயணத்திற்கு ஏதுவான சாலை

- லே பகுதியினையும் பாங்காங் ஏரியினையும் இணைக்கும் சாலையானது சமீபத்தில் திறக்கப் பட்டது.
- 18,600 அடி உயரத்தில் கேலா கணவாய் வழியே செல்லும் இப்பாதையானது உலகின் மிக உயரமான வாகனப் பயணத்திற்கு ஏதுவான ஒரு சாலையாகும்.
- இச்சாலையானது இந்திய இராணுவத்தின் 58வது பொறியாளர் படைப்பிரிவினரால் கட்டமைக்கப்பட்டதாகும்.
- கேலா கணவாய் வழியே செல்லும் இச்சாலை லே (சிங்க்ரால் முதல் டாங்க்சே வரை) முதல் பாங்காங் ஏரி வரையிலான தூரத்தினை 41 கி.மீ. வரை குறைக்கும்.

## தாலிபன் உடனான முதல் சந்திப்பு – இந்தியா

- கத்தார் நாட்டிற்கான இந்திய தூதர் தீபக் மிட்டல் தாலிபன்களின் அரசியல் அலுவலகத்தின் தலைவர் ஷேர் முகமது அப்பாஸ் ஸ்டான்க்சாயினைச் சந்தித்ததாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

- இந்த சந்திப்பின் மூலம் தாலிபன் குறித்த இந்தியாவின் நிலைப்பாட்டினை அரசு தணித்துள்ளது.
- இந்தியாவின் ஒரே ஒரு தேவை "ஆப்கானிஸ்தான் நாடானது இந்தியாவிற்கு எதிரான எந்தவொரு நடவடிக்கைக்காகவும் தீவிரவாதத்திற்காகவும் பயன்படுத்தப்படக் கூடாது" என்பதேயாகும்.

## NABARD மற்றும் NABFOUNDATION அமைப்பின் புதிய முன்னெடுப்பு

- திரிபுராவில் NABARD மற்றும் NABFOUNDATION அமைப்பினால் தொடங்கப்பட்ட 'My Pad, My Right' என்ற திட்டத்தினை மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தொடங்கி வைத்தார்.
- இது கோமதி மாவட்டத்திலுள்ள கில்லா என்ற கிராமத்தில் தொடங்கப்பட்டுள்ளது.
- மானியம், ஊதிய உதவி மற்றும் மூலதன உபகரணம் ஆகியவற்றை வழங்குவதன் மூலம் கிராமப்புற பெண்களிடம் வாழ்வாதாரம் மற்றும் மாதவிடாய் சுகாதாரத்தினை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- மேலும் திரிபுரா மாநிலக் கூட்டுறவு வங்கியின் நடமாடும் ATM வாகனத்தினையும் மத்திய அமைச்சர் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

## மிதக்கும் ஏ.டி.எம் – தால் ஏரி

- பாரத் ஸ்டேட் வங்கியானது ஜம்மு & காஷ்மீரின் ஸ்ரீநகரில் உள்ள தால் எரியில் ஒரு படகு இல்லத்தில் ஒரு மிதக்கும் ஏ.டி.எம் வசதியைத் திறந்துள்ளது.
- பாரத் ஸ்டேட் வங்கியின் தலைவர் தினேஷ்குமார் காரா இதனைத் திறந்து வைத்தார்.
- பாரத் ஸ்டேட் வங்கி இத்தகைய ஏ.டி.எம். வசதியினை தொடங்குவது இது முதன் முறையல்ல, 2004 ஆம் ஆண்டில் கேரளாவில் ஏற்கனவே இத்தகைய முயற்சியினை இந்த வங்கி தொடங்கியுள்ளது.
- எர்ணாகுளம் மற்றும் வைப்பேயன் பகுதி இடையே இயங்கும் ஜாங்கர் யாட்ச் படகு இல்லத்தில் ஒரு மிதக்கும் ஏ.டி.எம் வசதியினை பாரத் ஸ்டேட் வங்கி அமைத்துள்ளது.



## ககன்யான் செயல்பணி பெட்டக உந்துவிசை அமைப்பு

- இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமானது ககன்யான் செயல்பணி பெட்டக உந்துவிசை அமைப்பினுடைய செயல்முறை மாதிரி அமைப்பின் முதல் வெப்பச் சோதனையை வெற்றிகரமாக நடத்தியது.
- இது தமிழகத்திலுள்ள மகேந்திரகிரியில் அமைந்த உந்துவிசை சோதனை வளாகத்தில் மேற்கொள்ளப் பட்டது.
- 450 விநாடிகளுக்கு மேற்கொள்ளப்பட்ட இச்சோதனையானது சோதனை நோக்கத்தினையும் சோதனைக்கு முந்தைய கணிப்புகளையும் பூர்த்தி செய்தது.
- இந்த அமைப்பானது விண்வெளிக்கு மனிதனை அனுப்புவதற்கான இந்தியாவின் முதலாவது திட்டமான ககன்யான் திட்டத்தின் ககன்யான் உலாவி மாதிரியின் ஓர் அங்கமாகும்.




## தனியார் துறையினால் தயாரிக்கப்பட்ட கையெறி குண்டுகள்

- இந்தியாவிலேயே தனியார் துறையினால் தயாரிக்கப்பட்ட ஒரு லட்சம் அளவிலான நவீன கையெறி குண்டுகள் அடங்கிய முதல் தொகுப்பானது 'எக்னாமிக் எக்ஸ்ப்ளோசிவ்ஸ் லிமிடெட்' என்ற ஒரு நிறுவனத்தினால் இந்திய ராணுவத்திடம் ஒப்படைக்கப் பட்டது.
- இந்த நிறுவனமானது நாக்பூரில் அமைந்துள்ள ஒரு தனியார் நிறுவனமாகும்.
- இந்தியாவிலுள்ள தனியார் தொழிற்சாலைகளில் வெடிமருந்துகள் தயாரிக்கப் படுவது இதுவே முதல் முறையாகும்.



## சாத் முன்னெடுப்பு

- ஜம்மு & காஷ்மீரின் துணைநிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா 'சாத்' எனப்படும் கிராமப்புற நிறுவனங்களுக்கான உத்வேக திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- சுய உதவிக் குழுக்களில் இணைந்துள்ள கிராமப்புற பெண்களின் வாழ்க்கை நிலையை மாற்றியமைக்கும் நோக்கோடு இந்த முன்னெடுப்பானது தொடங்கப் பட்டது.
- இந்த முன்னெடுப்பானது ஜம்மு & காஷ்மீரிலுள்ள சுமார் 4 லட்சம் பெண்கள் இணைக்கப் பட்ட சுமார் 48000 சுயஉதவிக் குழுக்களுக்கு உதவியினை வழங்கும்.
- இக்குழுக்கள் சார்ந்த பெண்களால் உருவாக்கப்பட்ட பொருள்கள் குறித்த வழி காட்டுதல்கள் மற்றும் அவற்றைச் சந்தைப்படுத்துதல் போன்றவற்றில் சாத் முன்னெடுப்பானது ஈடுபாடு செலுத்தும்.
- பெண்கள் தமக்கென ஒரு சொந்த வணிகத்தினைத் தொடங்க உதவிய உமீத் திட்டத்தின் (Umeed scheme) வரிசையில் சாத் முன்னெடுப்பானது தொடங்கப்பட்டு உள்ளது.

## லடாக் – அரசு விலங்கு மற்றும் பறவை

- லடாக் ஒன்றியப் பிரதேசமானது பனிச்சிறுத்தை மற்றும் கருங்கழுத்து கொக்கு ஆகிய இரு அருகி வரும் உயிரினங்களை முறையே மாநில விலங்கு மற்றும் மாநிலப் பறவையாக ஏற்றுக் கொண்டுள்ளது.
- கருங்கழுத்து கொக்குகள் லடாக்கின் சாங்க்தாங்க் பகுதியில் மட்டுமே காணப் படுகின்றன.
- IUCN வகைப்பாட்டின் கீழ், இப்பறவை அச்சுறுத்தப் படுதல் இனமாக (Near-Threatened) வகைப் படுத்தப் பட்டுள்ளது.
- பனிச்சிறுத்தையானது எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனமாக (vulnerable) வகைப் படுத்தப் பட்டுள்ளது.



## சபாத் பயிற்சி – 200 இராணுவ வீரர்கள்

- இந்திய ஆயுதப் படையின் ஒரு படைப் பிரிவானது சபாத் (ZAPAD) என்ற பயிற்சியில் பங்கேற்கிறது.
- ZAPAD 2021 பயிற்சியானது ரஷ்ய ஆயுதப் படைகளின் கள அளவிலான பயிற்சிகளுள் ஒன்றாக இருப்பதோடு தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் அது முதன்மையாகவும் ஈடுபடுகிறது.

- பல்வேறு நாடுகள் இப்பயிற்சியில் பங்கேற்க உள்ளன.
- பாகிஸ்தான் மற்றும் சீனா ஆகிய நாடுகள் பார்வையாளர் நாடுகளாக இப்பயிற்சியில் பங்கேற்க உள்ளன.




## புதிய பொதுச் செயலாளர்

- மாநிலங்களவைத் தலைவர் M. வெங்கைய்யா நாயுடு அவர்கள் டாக்டர் PPK. ராமச்சார்யலு என்பவரைப் பொதுச் செயலாளராக நியமித்துள்ளார்.
- அவர் 2018 ஆம் ஆண்டிலிருந்து மாநிலங்களவையின் செயலாளராகப் பணியாற்றி வருகிறார்.
- தேஷ் தீபக் வர்மாவையடுத்து இவர் அப்பொறுப்பினை ஏற்க உள்ளார்.

## பாதுகாப்புத் துறைக் கண்காட்சி 22

- அடுத்த பாதுகாப்புத் துறைக் கண்காட்சியானது 2022 ஆம் ஆண்டில் குஜராத் மாநில அரசினால் நடத்தப்படும்.
- முதலமைச்சர் விஜய் ரூபானி அவர்கள் இதனை அறிவித்தார்.
- பாதுகாப்புத் துறை கண்காட்சி 2022 ஆனது காந்தி நகரில் நடத்தப்படும்.
- இந்தக் கண்காட்சியின் முக்கிய நோக்கமானது இந்தியாவில் தயாரித்தல் என்ற நிலையிலிருந்து உலகத்திற்காக தயாரித்தல் என்ற நிலையை அடைவதே ஆகும்.

- இந்தியாவினை ஒரு பாதுகாப்புத் துறை உற்பத்தி மையமாக உருவாக்குவதில் இது ஈடுபாடு செலுத்தும்.

*குறிப்பு*

- பாதுகாப்புத்துறை கண்காட்சியானது 2014 ஆம் ஆண்டு வரை பாரம்பரியமாக டெல்லியில் நடத்தப்பட்டது.
- 2014 ஆம் ஆண்டுக்குப் பிறகு கோவா (2016), சென்னை (2018) மற்றும் லக்னோ (2020) ஆகிய இடங்களில் நடத்தப்பட்டது.




## ISKCON நிறுவனரின் 125 பிறந்த நாள்




- ISKCON நிறுவனர் ஸ்ரீலா பக்தி வேதாந்த சுவாமி பிரபுபதாவின் 125வது பிறந்த நாளை முன்னிட்டு பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் இதன் நினைவாக 125 ரூபாய் நாணயத்தினை வெளியிட்டார்.
- 1996 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பிரபுபதா பொதுவாக ஹரே கிருஷ்ண இயக்கம் என்றழைக்கப்படும் கிருஷ்ண நம்பிக்கைக்கான ஒரு சர்வதேச சமூக அமைப்பினை (ISKCON – International Society for Krishna Consciousness) நிறுவினார்.
- இந்த ஆன்மிகத் தலைவர் செப்டம்பர் 01 அன்று கொல்கத்தாவில் அபே சரண் என்ற இயற்பெயரோடு பிறந்தார்.

- பின்னர் அவர் புகழ்பெற்ற A.C. பக்தி வேதாந்த சுவாமி பிரபுபதா என அறியப் பட்டார்.

## ராயல் உறை கூழ்மம் (ஜெல்லி)

- இந்தியன் ராயல் ஜெல்லியானது (உறை கூழ்மம்) தாய்லாந்து மற்றும் தாய்வான் ஆகிய நாடுகளில் உற்பத்தி செய்யப்படும் உயர்தர ஜெல்லி விற்பனையாளர்களை விஞ்சி உள்ளது.
- புனேவைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி இது தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ராயல் ஜெல்லியானது ஒரு நல்ல ஆக்சிஜனேற்றத் தடுப்புப் பொருளாக அறியப் படுகிறது.
- இது கருவுறுதல் பிரச்சினை உள்ள பெண்களுக்கு உதவும்.
- இது இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையத்தினால் 2019 ஆம் ஆண்டில் ISO அமைப்பினால் பரிந்துரைக்கப்பட்ட தரநிலைகளை பூர்த்தி செய்கிறது.
- ராயல் ஜெல்லியானது முத்துநிற வெள்ளை (அ) வெளிர் மஞ்சள் நிறமுடைய, தேன் மற்றும் வேலைக்காரத் தேனீக்களின் தொண்டைக்குழி மற்றும் உமிழ்நீர் சுரப்பியிலிருந்து வெளி வரும் பொருள் ஆகியவை ஒன்றிணைந்த கலவையாகும்.

**HOW INDIAN ROYAL JELLY FARES AGAINST ISO STANDARDS**

| Parameter (per cent by mass) | ISO permissible limit | Indian Royal Jelly |
|---|---|---|
| Moisture | 62 to 68.5 | 64 to 66 |
| 10 HDA | 1.4 | 2.02 to 2.31 |
| Protein | 11 to 18 | 11.56 to 12.97 |
| Total sugar | 7 to 18 | 10.02 to 10.39 |
| Glucose | 2 to 9 | 1.96 to 2.54 |
| Total lipid | 2 to 8 | 2.96 to 6.46 |

## சரியான உணவை உட்கொள்தல் நிலையம்

- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையமானது சண்டிகர் இரயில்நிலையத்திற்கு 5 நட்சத்திர "Eat Right Station" என்ற (சரியான உணவினை உட்கொள்ளல் நிலையம்) சான்றிதழை வழங்கியுள்ளது.
- பயனாளிகளுக்கு உயர்தர, ஊட்டச்சத்துமிக்க உணவினை வழங்குவதற்காக இந்த சான்றிதழானது வழங்கப்பட்டுள்ளது.
- Eat Right Station சான்றிதழானது "Eat Right India" இயக்கத்தின் ஓர் அங்கமாகும்.
- சண்டிகர் இரயில்நிலையமானது இந்தச் சான்றிதழைப் பெற்ற 5வது இந்திய இரயில் நிலையமாகும்.
- இச்சான்றிதழைப் பெற்ற இதர இரயில் நிலையங்கள்
    - ஆனந்த விஹார் இரயில் முனையம் – டெல்லி,

- சத்திரபதி சிவாஜி இரயில் முனையம் – மும்பை,
- மும்பை மத்திய இரயில் நிலையம் – மும்பை மற்றும்
- வடோதரா இரயில் நிலையம் – வடோதரா ஆகும்.




## சிக்சக் பர்வ் 2021

❖ சிக்சக் பர்வ் ஆனது 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 05 ஆம் தேதி முதல் கடை பிடிக்கப்பட உள்ளது.

❖ ஆசிரியர்களின் பங்களிப்பிற்குக் கௌரவமளிக்கும் வகையில் இந்த நிகழ்வானது கொண்டாடப்பட உள்ளது.

❖ இந்நிகழ்வின் போது பிரதமர் அவர்கள் 5 முன்னெடுப்புகளைத் தொடங்கி வைக்க உள்ளார். அவை,
  - 10,000 வார்த்தைகளை கொண்ட இந்திய சைகை மொழி அகராதி,
  - பேசும் புத்தகங்கள் (பார்வையற்றோருக்கான ஒலியுணர் புத்தகங்கள்)
  - நடுவண் இடைநிலைக் கல்வி வாரியத்தின் பள்ளித் தர மதிப்பீடு மற்றும் அங்கீகாரக் கட்டமைப்பு,
  - NIPUN பாரத் திட்டத்திற்கான NISTHA ஆசிரியர்கள் பயிற்சித் திட்டம் மற்றும்
  - பள்ளி மேம்பாட்டில் கல்வி தன்னார்வலர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் பெரு நிறுவன சமூக அக்கறையுடைய பங்களிப்பாளர்களுக்கான வசதியை வழங்குவதற்கான வித்யாஞ்சலி தளம் ஆகும்.

❖ சிக்சக் பர்வ் 2021 ஆனது 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 05 முதல் 17 ஆம் தேதி வரை கல்வி அமைச்சகத்தினால் கொண்டாடப்பட உள்ளது.

❖ ஆசிரியர்களின் தலைசிறந்தப் பங்களிப்பினை அங்கீகரிக்கவும் 2020 ஆம் ஆண்டு தேசிய கல்விக் கொள்கையை முன்னோக்கி கொண்டு செல்லவும் இந்த நிகழ்வானது ஏற்பாடு செய்யப்பட உள்ளது.

## President's Colour விருது – இந்தியக் கடற்படை விமானப் போக்குவரத்துப் பிரிவு

- இந்தியக் குடியரசுத் தலைவர், கோவா மாநிலத்தில் INS ஹன்சாவில் நடைபெற உள்ள அரசு முறை அணிவகுப்பில் இந்தியக் கடற்படை விமானப் போக்குவரத்துப் பிரிவிற்கு President Colour என்ற விருதினை வழங்க உள்ளார்.
- இது நாட்டிற்கு இராணுவப் பிரிவுகள் ஆற்றும் மகத்தான சேவைக்கான ஒரு அங்கீகாரமாக வழங்கப்படும் ஒரு உயரிய கௌரவ விருதாகும்.
- President's Colour விருதினைப் பெற்ற முதல் இந்திய ஆயுதப்படை இந்தியக் கடற்படை ஆகும்.
- இது முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர். ராஜேந்திர பிரசாத் அவர்களால் 1951 ஆம் ஆண்டு மே 27 அன்று வழங்கப்பட்டது.




## மந்தன் 2021

- காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகமானது (Bureau of Police Research and Development – BPR&D) அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கழகத்துடன் இணைந்து 'மந்தன் 2021' எனப்படும் இணைய தள ஹேக்கத்தானைத் தொடங்கியுள்ளது.
- புலனாய்வு அமைப்புகளால் எதிர்கொள்ளப்படும் சவால்களை எதிர்கொள்வதற்கான புதுமைமிக்க கருத்துக்களையும் தொழில்நுட்பத் தீர்வுகளையும் அடையாளம் காணச் செய்தலை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- BPR&D அமைப்பானது 1970களில் உள்துறை அமைச்சகத்தின் கீழ் நிறுவப்பட்டது.
- காவல்துறையினை மிகுந்த நவீனமயமாக்கும் ஒரு முதன்மையான நோக்கத்தோடு இது தொடங்கப் பட்டது.
- AICTE என்பது தொழில்நுட்பக் கல்விக்குக் கிடைக்கப் பெறும் வசதிகள் குறித்த ஒரு ஆய்வினை நடத்துவதற்கும் ஒருங்கிணைந்த முறையில் நாட்டின் வளர்ச்சியை ஊக்குவிப்பதற்குமான ஒரு தேசிய அளவிலான உயர்மட்ட ஆலோசக அமைப்பாகும்.




## Y Break செயலி

- மத்திய ஆயுஷ் துறை அமைச்சர் சர்பானந்தா சோனோவால், புதுடெல்லியில் "Y Break" எனப்படும் யோகா நெறிமுறைகளுக்கான கைபேசிச் செயலியினை வெளியிட்டார்.
- இந்தச் செயலியானது மொரார்ஜி தேசாய் தேசிய யோகா கல்வி நிறுவனத்தினால் உருவாக்கப் பட்டுள்ளது.
- Y – Break (அல்லது Yoga Break) எனும் கைபேசி செயலியானது தனித்துவமிக்க 5 நிமிட யோகா நெறிமுறைக்கான செயலியாகும்.
- இது குறிப்பாக வேலை செய்யும் தொழிலாளர்கள் தங்களது பணியிடங்களில் உள்ள மன அழுத்தத்தைக் குறைக்கவும், புத்துணர்ச்சி பெற்று வேலையில் மீண்டும் கவனம் செலுத்தவும் வழி செய்யுமாறு வடிவமைக்கப் பட்டுள்ளது.




## கிசான் களஞ்சியம்

- அமேசான் இந்தியா நிறுவனமானது கிசான் களஞ்சியத்தினைத் தொடங்குவதை அறிவித்துள்ளது.
- இந்தக் களஞ்சியத்தினை மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல அமைச்சர் நரேந்திர சிங் தோமர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

- கிசான் களஞ்சியமானது விவசாயக் கருவிகள் & பாகங்கள், விதைகள், தாவரப் பாதுகாப்புப் பொருட்கள், ஊட்டச்சத்து போன்ற 8000க்கும் மேலான வேளாண் உள்ளீடுகளை அணுக உதவும் ஓர் இணையதளமாகும்.
- இந்தப் பொருட்கள் சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களால் பட்டியலிடப்பட்டுள்ளன.
- இப்பொருட்கள் விவசாயிகளின் வீட்டிற்கே வந்து விநியோகிக்கப்படும்.
- கிசான் களஞ்சியமானது இந்தி, தெலுங்கு, கன்னடம், தமிழ் மற்றும் மலையாளம் போன்ற மொழிகளில் செயல்படும்.

## டெல்லி சட்டப் பேரவையில் சுரங்கப் பாதை

- டெல்லி சட்டப் பேரவையில் ஒரு மர்மமான சுரங்கப்பாதை ஒன்று கண்டறியப் பட்டு உள்ளது.
- இந்தப் பாதை அம்மாநில சட்டப் பேரவையைச் செங்கோட்டையுடன் இணைக்கிறது.
- சுதந்திரப் போராளிகளுடனான போராட்டத்தில் அவர்களின் தாக்குதல் மற்றும் பழி வாங்கு நடவடிக்கைகளிலிருந்துத் தப்பிப்பதற்காக வேண்டி பிரிட்டிஷ் அலுவலர்களால் இப்பாதை பயன்படுத்தப் பட்டது.



## கர்பி அமைதி ஒப்பந்தம்



- மத்திய அரசானது ஒரு முத்தரப்பு ஒப்பந்தமான 'கர்பி அமைதி ஒப்பந்தத்தில்' கையெழுத்திட்டுள்ளது.
- 1980களிலிருந்து கொலைகள், இன வன்முறை, கடத்தல் மற்றும் வரிவிதிப்பு உள்ளிட்ட பிரச்சினைகள் நிறைந்த அசாமில் கர்பி குழுவினரின் கிளர்ச்சியானது பெரும் வரலாற்றைக் கொண்டுள்ளதனால் இந்த ஒப்பந்தம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.
- கர்பி என்பது அசாமிலுள்ள ஒரு பெரிய சமூக இனமாக இருப்பதோடு இது பல பிரிவுகளாகவும் வகுப்புகளாகவும் காணப்படுகிறது.


## ஆயுஷ் ஆப்கே த்வார்

- ஆயுஷ் அமைச்சகமானது இந்தியா முழுவதும் சுமார் 45 இடங்களில் 'ஆயுஷ் ஆப்கே த்வார்' எனும் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- ஆயுஷ் பவன் ஊழியர்களுக்கு மருத்துவக் குணங்கள் நிறைந்த செடிகளை வழங்கி ஆயுஷ் இணை அமைச்சர் இந்தப் பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்தார்.
- ஒரு வருடத்தில் இந்தியாவிலுள்ள சுமார் 75 லட்சம் வீடுகளுக்கு மருத்துவக் குணம் நிறைந்த மரக்கன்றுகளை வழங்குதல் என்ற நோக்கத்தோடு ஆயுஷ் ஆப்கே த்வார் என்ற பிரச்சாரம் தொடங்கப்பட்டது.




## ஒருங்கிணைந்த நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு பாதுகாப்பு தொகுதி

- பாதுகாப்பு அமைச்சகமானது மகேந்திரா பாதுகாப்பு அமைப்பு நிறுவனத்துடன் 1,349 கோடி ரூபாய் மதிப்பிலான ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.
- இது இந்தியக் கடற்படைக்காக 14 ஒருங்கிணைந்த நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு பாதுகாப்புத் தொகுதியினை வாங்குவதற்கான ஒரு ஒப்பந்தமாகும்.
- இத்தொகுதியானது சமீபத்திய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகின்ற வகையிலான நீருக்கடியில் இயங்கும் உயர்தர சாதனமாகும்.
- நீருக்கடியிலிருந்து வரும் அபாயங்களைக் கண்டறிந்து அவற்றிடமிருந்து போர்க் கப்பல்களைப் பாதுகாப்பதற்காக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.




## நெகிழி ஒப்பந்தம்

- நெகிழி ஒப்பந்தத்தினை தொடங்கிய முதல் ஆசிய நாடாக இந்தியா மாறியுள்ளது.
- இந்தப் புதிய தளமானது இந்தியாவிலுள்ள இயற்கைக்கான உலக நிதியம் மற்றும் இந்தியத் தொழில்துறைக் கூட்டமைப்பு ஆகியவற்றால் இணைந்து உருவாக்கப் பட்டது.
- நெகிழிகளுக்கான ஒரு சுழற்சி அமைப்பினை உருவாக்க இது உதவும்.
- இந்த ஒப்பந்தத்தின் கீழான உறுதிப்பாடானது பொருளாதாரம் மற்றும் இயற்கையான சுற்றுச்சூழலிலிருந்து நெகிழிப் பைகளைக் கொண்டு உறையிடுவதை வெளியேற்றுவதை நோக்கமாகக் கொண்டதாகும்.

INDIA PLASTICS PACT

## CORBEVAX

- இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு அமைப்பானது CORBEVAX எனப்படும் இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட மற்றொரு கோவிட்-19 தடுப்பு மருந்திற்கான இரண்டு மருத்துவப் பரிசோதனைக்கு அனுமதி வழங்கியுள்ளது.
- இது BioE கோவிட்-19 தடுப்பு மருந்து எனவும் அழைக்கப்படுகிறது.

- இந்த மருந்தானது அமெரிக்காவின் ஹூஸ்டன் என்னுமிடத்திலுள்ள பெய்லர் மருத்துவக் கல்லூரி மற்றும் அமெரிக்க நிறுவனமான டைனவாக்ஸ் டெக்னாலஜீஸ் ஆகியவற்றுடன் இணைந்து பயோலாஜிகல் E. லிமிடெட் எனப்படும் இந்திய உயிரி மருந்து நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது.
- இது ஒரு புரத துணை அலகு தடுப்பு மருந்தாகும் (protein subunit vaccine).
- இம்மருந்தின் இரண்டாம் கட்ட பரிசோதனைக்கும், 5 முதல் 18 வயதினர் மீது செலுத்தி 3 முறை பரிசோதிப்பதற்குமான ஒப்பந்தத்தினை பயோலாஜிகல் இ நிறுவனம் பெற்று உள்ளது.
- மேலும், இந்தத் தடுப்பு மருந்தானது கோவிட்-19 சுரக்சா திட்டத்தின் கீழும் BIRAC எனும் தேசிய உயிரி மருந்து திட்டத்தின் மூலம் கோவிட்-19 ஆராய்ச்சி கூட்டமைப்பின் கீழும் நிதி உதவியைப் பெற்றுள்ளது.




## பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரிவினருக்கான இட ஒதுக்கீட்டிற்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பு

- உச்சநீதிமன்றத்தின் உடனடி ஒப்புதலைப் பெறாமல் அகில இந்திய மருத்துவ இட ஒதுக்கீட்டில் சமூகத்தில் பொருளாதார ரீதியாக பின்தங்கிய பிரிவினருக்கு 10% இட ஒதுக்கீட்டினை வழங்கக் கூடாது என சென்னை உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.
- தலைமை நீதிபதி சஞ்சீப் பானர்ஜி மற்றும் நீதிபதி P.D. ஆதிகேசவலு ஆகியோர் மத்திய அரசின் ஜூலை 29 அறிவிப்பானது பின்வருவனவற்றிற்கு மட்டுமே அனுமதிக்கப்படத் தக்கதாகும் என தீர்ப்பளித்தனர்,
    - பட்டியலின சாதிப் பிரிவினருக்கு 15% இடஒதுக்கீடு
    - பட்டியலின பழங்குடியினருக்கு 7.5% இடஒதுக்கீடு
    - இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27% இடஒதுக்கீடு

## இந்தியாவின் முதல் கடற்பசு காப்பகம்


- தென்கிழக்குக் கடற்கரையில் உள்ள பாக் விரிகுடாவில் இந்தியாவின் முதல் கடற்பசு காப்பகத்தை அமைக்க தமிழ்நாடு அரசு சமீபத்தில் அறிவித்தது.
- இது மன்னார் வளைகுடா மற்றும் பாக் விரிகுடா பகுதிகளில் ஒரு கடற்பசுக்கான கடல் காப்பகத்தை அமைக்கும்.
- டுகோங் அல்லது கடல் பசு என்பது அழிந்து வரும் ஒரு கடல் பாலூட்டியினம் ஆகும்.

- ❖ சைரேனியா வரிசையில் வாழும் ஒரே உயிரினம் இதுவாகும்.
- ❖ கடற்பசுவானது மன்னார் வளைகுடா மற்றும் தமிழ்நாட்டில் பாக் விரிகுடாவில் காணப் படுகிறது.
- ❖ IUCN கடற்பசுவை "பாதிக்கப்படக் கூடிய ஒரு உயிரினத்திலிருந்து அழிந்து வரும் ஒரு உயிரினம்" என்று பட்டியலிட்டுள்ளது.




## FSDC யின் 24 வது கூட்டம்

- ❖ நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்களுக்கான மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் நிதி நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டுக் குழுமத்தின் (FSDC - Financial Stability and Development Council) 24வது கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.
- ❖ நிதி அமைச்சர் FSDC குழுமத்தின் தலைவராக உள்ளார்.
- ❖ ரிசர்வ் வங்கியின் ஆளுநர் FSDC குழுமத்தின் துணைக் குழுவின் தலைவராக இருப்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.
- ❖ இது நிதி நிலைப்புத் தன்மையைப் பராமரிப்பதற்கான பொறிமுறையை வலுப்படுத்தவும் நிறுவன மயமாக்கவும், இடை ஒழுங்குமுறை ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும் மற்றும் நிதித்துறை வளர்ச்சியை ஊக்குவிக்கவும் வேண்டி இந்திய அரசால் அமைக்கப்பட்ட ஒரு உச்ச நிலை மன்றமாகும்.



## டோக்கியோ பாராலிம்பிக்கில் இந்தியா

- இந்தப் பதிப்பில் சீனா பதக்கப் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது (மொத்தம் - 207, அதில் 96 தங்கம், 60 வெள்ளி மற்றும் 51 வெண்கலம்).
- 2004 ஆம் ஆண்டு ஏதென்ஸ் போட்டியில் இருந்து கணக்கெடுத்தால் ஐந்தாவது முறையாக சீனா பதக்கப் பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- 2020 டோக்கியோ பாராலிம்பிக்கில் இந்தியா 5 தங்கம், 8 வெள்ளி மற்றும் 6 வெண்கலம் உட்பட மொத்தம் 19 பதக்கங்களை வென்றது.
- துப்பாக்கி சுடுதல், ஈட்டி எறிதல், பாட்மிண்டன், தடகளம் மற்றும் வில்வித்தை உள்ளிட்ட ஐந்து விளையாட்டுப் பிரிவுகளில் இந்தியப் பாரா-தடகள வீரர்களால் 19 பதக்கங்கள் பெறப்பட்டன.
- ஒட்டு மொத்தப் பதக்கங்களின் அடிப்படையில் 162 நாடுகளில் இந்தியா 24வது இடத்தில் உள்ளது.
- பாராலிம்பிக்கில் இந்தியா முதன்முதலில் 1968 ஆம் ஆண்டில் பங்கேற்றது.
- 1968 முதல் 2016 வரை இந்தியா 12 பதக்கங்களை மட்டுமே வென்றது.
- இந்தியா ரியோ 2016 ஆம் ஆண்டில் நான்கு பதக்கங்களையும் 1984 பாராலிம்பிக்கில் நான்கு பதக்கங்களையும் வென்றது.
- பாராலிம்பிக்கில் பேட்மிண்டன் மற்றும் டேக்வாண்டோ விளையாட்டுகள் சேர்க்கப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- டோக்கியோ நகரம் 1964 ஆம் ஆண்டிற்கான பாராலிம்பிக் போட்டியை நடத்திய பின்னர் இரண்டு பாராலிம்பிக் போட்டிகளை நடத்திய முதல் நகரமாக உருவெடுத்து உள்ளது.
- டோக்கியோ பாராலிம்பிக் நிறைவு விழாவில் இந்தியாவின் கொடியை ஏந்தியவர் அவனி ஆவார்.
- டோக்கியோ பாராலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய வீரர்கள் அவனி லேகாரா, ஈட்டி எறிதல் வீரர் சுமித் அண்டில், துப்பாக்கி சுடும் வீரர் மணீஷ் நர்வால் மற்றும் பாட்மிண்டன் வீரர்கள் பிரமோத் பகத் மற்றும் கிருஷ்ணா நாகர் ஆகியோர் அடங்குவர்.
- தங்கம் மற்றும் வெண்கலம் வென்ற துப்பாக்கிச் சுடும் வீரர் அவனி லேகாரா, வெள்ளி மற்றும் வெண்கலம் வென்ற சிங் ராஜ் அதானா ஆகியோர் தலா இரண்டு பதக்கங்களுடன் இந்தியாவின் முன்னணி வீரர்களாக உள்ளனர்.

### *பதக்கம் வென்ற மற்ற வீரர்கள்*

- இந்தியாவின் வில்வித்தை வீரர் ஹர்விந்தர் சிங், ஆண்களுக்கான தனிப்பட்ட ரீகர்வ் ஓபனில் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.
- பாராலிம்பிக்கில் பதக்கம் வென்ற இந்தியாவின் முதல் வில்வித்தை வீரர் என்ற பெருமையை இவர் பெற்றார்.
- பி 4 - கலப்பு 50 மீ பிஸ்டல் எஸ்எச் 1 இறுதிப் போட்டியில் (ஷூட்டிங்) இந்திய துப்பாக்கி சுடும் வீரர்களான மணீஷ் நர்வால் மற்றும் சிங் ராஜ் அதானா ஆகியோர் முறையே தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கத்தை வென்றனர்.
- நொய்டாவின் தற்போதைய மாவட்ட நிர்வாக அதிகாரி சுஹாஸ் யதி ராஜ், பாராலிம்பிக்ஸ் போட்டியில் பதக்கம் வென்ற முதல் ஐஏஎஸ் அதிகாரி ஆனார்.
- அவர் பேட்மிண்டன் எஸ்எல் 4 என்பதின் இறுதிப் போட்டியில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில்

வெள்ளிப் பதக்கம் வென்றார்.

- ❖ பேட்மிண்டன் எஸ்எல் 3 பிரிவில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் பிரமோத் பகத் மற்றும் மனோஜ் சர்க்கார் முறையே தங்கம் மற்றும் வெண்கலம் வென்றனர்.
- ❖ பாராலிம்பிக்கில் இந்தியாவின் முதல் பேட்மிண்டன் தங்கத்தை பிரமோத் பெற்றார்.
- ❖ கிருஷ்ணா நாகர் இந்தியாவுக்கு இரண்டாவது பாரா-பாட்மிண்டன் தங்கத்தை வென்றார்.
- ❖ இவர் SH6 பிரிவில் இந்தியப் பாராலிம்பிக் வரலாற்றில் முதல் தங்கப் பதக்கம் வென்றவர் ஆவார்.

| **Gold Medal Winners** |
|---|
| Avani Lekhara, Women's 10m Air Rifle Shooting Standing |
| Sumit Antil, Men's Javelin Throw F64 |
| Manish Narwal, P4 Mixed 50m Pistol SH1 |
| Pramod Bhagat, Badminton Men's Singles SL3 |
| Krishna Nagar, Badminton Men's Singles SH6 |
| **Silver Medal Winners** |
| Bhavina ben Patel, Women's Singles Table Tennis - Class 4 |
| Nishad Kumar, Men's High Jump T47 |
| Devendra Jhajharia, Men's Javelin Throw F46 |
| Yogesh Kathuniya, Men's Discus Throw F56 |
| Singh raj Adhana, P4 Mixed 50m Pistol SH1 |
| Mariyappan Thangavelu, Men's High Jump T63 |
| Praveen Kumar, Men's High Jump T64 |
| Suhas L. Yathi raj, Badminton Men's Singles SL4 |
| **Bronze Medal Winners** |
| Sundar Singh Gurjar, Men's Javelin Throw F46 |
| Singh raj Adhana, Men's 10m Air Pistol Shooting SH1 |
| Sharad Kumar, Men's High Jump T63 |
| Avani Lekhara, Women's 50m Rifle 3 Positions Shooting SH1 |
| Harvinder Singh, Men's Individual Recurve Archery |
| Manoj Sarkar, Badminton Men's Singles SL3 |

## அசோக்குமார் டாண்டன் குழு

- ❖ தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகமானது தற்போதுள்ள பத்திரிக்கையாளர் நலத் திட்ட வழிகாட்டுதல்களை ஆய்வு செய்ய ஒரு குழுவை அமைத்துள்ளது.
- ❖ இந்தக் குழுவிற்கு பிரசார் பாரதி வாரிய உறுப்பினர் அசோக்குமார் டாண்டன் தலைமை தாங்குவார்.

## செய்தி ஒளிபரப்பாளர் கூட்டமைப்பு

- செய்தி மற்றும் ஒளிபரப்பு அமைச்சகமானது அதிகாரப்பூர்வமாக செய்தி ஒளிபரப்பாளர் கூட்டமைப்பு சுய ஒழுங்குமுறை அமைப்பை அங்கீகரித்துள்ளது.
- தற்போது, செய்தி ஊடகக் களத்தில் தேசியத் தரநிலைகளுக்கு இணங்கிய நாட்டின் ஒரே அமைப்பு இதுவாகும்.

## கொசு மீன்

- உத்தரப் பிரதேசத்தில் உள்ள ஃபெரோசாபாத் மாவட்ட நிர்வாகமானது, டெங்கு பரப்பும் கொசுக்களின் குடம்பிகளை (larva) உண்ணும் கம்பூசியா மீன்களை (கொசு மீன்) குளங்களில் விட்டுள்ளது.
- இந்தப் பூச்சியுண்ணும் மீனானது, மலேரியா மற்றும் டெங்கு போன்ற கொசுக்களால் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த வேண்டி அறியப்படுகிறது.
- கம்பூசியா மீனானது ஒரு நாளுக்கு சுமார் 100 குடம்பிகளை உண்ணும்.
- கம்பூசியாவைத் தவிர கொசுக்களால் பரவும் நோய்களைத் தடுத்திட வேண்டி கப்பி வகை மீன் இனமும் பயன்படுத்தப் படுகிறது.



## முற்காப்பு மருந்துகள்

- ஆயுஷ் அமைச்சகமானது முற்காப்பு மருந்துகளை விநியோகிப்பதற்கான ஒரு பிரச்சாரத்தைத் தொடங்குகிறது.
- கோவிட்-19 தொற்றுக்கான ஆயுர்வேத முற்காப்பு மருந்துகளின் தொகுப்பில் சன்ஷாமணி வடி (குடுச்சி அல்லது கிலோய் கனவடி என்றும் அழைக்கப்படுகிறது) மற்றும் அஸ்வகந்தா கன வடி ஆகிய மருந்துகள் உள்ளன.
- இத்தொகுப்பு மற்றும் வழிகாட்டுதல்களை மத்திய ஆயுர்வேத மருந்துகளுக்கான ஆராய்ச்சிக் குழு தயாரித்துள்ளது.
- முற்காப்பு மருந்துகள் என்றால் தடுப்பு நடவடிக்கை என்று பொருள்.

## தேசிய ஆசிரியர் விருது 2021

- 2021 ஆம் ஆண்டிற்கான தேசிய ஆசிரியர் விருதுகளானது குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்களால் 44 நபர்களுக்கு வழங்கப்பட்டது.

- சத்தீஸ்கரின் ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப் பள்ளியின் (Eklavya Model Residential School) பிரமோத் குமார் சுக்லாவுக்கும் இந்த விருது வழங்கப்பட்டது.
- பழங்குடியினர் விவகார அமைச்சகத்தின் கீழ் நிறுவப்பட்ட ஏகலைவா மாதிரி உண்டு உறைவிடப் பள்ளிக்கு இது தொடர்ச்சியான ஒரு இரண்டாவது விருதாகும்.




## சிக்சக் பர்வ் – 2021

- சிக்சக் பர்வ் - 2021 என்ற நிகழ்வை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
- இதன் கருத்துரு "Quality and Sustainable Schools: Learnings from Schools in India" (தரமான மற்றும் நீடித்த வளர்ச்சி கொண்ட பள்ளிகள்: இந்தியாவில் பள்ளிகளின் மூலமான கற்பிதங்கள்) ஆகும்.
- இந்த நிகழ்வை கல்வி அமைச்சகம் ஏற்பாடு செய்திருந்தது.
- சிக்சக் பர்வ்-2021 நிகழ்வின் நோக்கம், அனைத்து நிலைகளிலும் கல்வியைத் தொடர செய்வதை மட்டுமல்லாமல், நாடு முழுவதும் உள்ள பள்ளிகளிலும் தரம், உள்ளடக்கிய நடைமுறைகள் மற்றும் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்கு வேண்டியப் புதுமையான நடைமுறைகளை ஊக்குவிப்பதாகும்.




## தேசிய கல்வி நிறுவனங்களுக்கான தரவரிசைக் கட்டமைப்பு 2021

- தேசிய நிறுவனங்களுக்கான தரவரிசைக் கட்டமைப்பை மத்தியக் கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்கள் வெளியிட்டுள்ளார்.

- இது இந்தியாவின் சிறந்தப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளை பட்டியலிடச் செய்கிறது.
- 2021 ஆம் ஆண்டில், இந்தத் தரவரிசையில் பங்கு பெற்ற கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை 6000 ஆகும்.
- இது ஒட்டுமொத்தமாக, பல்கலைக்கழகம், மேலாண்மை, கல்லூரி, மருந்தகம், மருத்துவம், பொறியியல், கட்டிடக்கலை, ARIIA (புதுமையான சாதனைகள் குறித்த நிறுவனங்களின் அடல் தரவரிசை - Atal Ranking of Institutions on Innovation Achievements), சட்டம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் போன்ற பதினொருப் பிரிவுகளுக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.
- கற்பித்தல், கற்றல் மற்றும் வளங்கள், ஆராய்ச்சி மற்றும் தொழில்முறைப் பயிற்சி, பட்டப் படிப்பு முடிவுகள், இலக்கைச் சென்று அடைதல் மற்றும் உள்ளடக்கம் (Outreach and Inclusivity) மற்றும் கருத்து ஆகிய ஐந்து பரந்த பொதுவான பிரிவுகளின் கீழ் இந்தக் கட்டமைப்பு கல்வி நிறுவனங்களைத் தரவரிசை படுத்துகிறது.

***முக்கியக் கண்டுபிடிப்புகள்***

- ஐஐடி மதராஸ் நாட்டின் சிறந்த கல்வி நிறுவனமாக உள்ளது.
- ஐஐடி மதராஸ் பொறியியல் பிரிவில் தொடர்ந்து ஆறாவது ஆண்டாக முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- ஐஐடி மதராஸ் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 'ஆராய்ச்சி' எனும் பிரிவில் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.
- ஐஐஎம் அகமதாபாத் மேலாண்மைப் பிரிவில் முதலிடம் பிடித்துள்ளது.
- ஐஐஎஸ்சி பெங்களூரு நிறுவனம் பல்கலைக்கழகப் பிரிவில் முதலிடம் பிடித்துள்ளது
- ஐஐஎஸ்சி பெங்களூரு நிறுவனம் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட "ஆராய்ச்சி" எனும் பிரிவில் முதலிடம் வகிக்கிறது.
- டெல்லிப் பல்கலைக்கழகத்தின் மிராண்டா ஹவுஸ் என்ற கல்வி நிறுவனமானது கல்லூரிப் பிரிவில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.
- புதுடெல்லி ஜாமியா ஹம்தார்ட் கல்வி நிறுவனமானது மருந்துக் கல்விப் பிரிவில் முதலிடம் வகிக்கிறது.
- மருத்துவப் பிரிவில் அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் (எய்ம்ஸ்), டெல்லி முதலிடத்தில் உள்ளது.
- வேலூரில் உள்ள கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி மருத்துவப் பிரிவில் மூன்றாவது இடத்தில் உள்ளது.

***தமிழ்நாடு***

- முதல் 100 இடங்களில் மொத்தம் 19 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.
- கடந்த ஆண்டு, அண்ணாப் பல்கலைக்கழகம் 20வது இடத்தில் இருந்தது, ஆனால் இந்த ஆண்டு அதன் தரவரிசை 25 என்ற இடத்திற்குச் சரிந்துள்ளது.
- இதே போல், கடந்த ஆண்டு 41வது இடத்தில் இருந்த சென்னைப் பல்கலைக்கழகம் இந்த ஆண்டு 47வது இடத்தில் உள்ளது.
- கடந்த ஆண்டு 21வது இடத்தில் இருந்த கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகம் இந்த ஆண்டு 22வது இடத்தில் உள்ளது.
- ஆனால் கடந்த ஆண்டு 24 ஆம் இடத்தில் இருந்த என்ஐடி-திருச்சி கல்வி நிறுவனம் இந்த

ஆண்டு 23 ஆம் இடத்திற்கு முன்னேறியுள்ளது.

- கடந்த ஆண்டில் 6வது இடத்தில் இருந்த சென்னையின் லயோலா கல்லூரி இந்த ஆண்டு மூன்றாவது இடத்தில் உள்ளது.





## இந்தியாவில் புதிய ஆளுநர்கள்



- இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் அவர்கள் தமிழ்நாடு, உத்தரகாண்ட் மற்றும் நாகாலாந்து ஆகிய மாநிலங்களுக்குப் புதிய ஆளுநர்களை நியமித்தார்.
- முன்னாள் நாகாலாந்து கவர்னர் ஆர்.என்.ரவி தமிழக ஆளுநராக நியமிக்கப் பட்டு உள்ளார்.
- பஞ்சாப்பில் கூடுதல் ஆளுநர் பொறுப்பில் இருந்த தற்போதைய தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், பஞ்சாப்பின் புதிய ஆளுநராக நியமிக்கப்படுகிறார்.
- நாகாலாந்தின் ஆளுநராக கூடுதல் பொறுப்போடு அசாம் ஆளுநர் ஜெகதீஷ் முகி நியமிக்கப் படுகிறார்.
- உத்தரகாண்ட் ஆளுநராக குர்மித் சிங் நியமிக்கப்பட்டார்.
- உத்தரகாண்ட் ஆளுநர் பதவியிலிருந்து பேபி ராணி மவுரியாவின் ராஜினாமாவையும் ஜனாதிபதி ஏற்றுக் கொண்டுள்ளார்.

## மரபணு மாற்றப்பட்ட சோயா (அவரை) மாவு

- கோழி வளர்ப்பிற்கு உதவும் வகையில் மரபணு மாற்றப்பட்ட சோயா மாவினை இறக்குமதி செய்ய இந்தியா முதன்முறையாக அனுமதித்துள்ளது.
- மும்பையிலுள்ள நவசேவா துறைமுகம் மட்டுமல்லாமல், மும்பைக் கடற்கரைத் துறைமுகம், தூத்துக்குடி கடற்கரைத் துறைமுகம் மற்றும் விசாகப்பட்டினம் கடற்கரைத் துறைமுகம் மூலமாக வணிகர்கள் சோயா மாவினைத் தற்போது இறக்குமதி செய்ய இயலும்.
- அர்ஜென்டினா, ஐரோப்பா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலிருந்து இந்த இறக்குமதிகளை மேற்கொள்ளலாம்.
- சோயா மாவு என்பது அவரை விதையிலிருநது எண்ணெயைப் பிரித்தெடுத்தப் பிறகு எஞ்சிய புரதம் நிறைந்த மூலப்பொருளாகும்.
- மரபணு மாற்றப்பட்ட உயிரி, உயிருள்ள மரபணு மாற்றப்பட்ட உயிரி மற்றும் உயிரற்ற மரபணு மாற்றப்பட்ட உயிரி என 3 வகையான மரபணு மாற்றப்பட்ட உணவுகள் உள்ளன.
- சோயா மாவானது உயிரற்ற மரபணு மாற்றப்பட்ட ஒரு பொருளாகும்.




### *மரபணு மாற்றப்பட்டப் பயிர்கள்*

- மரபணு மாற்றப்பட்டப் பயிர் என்பது நவீன உயிரி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பெறப்பட்ட ஒரு புதிய வகை கலப்பினமாகும்.
- இவ்வகைப் பயிர்கள் மகரந்தச் சேர்க்கை மூலம் பெறப்பட்ட ஜீன்களுக்குப் பதிலாக செயற்கையாக உட்சேர்க்கப்பட்ட ஜீன்களைக் கொண்டிருக்கும்.
- மரபணு மாற்றப்பட்டப் பயிர்களை வணிகரீதியாக வெளியிடுவதற்கு அனுமதிக்கச் செய்வதற்கான ஒரு உயர்நிலை அமைப்பு மரபணு பொறியியல் மதிப்பீட்டுக் குழு ஆகும்.
- 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், அனுமதிக்கப்படாத மரபணு மாற்றப்பட்ட மாற்றுருக்களைப் பயன்படுத்துதல் என்பது ஒரு தண்டனைக்குரியக் குற்றமாகும்.
- இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட பயிர்களை ஒழுங்குபடுத்துவதற்கான அங்கீகாரம் பெற்ற அமைப்பு இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையமாகும்.

## டோக்லிசுமாப்




- பதின்ம வயதினருக்கான கோவிட்-19 சிகிச்சையில் காப்புரிமை சாராத மருந்தான டோக்லிசுமாப் மருந்தின் அவசரகாலப் பயன்பாட்டிற்கு இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டு வாரியம் அனுமதித்துள்ளது.
- இது ஹைதராபாத்திலுள்ள ஹெட்டீரோ எனும் மருந்து உற்பத்தி நிறுவனத்தினால் உருவாக்கப் பட்டதாகும்.
- இந்த மருந்தானது டோக்கிரா (Tocira) என்ற பெயரில் கிடைக்கப் பெறும்.
- ஹெட்டீரோ நிறுவனத்தின் டோக்லிசுமாப் மருந்தானது ரோச்சே நிறுவனத்தின் ஆக்டிமெரா/ரோஆக்டிம்ரா மருந்தின் உயிரி மாதிரியை ஒத்தப் பதிப்பாகும் (bio-similar version).

## சுவச் சர்வேக்சன் கிராமீன் 2021




- இது சுவச் பாரத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 'அசாதி கா அம்ரித் மகோத்சவ்' என்ற கொண்டாட்டத்தின் ஓர் அங்கமாக தொடங்கப்பட உள்ளது.
- இந்தியாவில் திறந்தவெளிக் கழிப்பிடமற்ற உபரி இடங்களின் இடையீடுகள் மற்றும் பயன்களைப் பெறுவதை முடுக்கி விடுவதில் உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குடிநீர் மற்றும் துப்புரவுத் துறையானது முன்பாக 2018 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளில் சுவச் சர்வேக்சன் கிராமீன் என்ற திட்டத்தினைத் தொடங்கியது.

## PRANA தளம்

- மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர் பூபேந்திர யாதவ் PRANA (பிராணா) என்ற ஒரு தளத்தினைத் தொடங்கி வைத்தார்.
- தேசியத் தூயக்காற்றுத் திட்டத்தின் முன்னேற்றத்தினைக் கண்காணிப்பதற்காக இது பயன்படுத்தப் படும்.
- அனைவருக்கும் தூயக் காற்று மற்றும் தெளிவான வானம் ஆகியவை கிடைக்கப் பெறுவதை உறுதி செய்வதற்கான இந்தியாவின் உறுதிப்பாட்டோடு இணங்கிச் செயல்படுவதே இதன் நோக்கமாகும்.
- இலக்கை அடையா நகரங்கள் என்பது 5 ஆண்டு காலத்தில் தேசியக் காற்றுத் தர நிலைகளைப் பூர்த்தி செய்யத் தவறிய நகரங்களாகும்.
- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியமானது 2024 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் 20 முதல் 30 சதவீத நுண்மத் துகள்களின் செறிவினை (PM 10 மற்றும் PM 2.5) குறைக்க முயற்சி செய்கிறது.





## கோயில் நிலங்களுக்கு கடவுளே உரிமையாளர்

- உச்ச நீதிமன்ற அமர்வு ஆனது கோயில் நிலங்களுக்கு கடவுளே உரிமையாளர் எனத் தெரிவித்துள்ளது.
- ஒரு அர்ச்சகரை பூமி சுவாமியாக (நில உரிமையாளர்) கருத முடியாது.
- கோவில் சொத்தின் நிர்வாகத்திற்காக மட்டுமே அர்ச்சகர் அந்த நிலத்தினை வைத்து இருக்கிறார்.
- அர்ச்சகர் என்பவர் கோவில் நிலத்தினை நிர்வகிக்கும் ஒரு குத்தகை தாரர் மட்டுமே ஆவார்.

## ராபி பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை

- பொருளாதார விவகாரங்கள் மீதான அமைச்சரவைக் குழுவானது 2022-23 ஆம் ஆண்டிற்கான ராபி பயிர்களின் சந்தைப் படுத்துதல் பருவத்திற்கான அனைத்துக் கட்டாய ராபி பயிர்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலையினை உயர்த்த ஒப்புதல் அளித்துள்ளது.

- குறைந்தபட்ச ஆதரவு விலை என்பது அரசானது விவசாயிகளிடமிருந்துத் தானியங்களைக் கொள்முதல் செய்யும் ஒரு விலை விகிதமாகும்.
- தற்போது, காரிப் மற்றும் ராபி பருவத்தில் பயிரிடப்பட்ட 23 வகை பயிர்களுக்கு இது குறைந்த பட்ச ஆதரவு விலையினை நிர்ணயிக்கிறது.
- இது விவசாயிகளின் உற்பத்திச் செலவில் குறைந்தது ஒன்றரை மடங்கு என்ற கணக்கீட்டினை அடிப்படையாகக் கொண்டது.
- 2019-19 ஆம் ஆண்டின் மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் குறைந்தபட்ச ஆதரவு விலையானது உற்பத்தி விலையில் 1.5 என்ற அளவில் நிர்ணயிக்கப்படும் என அறிவிக்கப் பட்டது.
- வேளாண் செலவினம் மற்றும் விலைகளுக்கான ஆணையத்தின் பரிந்துரையின் பேரில் குறைந்தபட்ச ஆதரவு விலையானது ஆண்டிற்கு 2 முறை நிர்ணயிக்கப் படுகிறது.




## உள்ளூர் மக்களுக்கு 75% இட ஒதுக்கீடு

- ஜார்க்கண்ட் மாநில அரசானது ரூ.40000 வரை மாத சம்பளமாக வழங்கக் கூடிய தனியார் துறை வேலைகளில் உள்ளூர் மக்களுக்கு 75% இட ஒதுக்கீடு வழங்க முடிவு செய்துள்ளது.
- இது அறிவிக்கப்பட்டால் ஆந்திரப் பிரதேசம் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களையடுத்து இத்தகைய சட்டத்தை இயற்றிய 3வது இந்திய மாநிலமாக ஜார்க்கண்ட் மாநிலம் உருவெடுக்கும்.

## சிறந்த சுற்றுலா கிராமங்கள்

- சுற்றுலாத் துறை அமைச்சகமானது மேகாலயாவின் எழில் கொஞ்சும் கிராமமான கோங்தாங் என்ற கிராமத்தினை UNWTO அமைப்பின் (ஐக்கிய நாடுகள் உலக சுற்றுலா அமைப்பு) சிறந்த சுற்றுலா கிராமங்கள் என்ற விருதிற்குப் பரிந்துரை செய்துள்ளது.

- இதற்காக பரிந்துரைக்கப்பட்ட மற்ற 2 கிராமங்களாவன : மத்தியப் பிரதேசத்திலுள்ள லாத்பூரா காஸ் மற்றும் தெலுங்கானாவிலுள்ள போச்சம்பள்ளி ஆகியவையாகும்.




## NSCN ஒப்பந்தம்

- நிக்கி சுமி தலைமையிலான நாகாலாந்தின் கப்லாங்க் தேசிய சமூகக் கழகம் மற்றும் மத்திய உள்துறை அமைச்சகம் ஆகியவற்றுக்கு இடையே ஓராண்டிற்கான போர் நிறுத்த ஒப்பந்தமானது கையெழுத்திடப்பட்டுள்ளது.
- இந்த அமைப்பின் ஒரு முக்கிய நோக்கமானது "நாகாலிம்" என்ற இறையாண்மை கொண்ட ஒரு நாகா அரசினை உருவாக்குவதேயாகும்.
- இது வடகிழக்கு இந்தியா மற்றும் வடமேற்கு மியான்மர் ஆகிய பகுதிகளில் உள்ள நாகா மக்கள் வாழும் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

## அவசரத் தரையிறக்க வசதி

- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் மத்திய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் நிதின் கட்கரி ஆகியோர் ராஜஸ்தானிலுள்ள பார்மரில் அமைந்த 925A என்ற தேசிய நெடுஞ்சாலையின் சத்தா – கந்தவ் வழித் தடத்தில் அமைக்கப் பட்டுள்ள ஒரு அவசரத் தரையிறக்க வசதியினைத் திறந்து வைத்தனர்.
- முதன்முறையாக ஒரு தேசிய நெடுஞ்சாலையானது இந்திய விமானப் படையின் விமானங்கள் அவசரமாக தரையிறக்கப்படுவதற்குப் பயன்படுத்தப்பட உள்ளது.




## வான்வழிப் போக்குவரத்திற்கான 100 நாள்கள் திட்டம்

- இந்தியாவின் வான்வழிப் போக்குவரத்தினை மேம்படுத்துவதற்கான 100 நாட்கள் திட்டமானது அடுத்த 100 நாட்களில் குஷி நகர், அகர்தலா, டேராடூன் மற்றும் ஜேவார் ஆகிய இடங்களில் 4 புதிய விமான நிலையங்களை நிறுவுவதோடு தொடங்கப்படும்.
- முதலாவது விமான நிலையமானது உத்தரப் பிரதேசத்திலுள்ள குஷி நகரில் நிறுவப் படும்.
- குஷி நகரானது புத்த சமய மக்கள் வாழும் பகுதியின் ஒரு மையப் புள்ளியாக மாறும்.

## உயிரி செங்கல்லால் ஆன இந்தியாவின் முதல் கட்டிடம்

- வேளாண் கழிவுகளிலிருந்துத் தயாரிக்கப்பட்ட உயிரி செங்கல்லால் ஆன இந்தியாவின் முதல் கட்டிடமானது ஹைதராபாத்தின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி கழகத்தில் திறக்கப் பட்டுள்ளது.
- இந்த மாதிரிக் கட்டிடமானது ஓர் உலோகக் கட்டமைப்பின் தாங்குதலோடு உயிரி செங்கல் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.
- இதில் வெப்பத்தைத் தணிப்பதற்காக பாலி வினைல் குளோரைடு தகடின் மீது உயிரி செங்கல் வைத்து கூரைகள் அமைக்கப்பட்டுள்ளது.
- இது இந்த வகை செங்கல்லின் வலிமை மற்றும் பலபடித் தன்மையை நிரூபிப்பதற்கான 'Bold Unique Idea Lead Development (BUILD)' என்ற திட்டத்தின் ஓர் அங்கமாகும்.


## பாராளுமன்றச் சபாநாயகர்களின் 5வது உலக மாநாடு

- பாராளுமன்றச் சபாநாயகர்களின் 5வது உலக மாநாடு மற்றும் தீவிரவாத எதிர்ப்பு மீதான முதலாவது உலகளாவியப் பாராளுமன்ற உச்சி மாநாடு ஆகியவை ஆஸ்திரியாவின் வியன்னா என்னுமிடத்தில் நடத்தப்பட்டது.
- வியன்னாவில் நடைபெற்ற இந்த இரு நிகழ்வுகளும் ஐக்கிய நாடுகளின் ஆதரவுடன் ஜெனீவாவிலுள்ள பாராளுமன்றங்களுக்கிடைப்பட்ட ஒன்றிய அமைப்பு மற்றும் ஆஸ்திரியப் பாராளுமன்றம் ஆகியவற்றினால் ஏற்பாடு செய்யப்படுகிறது.

- கோவிட்-19 பெருந்தொற்றிற்குப் பிறகு நேரடிப் பங்கேற்போடு நடைபெறும் ஒரு உலகளாவியப் பாராளுமன்ற நிகழ்வு இதுவாகும்.
- மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா மற்றும் மாநிலங்களவைத் துணை தலைவர் ஆகியோர் இந்த நிகழ்வில் பங்கேற்றனர்.




## ஆத்ம நிர்பர் பாரத் முனையங்கள்




- இந்தியப் பழங்குடியினர் கூட்டுறவுச் சந்தைப்படுத்துதல் மேம்பாட்டுக் கூட்டமைப்பு நிறுவனமானது வெளியுறவு அமைச்சகத்துடன் இணைந்து உலகம் முழுவதும் உள்ள 75 இந்தியத் தூதரகங்களில் ஆத்ம நிர்பர் பாரத் முனையங்களை அமைத்து வருகிறது.
- முதலாவது ஆத்ம நிர்பர் பாரத் முனையமானது தாய்லாந்தில் உள்ள பாங்காக் என்னுமிடத்தில் அமைந்துள்ள இந்தியத் தூதரகத்தில் திறக்கப்பட்டுள்ளது.
- 75 நாடுகளில் ஜமைக்கா, அயர்லாந்து, துருக்கி, கென்யா, மங்கோலியா, இஸ்ரேல், பின்லாந்து, பிரான்சு மற்றும் கனடா, சிங்கப்பூர், ரஷ்யா, அமெரிக்கா, இந்தோனேசியா, கிரேக்கம் மற்றும் சைப்ரஸ் ஆகியவை அடங்கும்.

## இந்திய ரயில்வேயின் மாற்று எரிபொருள் அமைப்பு

- இந்திய இரயில்வே நிறுவனமானது இந்திய இரயில்வேயின் மாற்று எரிபொருள் அமைப்பினை மூடியுள்ளது.
- IROAF (Indian Railways Organization of Alternate Fuel) அமைப்பானது இந்திய இரயில்வே கட்டமைப்பு முழுவதும் பசுமை ஆற்றலை ஊக்குவிப்பதற்காக வேண்டி உருவாக்கப் பட்டதாகும்.
- IROAF அமைப்பின் பணிகளானது தற்போது வடக்கு இரயில்வே மற்றும் இரயில்வே வாரியம் ஆகியவற்றிடம் மாற்றப்பட்டுள்ளது.

## ஆசிய மேம்பாட்டு வங்கி – ஜார்க்கண்ட்

- ஜார்க்கண்ட் மாநிலத்தில் தண்ணீர் வசதி உள்கட்டமைப்புகளை ஏற்படுத்துவதற்காக வேண்டி ஆசிய மேம்பாட்டு வங்கியும் இந்திய அரசும் ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டுள்ளன.
- மேலும் ஜார்க்கண்ட் மாநிலத்தின் 4 நகரங்களில் மேம்பட்ட சேவை வழங்கீட்டிற்காக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்திறனை வலுப்படுத்துவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஆசிய மேம்பாட்டு வங்கி மேற்கொள்ளும் முதலாவது திட்டமாகும்.

## Eyes in sky திட்டம்



- 6 வான்வழி முன்னெச்சரிக்கை மற்றும் கட்டுப்பாட்டு விமானங்களைக் கட்டமைப்பதற்கான இறுதி ஒப்புதலை இந்திய அரசு வழங்கியுள்ளது.
- இது சீனா மற்றும் பாகிஸ்தான் எல்லைப் பகுதிகளில் இந்திய விமானப் படையின் கண்காணிப்புத் திறனை அதிகப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த விமானங்கள் நவீன போர் முறையில் வானிலுள்ள சக்தி வாய்ந்த கண்கள் எனக் கருதப் படுகின்றன.
- இந்திய விமானப் படையானது தற்போது ரஷ்யாவின் IL-T6 என்ற போக்குவரத்து விமானத்தில் பொருத்தப்பட்ட 3 இஸ்ரேலிய பால்கன் AWACS அமைப்புகளை இயக்கி வருகிறது.

- இந்திய விமானப் படையானது, பிரேசில் நாட்டின் சிறிய ரக விமானமான எம்பிரேரர்-145 என்ற ஜெட் விமானத்தின் மீது பொருத்தப்பட்ட உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 2 'நேத்ரா' விமானங்களைக் கொண்டுள்ளது.

## MRSAM

- நடுத்தர வரம்பு கொண்ட நிலத்திலிருந்து விண்ணில் இருக்கும் இலக்கினைத் தாக்கும் ஏவுகணை (MRSAM - medium-range surface-to-air-missile) என்ற அமைப்பானது இந்திய விமானப்படையில் வெற்றிகரமாக சேர்க்கப்பட்டுள்ளது.
- இந்த ஏவுகணை அமைப்பானது 70 கிமீ தொலைவு வரை உள்ள வான்வழி அச்சுறுத்தல்களைத் தகர்க்கும் திறன் கொண்டது.
- இந்த அமைப்பை டிஆர்டிஓ மற்றும் இஸ்ரேலிய விண்வெளி நிறுவனங்கள் இணைந்து உருவாக்கியுள்ளன.
- MRSAM ஏவுகணையின் கடற்படைப் பதிப்பானது ஏற்கனவே சில இந்திய போர்க் கப்பல்களில் பயன்படுத்தப் படுகிறது.




## தேசிய சிறுபான்மையினர் ஆணையம்

- முன்னாள் ஐபிஎஸ் அதிகாரி இக்பால் சிங் லால்புரா அவர்கள் சிறுபான்மை சமூகத்தினருக்கான தேசிய ஆணையத்தின் தலைவராகத் தேர்வு செய்யப் பட்டு உள்ளார்.
- இதற்கு முன்பு ஆணையத்தின் தலைவராக சையத் கயோருல் ஹசன் ரிஸ்வி (Syed Ghayorul Hasan Rizvi) இருந்தார்.
- இது சிறுபான்மையினருக்கான தேசிய ஆணையச் சட்டம், 1992 என்பதின் கீழ் அமைக்கப் பட்டது.

- ஆறு மதச் சமூகங்கள், அதாவது; முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், ஜோராஸ்ட்ரியர்கள் (பார்சிக்கள்) மற்றும் சமணர்கள் ஆகியோர் இந்தியாவில் சிறுபான்மை சமூகங்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.
- 2014 ஆம் ஆண்டில், சிறுபான்மைச் சமூகமாக கடைசியாக அறிவிக்கப்பட்டது சமணர்கள் சமூகமாகும்.




## டிஜிட்டல் மக்கள் தொகை கடிகாரம்


- இது டெல்லி பல்கலைக்கழகத்திற்குள் உள்ள பொருளாதார வளர்ச்சிக்கான நிறுவனத்தில் திறக்கப்பட்டது.
- மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் பாரதி பிரவின் பவார் இதைத் தொடங்கி வைத்தார்.
- இந்தியாவின் மக்கள்தொகையின் மீது நிமிடத்திற்கு நிமிடம் மாறும் மதிப்பீட்டை வழங்குவதற்காக வேண்டி இது தொடங்கப்பட்டது.
- இது, மொத்தக் கருவுறுதல் விகிதம், குழந்தை இறப்பு விகிதம் மற்றும் பேறுகால இறப்பு விகிதம் பற்றியத் தரவையும் கணக்கில் எடுத்துக் கொள்ளும்.

## நிபா வைரஸ்

- இது கேரளாவின் கோழிக்கோடு மாவட்டத்தில் சமீபத்தில் கண்டறியப்பட்டது.
- இது பழந்திண்ணி வௌவால்களால் ஏற்படுத்தப்படும் விலங்கு வழி வைரஸ் ஆகும்.
- வௌவால்கள் (அ) பன்றி போன்ற பிற தொற்று ஏற்பட்ட விலங்குகளுடன் (அ) உமிழ்நீர் அல்லது சிறுநீர் போன்ற அவற்றின் உடல் திரவங்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ளும் போது மனிதர்கள் இந்த வைரசினால் பாதிப்படையக் கூடும்.
- விலங்கிலிருந்து மனிதனுக்கு முதலில் வைரஸ் பரவும் நிகழ்வு 'ஸ்பில் ஓவர்' நிகழ்வு அல்லது தொற்று நிகழ்வு என அறியப்படுகிறது.
- மனிதனுக்குத் தொற்று ஏற்பட்டவுடன், இது மனிதர்களிடையே பரவத் தொடங்கும்.
- இது அசுத்தமான உணவு மூலமாகவோ (இ) நேரடியாகவோ மக்களிடையே பரவுகிறது.
- இந்த வைரஸ் தொற்றானது இந்தியாவில் இதுவரையில் மேற்கு வங்கம் மற்றும் கேரளாவில் மட்டுமே கண்டறியப்பட்டுள்ளது.




## 'Medicine from the Sky' திட்டம்





- வான்வழிப் போக்குவரத்து அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா தெலங்கானாவின் விக்ரபாத் எனுமிடத்தில் "Medicine from the sky" என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இது இந்தியாவில் இம்மாதிரியான முதல் திட்டமாகும்.
- ஆளில்லா விமானங்கள் மூலம் தொலைதூரப் பகுதிகளுக்கு மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளைக் கொண்டு செல்ல இந்த திட்டம் உதவும்.

- இது நிதி ஆயோக், உலகப் பொருளாதார மன்றம் மற்றும் ஹெல்த் நெட் குளோபல் ஆகியவற்றுடன் இணைந்து தெலங்கானா மாநில அரசினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.

## குஜராத் மாநிலத்தின் புதிய முதல்வர்

- மூத்த பா.ஜ.க. தலைவர் பூபேந்திரா படேல் அவர்கள் குஜராத் மாநிலத்தின் புதிய முதல்வராக பொறுப்பேற்க உள்ளார்.
- விஜய் ரூபானி இந்த ஆண்டில் ராஜினாமா செய்த 4வது பா.ஜ.க. முதலமைச்சராவார்.
- இவர் கர்நாடக முதல்வர் B.S. எடியூரப்பா, உத்தரகாண்ட் முதல்வர் திரிவேந்திர சிங் ராவத் மற்றும் அசாம் முதல்வர் சர்பானந்த சோனோவால் ஆகியோரைத் தொடர்ந்து ராஜினாமா செய்துள்ளார்.



## இருப்பிடச் சான்றிதழ்

- லடாக் நிர்வாகமானது அப்பகுதியின் ஒரு நிரந்தர இருப்பிடச் சான்றிதழினைக் கொண்டவர்களுக்கு மட்டும் இருப்பிடச் சான்றிதழை வழங்க முடிவு செய்துள்ளது.
- ஜம்மு & காஷ்மீரில் வெளிமாநிலத்தவரும் பணிகள், நிலம் மற்றும் பிற வசதிகளைப் பெற விண்ணப்பிப்பதற்குப் புதிய உள்மாநிலச் சட்டங்கள் அனுமதிக்கின்றன.

## 100% தடுப்பூசி வழங்கீடு

- இந்தியாவில் மொத்தம் 6 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களானது தங்களின் தகுதி வாய்ந்த பதின்ம வயதினர் அனைவருக்கும் முதல் தவணை கோவிட்-19 தடுப்பூசியை வழங்கியுள்ளது.
- அந்த 6 மாநிலங்கள் மற்றும் ஒன்றிய பிரதேசங்களாவன: இமாச்சலப் பிரதேசம், கோவா, லடாக், சிக்கிம், லட்சத்தீவு, டாமன் & டையூ மற்றும் தாதர் & நாகர் ஹவேலி ஆகியனவாகும்.
- கோவா தனது அனைத்துக் குடிமக்களுக்கும் முதல் தவணை கோவிட் தடுப்பூசியினை வழங்கிய இரண்டாவது இந்திய மாநிலமாக மாறியுள்ளது.
- இந்த மைல்கல்லை அடைந்த முதல் மாநிலம் இமாச்சலப் பிரதேசமாகும்.
- நீலகிரியானது தனது குடிமக்கள் அனைவருக்கும் முதல் தவணை தடுப்பூசியினை வழங்கிய தமிழ்நாட்டின் முதல் மாவட்டமாக மாறியுள்ளது.

## இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க ஆற்றல்

- இந்திய நாடானது சமீபத்தில் நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் திறனில் 100 GW என்ற மைல்கல்லை கடந்துள்ளது.
- இந்தியா மொத்தம் 383.73 GW அளவிலான நிறுவப்பட்ட ஆற்றல் உற்பத்தித் திறனைக் கொண்டுள்ளது.
- இந்திய நாடானது 2019 ஆம் ஆண்டு நிலவரப்படி, காற்றாற்றலில் 5வது இடத்திலும் சூரிய ஆற்றலில் 5 ஆம் இடத்திலும் மற்றும் நிறுவப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் 4 ஆம் இடத்திலும் உள்ளது.
- இந்தியாவில் நிறுவப்பட்ட சூரிய ஆற்றல் உற்பத்தித் திறன் 41.09 GW ஆகும்.
- இந்திய நாடானது உலகின் மிகப்பெரிய ஒரு தூய ஆற்றல் திட்டத்தினைச் செயல்படுத்துகிறது.
- மேலும் 2030 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் 450 GW அளவு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் திறனைக் கட்டமைப்பது என்று தனது இலக்கினையும் உயர்த்தியுள்ளது.
- இதில் மிகப்பெரிய நீர்மின் ஆற்றல் சேர்க்கப்பட்டால் இந்தியாவின் நிறுவப் பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தித் திறனின் அளவு 146 GW ஆக உயரும்
- இது இந்தியாவின் மொத்த உற்பத்தித் திறனில் சுமார் 37% வரை பங்களிக்கிறது.
- இந்தியாவின் சராசரி தனி நபர் கரிம உமிழ்வு உலக சராசரியில் மூன்றில் ஒரு பங்கு ஆகும்.

## இந்திய கடற்படைக் கப்பல் துருவ்



- ஐ.என்.எஸ். துருவ் எனப் பெயரிடப்பட்ட இந்தியாவின் முதலாவது அணு ஆயுத ஏவுகணை கண்காணிப்புக் கப்பலானது ஆந்திரப் பிரதேசத்திலுள்ள விசாகப் பட்டினத்தில் வைத்து பணியில் சேர்க்கப்பட்டது.
- இந்த 1000 டன் எடை கொண்ட செயற்கைக்கோள் மற்றும் உந்துவிசை ஏவுகணை கண்காணிப்புக் கப்பலானது பாதுகாப்பு ஆராய்ச்சி & மேம்பாட்டு அமைப்பு மற்றும் தேசிய தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்து இந்துஸ்தான் கப்பல் கட்டும் நிறுவனத்தினால் கட்டமைக்கப்பட்டது.
- இதன் மூலம் பிரான்சு, அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகள் அடங்கிய உயர்நிலைப் பட்டியலில் தற்போது இந்தியாவும் இணைந்துள்ளது.

## தேசிய நிறுவனச் சட்ட மேல்முறையீட்டுத் தீர்ப்பாயம்




- நீதிபதி M. வேணுகோபால் அவர்கள் இந்தத் தீர்ப்பாயத்தின் புதிய தற்காலிக தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்தத் தீர்ப்பாயமானது தேசிய நிறுவனச் சட்ட தீர்ப்பாயத்தின் ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடுகளை விசாரிப்பதற்காக 2013 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டது.
- மேலும் நொடித்தல் மற்றும் திவால் குறியீட்டின் கீழ் தேசிய நிறுவனச் சட்டத் தீர்ப்பாயத்தினால் அளிக்கப்பட்ட ஆணைகள் மற்றும் இந்திய நொடித்தல் மற்றும் திவால் வாரியத்தினால் அளிக்கப்பட்ட ஆணைகள் ஆகியவற்றுக்கு எதிரான மேல் முறையீடுகளையும் இந்தத் தீர்ப்பாயம் விசாரணை செய்யும்.
- இது இந்தியப் போட்டி ஆணையத்தினால் அளிக்கப்பட்ட ஆணைகள் (அ) மேற்கொள்ளப்பட்ட முடிவுகள் (அ) வழிகாட்டுதல்கள் ஆகியவற்றுக்கு எதிரான மேல் முறையீட்டினையும் விசாரித்துத் தீர்ப்பு வழங்குவதற்கான ஒரு மேல்முறையீட்டுத் தீர்ப்பாயமாகும்.

## பிரதான் மந்திரி ஆதர்ஷ் கிராம் யோஜனா

- பழங்குடியினர் விவகார அமைச்சர் அர்ஜுன் முண்டா சமீபத்தில் இத்திட்டத்தினை அறிவித்தார்.
- இந்த அமைச்சகமானது நாடு முழுவதுமுள்ள 36000 கிராமங்களில் பிரதான் மந்திரி ஆதர்ஷ் கிராம் யோஜனா என்ற திட்டத்தினைத் தொடங்க உள்ளது.

- 50% பழங்குடியினர் மக்கள்தொகையைக் கொண்ட கிராமங்களுக்கு இந்தக் கிராமப்புற மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முன்னுரிமை வழங்கப்படும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் அசாமிலுள்ள சுமார் 1700 பழங்குடியினர் கிராமங்கள் மாதிரி கிராமங்களாக மாற்றப்படும்.
- பிரதான் மந்திரி ஆதர்ஷ் கிராம் யோஜனா என்பது ஓர் ஊரக மேம்பாட்டுத் திட்டமாகும்.
- இது 2009-10 ஆம் நிதியாண்டில் அதிக விகிதத்தில் பட்டியல் சாதியினரை (50%க்கும் மேல்) கொண்ட கிராமங்களின் மேம்பாட்டிற்காக மத்திய அரசினால் தொடங்கப் பட்டது.




## ஜெயந்த் திறந்தவெளி நிலக்கரிச் சுரங்கம்

- இது மத்தியப் பிரதேசத்தின் சிங்கரௌலி மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- இது நிலக்கரி அமைச்சகத்தின் கீழ் உள்ள இந்திய நிலக்கரி நிறுவனத்தின் மிகப் பெரியத் திட்டங்களில் ஒன்றாகும்.
- இது நிலக்கரி அமைச்சகத்தின் செயல்பாட்டோடுச் சேர்த்து நில மறுசீரமைப்பு மற்றும் பசுமையாக்கல் போன்ற திட்டங்களிலும் ஈடுபட்டு வருகிறது.
- இது சுற்றுச்சூழல் சமநிலையைக் கடைபிடிப்பதற்காக வேண்டி திறந்தவெளி நிலக்கரிச் சுரங்கங்களின் செயல்பாட்டிற்குப் பிறகு அந்த நிலத்தை உடனடியாக நிரப்புவதை நோக்கமாகக் கொண்ட பல பசுமைத் திட்டங்களில் ஒன்றாகும்.

## உடான் திட்டம்

- மும்பையின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது இந்தி திவாஸ் அன்று தனது "உடான் திட்டத்தினை" தொடங்கி வைத்தது.
- உயர்கல்வி நிறுவனங்களில் இணையும் பல மாணவர்கள் எதிர்கொள்ளும் மொழி சார்ந்த தடையை உடைக்கும் நோக்கத்தோடு இது தொடங்கப்பட்டுள்ளது.
- இது பொறியியல் மற்றும் இதர பாடப்பிரிவு புத்தகங்களை ஆங்கில மொழியிலிருந்து இந்தி மற்றும் இதர இந்திய மொழிகளில் மொழி பெயர்ப்பதற்கு வழிவகை செய்கிறது.
- இது ஓர் அறக்கட்டளை சார்ந்த மற்றும் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான ஒரு மொழி பெயர்ப்பு அமைப்பாகும்.




## வாகனங்களுக்கான வேக வரம்பு

- மத்திய அரசின் 2018 ஆம் ஆண்டு அறிவிப்பினை (2018 notification) சென்னை உயர் நீதிமன்றம் ரத்து செய்துள்ளது.
- இது நெடுஞ்சாலைகள் மற்றும் விரைவுச் சாலைகளில் மணிக்கு 120 கிமீ என்ற வேக வரம்பினை நிர்ணயித்துள்ளது.
- மோட்டார் வாகனச் சட்டத்தின் மேல் எழுப்பப் பட்ட ஒரு மேல் முறையீட்டின் பேரில் உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவானது வழங்கப்பட்டது.
- அதிக வேகமே உயிர் பறி போவதற்கான ஒரு முக்கியக் காரணமாக இருப்பதோடு பெரும்பாலான விபத்துகளுக்கும் இதுவே காரணமாகும்.
- இதை மேற்கோள் காட்டி இந்த அறிவிப்பு ரத்து செய்யப்பட்டது.

## கீதா சமோதா




- ஆப்பிரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளில் இரண்டு சிகரங்களின் மீது ஏறிய "வேகமான இந்தியர்" என்ற பெருமையை இவர் அடைந்துள்ளார்.
- இவர் ஆப்பிரிக்காவிலுள்ள மிக உயரிய சிகரமான கிளிமாஞ்சாரோ சிகரத்தின் மீது வெற்றிகரமாக ஏறியுள்ளார்.
- ஆப்பிரிக்காவின் கிளிமாஞ்சாரோ சிகரமானது அதன் உச்சியில் 3 எரிமலைகளைக் கொண்ட உலகின் மிக உயரிய ஒரு ஒற்றை மலையாகும்.
- கிளிமாஞ்சாரோவில் ஏறிய இளம் வயது ஆசியப் பெண்மணியாகவும் இவர் மாறி உள்ளார்.

- ஐரோப்பாவிலுள்ள மற்றொரு உயரிய சிகரத்திலும் (எல்புரூஸ் சிகரம் – ரஷ்யா) இவர் ஏறியுள்ளார்.
- இவர் மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புப் படை அலுவலர் ஆவார்.
- மத்தியத் தொழில்துறைப் பாதுகாப்புப் படையானது உள்துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு மத்தியத் துணை இராணுவப் படையாகும்.

## சன்சத் தொலைக்காட்சி

- இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் M.வெங்கய்யா நாயுடு, பிரதமர் நரேந்திர மோடி மற்றும் மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா ஆகியோர் இணைந்து சன்சத் என்ற தொலைக் காட்சியினை தொடங்கி வைத்தனர்.
- 2021 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மக்களவை மற்றும் மாநிலங்களவை ஆகியவற்றுக்கான தொலைக்காட்சியினை இணைக்கும் முடிவானது மேற்கொள்ளப் பட்டது.
- பாராளுமன்ற அமர்வின் போது சன்சத் தொலைக்காட்சியின் இரண்டு அலைவரிசைகள் மூலம் மக்களவை மற்றும் மாநிலங்களவை ஆகியவற்றின் செயல்பாடுகள் ஒரே நேரத்தில் தனித்தனியாக ஒளிபரப்பப்படும்.
- சன்சத் தொலைக்காட்சியானது பிரதானமாக பாராளுமன்ற மற்றும் ஜனநாயக அமைப்புகளின் செயல்பாடுகள், ஆளுகை மற்றும் திட்டம்/கொள்கை அமலாக்கம், இந்திய வரலாறு மற்றும் பண்பாடு மற்றும் சமகாலத்து விவகாரங்கள் சார்ந்த பிரச்சினைகள்/நலன்கள்/சிக்கல்கள் ஆகிய 4 பிரிவுகளில் ஒளிபரப்பப் படும்.
- மக்களவைத் தொலைக்காட்சியானது 2006 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தொடங்கப் பட்டது.
- இது முன்னாள் மக்களவை சபாநாயகர் சோம்நாத் சட்டர்ஜி அவர்களின் சிந்தனையில் உதித்தது ஆகும்.
- மாநிலங்களவைத் தொலைக்காட்சி 2011 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.





## தேசியக் குற்றவியல் ஆவணக் காப்பகம் – அறிக்கை

- 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டில் வழக்குப் பதிவுகளின் எண்ணிக்கை 28% அதிகரித்து உள்ளது.
- இது பிரதானமாக நாட்டில் கோவிட் – 19 விதி மீறல்கள் தொடர்பான வழக்குகளாகும்.
- பட்டியல் சாதியினருக்கு எதிரான குற்றங்கள் 9.4% அதிகரிப்பைக் கண்டுள்ளன.

- பெண்களுக்கு எதிரான குற்றவியல் வழக்குகளில் 8.30% குறைவு ஏற்பட்டுள்ளது.
- இந்தியத் தண்டனைச் சட்டத்தின் கீழ் அதிக குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யும் மாநிலங்கள் குஜராத் (97.1%), கேரளா (94.9%) மற்றும் தமிழ்நாடு (91.7%) ஆகியன ஆகும்.
- 2019 ஆம் ஆண்டில் 93 ஆக இருந்த தேசத் துரோக வழக்குகளின் எண்ணிக்கை, மணிப்பூர் (15 வழக்குகள்), அசாம் (12), கர்நாடகா (8), உத்தரப் பிரதேசம் (7), ஹரியானா (6), டெல்லி (5) மற்றும் காஷ்மீர் (2) என்ற எண்ணிக்கையில் 2020 ஆம் ஆண்டில் அது 73 ஆகக் குறைந்தது.




## இந்தியாவில் குற்றங்கள் விகிதம்




- தேசிய குற்ற ஆவணக் காப்பகம் இதை வெளியிட்டது.
- 19 பெருநகரங்களில், இந்தியத் தண்டனைச் சட்டத்தின் குற்றங்களின் கீழ் அதிகமான குற்ற அறிக்கையைப் பதிவு செய்த நகரங்கள் சூரத் (96.7%), கோயம்புத்தூர் (96.6%) மற்றும் அகமதாபாத் (96.3%) ஆகியனவாகும்.
- நாட்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்களில் அசாம் தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக மிக அதிக குற்ற விகிதத்தைப் பதிவு செய்துள்ளது.

- ஒவ்வொரு 100,000 மக்கள்தொகைக்கும் எத்தனை குற்றங்கள் என்ற விகிதத்தில் இந்த எண்ணிக்கை கணக்கிடப் படுகிறது.
- ஒடிசா இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
- டெல்லி மூன்றாவது இடத்தில் உள்ளது.
- மேற்கு வங்கம் மற்றும் ஒடிசா ஆகியவை குற்றங்களில் அதிக உயர்வைக் கண்டு உள்ளன.
- இதில் உத்தரப் பிரதேசம் மிகப்பெரிய வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.
- பெருநகரப் பிரிவில் பெண்களுக்கு எதிரான குற்றங்களில் உத்தரப் பிரதேசத்தின் லக்னோ முதலிடத்தில் உள்ளது.
- பெண்களுக்கு எதிரான குற்றங்களில் குறைந்த எண்ணிக்கையோடு கோவை 1வது இடத்தையும், சென்னை 2வது இடத்தையும், கேரளாவின் கொச்சி 3வது இடத்தையும் பிடித்துள்ளது.
- பாலியல் வன்புணர்வில் அதிக வழக்குகள் பதிவாகியுள்ள ராஜஸ்தானைத் தொடர்ந்து உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் அசாம் ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- 2020 ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான அனைத்துக் குற்றங்களிலும், அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் "கணவர் அல்லது உறவினர்களால் கொடுமைப் படுத்தப்பட்ட" பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டன.
- உத்தரப் பிரதேசம் (31) மற்றும் மத்தியப் பிரதேசம் (27) ஆகியவை வன்புணர்வு - கொலை/கூட்டு வன்புணர்வு என்ற பிரிவில் வழக்குகளைப் பதிவு செய்துள்ளன.
- வரதட்சணை காரணமான இறப்புகளில் உத்தரப் பிரதேசம் முதலிடத்தில் உள்ளது.
- மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்களில் பட்டியலினச் சாதியினருக்கு எதிரான குற்றங்கள் மிக அதிகமாக பதிவாகியுள்ளன.
- நகரங்களில், கான்பூர் மற்றும் ஜெய்ப்பூர் ஆகிய நகரங்கள் அதிக விகிதத்தைப் பதிவு செய்துள்ளன.
- கேரளா, ராஜஸ்தான் மற்றும் தெலுங்கானா ஆகிய மாநிலங்களில் பட்டியலினப் பழங்குடியினருக்கு எதிரான குற்றங்கள் மிக அதிகமாகப் பதிவாகியுள்ளன.

## ஸ்புட்னிக் லைட்



- இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு இயக்குநரகமானது இந்திய மக்கள் மீது ஸ்புட்னிக் லைட் என்ற கோவிட் -19 தடுப்பூசியின் 3வது கட்ட சோதனைகளை நடத்த ஒப்புதல் அளித்தது.
- ஸ்புட்னிக் லைட் என்பது ஸ்புட்னிக் V என்பதின் ஒற்றைத் தவணை COVID-19 தடுப்பூசி பதிப்பாகும்.
- ஒற்றைத் தவணை ஸ்புட்னிக் லைட் தடுப்பூசியை ரஷ்யா அறிமுகப்படுத்தியது.

## உலகளாவிய புத்த மாநாடு

- 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் பீகாரின் நாளந்தாவில் முதல் உலகளாவிய புத்த மாநாட்டை இந்தியா நடத்த உள்ளது.
- இந்தக் கல்வி மாநாடானது இந்தியாவின் கலாச்சார உறவுகளுக்கான மன்றத்தால் ஏற்பாடு செய்யப்படும்.
- இந்த உலகலாவிய மாநாட்டை முன்னிட்டு இந்தியாவில் (தெலுங்கானா, சாரநாத், கேங்டாக் மற்றும் தர்மசாலா) மற்றும் வெளிநாடுகளில் (ஜப்பான், தென் கொரியா, தாய்லாந்து மற்றும் கம்போடியா) நான்கு பிராந்திய மாநாடுகள் ஏற்பாடு செய்யப் படுகின்றன.

## சூன்யா பிரச்சாரம்




- நிதி ஆயோக் ஆனது ஆர்எம்ஐ மற்றும் ஆர்எம்ஐ ஆகிய நிறுவணங்களுடன் இணைந்து இந்தப் பிரச்சாரத்தைத் தொடங்கியது.
- இந்தப் பிரச்சாரத்தின் முக்கிய நோக்கம் நகர்ப்புற சரக்குத் துறையில் இருந்து கரிம மாசுபாட்டை அகற்றுவதாகும்.
- நகர்ப்புற விநியோகப் பிரிவில் மின்சார வாகனங்களை ஏற்றுக் கொள்வதை துரிதப் படுத்தும் நோக்கில் இது தொடங்கப்பட்டது.

## iRASTE





- மத்திய சாலைப் போக்குவரத்து அமைச்சர் நிதின் கட்கரி அவர்கள் "iRASTE" என்ற ஒரு திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.
- இது செயற்கை நுண்ணறிவு ஆற்றல் அடிப்படையிலான ஒரு திட்டமாகும்.
- சாலை விபத்துகளைக் குறைப்பதனையும், இவற்றிற்கு காரணமான காரணிகளைப் புரிந்து கொள்வதையும், அவற்றைத் தணிப்பதற்கான தீர்வுகளைக் கொண்டு வருவதையும் இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- "iRASTE" என்றால் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் மூலமான சாலைப் பாதுகாப்பிற்காக வேண்டி நுண்ணறிவு சார்ந்த தீர்வுகள் என்று பொருளாகும் (Intelligent solutions for Road Safety Through Technology and Begineering).
- இது மகாராஷ்டிராவின் நாக்பூர் எனுமிடத்தில் சோதனை முறையில் தொடங்கப் பட்டு உள்ளது.
- இது மத்திய அரசு, இன்டெல், INAI, IIIT – ஹைதராபாத், CSIR – CRRI (மத்திய சாலை ஆராய்ச்சி நிறுவனம்), மஹேந்திரா மற்றும் நாக்பூர் மாநகராட்சிக் கழகம் ஆகியவற்றினால் இணைந்து தொடங்கப் பட்டுள்ளது.

## ஹைப்போடோன்ட் சுறாக்கள்

- இவை ஜீராசிக் பாறைப்படிவ மாதிரிகளிலிருந்து முதன்முறையாக கண்டெடுக்கப் பட்டுள்ளன.
- ஜீராசிக் காலமானது சுமார் 160 முதல் 168 மில்லியன் ஆண்டுகள் பழமையானதாகும்.
- இது ராஜஸ்தானின் ஜெய்சால்மர் பகுதியில் இந்தியப் புவியியல் ஆய்வுக் குழுவினால் கண்டெடுக்கப்பட்டது.
- ஹைப்போடோன்ட்ஸ் (Hybodonts) என்பது டிரையாசிக் மற்றும் முற்கால ஜீராசிக்

காலத்தின் போது கடல்சார் மற்றும் வண்டல் சூழல்களில் மீன் இனங்களின் மீது ஆதிக்கம் செலுத்தி வந்த ஓர் அழிந்து போன சுறா இனமாகும்.

- இவை 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு கிரேட்டாசியஸ் (Cretaceous) காலத்தின் முடிவில் அழிந்து போயின.
- இந்தக் கண்டுபிடிப்பு மூலம், ஸ்ட்ரோபோடஸ் மரபணு இந்தியத் துணைக் கண்டத்தில் முதல் முறையாக கண்டுபிடிக்கப் படுகின்றது.
- ஜப்பான் மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளை அடுத்து ஆசியாவில் இம்மாதிரியான கண்டுபிடிப்பு இது மூன்றாவது முறையே ஆகும்.
- இந்தியப் புவியியல் ஆய்வு மையமானது இரயில்வே நிறுவனத்திற்கான நிலக்கரி இருப்புகளைக் கண்டறிய 1851 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- கொல்கத்தாவைத் தலைமையிடமாகக் கொண்ட இந்த மையம் மத்திய சுரங்கத் துறை அமைச்சகத்துடன் இணைக்கப்பட்ட ஒரு அலுவலகமாகும்.



## சூர்யா கிரண்

- இந்திய இராணுவம் மற்றும் நேபாள இராணுவம் இடையிலான சூர்யா கிரண் என்ற இராணுவப் பயிற்சியானது உத்தரகாண்ட் மாநிலத்தின் பித்தோர்கர் எனுமிடத்தில் தொடங்கியது.
- இது 15வது இந்திய-நேபாள கூட்டு இராணுவப் பயிற்சியாகும்.



## உலகின் மிகப்பெரிய விரைவுச் சாலை

- டெல்லி – மும்பை விரைவுச் சாலையானது இந்தியாவினுள்ள உலகின் மிகப்பெரிய விரைவுச் சாலையாக திகழும்.
- இது 1380 கி.மீ. நீளம் மற்றும் 8 வழிப் பாதை உடைய ஒரு சாலையாக இருக்கும்.
- இச்சாலை குஜராத், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ஹரியானா மற்றும் டெல்லி ஆகிய மாநிலங்கள் வழியே செல்லும்.
- வனவிலங்கு வழித்தடங்கள் (5 வழித்தடங்கள்) கொண்ட முதல் விரைவுச் சாலையாக இது திகழும்.




## வீடு தேடி நீதி வழங்கீடு

- சட்டம் மற்றும் நீதித் துறை அமைச்சகமானது வீடு தேடி நீதி வழங்குவதற்காக "ஏக் பஹால் இயக்கம்" என்ற ஒரு அனைத்திந்திய சிறப்புப் பிரச்சாரத்தினைத் தொடங்கி உள்ளது.
- இது நீதித்துறை மற்றும் தேசிய சட்டசேவை ஆணையம் ஆகியவற்றால் தொடங்கப் பட்டது.
- இது தொலைதூரச் சட்டத்தின் கீழ் பெருமளவிலான பதிவினை ஊக்குவிப்பதற்காக தொடங்கப் பட்டதாகும்.

## குப்தர் காலத்தியக் கல்வெட்டுகள்

- உத்தரப் பிரதேசத்தின் எட்டா மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் குப்தர் காலத்துப் பழமையான கோவிலின் எச்சங்களை இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை கண்டுபிடித்துள்ளது.
- குப்தர் காலத்தில் இருந்த 2 கட்டமைப்பு கோயில்கள் மட்டுமே இதுவரை கண்டு பிடிக்கப் பட்டதால் இந்தக் கண்டுபிடிப்பு மிகவும் குறிப்பிடத் தக்கதாகிறது.
- அந்த இரண்டு கண்டுபிடிப்புகளாவன தசாவதார கோவில் (தியோகர்) மற்றும் பிதர்கான் கோவில் (கான்பூர் தேஹத்)
- குப்தர்கள் தான் முதன்முதலில் பழமையான பாறைவெட்டு கொண்டுள்ள கோவில்களிலிருந்து வேறுபட்ட வடிவிலான கட்டமைப்புக் கொண்ட கோயில்களைக் கட்டினார்கள்.

## நகர்ப்புறத் திட்டமிடல் திறனில் சீர்திருத்தங்கள்

- நிதி ஆயோக் இந்தியாவில் நகர்ப்புறத் திட்டமிடல் திறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்த ஒரு அறிக்கையை வெளியிட்டது.
- உலகளாவிய நகர்ப்புற மக்கள்தொகையில் 11% இந்தியாவில் உள்ளது.
- 2027 ஆம் ஆண்டிற்குள், இந்தியா சீனாவை விஞ்சி உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடாக மாறும்.
- இந்த அறிக்கையானது 5 வருடக் காலத்திற்கு என்று ஒரு மத்திய துறைத் திட்டமான '500 ஆரோக்கியமான நகரங்கள்' என்ற திட்டத்தைப் பரிந்துரைக்கிறது.
- இந்த முன்னுரிமையின் கீழ் நகரங்கள் மற்றும் சிறு நகரங்கள் மாநிலங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் கூட்டாகத் தேர்ந்தெடுக்கப்படும்.





## என்சிசி கமிட்டி

- தேசிய மாணவர் படையின் (என்சிசி) விரிவான ஆய்வுக்காக வேண்டி, பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஓர் உயர்மட்ட நிபுணர் குழுவை அமைத்துள்ளது.
- அந்தக் குழுவின் தலைவராக பைஜயந்த் பாண்டா இருப்பார்.
- இதில் கிரிக்கெட் வீரர் எம்எஸ் தோனி மற்றும் மஹிந்திரா குழுமத் தலைவர் ஆனந்த் மஹிந்திரா ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பார்கள்.
- தேசிய மாணவர் படை என்பது ஒரு மிகப்பெரிய சீருடை அமைப்பாகும்.
- இது பண்பு, ஒழுக்கம், மதச்சார்பற்ற கண்ணோட்டம் மற்றும் இளம் குடி மக்களிடையே தன்னலமற்றச் சேவை போன்ற இலட்சியங்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



## இரயில் கௌசல் விகாஸ் யோஜனா




- இது பிரதான் மந்திரி கௌசல் விகாஸ் யோஜனா என்ற திட்டத்தின் கீழ் மத்திய அரசால் தொடங்கப் பட்டது.
- இத்திட்டத்தின் கீழ், இரயில்வே பயிற்சி நிறுவனங்கள் மூலம் தொழில் சார்ந்த திறன்களில் இளைஞர்களுக்கு நுழைவு நிலைப் பயிற்சி அளிக்கப்படும்.
- இதன் கீழ் மூன்று வருட காலத்தில் 50,000 பேர்களுக்குத் திறன் பயிற்சி வழங்கப் படும்.

## NIELIT


- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை இணை அமைச்சர் ராஜீவ் சந்திர சேகர், வடகிழக்கு மாநிலங்களில் மூன்று தேசிய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பக் கல்வி மையங்களை (NIELIT - National Institute of Electronics & Information Technology) திறந்து வைத்தார்.
- இவை மணிப்பூரின் சுராசந்த்பூர் மாவட்டம், அஸ்ஸாமின் கோக்ரஜார் மற்றும் தேஜ்பூர் மாவட்டங்களில் திறக்கப் பட்டன.




## 2.50 கோடி கோவிட்-19 தடுப்பூசிகள் வழங்கீடு

- பிரதமர் மோடி அவர்களின் 71வது பிறந்தநாளான 2021 ஆம் ஆண்டு செப்டம்பர் 17 அன்று இந்தியாவில் 2.50 கோடிக்கும் மேலான தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.
- 26.9 லட்சம் தடுப்பூசிகளை வழங்கி கர்நாடக மாநிலம் முதலிடத்தில் உள்ளது.

❖ அதனைத் தொடர்ந்து பீகார், மத்தியப் பிரதேசம், உத்திரப் பிரதேசம் மற்றும் குஜராத் உள்ளிட்ட மாநிலங்கள் உள்ளன.




## கோர்டெலியா கடற்பயண நிறுவனம் – IRCTC

❖ இந்திய இரயில்வே சமையல் மற்றும் சுற்றுலாக் கழகமானது (Indian Railway Catering and Tourism Corporation – IRCTS) கோர்டெலியா கடற்பயண நிறுவனத்துடன் கைகோர்த்து அதனுடன் ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது.

❖ கோர்டெலியா கடற்பயண நிறுவனமானது M/s Waterways Leisure Tourism Pvt. Ltd என்ற ஒரு நிறுவனத்தினால் இயக்கப்படுகிறது.

❖ இது இந்தியாவின் முதல் சுதேச (உள்நாட்டுப் பயணம்) சொகுசுப் பயணத்தை ஊக்குவிப்பதற்கும் அதனைச் சந்தைப்படுத்துவதற்கும் வேண்டி ஆரம்பிக்கப் பட்டத் ஆகும்.

❖ இது IRCTC கழகத்தின் சுற்றுலாச் சேவைகளின் கீழ் வழங்கப்படும் பொது மக்களுக்கான வியக்கத் தக்க மற்றுமொரு ஆடம்பரமான பயணச் சேவை ஆகும்.

❖ இந்த ஆடம்பர பயணச் சேவையானது உள்நாட்டுப் பயணமாக பயணிகளை கோவா, டையூ, கொச்சின், லட்சத்தீவு மற்றும் இலங்கை போன்ற மிகவும் பிரபலமான இந்திய மற்றும் சர்வதேச சுற்றுலாத் தளங்களுக்கு அழைத்துச் செல்லும்.



## SPIN திட்டம்

- காதி மற்றும் கிராமத் தொழில்துறை ஆணையமானது (KVIC - Khadi and Village Industries Commission) இந்தியாவின் செயல்திறனை வலுப்படுத்தும் திட்டம் (Strengthening the potential of India – SPIN) ஒன்றினைத் தொடங்கியுள்ளது.
- இது நலிவடைந்த குயவர்களுக்கு அவர்களுக்கான உரிமையை வழங்கும் விதமாக SFURTI எனும் திட்டத்தின் கீழ் வாரணாசியில் ஒரு மட்பாண்டத் தொழில் பகுதியினை அமைத்துள்ளது.
- SPIN திட்டமானது சிறப்பாக வடிவமைக்கப்பட்ட குயவர்களைத் தன்னிறைவுப் பெறச் செய்யும் ஒரு மானியமில்லாத திட்டமாகும்.
- இதில் பதிவு செய்யப்பட்ட குயவர்கள் பிரதான் மந்திரி சிசு முத்ரா யோஜனாவின் கீழ் வங்கிகளிலிருந்து நேரடியாக கடன் பெற இது உதவுகிறது.
- SPIN திட்டத்தின் கீழ், RBL வங்கியின் மூலமாக குயவர்களுக்கு நிதி உதவியையும் கைவினைக் கலைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பதையும் KVIC வழங்கி வருகிறது.
- இத்திட்டத்திற்கான செலவு என்பது அரசுக் கருவூலத்திலிருந்துப் பெறப்படாது.
- இந்தக் கடனைச் சுலபத் தவணையின் மூலமாக குயவர்களேத் தருப்பிச் செலுத்துவர்.

## Shining Sikh Youth of India புத்தகம்

- மத்தியப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், "Shining Sikh Youth of India" என்ற புத்தகத்தினை புதுடெல்லியில் வெளியிட்டார்.
- சீக்கியர்களின் 9வது குருவான குரு தேக் பகதூர் அவருடைய 400வது பிறந்தநாளின் ஒரு பகுதியாக அவர் இப்புத்தகத்தினை வெளியிட்டார்.
- இந்தப் புத்தகத்தினைப் பாட்டியாலாவிலுள்ள பஞ்சாப் பல்கலைக் கழகத்தின் நிர்வாக அதிகாரியான டாக்டர் பிரப்லுன் சிங் எழுதியுள்ளார்.
- இந்தப் புத்தகமானது இந்தியாவின் 100 சீக்கிய இளைஞர்களின் உத்வேகமிக்க ஊக்கமளிக்கும் வெற்றிக் கதைகளை உள்ளடக்கியதாகும்.



## பாம்புக்கடி பற்றிய விழிப்புணர்விற்கான தேசிய உச்சி மாநாடு

- இது சமீபத்தில் காணொலி வாயிலாக ஏற்பாடு செய்யப்பட்டது.
- இது புதுடெல்லியிலுள்ள ஒருங்கிணைந்த சுகாதார மற்றும் நல்வாழ்வு கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 17 அன்று அனுசரிக்கப்படும் பாம்புக்கடி பற்றிய விழிப்புணர்விற்கான சர்வதேச தினத்தினை முன்னிட்டு இந்த மாநாடானது நடத்தப் பட்டது.

### *இந்தியாவில் பாம்புக்கடியினால் ஏற்பட்ட பாதிப்புகள்*

- 2000 முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான 20 ஆண்டு காலத்தில், ஒவ்வோர் ஆண்டும் சராசரியாக 58,000 உயிரிழப்புகளுடன் நாட்டில் 1.2 மில்லியன் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளது.
- இதில் 97% உயிரிழப்புகள் கிராமங்களிலும், பாதியளவிற்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் தங்களது செயல்படும் உற்பத்தித் திறன் காலங்களில் உயிரை இழக்கும் ஆண்களாகவும் உள்ளனர்.

## ப்ளூ ஃப்ளாக் (நீலக்கொடி) சான்றிதழ்




- இந்தியாவில் மேலும் 2 கடற்கரைகளுக்கு ப்ளூ ஃப்ளாக் (Blue Flag) சான்றிதழானது வழங்கப் பட்டுள்ளது.
- இந்த இரண்டு கடற்கரைகள் இந்தப் பட்டியலில் இணைந்ததன் மூலம் இந்தியாவில் இந்தச் சான்றிதழைப் பெற்றக் கடற்கரைகளின் மொத்த எண்ணிக்கை 10 ஆக உயர்ந்தது.
- ப்ளூ ஃப்ளாக் சான்றிதழானது ஒரு சர்வதேசச் சுற்றுச்சூழல் தரநிலைக் குறியீடு ஆகும்.
- இந்த ஆண்டில் இந்தச் சான்றிதழைப் பெற்ற இரு கடற்கரைகள் தமிழ்நாட்டிலுள்ள கோவலம் மற்றும் புதுச்சேரியின் ஏடென் கடற்கரை ஆகியனவாகும்.

- டென்மார்க் நாட்டிலுள்ள சுற்றுச்சூழல் கல்விக்கான அறக்கட்டளை என்ற ஒரு அமைப்பினால் இந்தச் சான்றிதழானது வழங்கப்படுகிறது.
- மற்ற எட்டுக் கடற்கரைகளுக்கு 2020 ஆம் ஆண்டு ப்ளூ ஃப்ளாக் சான்றிதழ் வழங்கப் பட்டது.
- இந்தச் சான்றிதழைப் பெற்ற கடற்கரைகள் உலகில் தூய்மையான கடற்கரைகளாகக் கருதப் படுகின்றன.

## ஐ.ஏ.எஸ். & ஐ.பி.எஸ். அதிகாரிகள் அயல்நாட்டு உயரதிகாரிகளின் பரிசுகள்

- தற்போதுள்ள விதிகளின்படி, இந்த அதிகாரிகளுக்கு திருமணங்கள், இறுதிச் சடங்குகள், ஆண்டு விழாக்கள் மற்றும் மதம் சார்ந்த நிகழ்வுகள் போன்ற சமயங்களில் அவர்களது நெருங்கிய உறவினர்களிடமிருந்தோ அல்லது அவர்களுடன் உத்தியோகப்பூர்வ தொடர்பில் இல்லாத தனிப்பட்ட நண்பர்களிடமிருந்தோ பரிசுகளைப் பெற அனுமதிக்கப் பட்டது.
- இருப்பினும் அத்தகையப் பரிசின் மதிப்பு 25,000 ரூபாய்க்கும் மேலாக இருந்தால் அது குறித்து அவர்கள் அரசிடம் அறிக்கை அளிக்க வேண்டும்.

### *திருத்தப்பட்ட விதி*

- 1968 ஆம் ஆண்டு அகில இந்தியப் பணி (நடத்தை) விதிகளில் ஒரு புதிய உட்பிரிவு சேர்க்கப் பட்டுள்ளது.
- இதன்படி, 2012 ஆம் ஆண்டு வெளிநாட்டுப் பங்களிப்புகள் (பரிசுகளை ஏற்றுக் கொள்தல் (அ) தக்க வைத்துக் கொள்தல்) விதிகளின் விதிமுறைகளுக்கு இணங்க அயல்நாட்டு உயரதிகாரிகளால் வழங்கப்படும் பரிசுகளை ஓர் உறுப்பினர் பெற்றுக் கொண்டு அதனை அவர்களே வைத்துக் கொள்ளலாம்.

## நாகா அமைதிப் பேச்சுவார்த்தைக்கான மத்திய அரசின் இடையீட்டுப் பேச்சாளர் பொறுப்பிலிருந்து R.N. ரவி ராஜினாமா



- 2014 ஆம் ஆண்டு முதல் நாகா அமைதிப் பேச்சு வார்த்தைக்கான மத்திய அரசின் இடையீட்டுப் பேச்சாளராகப் பணியாற்றி வந்த R.N. ரவி அந்தப் பொறுப்பிலிருந்து விலகி உள்ளார்.
- இவர் இந்தப் பொறுப்பில் இருந்தபோது நாகா அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திடச் செய்வதற்காக பல முக்கியக் கிளர்ச்சி குழுக்களுடன் அவர் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தினார்.
- நாகா அமைதி செயல்முறையைக் கையாண்ட இவரது வழிமுறைகளுக்குத் தொடர்ந்து அக்குழுக்கள் மறுப்பு தெரிவித்ததையடுத்து மத்திய அரசு அவரை தமிழக ஆளுநராக நியமித்தது.

## மாறுபக்க கொழுப்பற்ற இந்தியா – 2022

- 2022 ஆம் ஆண்டுக்குள் தொழில்துறையில் இருந்து செயற்கை முறையிலான மாறு பக்க கொழுப்பு அற்ற இந்தியாவாக மாறுவதற்கான சரியான பாதையில் இந்தியா செயலாற்றி வருகிறது.
- இந்திய உணவுப் பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையத்தின் ஆய்வில் இது கூறப் பட்டுள்ளது.




***மாறுபக்க கொழுப்பு***

- இவ்வகை கொழுப்பானது மிக மோசமான கொழுப்பாகக் கருதப்படுகிறது.
- மற்ற உணவு சார்ந்த கொழுப்புகளைப் போலல்லாமல், மாறுபக்க கொழுப்பு (அ)

மாறுபக்க கொழுப்பு அமிலங்கள் கெட்ட கொழுப்பை அதிகரித்து நல்ல கொழுப்பின் அளவைக் குறைக்கின்றன.

- மாறுபக்க கொழுப்புடைய உணவு முறை இருதய நோய் மீதான பாதிப்பினை அதிகரிக்கச் செய்கிறது.

## தேசியப் பாதுகாப்பு அகாடமியில் பெண்கள் சேர்க்கையை ஒத்தி வைக்க கோரிய மத்திய அரசின் மனு தள்ளுபடி – உச்சநீதிமன்றம்

- தேசியப் பாதுகாப்பு அகாடமியில் பெண்கள் சேர்க்கையை 2022 ஆம் ஆண்டு மே மாதம் வரை ஒத்தி வைக்க கோரி மத்திய அரசு முன்வைத்த கோரிக்கை மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.
- தேசியப் பாதுகாப்பு அகாடமி மற்றும் கடற்படை அகாடமிகளில் பெண்கள் பங்கேற்பதற்கும் தேசியப் பாதுகாப்பு அகாடமியில் அவர்கள் பயிற்சி பெறுவதற்கும் அனுமதி வழங்கிய ஆகஸ்ட் 18 நாளது இடைக்கால ஆணையை மாற்றுவதற்கு உச்ச நீதிமன்றம் மறுத்துள்ளது.

### *மத்திய அரசின் கருத்து*

- அகாடமியில் பெண் வீரர்கள் அனுமதிக்கப்படும் முன்பு அவர்களுக்கென பல வசதிகளை உருவாக்க வேண்டியிருப்பதால், 2021 ஆம் ஆண்டில் தேசியப் பாதுகாப்பு அகாடமியில் பெண்கள் சேர்க்கை சாத்தியமில்லை என உச்சநீதிமன்றத்திடம் மத்திய அரசு கூறியிருந்தது.

## தாவர இனங்கள் கண்டுபிடிப்பு – 2020

- இந்தியத் தாவரவியல் ஆய்வு அமைப்பானது தனது புதிய வெளியீடான 2020 ஆம் ஆண்டு தாவர இனங்கள் கண்டுபிடிப்பு அறிக்கையில் 267 புதிய இனங்களை நாட்டின் தாவர இனங்கள் பட்டியலில் சேர்த்துள்ளது.
- இவற்றுள் 119 பூக்கும் தாவரங்கள், 3 டெரிடோஃபைட்டுகள், 5 பிரையோபைட்டுகள், 44 லைகன்கள், 57 பூஞ்சைகள், 21 பாசிகள் மற்றும் 18 நுண்ணுயிர் தாவரங்கள் ஆகியவை அடங்கும்.
- இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து 14 புதிய, பெரிய மற்றும் நுண்ணிய பூஞ்சை இனங்கள் கண்டறியப்பட்டுள்ளன.
- 22% கண்டுபிடிப்புகளானது மேற்குத் தொடர்ச்சி மலைகளிலும் அதனைத் தொடர்ந்து மேற்கு இமாலயத்திலும் (15%), கிழக்கு இமாலயத்திலும் (14%) மற்றும் வடகிழக்கு மலைகளிலும் (12%) கண்டறியப்பட்டுள்ளன.

## செறிவூட்டப்பட்ட அரிசியின் உட்கரு

- மத்திய அரசானது முதன்முறையாக A ரக மற்றும் பொது வகை அரிசிகளுக்கான செறிவூட்டப்பட்ட அரிசியின் உட்கருவிற்கான பொதுவான அம்சங்களை (தர வரைவுகள்) வழங்கியுள்ளது.
- இந்தத் தர வரைவுகளானது நுகர்வோர் விவகாரம், உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சகத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

- செறிவூட்டப்பட்ட அரிசியானது 2024 ஆம் ஆண்டுக்குள் பொது விநியோக முறை மற்றும் பள்ளிகளின் மதிய உணவுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு அரசு திட்டங்களின் கீழ் விநியோகிக்கப்படும்.

***அரிசியினைச் செறிவூட்டலுக்கான அவசியம்***

- நாட்டின் ஒவ்வொரு 2வது மகளிரும் இரத்த சோகை கொண்டவராகவும் ஒவ்வொரு 3வது குழந்தையும் வளர்ச்சி குன்றியவர்களாகவும் உள்ளதாக உணவு அமைச்சகம் தெரிவிக்கிறது.
- மேலும் உலகளாவியப் பட்டினிக் குறியீட்டில் 'கடுமையான பட்டினி நிலை' என்ற பிரிவில் இந்தியா உள்ளதோடு 107 நாடுகள் கொண்ட அப்பட்டியலில் இந்தியா 94வது இடத்தில் உள்ளது.

*குறிப்பு*

- பொதுவாக உட்கொள்ளப்படும் உணவுகளில் அதன் ஊட்டச்சத்து அளவை அதிகரிக்க வேண்டி வைட்டமின்கள் மற்றும் தாதுப்பொருட்களைச் சேர்க்கும் முறையே உணவு செறிவூட்டல் என வரையறுக்கப் படுகிறது.

## நடமாடும் இசைப் பள்ளி பேருந்து

- டெல்லியின் துணை முதல்வர் மனீஷ் சிசோடியா டெல்லி அரசுப் பள்ளி மாணவர்களுக்கு உதவும் நோக்கிலான நடமாடும் ஒரு இசைப் பள்ளி மற்றும் ஒலிப் பதிவீட்டுக் கூடத்தினைத் திறந்து வைத்தார்.
- இது குழந்தைகளின் இசை ஆர்வத்தைத் தொடர உதவுகிறது.
- இது இந்தியாவின் முதலாவது நடமாடும் இசைப்பள்ளிப் பேருந்து என டெல்லி அரசு கூறுகிறது.



## சமுத்திர சக்தி

- சமுத்திர சக்தி என்பது 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட இந்தியக் கடற்படைக்கும் இந்தோனேசிய கடற்படைக்கும் இடையிலான ஒரு இருதரப்புப் பயிற்சியாகும்.
- இது சுந்தா நீரிணைப் பகுதியில் நடத்தப் பட்டது.
- இருதரப்பு உறவினை வலுப்படுத்துதல், இரு நாட்டுக் கடற்படைகளுக்கு இடையிலான கடல்சார் நடவடிக்கைகளில் பரஸ்பர புரிதல் மற்றும் இயங்குதிறனை மேம்படுத்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு இந்தப் பயிற்சியானது மேற் கொள்ளப் படுகிறது.




## சர்வதேச அணுசக்தி முகமையின் வெளியுறவுத் தணிக்கையாளர்




- இந்திய நாட்டின் தலைமைக் கணக்குத் தணிக்கையாளரான G.C. முர்மு, சர்வதேச அணுசக்தி முகமையின் வெளியுறவுத் தணிக்கையாளராக தேர்ந்தெடுக்கப் பட்டு உள்ளார்.
- சர்வதேச அணுசக்தி முகமையானது அணுசக்தியின் அமைதி வாய்ந்த பயன்பாட்டினை ஊக்குவிப்பதற்கான ஒரு மதிப்பு வாய்ந்த நிறுவனமாகும்.
- இவர் 2022 ஆம் ஆண்டு முதல் 2027 ஆம் ஆண்டு வரை 6 ஆண்டுகள் அப்பதவியில் இருப்பார்.

## தேசிய ஒற்றைச் சாளர அமைப்பு

- மத்திய வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சர் பியூஷ் கோயல் தேசிய ஒற்றைச் சாளர அமைப்பினை (National Bingle Window System – NSWS) தொடங்கி வைத்தார்.
- இது முதலீட்டாளர்கள் மற்றும் வணிகங்களுக்காகத் தொடங்கப்பட்டுள்ளது.
- NSWS என்பது அரசின் ஒப்புதல்களையும் அனுமதிகளையும் பெறுவதற்கு என்று முதலீட்டாளர்கள் அல்லது தொழில் முனைவோருக்கான ஒரே தீர்வாக செயல்படும் ஓர் ஒற்றைச் சாளரத் தளமாகும்.
- இந்தத் தளமானது இன்வெஸ்ட் இந்தியா அமைப்புடன் இணைந்து தொழில்துறை மற்றும் உள்நாட்டு வர்த்தக ஊக்குவிப்பு துறையினால் உருவாக்கப்பட்டது.





## அர்ஜுன் பீரங்கி கொள்முதல்

- இந்திய இராணுவத்திற்காக வேண்டி 118 அர்ஜுன் முக்கியப் போர் பீரங்கிகளை வாங்குவதற்கான ஆணையைப் பாதுகாப்பு அமைச்சகம் வழங்கியுள்ளது.
- 118 அர்ஜுன் MK – 1A பீரங்கிகளை வாங்குவதற்காக சென்னையிலுள்ள கனரக வாகன தொழிற்சாலையுடன் பாதுகாப்பு அமைச்சகம் ஓர் ஒப்பந்தத்தினை மேற்கொண்டு உள்ளது.
- அர்ஜுன் பீரங்கியானது பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பினால் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்பட்டதாகும்.



## கல்வி அமைச்சகத்தின் குழுத் தலைவர் – K. கஸ்தூரிங்கன்




- பள்ளிப்பருவ, சிறுவயது, ஆசிரியர் மற்றும் பதின்ம வயதினருக்கான கல்விக்காக ஒரு புதிய பாடத்திட்டத்தை வகுப்பதற்காக வேண்டி 12 உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்றினை மத்தியக் கல்வி அமைச்சகம் நியமித்துள்ளது.
- தேசியக் கல்விக் கொள்கை 2020 வரைவுக் குழுவின் தலைவர் K. கஸ்தூரி ரங்கன் தலைமையில் நான்கு தேசியப் பாடத்திட்டக் கட்டமைப்புகளை உருவாக்கும் பொறுப்போடு இக்குழுவானது நியமிக்கப்பட்டுள்ளது.


## விவசாயிகளுக்கான 12 இலக்க தனித்துவ அடையாள அட்டை

- மத்திய அரசானது விவசாயிகளுக்காக வேண்டி 12 இலக்க தனித்துவ அடையாள அட்டைகளை உருவாக்கத் தொடங்கியுள்ளது.
- ஓர் ஒருங்கிணைந்த விவசாயிகள் சேவை இடைமுகத்தினை உருவாக்குவதற்கான அரசின் டிஜிட்டல் வேளாண் திட்டத்தின் ஓர் அங்கமாக இது மேற்கொள்ளப்படுகிறது.
- பல்வேறு வேளாண் திட்டங்கள் மற்றும் கடன் வசதிகள் போன்ற அனைத்து வேளாண் தொடர்பான சேவைகளையும் பெறுவதில் இந்தத் தனித்துவ அடையாள அட்டை உதவும்.
- மத்திய மற்றும் மாநில அரசுகள் சிறப்பாகத் திட்டமிட இந்த அடையாள அட்டை வசதியானது உதவும்.

## உலகின் மிக உயரமான மின்சார வாகன மின்னேற்ற நிலையம்

- உலகின் மிக உயரமான மின்சார வாகன மின்னேற்ற நிலையமானது காசா என்னுமிடத்தில் திறக்கப்பட்டுள்ளது.
- காசா என்னுமிடமானது இமாச்சலப் பிரதேசத்தின் லஹூல் மற்றும் ஸ்பிதி மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- கடல்மட்டத்திலிருந்து 3650 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள காசா நகரம் ஸ்பிதி பள்ளத்தாக்குப் பகுதியில் உள்ள ஒரு மிகப்பெரிய நகரம் மற்றும் வணிக மையமாகும்.

## கோவிட்-19 தொற்றினால் நிகழும் ஒவ்வொரு உயிரிழப்பிற்கும் ரூ.50,000 உதவித் தொகை




- தேசியப் பேரிடர் மேலாண்மை ஆணையமானது மாநிலப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து கோவிட்-19 இறப்புகளுக்கான கருணையுதவி குறித்த வழிகாட்டுதல்களை வெளியிட்டது.
- கோவிட்-19 தொற்றினால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ரூ.50,000 தொகையினை வழங்க வேண்டும் என இதில் பரிந்துரைக்கப் பட்டுள்ளது.


## "தடுப்பூசி மைத்ரி" திட்டம்

- 2021 ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டில் அதிகப்படியான கோவிட்-19 தடுப்பூசிகளை "தடுப்பூசி மைத்ரி" திட்டத்தின் கீழ் ஏற்றுமதி செய்ய தொடங்குவதாக இந்தியா தெரிவித்துள்ளது.
- COVAX உலகளாவிய தொகுப்பில் இந்தியாவின் பங்களிப்பினை உறுதி செய்வதற்காக இது அறிவிக்கப் பட்டுள்ளது.
- இந்த ஆண்டின் ஏப்ரல் மாதத்தில் பெருந்தொற்றின் 2வது அலை நாட்டில் பரவியதன் காரணமாக கோவிட்-19 தடுப்பு மருந்துகளின் ஏற்றுமதியினை இந்தியா நிறுத்தியது.
- COVAX என்பது கோவிட்-19 தடுப்பூசிகளை அனைவரும் சமமான முறையில் அணுகச் செய்வதற்கான ஒரு உலகளாவிய முயற்சியாகும்.

## ஐக்கிய நாடுகள் உச்சி மாநாட்டில் இந்தியாவின் தூய ஆற்றலுக்கான உறுதிப்பாடுகள்

- 2030 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் கட்டமைக்கப்பட்ட புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளத்தை 450 GW வரை அதிகரிப்பதற்கு இந்தியா உறுதி பூண்டுள்ளது.
- தேசிய ஹைட்ரஜன் ஆற்றல் திட்டத்தினை உருவாக்கி அமல்படுத்தவும் இந்தியா உறுதி பூண்டுள்ளது.
- இது 2030 ஆம் ஆண்டுக்குள் இந்தியாவின் வருடாந்திரப் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியை 1 மெட்ரிக் டன்னாக அதிகரிப்பதற்கானதாகும்.

- 2025 ஆம் ஆண்டுக்குள் சூரிய ஒளி மின்னழுத்தக் கலன் உற்பத்தித் திறனில் 10 GW அளவினை மேலும் சேர்ப்பதற்கு உதவுகின்ற வகையிலான உற்பத்தியுடன் இணைக்கப் பட்ட ஊக்கத் திட்டத்தினையும் தொடங்குவதாக அரசு அறிவித்தது.
- 2024 ஆம் ஆண்டுக்குள் 15 MMT அளவிலான அழுத்தப்பட்ட உயிரி வாயு உற்பத்தித் திறனை நிறுவ உள்ளதாகவும் இந்தியா அறிவித்தது.
- 2025-26 ஆம் ஆண்டுக்குள் பெட்ரோலுடன் 20% எத்தனால் கலப்பினை எட்டுவதாகவும் இந்தியா அறிவித்தது.




## எண்ணெய் வித்துக்களுக்கான குறைந்தபட்ச ஆதார விலை

- எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைகள் போன்றவற்றின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக ராபி பருவப் பயிர்களுக்கு மிக அதிக குறைந்தபட்ச ஆதார விலையினை மத்திய அரசு அறிவித்துள்ளது.
- இந்தோனேசியா, மலேசியா, அர்ஜென்டினா முதலிய முக்கிய சமையல் எண்ணெய் உற்பத்தி நாடுகளில் ஏற்பட்ட தொழிலாளர்ப் பற்றாக்குறை மற்றும் பயிர்ச் சேதம் போன்றவற்றின் காரணமாக சமையல் எண்ணெய்களின் விலை 50% உயர்ந்துள்ளது.
- எனவே எண்ணெய் வித்துக்கள் மீதான குறைந்தபட்ச ஆதார விலையை அதிகரிக்கச் செய்வதன் மூலம்,
    - உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்து வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் எண்ணெய்களை இந்தியா சார்ந்திருக்கும் நிலையைக் குறைக்கவும்,
    - உலகளாவிய காரணிகளால் ஏற்படும் விலை உயர்விலிருந்து இந்திய நாட்டின் நுகர்வோரைப் பாதுகாக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

## தேசியக் கூட்டுறவு மாநாடு


- மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் முதலாவது தேசியக் கூட்டுறவு மாநாட்டினை (சேகரிதா சம்மேளன்) தொடங்கி வைத்து உரையாற்றினார்.
- இந்த மாநாடு புதுடெல்லியிலுள்ள இந்திராகாந்தி உள்விளையாட்டு அரங்கில் தொடங்கப் பட்டது.
- இது உலக அளவில் இந்தியக் கூட்டுறவு அமைப்புகளை ஊக்குவிக்கவும் வலுப்படுத்தச் செய்யவும் ஒரு தளத்தினை வழங்குவதற்குமான இந்தியாவின் முதல் கூட்டுறவு மாநாடாகும்.
- இது IFFCO, இந்திய தேசியக் கூட்டுறவு குழுமம், அமுல், சஹகர் பார்தி, NAFED, KRIBHCO மற்றும் அனைத்துக் கூட்டுறவு அமைப்புகள் ஆகியவை ஒன்றிணைந்து நடத்தப்பட்ட மாநாடாகும்.




## அரசின் உதவித் தொகை பெறும் உரிமை – ஒரு அடிப்படை உரிமை அல்ல


- ஒரு நிறுவனத்தின் (பெரும்பான்மை (அ) சிறுபான்மை நிறுவனம் எதுவாயினும்) மூலம் அரசு உதவித் தொகை பெறும் உரிமையானது ஒரு அடிப்படை உரிமை அல்ல என்றும், அது ஒரு கொள்கை சார்ந்த விசயம் என்றும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.
- வழங்கப்படும் உதவித் தொகையானது அதனைப் பெறும் நிறுவனங்கள் இணங்க வேண்டிய நிபந்தனைகளைக் கொண்டது எனவும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.
- அந்த நிபந்தனைகளை ஒரு நிறுவனம் ஏற்க விரும்பவில்லை எனில், அது உதவித் தொகையை நிராகரிக்கலாமே தவிர அந்த உதவித் தொகையினை அதன் சொந்த நிபந்தனைகளுக்கு இணங்க வேண்டும் என்று கூற இயலாது.
- உதவித் தொகையைத் திரும்பப் பெறுவதற்காக அரசு ஒரு கொள்கையைத் தயாரித்தால், ஒரு நிறுவனம் அதைத் தனது உரிமை எனக் கோரி வாதிட முடியாது.
- சட்டப்பிரிவு 30(2) என்பதின் கீழ், கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை வழங்கீட்டில், மதம் (அ) மொழிசார்ந்த சிறுபான்மையினர் நிர்வாகத்தின் கீழுள்ள எந்தவொரு கல்வி நிறுவனத்திற்கும் அரசு பாகுபாடு காட்டக் கூடாது.

## புற்றுநோய் பதிவுகள் மீதான இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழக அறிக்கை




- இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகமானது சமீபத்தில் 'இந்தியாவில் புற்றுநோய் பதிவுகளின் மருத்துவ சுயவிவரம்: மருத்துவமனை அடிப்படையிலான புற்றுநோய் பதிவுகளின் அறிக்கை 2021' என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டது.
- இந்தியாவில் புற்றுநோய் பதிவுகள் குறித்தத் தகவல்களை இந்த அறிக்கை வழங்குகிறது.
- இது பெங்களூருவிலுள்ள ICMR – தேசிய நோய்த் தகவல் மற்றும் ஆராய்ச்சி மையத்தினால் தயாரிக்கப் பட்டது.
- இந்த அறிக்கையின்படி, 2012 முதல் 2019 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் இந்தியாவில் மொத்தம் 6.10 லட்சம் புற்றுநோய்கள் பதிவாகியுள்ளன.
- இதில், ஆண்களில் 52.4 சதவீதமும், பெண்களில் 47.6 சதவீதமும் பதிவாகியுள்ளது.

## குலாப் புயல்



- குலாப் புயலானது வடமேற்கு மற்றும் அதற்கு அருகமைந்த மேற்கு மத்திய வங்காள விரிகுடாவில் கரை கடந்ததைத் தொடர்ந்து ஒடிசா மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு இந்திய வானிலைத் துறை சிவப்பு எச்சரிக்கை ஒன்றை விடுத்து உள்ளது.
- குலாப் புயல் என்ற பெயர் பாகிஸ்தான் நாட்டினால் வழங்கப் பட்டதாகும்.
- "குலாப்" என்ற சொல்லின் பொருள் ஆங்கிலத்தில் (ரோஸ்) ரோஜாவைக் குறிக்கிறது.

## 4வது இந்திய அமெரிக்க சுகாதாரப் பேச்சு வார்த்தை

- மத்திய சுகாதார மற்றும் குடும்பநலத் துறை இணை அமைச்சர் டாக்டர் பாரதி பிரவீன் பவார் 4வது இந்திய அமெரிக்க சுகாதாரப் பேச்சுவார்த்தையில் பங்கேற்கும் இந்தியப் பிரதிநிதிகளுக்குத் தலைமை ஏற்றார்.
- இந்தப் பேச்சுவார்த்தையானது புதுடெல்லியில் நடைபெற்றது.
- அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கு திருமதி லாய்ஸ் பேஸ் தலைமை தாங்கினார்.
- இரு நாடுகளுக்கிடையே சுகாதாரத் துறையில் தொடர்ந்து பல ஒத்துழைப்புகளை மேற்கொள்வது குறித்து கலந்தாலோசிப்பதற்கான ஒரு தளமாக இந்த இரண்டு நாள் அளவிலான உரையாடல் திகழ்கிறது.

## ஆகாஷ் பிரைம்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பானது ஆகாஷ் ஏவுகணை என்பதின் "ஆகாஷ் பிரைம்" என்ற புதிய வடிவத்தினைப் பரிசோதித்துள்ளது.
- இந்தச் சோதனையானது ஒடிசாவின் சந்திப்பூரிலுள்ள ஒருங்கிணைந்த பரிசோதனை தளத்தில் மேற்கொள்ளப் பட்டது.
- ஆகாஷ் ஏவுகணையானது நடுத்தர வரம்புடைய, நிலத்திலிருந்து வானில் உள்ள இலக்கை நோக்கிப் பாயும் அமைப்பாகும்.
- ஆகாஷ், பிரைம் ஏவுகணையானது ஏற்கனவே உள்ள ஆகாஷ் ஏவுகணையின் இந்த வடிவ அமைப்பைக் கொண்டதாகும்.
- இதில் மேம்பட்டச் செயல்பாட்டு ரேடியோ அலைவரிசை உலாவி என்ற ஒரு கருவி பொருத்தப் பட்டுள்ளது.



### சுவச் சர்வேக்சன்

- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி 7வது சுவச் சர்வேக்சன் கணக்கெடுப்பினை புதுடெல்லியில் தொடங்கி வைத்தார்.
- சுவச் சர்வேக்சன் என்பது நகர்ப்புறத் தூய்மை குறித்த உலகின் மிகப்பெரிய ஒரு கணக்கெடுப்பாகும்.
- இது சுவச் சர்வேக்சன் – நகர்ப்புற அமைப்பினால் மேற்கொள்ளப் படுகிறது.
- இந்த திட்டமானது “மக்களே முதலில்” என்பதனை தனது உந்துதல் தத்துவமாக கொண்டு தயாரிக்கப் பட்டுள்ளது.
- சுவச் சர்வேக்சன் 2022 திட்டமானது முன்களத் துப்புரவுப் பணியாளர்களின் நலன் மற்றும் நல்வாழ்விற்காக பல்வேறு நகரங்கள் மேற்கொள்ளும் முன்னெடுப்புகளை ஒருங்கிணைக்கும் நோக்கத்தோடு தொடங்கப் பட்டது.

## சர்வதேசச் செய்திகள்

### இருபாலர் இணைக் கல்வி முறைக்கு எதிர்ப்பு – தாலிபன்கள்

- தாலிபன் அமைப்பானது தங்களின் முதல் பத்வா மூலம் ஆப்கானிஸ்தானில் இரு பாலர் இணைக் கல்வி முறைக்கு (co-education) தடை விதித்துள்ளது.
- பெண்களுக்குக் கல்வி கற்பிப்பதற்கு ஆண்களுக்கு அனுமதி இல்லை.
- சமூகத்திலுள்ள அனைத்துத் தீய நடவடிக்கைகளுக்கும் இணைக் கல்வி முறையே அடிப்படைக் காரணம் என அவர்கள் கூறுகின்றனர்.

### பெண்களுக்கு அதிகாரமளித்தல் மீதான G20 அமைச்சர்கள் மாநாடு


- பெண்களுக்கு அதிகாரமளித்தல் மீதான G20 அமைச்சர்களின் முதல் மாநாடானது இத்தாலியிலுள்ள சாண்டா மார்கெரிட்டா லிகுரே எனுமிடத்தில் நடத்தப் பட்டது.
- G20 உறுப்பினர்கள் நேரடியாகவும் காணொலி வாயிலாகவும் என இருவகையிலான கலப்பு முறையில் பங்கேற்றனர்.
- இந்தியாவின் சார்பாக மத்திய மகளிர் மற்றும் குழந்தை மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஸ்மிருதி இராணி இச்சந்திப்பில் பங்கேற்றார்.

### இடா புயல்

- இடா புயல் சமீபத்தில் லூசியானாவில் கரையினைக் கடந்தது.
- இது 2005 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் லூசியானா மற்றும் மிசிசிபி ஆகிய இடங்களைச் சூறையாடிய காத்ரீனா புயல் தாக்கிய அதே தினத்தன்று தாக்கிய 4 ஆம் பிரிவு புயல் ஆகும்.
- இடா புயலானது அமெரிக்க வரலாற்றிலேயே அதிக இழப்புகளை ஏற்படுத்திய காத்ரீனா புயலை விட வலுவாக இருக்கும்.

*குறிப்பு*

- புயல்கள், சஃபீர்-சிம்ப்சன் புயல்காற்று அளவீட்டில் (Saffir-Simpson Hurricane Wind Scale) வகைப்படுத்தப்படுகின்றன.
- காற்றினுடைய வேகத்தின் அடிப்படையில் 1 முதல் 5 என்ற அளவில் இவை மதிப்பிடப் படுகின்றன.
- 3 அல்லது அதற்கு மேலான அளவை எட்டும் புயல்கள் "தீவிரப் புயல்கள்" என அழைக்கப் படுகின்றன.




## ஆப்கானிஸ்தான் மீதான தீர்மானம் (1267) ஏற்பு – UNSC

- இந்தியாவின் தலைமையின் கீழான ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையானது ஆப்கானிஸ்தானின் நிலவும் சூழ்நிலை மீதான தீர்மானத்தினை ஏற்றுக் கொண்டு உள்ளது.
- ஆப்கானிஸ்தானை, எந்தவொரு நாட்டினை அச்சுறுத்தவோ (அ) தாக்கவோ அல்லது தீவிரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுப்பதற்கவோ வேண்டி பயன்படுத்தக் கூடாது என இத்தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.
- இத்தீர்மானமானது அமெரிக்கா, ஐக்கிய ராஜ்ஜியம் மற்றும் பிரான்சு ஆகிய நாடுகளால் முன்வைக்கப் பட்டது.
- இத்தீர்மானமானது அச்சபையின் 13 உறுப்பினர் நாடுகளின் ஆதரவு வாக்குகளோடு ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நிரந்தர உறுப்பினர் நாடுகள் இந்த வாக்களிப்பைத் தவிர்த்து விட்டன.




## FDA அனுமதி பெற்ற முதல் கோவிட்-19 தடுப்பு மருந்து

- அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பானது முதல் கோவிட்-19 தடுப்பு மருந்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இந்தத் தடுப்பு மருந்தானது ஃபைசர் – பயோன்டெக் கோவிட் – 19 தடுப்பு மருந்து என அழைக்கப் படுகிறது.
- இம்மருந்தானது 16 வயது மற்றும் அதற்கு அதிக வயது கொண்டவர்களிடம் கோவிட்-19 தொற்று ஏற்படுவதைத் தடுப்பதற்காக கோமிர்நேட்டி என்ற ஒரு பெயரில் விற்பனை செய்யப் படும்.




## BIMSTEC நாடுகளின் வேளாண் நிபுணர்களின் 8வது சந்திப்பு


- பல்துறைத் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பிற்கான வங்காள விரிகுடா முன்னெடுப்பு அமைப்பின் (BIMSTEC) உறுப்பினர் நாடுகளைச் சேர்ந்த வேளாண் நிபுணர்களின் 8வது சந்திப்பினை இந்தியா ஏற்பாடு செய்தது.
- டாக்டர் திரிலோச்சன் மோஹபத்ரா இந்த சந்திப்பிற்குத் தலைமை தாங்கினார்.
- இவர் வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறையின் செயலாளரும் இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின் தலைமை இயக்குநரும் ஆவார்.
- இச்சந்திப்பின்போது 2021 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் உணவுமுறை உச்சிமாநாடு பற்றியும் உலகளவில் வேளாண் மற்றும் உணவு முறையில் ஏற்பட்டு வரும் பரிமாற்ற அம்சங்கள் குறித்தும் இவர் எடுத்துரைத்து முன்னிலைப் படுத்தினார்.

- BIMSTEC அமைப்பில் ஏழு உறுப்பினர் நாடுகள் உள்ளன. அவை,
  - தெற்காசியாவைச் சேர்ந்த 5 நாடுகள் (வங்காளதேசம், பூடான், இந்தியா, நேபாளம், இலங்கை) மற்றும்
  - மியான்மர் மற்றும் தாய்லாந்து ஆகிய இரு தென்கிழக்காசிய நாடுகள்.
- BIMSTEC அமைப்பானது 1997 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்த அமைப்பில் இதற்கு முன்பு 6 துறைகள் உள்ளடக்கப் பட்டிருந்தது.
- இவை பின்பு 14 ஆக விரிவுப்படுத்தப்பட்டன (தொழில் நுட்பம், வர்த்தகம், ஆற்றல், வேளாண்மை போன்றவை).





## Mu மாற்றுரு

- கொரோனா வைரசின் Mu என்ற மாற்றுரு வகை தொற்றானது முதன்முதலாக கொலம்பியாவில் கண்டறியப்பட்டுள்ளது.
- உலக சுகாதார அமைப்பானது இந்த மாற்றுருவினைத் தற்போது கண்காணித்து வருகிறது.
- Mu மாற்றுருவானது B.1.621 என்ற அறிவியல் பெயரோடு "கவனம் செலுத்த வேண்டிய மாற்றுருவாக" வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த மாற்றுருவானது தடுப்பூசிகளுக்கு எதிரான ஆற்றலை உடைய பிறழ்வுகளின் தொகுப்பினைக் கொண்டுள்ளதாக உலக சுகாதார அமைப்பு கூறுகிறது.




## புதிய வளர்ச்சி வங்கி – புதிய உறுப்பினர்கள்




- BRICS குழும நாடுகளின் புதிய வளர்ச்சி வங்கியானது ஐக்கிய அரபு அமீரகம், உருகுவே மற்றும் வங்காளதேசம் ஆகிய நாடுகளை தனது புதிய உறுப்பினர்களாக இணைத்துள்ளது.
- புதிய வளர்ச்சி வங்கியானது 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- இது BRICS அமைப்பின் உறுப்பினர் நாடுகளால் (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா) தொடங்கப்பட்டது.
- இந்த வங்கியானது இதற்கு முன்பாக “BRICS வளர்ச்சி வங்கி” என அழைக்கப்பட்டது.
- இதன் தலைமையகம் சாங்காய் நகரில் அமைந்துள்ளது.
- இந்த வங்கியின் முதலாவது பிராந்திய அலுவலகமானது தென் ஆப்பிரிக்காவின் ஜோகன்னஸ்பெர்க் என்னுமிடத்தில் நிறுவப்பட்டது.
- இதனுடைய 2வது பிராந்திய அலுவலகமானது 2019 ஆம் ஆண்டில் பிரேசில் நாட்டிலும் அதைத் தொடர்ந்து ரஷ்யாவிலும் நிறுவப் பட்டது.
- உறுப்பினர் நாடுகள் மற்றும் இதர வளர்ந்துவரும் நாடுகளில் மேம்பாட்டிற்கான வளங்களை இந்த வங்கி திரட்டுகிறது.

## மத்திய ஆப்பிரிக்காவின் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் 2020



- இந்த அறிக்கையானது மத்திய ஆப்பிரிக்க காடுகள் ஆணையத்தினுடையச் சிறப்பு அலகான மத்திய ஆப்பிரிக்க காடுகள் ஆய்வகத்தினால் தயாரிக்கப்பட்டது.
- மத்திய ஆப்பிரிக்காவின் வளங்கள் சமமான முறையில் பகிர்ந்தளிக்கப்பட்டு, அதனுடைய சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படும் பட்சத்தில் அது தன்னை நிலை நிறுத்திக் கொள்ளக் கூடும் என இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## இந்தியப் பெருங்கடலுக்கான முதலாவது சாலை – இருப்புப் பாதைப் போக்குவரத்து இணைப்பு

- மியான்மர் முதல் மேற்கு சீனாவின் செங்க்டு எனும் முக்கிய வணிக மையம் வரை புதிதாக அமைக்கப்பட்ட இருப்புப் பாதை வழியேயான முதல் சரக்குப் பெட்டகமானது அனுப்பி வைக்கப்பட்டது.
- இது இந்தியப் பெருங்கடலிலிருந்து சீனாவிற்கு ஒரு புதிய சாலை-இருப்புப் பாதைப் போக்குவரத்து வழியினை வழங்கும்.
- இந்தப் போக்குவரத்து வழித்தடமானது கடல்-சாலை-இருப்புப்பாதை (இரயில்) என்ற இணைப்பினை உள்ளடக்கியது.
- இந்தப் பாதையானது சிங்கப்பூர், மியான்மர் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் தளவாடப் பகுதிகளை இணைக்கிறது.
- மேலும் தென்மேற்கு சீனாவுடன் இந்தியப் பெருங்கடல் பகுதியை இணைக்கும் ஒரு மிகவும் வசதியான நிலப்பரப்பு மற்றும் கடல்பகுதி இணைப்பாகவும் இது தற்போது செயல்படுகிறது.




## சர்வதேச விண்வெளி மையத்தின் அங்கமாக தொடரும் ரஷ்யா

- இந்த தசாப்தத்தின் இறுதி வரையில் ரஷ்யா சர்வதேச விண்வெளி நிலையத்தின் ஒரு அங்கமாக இருக்கும் என நாசா அமைப்பின் நிர்வாகி பில் நெல்சல் கூறியுள்ளார்.
- சர்வதேச விண்வெளி நிலையமானது புவி தாழ்மட்டச் சுற்றுப்பாதையிலுள்ள ஒரு மாதிரி விண்வெளி நிலையமாகும்.


- இது 5 பங்கேற்பு விண்வெளி நிறுவனங்களின் ஈடுபாட்டுடன் கூடிய ஒரு பன்னாட்டு கூட்டிணைவாகும். அவை
  - நாசா (அமெரிக்கா),
  - ராஸ்கோஸ்மாஸ் (ரஷ்யா).
  - ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் (ஐரோப்பா)
  - கனடா விண்வெளி நிறுவனம் (கனடா) மற்றும்
  - ஜப்பான் விண்வெளி நிறுவனம் (ஜப்பான்)

*குறிப்பு*

- ரஷ்ய விண்வெளி நிறுவனமான ராஸ்கோஸ்மாஸ் 2015 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், 2024 ஆம் ஆண்டு வரை சர்வதேச விண்வெளி நிலையத்தின் அங்கமாக செயல்படும் என அறிவித்திருந்தது.




## உலக சமூகப் பாதுகாப்பு அறிக்கை 2020-2022



- இந்த அறிக்கையானது சர்வதேச  தொழிலாளர் அமைப்பினால் வெளியிடப்பட்டது.
- உலக மக்கள்தொகையின் பாதி அளவிற்கும் மேலானோர் எவ்வித சமூகப் பாதுகாப்பினையும் பெறுவதில்லை என இந்த அறிக்கை கூறுகிறது.
- ஐரோப்பா மற்றும் மத்திய ஆசியாவின் மக்களே சிறந்த முறையான பாதுகாப்பினைப் பெறுகின்றனர்.
- உலகில் நான்கில் ஒரு குழந்தைக்கு மட்டுமே சமூகப் பாதுகாப்பின் நன்மை கிடைக்கப் பெறுகிறது.

## உலகின் தலைசிறந்த தலைவர்கள் பட்டியல் - தி மார்னிங் கன்சல்ட்

- அமெரிக்காவைச் சேர்ந்த, 'தி மார்னிங் கன்சல்ட்' என்ற ஒரு புள்ளி விபர ஆய்வு நிறுவனம் 13 உலகத் தலைவர்களுக்கு என்று நடத்திய ஒரு ஆய்வில் உலகின் தலை சிறந்த தலைவர்கள் பட்டியலில் பிரதமர் நரேந்திர மோடி முதலிடத்தில் உள்ளார்.
- அவர் மெக்ஸிகோவின் ஜனாதிபதி ஆன்ட்ரஸ் மானுவல் லோபஸ் ஒப்ரடோர், இத்தாலியின் பிரதமர் மரியோ டிராகி, ஜெர்மனியின் அதிபர் ஏஞ்சலா மெர்க்கல், அமெரிக்காவின் ஜனாதிபதி ஜோ பிடன், ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்காட் மோரிசன், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் மற்றும் பிரேசில் பிரதமர் ஜெய்ர் போல்சனாரோ ஆகியோரை விஞ்சி நிற்கிறார்.

## பஞ்ச்ஷிர் பள்ளத்தாக்கு




- ஆப்கானிஸ்தானில் காபூலுக்கு வடக்கே பஞ்ச்ஷிர் பள்ளத்தாக்கு அமைந்துள்ளது.
- இந்தப் பள்ளத்தாக்கானது ஆப்கானிஸ்தானின் தஜிக் இன மக்கள் அதிகளவில் வாழும் இடமாகும்.
- தலிபான் அமைப்பானது பஞ்ச்ஷிர் பள்ளத்தாக்கின் நிர்வாகக் கட்டுப்பாட்டைக் கைப்பற்றியதாகக் கூறப் படுகிறது.
- பஞ்ச்ஷிரின் வீழ்ச்சியானது தாலிபான் மற்றும் பாகிஸ்தான் இராணுவத்தின் வெற்றியைக் குறிப்பதோடு இது இந்தியாவிற்குப் பின்னடைவாகவும் கருதப் படுகின்றது.
- தலிபான்கள் அந்தப் பள்ளத்தாக்கை முற்றுகையிட்டதற்கு எதிராக எதிர்ப்பு தெரிவித்த முதல் நாடு ஈரான் ஆகும்.

## ரஷித் ரோவர்




- லாக்கஸ் சோம்னியாரம் என்றும் அழைக்கப்படும் 'கனவுகளின் ஏரி' என்ற ஒரு தளமானது நிலவின் மேற்பரப்பில் 'ரஷித் ரோவர்' என்ற விண்கலம் தரையிறங்கச் செய்வதற்காக ஐக்கிய அரபு அமீரகத்தின் லூனார் (சந்திரன்) திட்டக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு முக்கியத் தளமாகும்.
- இது 2022 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மற்றும் நவம்பர் மாதங்களுக்கு இடையில் செலுத்தப் படும்.
- சந்திரன் சார்ந்த ஆய்வில் அரபு நாடுகளில் ஐக்கிய அரபு அமீரகம் முதலாவது நாடாகவும் மற்றும் உலகளவில் நான்காவது நாடாகவும் உருவெடுக்கிறது.

## கிரீன் விசா (பசுமை நுழைவு இசைவு) - ஐக்கிய அரபு அமீரகம்




- ஐக்கிய அரபு அமீரகமானது புதிய வகை விசாக்களை அறிவித்துள்ளது.
- கிரீன் விசாவின் கீழ், வெளிநாட்டினர் ஐக்கிய அரபு அமீரகத்தில் வேலை செய்திட வேண்டிப் பணியளிப்பவரின் நிதியுதவியைப் பெறத் தேவையில்லை.
- இந்தத் திட்டம், வெளிநாட்டினர் தங்களின் பழைய வேலையை இழந்தால், புதிய வேலையைத் தேடுவதற்கு என்று அவர்களுக்கு மூன்று மாதங்கள் வரையிலான சலுகைக் காலத்தை அனுமதிக்கும்.

- நாட்டில் வேலை வாய்ப்புகளைத் தொடர்ந்துப் பெற்றிட வேண்டி வெளிநாட்டினர்கள் எதிர்கொள்ளும் கட்டுப்பாடுகளை எளிதாக்கும் நோக்கத்தில் இது கொண்டு வரப் பட்டுள்ளது.
- 2019 ஆம் ஆண்டில், ஐக்கிய அரபு அமீரகம் நாட்டிற்குப் பணக்காரர்களை மற்றும் திறமையான தொழிலாளர்களை வரவேற்பதை நோக்கமாகக் கொண்டு 10 வருட "தங்க நுழைவு இசைவு" என்பதை அறிமுகப் படுத்தியது.
- ஐக்கிய அரபு அமீரகம் தவிர, சவுதி அரேபியா மற்றும் கத்தார் நாடுகள் சமீபத்தில் தங்கள் நாடுகளைப் பணக்கார முதலீட்டாளர்களுக்குத் திறந்து விட்டன.

## இன்ஸ்பிரேஷன்4

- ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனமானது 'இன்ஸ்பிரேஷன்4' எனும் உலகின் முதல் அனைத்துக் குடிமக்களுக்கான, ஒரு அரசு சாராத விண்வெளிப் பயணத்தை விரைவில் தொடங்க உள்ளது.
- இந்தத் திட்டமானது ஸ்பேஸ்எக்ஸால் தனிப்பட்ட முறையில் இயக்கப்படும் க்ரூ டிராகன் என்ற ஒரு விண்கலத்தில் 4 தனியார் குடிமக்களை விண்வெளிக்கு அழைத்துச் செல்லும்.
- இந்தத் திட்டத்தின் கீழ் விண்கலமானது பூமியை 575 கிமீ உயரத்தில் (கீழ்மட்ட புவிச் சுற்றுப்பாதையில்) 3 நாட்கள் சுற்றி வந்து, பின்னர் அட்லாண்டிக் பெருங்கடலில் தரையிறங்க உள்ளது.
- 2009 ஆம் ஆண்டில் ஹப்பிள் தொலைநோக்கியைப் பழுது பார்க்க விண்வெளி வீரர்கள் சென்றதிற்குப் பிறகு (547 கிமீ) ஒரு குழுவினரால் பயணிக்கப்படும் நீண்ட தூரம் இதுவாகும்.
- இந்தப் பயணமானது பல சுகாதாரத் தரவுகளைச் சேகரிப்பதற்கான ஒரு வாய்ப்பை அளிக்கும்.




## G20க்கான இந்தியாவின் ஷெர்பா

- மத்திய வர்த்தகம் மற்றும் தொழில், நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகம் மற்றும் ஜவுளித்துறை அமைச்சரான பியூஷ் கோயல் அவர்கள் ஜி 20 அமைப்பிற்கான இந்தியாவின் ஷெர்பாவாக நியமிக்கப்பட்டுள்ளார்.




- சுரேஷ் பிரபுவுக்குப் பதிலாக பியூஷ் கோயல் இந்தியாவின் ஷெர்பாவாக நியமிக்கப் பட்டுள்ளார்.
- அடுத்த ஜி 20 உச்சி மாநாடு (2021) அக்டோபரில் இத்தாலிய அதிபர் தலைமையில் நடைபெறும்.
- இந்தியாவானது டிசம்பர் 1, 2022 அன்று ஜி 20 தலைமையை ஏற்று 2023 ஆம் ஆண்டில் ஜி 20 தலைவர்களின் உச்சி மாநாட்டை முதல் முறையாக நடத்தும்.
- இந்தியாவானது டிசம்பர் 2021 முதல் நவம்பர் 2024 வரை ஜி 20 முக்கூட்டு அமைப்பின் (முந்தைய, தற்போதைய மற்றும் அடுத்த ஜி 20 தலைமை நாடுகள்) ஒரு பகுதியாக இருக்கும்.
- 2022 ஆம் ஆண்டில் இந்தோனேசியாவும் 2024 ஆம் ஆண்டில் பிரேசில் நாடும் ஜி 20 அமைப்பிற்குத் தலைமை தாங்கும்.




## இந்தியா மற்றும் போர்ச்சுகல் இடையே ஒப்பந்தம்

- இந்தியா மற்றும் போர்ச்சுகல் இடையே ஒப்பந்தம் ஒன்றினைக் கையெழுத்திட மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- இது ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடான போர்ச்சுகலில் உள்ள இந்திய புலம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு வாய்ப்புகளைக் கொடுக்கும்.

## ஆப்கானிஸ்தானின் புதிய அமைச்சரவை




- ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஒரு புதிய அமைச்சரவையை உருவாக்குவதாக அறிவித்துள்ளனர்.
- இது அனைத்தும் ஆண்களை மட்டுமே கொண்ட ஒரு அமைச்சரவையாக அமையும்.
- முல்லா ஹசன் அகுந்த் 'தற்காலிக' பிரதமராக அந்நாட்டு அரசாங்கத்தை வழி நடத்துவார்.

## அப்தலா மற்றும் சொபெர்னா




- உலகிலேயே முதன்முறையாக இரண்டு வயதிற்கு உட்பட்டக் குழந்தைகளுக்குத் தடுப்பூசி செலுத்திய நாடு கியூபா ஆகும்.
- எனினும், குழந்தைகளுக்குச் செலுத்தப்பட்ட அந்த மருந்துகள் உலக சுகாதார அமைப்பினால் அங்கீகரிக்கப்படாத உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டவையாகும்.
- கியூபா நாடானது தனது அப்தலா மற்றும் சொபெர்னா தடுப்பு மருந்துகளை சிறார்கள் மீது செலுத்தி மருத்துவப் பரிசோதனையை நிறைவு செய்தது.
- லத்தீன் அமெரிக்காவில் முதன்முதலில் உருவாக்கப்பட்ட இந்தக் கியூப நாட்டு மருந்துகள் சர்வதேச மற்றும் அறிவியல்பூர்வ சக மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட வில்லை.

- இவை அமெரிக்காவில் நோவாவாக்ஸ் மற்றும் பிரான்சு நாட்டின் சனோஃபி ஆகியவற்றில் பயன்படுத்தப்பட்ட ஒரு இனக்கலப்பு புரதத் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும்.
- நோவாவாக்ஸ் மற்றும் சனோஃபி ஆகியவையும் உலக சுகாதார அமைப்பில் அனுமதியைப் பெற காத்திருக்கின்றன.
- பயன்பாட்டிலுள்ள இதரத் தடுப்பு மருந்துகளைப் போல் இந்த இனக்கலப்பு தடுப்பு மருந்துகளுக்கு உச்சகட்ட குளிர்சாதன வசதி தேவையில்லை.

## 13வது BRICS உச்சி மாநாடு

- 13வது BRICS உச்சி மாநாட்டிற்கு இந்தியப் பிரதமர் மோடி காணொலி மூலமாக தலைமை தாங்கினார்.
- 2021 ஆம் ஆண்டில் BRICS அமைப்பிற்கு இந்தியா தலைமைப் பொறுப்பினை வகிப்பது BRICS அமைப்பின் 15வது ஆண்டு நிறைவுடன் ஒருங்கிணைந்து வருகிறது.
- 13வது BRICS உச்சி மாநாட்டின் கருத்துருவானது, “BRICS@15 : தொடர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் ஒருமித்தக் கருத்திற்கான BRICS அமைப்பின் ஒத்துழைப்பு” என்பதாகும்.
- 5 நாடுகளின் தலைவர்கள் ஆப்கானிஸ்தான் உட்பட குறிப்பிடத்தக்க சில பிராந்திய மற்றும் உலகளாவியப் பிராச்சினைகள் குறித்து ஆலோசனை செய்வர்.
- 2016 ஆம் ஆண்டு கோவா உச்சி மாநாட்டிற்குப் பிறகு BRICS மாநாட்டிற்குப் பிரதமர் மோடி தலைமை வகிப்பது இது 2வது முறையாகும்.
- BRICS என்பது பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா மற்றும் தென் ஆப்பிரிக்கா ஆகிய 5 முக்கிய நாடுகளின் ஒரு குழுவாகும்.
- BRICS அமைப்பில் 2010 ஆம் ஆண்டில் தென் ஆப்பிரிக்கா இணைவதற்கு முன்பு இது BRIC என்று 4 நாடுகள் கொண்ட ஒரு அமைப்பாகவே இருந்தது.



## 2021PJI

- நாசாவின் ஜெட் உந்து விசை ஆய்வகமானது புவியைக் கடந்து சென்ற 2021PJI எனப்படும் 1000வது புவிக்கு அருகமைந்த ஒரு குறுங்கோளினைக் கண்டறிந்தது.
- இந்தக் குறுங்கோளானது புவிக்கு அச்சுறுத்தலானதல்ல, எனினும் இது ஒரு வரலாற்று நிகழ்வு ஆகும்.
- புவிக்கு அருகிலுள்ள குறுங்கோள்கள் மற்றும் வால்நட்சத்திரங்கள் ஒரு சேரப் புவிக்கு அருகிலுள்ள அமைப்புகளாகக் கூறப்படுகின்றன.
- '1566 ஜகாரஸ்' எனப்படும் குறுங்கோளானது 1968 ஆம் ஆண்டில் முதன்முதலாக ஒரு ரேடாரின் ஆய்வு மூலம் கண்டறியப்பட்டது.

## மொராக்கோவுடனான கடற்பயிற்சி

- இந்தியப் பெருங்கடலில் கடல்சார் விழிப்புணர்வு கட்டமைப்பினை உருவாக்குவதில் முன்னிலையிலுள்ள இந்திய நாடானது சமீபத்தில் மொராக்கோ மற்றும் அல்ஜீரியா நாடுகளின் கடற்படையுடன் கடற்பயிற்சியில் ஈடுபட்டது.
- இந்தியக் கடற்படைக் கப்பல் தாபர் மொராக்கோவிலுள்ள காசாபிளாங்காவில் வந்து சேர்ந்ததாக இந்தியக் கடற்படை தெரிவித்தது.
- மொராக்கோ நாடானது மஹரெப் என்ற யுக்திசார் பகுதியில் அமைந்த மற்றும் ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய நாடாகும்.
- ஐ.என்.எஸ். தாபர் கப்பலானது (F44) இந்தியக் கடற்படையின் தல்வார் ரக போர்க் கப்பல் வரிசையில் 3வது கப்பலாகும்.




## கெகர்டாக் அவன்னார்லெக் (Qeqertaq Avannarleq)





- இது கீரின்லாந்து நாட்டின் கடற்கரையில் சமீபத்தில் கண்டறியப்பட்ட சிறிய, மக்கள் வசிக்காத, இதற்கு முன்பு அறியப்படாத தீவாகும்.
- இது தற்போது புவியின் புதிய வடக்குப் பகுதியாகக் கருதப்படுகிறது.
- இதற்கு முன்பாக ஊதாக் எனுமிடம் தான் புவியின் வடக்குப் பகுதியாக அறியப் பட்டது.

## 2021 ஆம் ஆண்டு சர்வதேச இளம் வயது சூழல்சார் வீரர் விருது

- மும்பையைச் சேர்ந்த அயன் சங்தா (12 வயது) என்பவர் 2021 ஆம் ஆண்டின் சர்வதேச இளம் வயது சூழல்சார் வீரர் விருதின் வெற்றியாளராக அறிவிக்கப் பட்டுள்ளார்.
- இது 'Action For Nature' என்ற அமெரிக்காவின் ஒரு லாபநோக்கமற்ற அமைப்பினால் வழங்கப் படுகிறது.
- 'போவாய் ஏரியின் வளங்காப்பு மற்றும் மறுசீரமைப்பு' என்ற தனது திட்டத்திற்காக 8-14 வயதினர் பிரிவில் அயன் 3 ஆம் இடத்தினைப் பெற்றார்.
- இந்த ஏரியைப் பாதுகாக்கும் முயற்சியில் அயன் இந்த திட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.



## அண்டார்டிகாவின் பழமையான பனி




- அமெரிக்கா முழுவதிலுமிருந்து நிபுணர்களை ஒன்றிணைக்க 'பழமையான பனி ஆய்வு மையம்' (COLDEX - Centre for Oldest Ice Exploration) அமைக்கப்படும்.
- இது பூமியின் காலநிலை அமைப்பு பற்றிய அறிவை உருவாக்க வேலை செய்யும்.
- ஒரேகான் மாநிலப் பல்கலைக்கழகம் அண்டார்டிகாவின் பழமையான பனியைக் கண்டறிய ஓர் ஆய்வுக்கு வழிவகுக்கும்.
- அண்டார்டிகா பனியின் பழமையான பதிவு தற்போது சுமார் 800,000 ஆண்டுகளுக்கு முற்பட்டது ஆகும்.

## ASOSAI

- இந்தியாவின் தலைமைக் கணக்குத் தணிக்கையாளர் ஜிசி முர்மு அவர்கள் 2024 ஆம் ஆண்டு முதல் 2027 ஆம் ஆண்டு வரை மூன்று வருடக் காலத்திற்கு ஆசிய அமைப்பின் உச்ச தணிக்கை நிறுவனங்களின் (ASOSAI - Asian Organization of Supreme Audit Institutions) மன்றத்திற்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- 2024 ஆம் ஆண்டில் ASOSAI அமைப்பின் 16வது மாநாட்டை இந்தியா நடத்தும்.
- ASOSAI என்பது சர்வதேச உச்ச தணிக்கை நிறுவனங்களின் பிராந்தியக் குழுக்களில் ஒன்றாகும்.



## ஓர்கா – ஐஸ்லாந்து

- காற்றில் இருந்து கார்பன் டை ஆக்சைடைப் பிடிக்க வடிவமைக்கப்பட்ட உலகின் மிகப்பெரிய ஆலையானது ஐஸ்லாந்தில் தனது செயல்பாடுகளைத் தொடங்கியது.
- இந்த ஆலைக்கு ஓர்கா என்று பெயரிடப்பட்டுள்ளது.
- இது வருடத்திற்கு 4,000 டன் அளவிற்கு CO2 வாயுவை உறிஞ்சும்.
- காற்றிலிருந்து நேரடியாகப் பிடிக்கப்படும் கார்பன் டை ஆக்சைடு வாயு 1,000 மீட்டர் ஆழத்தில் நிலத்தடியில் அனுப்பப்பட்டு, அங்கு அது பாறையாக மாற்றப் படும்.




## Gaofen-5 02

- இந்தப் புதிய புவிக் கண்காணிப்புச் செயற்கைக் கோளை சீனா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.
- இது வட சீனாவின் ஷான்சி மாகாணத்தில் உள்ள தையுவான் செயற்கைக்கோள் ஏவு மையத்தில் இருந்து ஏவப்பட்டது.
- இது சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகளை கண்காணிக்கவும் அதன் இயற்கை வளக் கண்காணிப்பை அதிகரிக்கவும் உள்ளது.

## 13வது பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் கருத்துரு

- இந்த மாநாட்டிற்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமை தாங்கினார்.
- 'Build-back Resiliently, Innovatively, Credibly and Sustainably' என்ற முழக்கத்தின் கீழ் பிரிக்ஸ் ஒத்துழைப்பை மேம்படுத்த பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார்.
- இந்த உச்சி மாநாடானது 'புது டெல்லி பிரகடனத்தை' ஏற்றுக் கொண்டது.
- பிரிக்ஸ் மாநாட்டை இந்தியா நடத்துவது இது மூன்றாவது முறையாகும்.
- இதற்கு முன் இந்தியா 2012 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் பிரிக்ஸ் தலைமையை ஏற்றுள்ளது.
- பிரிக்ஸ் மாநாட்டிற்குப் பிரதமர் மோடி தலைமை வகிப்பது இது இரண்டாவது

முறையாகும்.

- அவர் முன்பு 2016 ஆம் ஆண்டில் கோவா உச்சி மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்.




## 2+2 அமைச்சர் உரையாடல்

- இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா இடையேயான முதல் 2+2 அமைச்சர்கள் பேச்சு வார்த்தையானது புதுதில்லியில் தொடங்கியது.
- ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து இதில் பேசப்படும்.
- இது ஆஸ்திரேலியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் வெளியுறவுத் துறை மற்றும் பாதுகாப்புத் துறை அமைச்சர்களுக்கிடையிலான ஒரு அமைச்சரவை மட்டத்திலான பேச்சுவார்த்தை ஆகும்.




## தேஜாஸ் சவுகான்

- இவர் சிங்கப்பூரில் அமைந்துள்ள சர்வதேச வர்த்தக சபையின் சர்வதேச நடுவர் மன்றத்தில் தெற்காசியாவுக்கான பிராந்திய இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- பிராந்திய இயக்குனர் பதவிக்கு நியமிக்கப்படும் 2வது இந்தியர் இவராவார்.
- சர்வதேச வர்த்தக சபைக்கு வடக்கு ஆசியா, தெற்காசியா மற்றும் மத்திய கிழக்கு ஆகிய பகுதிகளில் மூன்று பிராந்திய மையங்கள் உள்ளன.

- சர்வதேச நடுவர் மன்றமானது 1923 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட உலகின் முன்னணி நடுவர் அமைப்பாகும்.



## இங்கிலாந்து – மின்சார வாகன மின்னேற்றிகள்

- இங்கிலாந்தில் புதிதாக கட்டப்பட உள்ள அனைத்து வீடுகள் மற்றும் அலுவலகங்களில் மின்சார வாகன மின்னேற்றிகள் இடம் பெற வேண்டும்.
- இது தொடர்பான நடவடிக்கையை மேற்கொண்ட முதல் உலக நாடு இங்கிலாந்து ஆகும்.

## உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்கு ஆசியப் பிராந்திய அலுவலகம்

- உலக சுகாதார அமைப்பின் தென்கிழக்காசியப் பிராந்திய அலுவலகத்தின் 74வது பிராந்தியக் குழுக் கூட்டமானது நேபாள நாட்டினால் ஏற்பாடு செய்யப்பட்டது.
- 2023 ஆம் ஆண்டுக்குள் தட்டம்மை மற்றும் ரூபெல்லா போன்ற நோய்களை ஒழிப்பதில் இக்கூட்டமானது கவனம் செலுத்தியது.

## ஆப்பிரிக்க உணவுப் பரிசு 2021





- துணை சஹாரா ஆப்பிரிக்கப் பகுதியின் 13 நாடுகளில் உணவுப் பாதுகாப்பினை மேம்படுத்திய வெப்பமண்டல பருப்பு உற்பத்தித் திட்டத்திற்காக ICRISAT என்ற அமைப்பானது இந்த விருதினைப் பெற்றுள்ளது.

- இந்த விருதானது நைரோபியில் நடைபெற்ற 2021 ஆம் ஆண்டு பசுமைப் புரட்சிக்கான ஆப்பிரிக்க மன்றத்தின் உச்சி மாநாட்டில் வழங்கப்பட்டது.
- சர்வதேச மித வறண்ட வெப்ப மண்டலப் பகுதிகளுக்கான பயிர் ஆராய்ச்சி நிறுவனமானது ஹைதராபாத்தில் அமைந்துள்ளது.

## பருவநிலை நடவடிக்கை மற்றும் நிதி திரட்டல் பேச்சுவார்த்தை

- இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இணைந்து செயல்பாட்டு நிரல் 2030 கூட்டிணைவிற்கான பருவநிலை நடவடிக்கை மற்றும் நிதி திரட்டல் பேச்சு வார்த்தையினைத் தொடங்கியுள்ளது.
- இந்த அமெரிக்க-இந்தியச் செயல்பாட்டு நிரல் 2021 கூட்டிணைவானது 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற பருவநிலை மீதான தலைவர்கள் உச்சி மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் மற்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி ஆகியோரால் அறிவிக்கப்பட்டது.




## தோஷன் ஆங் சங்க்

- தென்கொரிய நாடானது தனது சொந்த நீர்மூழ்கி ஏவுகணையினை வெற்றிகரமாக பரிசோதித்தது.
- இது உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 3000 டன் எடை கொண்ட நீர்மூழ்கி உந்துவிசை ஏவுகணையாகும்.
- இதன் மூலம் இத்தகைய ஏவுகணையை கொண்ட 8வது நாடாக தென்கொரியா மாறியுள்ளது.

- இதன் மூலம் அமெரிக்கா, ரஷ்யா, சீனா, ஐக்கிய ராஜ்ஜியம், பிரான்சு மற்றும் இந்தியா ஆகிய நாடுகளின் வரிசையில் தென்கொரியா இணைந்துள்ளது.



## ஈரான் மற்றும் சர்வதேச அணுசக்தி முகமை நிறுவனம்

- ஈரான் அரசானது தனது நாட்டின் அணுசக்தியினைக் கண்காணிப்பதற்கு சர்வதேச அணுசக்தி முகமை நிறுவனத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- ஈரான் தனது முக்கிய அணுசக்தித் தளங்களிலுள்ள கண்காணிப்புக் கேமராக்களில் புதிய பதிவேற்றச் சில்லுகளைப் பொருத்துவதற்கு என்று சர்வதேச ஆய்வாளர்களுக்கு அனுமதி வழங்கியுள்ளது.
- ஈரான் நாடானது அதன் யுரேனியக் கையிருப்பினைத் தொடர்ந்து அதிகரித்து வருவதனால் ஆயுத ரகங்கள் எனும் தரநிலைக்கு வேண்டிய அளவில் தனது யுரேனியக் கையிருப்புகளைச் சிறிய அளவில் செறிவூட்டுகிறது.




## பருவநிலை மாற்றம் குறித்த கிரவுண்ட்ஸ் வெல் அறிக்கை

- இது உலக வங்கியினால் சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- நீர் பற்றாக்குறை, பயிர் உற்பத்தி குறைதல் மற்றும் கடல் மட்டம் உயர்வு போன்ற மெதுவாக வளர்ந்து வரும் பருவநிலை மாற்றத்தின் தாக்கங்கள் குறித்து இது ஆய்வு செய்தது.

- இது 2050 ஆம் ஆண்டுக்குள் பருவநிலை காரணமாக இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கையை மில்லியன் கணக்காக உயர வழி வகுக்கும்.




## கோவிட் தொற்றிற்கான 3வது தவணை தடுப்பூசி


- லான்செட் எனும் மருத்துவ இதழில் வெளியான அறிக்கையில், தீவிரமான கோவிட்-19 தொற்றிற்கு எதிரான தடுப்பூசியின் செயல்திறனானது மிகவும் அதிகமாக உள்ளதாக கூறப்பட்டுள்ளது.
- இந்தப் பெருந்தொற்று காலத்தில் உந்துசக்தி உடைய அல்லது பூஸ்டர் வகை தடுப்பூசியை பொது மக்களுக்கு வழங்குவது பொருத்தமானதல்ல.
- இந்த மறுசீராய்வானது உலக சுகாதார அமைப்பு, அமெரிக்க உணவு மற்றும் மருந்து நிர்வாக அமைப்பு ஆகியவற்றின் அறிவியலாளர்களால் வழங்கப்பட்டது.
- இஸ்ரேல், இத்தாலி, பிரான்சு மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் கோவிட்-19 தடுப்பூசியின் 3வது தவணையினை ஏற்கனவே வழங்கத் தொடங்கியுள்ளன.

## வங்காளதேசம் – 2050 ஆம் ஆண்டுக்குள் கடல் மட்ட உயர்வு

- வங்காளதேசத்தின் 17% நிலப்பகுதியானது 2050 ஆம் ஆண்டுக்குள் கடல்மட்ட உயர்வு காரணமாக கடலில் மூழ்கடிக்கப் படும்.
- ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் மிச்செல் பச்செல்லட், மனித உரிமைகள் சபையின் 48வது கூட்டத்தில் உரை ஆற்றிய போது உலகப் பொருளாதார மன்றத்தின் அறிக்கையை மேற்கோளிட்டுக் காட்டினார்.
- இந்த அறிக்கையின்படி, 2019 ஆம் ஆண்டின் பேரிடர்களின் போது தங்கள் வீட்டை விட்டு வெளியேறிய 4 மில்லியனுக்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட நாடுகளின் பட்டியலில் வங்காளதேசம் 3வது இடத்தில் உள்ளது.
- 2019 ஆம் ஆண்டு பேரிடரின் காரணமாக மக்கள் இடம் பெயர்வதற்கான நிலையை எதிர்கொண்ட மற்ற நாடுகள் இந்தியா, சீனா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியனவாகும்.


## சூடான் உடனான கடற்படைப் பயிற்சி

- இந்தியக் கடற்படை மற்றும் சூடான் கடற்படை ஆகியவை இணைந்து சூடான் நாட்டுக் கடற்கரையருகே செங்கடலில் இருதரப்பு கடல்சார் பயிற்சியில் ஈடுபட்டன.
- இந்தியக் கடற்படை மற்றும் சூடான் நாட்டுக் கடற்படை இணைந்து இது போன்ற ஒரு பயிற்சியில் ஈடுபடுவது இதுவே முதல்முறையாகும்.
- இந்தியா சார்பாக ஐ.என்.எஸ். தாபர் எனும் கப்பல் இப்பயிற்சியில் ஈடுபட்டது.
- சூடான் நாட்டைத் தவிர, மத்தியத் தரைக்கடலில் எகிப்திய நாட்டுக் கடற்படையுடனும் இணைந்து இந்தியக் கடற்படையானது கடற்படைப் பயிற்சியினை மேற்கொண்டது.




## QS உலகளாவிய முழுநேர முதுகலை வணிக மேலாண்மைக் கல்வி தரவரிசை

- QS (குவாக்கரேலி சைமன்ட்ஸ்) என்பது முன்னணி உலக வணிக கல்வி நிறுவன ஆய்வு நிறுவனங்களுள் ஒன்றாகும்.
- இது உலகின் 286 வலிமை வாய்ந்த உலக MBA (முதுகலை வணிக மேலாண்மை - Master of Business Administration) கல்லூரிகளைத் தரவரிசைப் படுத்துகிறது.
- உலகளவில் ஸ்டான்போர்டு வணிகக் கல்வி நிறுவனமானது தொடர்ந்து 2வது வருடமாக உலகின் முன்னணி MBA கல்வி நிறுவனமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- பெங்களூரு மற்றும் அகமதாபாத்திலுள்ள இந்திய மேலாண்மை கல்வி நிறுவனங்கள் முதல் 50 இடங்களில் இடம் பெற்றுள்ளன.
- கொல்கத்தாவின் இந்திய மேலாண்மை கல்வி நிறுவனம் மற்றும் ஹைதராபாத்தின் இந்திய வணிகக் கல்வி நிறுவனம் ஆகியவை முதல் 100 இடங்களில் இடம் பெற்று உள்ளன.




GLOBAL MBA RANKINGS: HOW INDIA FARED

| Institution | 2020 | 2021 |
|---|---|---|
| IIM Ahmedabad | 40 | 50 |
| IIM Bangalore | 44 | 54 |
| IIM Calcutta | 101-110 | 79 |
| ISB | 98 | 93 |
| IIM Lucknow | – | 151-200 |
| SP Jain IMR | 151-200 | 151-200 |

Source: QS

## QUAD சந்திப்பு

- அமெரிக்காவின் வாஷிங்டன்னில் உள்ள வெள்ளை மாளிகையில் QUAD நாடுகளின் முதலாவது தனிப்பட்டச் சந்திப்பினை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் நடத்த உள்ளார்.
- இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்காட் மோரிசன் மற்றும் ஜப்பானியப் பிரதமர் யோசிஹைடு சுகா ஆகியோர் இச்சந்திப்பில் பங்கேற்க உள்ளனர்.
- நான்கு தரப்பு பாதுகாப்புப் பேச்சுவார்த்தையானது ஜப்பான், இந்தியா, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிடையே மேற்கொள்ளப்படும்.
- இது முதன்முறையாக 2007 ஆம் ஆண்டில் தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பின் சந்திப்பின் போது நடைபெற்றது.
- இந்த நான்கு நாடுகளும் ஜனநாயக நாடுகள், தடையற்ற கடல்சார் வர்த்தகம் மற்றும் பாதுகாப்பின் பொது நலன்கள் ஆகியவற்றுக்கான ஒரு பொதுவான தளமாகத் திகழ்கின்றன.
- சீனா இதனை ஒரு வளர்ந்து வரும் “ஆசிய NATO கூட்டமைப்பு” என முத்திரைப் பதித்து உள்ளது.



## இந்தியா-ஆப்பிரிக்கா பாதுகாப்புப் பேச்சுவார்த்தை

- இந்தியா-ஆப்பிரிக்கா பாதுகாப்புப் பேச்சுவார்த்தையை, ஒரு வழக்கமான நிகழ்வாக, இரு வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும் ராணுவக் கண்காட்சியான டெஃப்-எக்ஸ்போ என்ற நிகழ்வை ஒட்டி நடத்த இந்திய அரசு முன்மொழிந்துள்ளது.
- முதல் இந்தியா-ஆப்பிரிக்கா பாதுகாப்புத் துறை அமைச்சர்கள் மாநாடானது 2020 ஆம் ஆண்டின் பிப்ரவரி மாதத்தில் லக்னோவில் நடத்தப்பட்ட டெஃப்-எக்ஸ்போ கண்காட்சியில் நடத்தப் பட்டது.
- இரண்டாவது இந்தியா - ஆப்பிரிக்கா பாதுகாப்புப் பேச்சுவார்த்தையானது 2022 ஆம் ஆண்டில் மார்ச் மாதத்தில் குஜராத்தின் காந்திநகரில் நடைபெற திட்டமிடப்பட்டுள்ள டெஃப்-எக்ஸ்போ என்ற நிகழ்வை ஒட்டி நடைபெறும்.
- 2வது இந்தியா ஆப்பிரிக்கா பாதுகாப்புப் பேச்சுவார்த்தையின் கருத்துருவானது 'India – Africa: Adopting Strategy for Synergizing and Strengthening Defence and Security Cooperation' என்பதாகும்.




## எஸ்சிஓ உச்சி மாநாடு



- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் (எஸ்சிஓ) 21வது அரசத் தலைவர்கள் கூட்டம் தஜிகிஸ்தானின் துஷான்பேவில் ஒரு கலப்பு முறையில் நடைபெறும்.
- தஜிகிஸ்தான் தலைவர் எமோமாலி ரஹ்மான் எஸ்சிஓ உச்சி மாநாட்டிற்குத் தலைமை தாங்குவார்.
- கலப்பு முறையில் நடத்தப்படும் முதல் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாடு இதுவாகும்.
- ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் முழு உறுப்பினராக இந்தியா பங்கேற்கும் 4வது உச்சி மாநாடு இதுவாகும்.
- எஸ்சிஓ மன்றத்தின் தலைவர்கள் கலந்து கொள்ளும் உச்சி மாநாடுகள் ஆண்டு தோறும் வெவ்வேறு இடங்களில் மாற்று வரிசையில் (alternating venues) நடத்தப் படுகின்றன.
- 2020 ஆம் ஆண்டின் எஸ்சிஓ உச்சி மாநாடானது ரஷ்யா தலைமையில் நடத்தப் பட்டது.


## 'அமைதித் திட்டம்' 2021 - 6வது பதிப்பு

- இந்திய ராணுவக் குழுப் படையானது அமைதித் திட்டம் - 2021 என்ற பயிற்சியில் பங்கேற்கிறது.
- இது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பு நாடுகளுக்கிடையேயான கூட்டுப் பயங்கரவாத எதிர்ப்புப் பயிற்சி ஆகும்.
- இது ரஷ்யாவால் நடத்தப்படுகிறது.
- இது இந்த இரு வருட பலதரப்புப் பயிற்சியின் 6வது பதிப்பாகும்.



## உலக ஓசோன் தினத்திற்கான கருத்துரு (16 செப்டம்பர்)

- அண்டார்டிகாவில் ஓசோன் செறிவில் ஒரு பயங்கரமான வீழ்ச்சியை விஞ்ஞானிகள் கண்டறிந்த 1975 ஆம் ஆண்டின் வசந்த காலத்தின் நினைவூட்டல் இதுவாகும்.
- 2021 ஆம் ஆண்டின் ஓசோன் அடுக்கு மீதான பாதுகாப்பிற்கான சர்வதேச தினம் என்பதற்காக வேண்டி மான்ட்ரியல் நெறிமுறையின் கருத்துரு தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளது.
- 2021 ஆம் ஆண்டிற்கான உலக ஓசோன் தினத்தின் கருத்துருவானது 'Montreal Protocol - Keeping us, our food, and vaccines cool' என்பதாகும்
- மான்ட்ரியல் நெறிமுறையானது ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் அனைத்து 197 நாடுகளாலும் அங்கீகரிக்கப் பட்ட முதலாவது ஒப்பந்தமாகும்.





## முதல் பெண் தலைவர் – UNCTAD

- ரெபேகா கிரின்ஸ்பான் (Rebecca Grynspan), 2021 ஆம் ஆண்டு முதல் அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு UNCTAD அமைப்பின் (ஐக்கிய நாடுகள் வர்த்தகம் மற்றும் வளர்ச்சி மாநாட்டு அமைப்பு) தலைவராகச் செயல்படுவார்.
- இவர் இந்தப் பொறுப்பினை வகிக்கும் முதல் பெண்மணி மற்றும் மத்திய அமெரிக்கர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.
- இவர் கோஸ்டா ரிக்கா என்ற நாட்டின் முன்னாள் துணை அதிபர் ஆவார்.
- இவர் டாக்டர் முகிஷா கித்தூயி என்பவரை அடுத்து இந்தப் பொறுப்பினை ஏற்று உள்ளார்.
- கித்தூயி 2013 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை UN வர்த்தக நிறுவனத்திற்கு தலைமை தாங்கிய முதல் கென்ய நாட்டவராவார்.



## முதலாவது அனைத்து சுற்றுலா குழுவினர் – “பூமியைச் சுற்றும் பயணம்”




- ❖ ஸ்பேக்ஸ் X நிறுவனத்தின் ஒரு ராக்கெட்டானது நாசாவின் கென்னடி விண்வெளி நிலையத்திலிருந்து ஏவப்பட்டது.
- ❖ இதில் பயணம் செய்பவர்கள் கிரிஷ் செம்ப்ரோஸ்கி, சியான் ப்ரொக்டர், ஜாரெட் ஐசக் மேன் மற்றும் ஹேலி ஆர்சீனாக்ஸ் ஆகியோராவர்.
- ❖ இன்ஸ்பிரேசன் 4 ராக்கெட்டின் பயணிகள் தற்போது சுற்றுப் பாதையில் உள்ளதாக ஸ்பேஸ் X நிறுவனம் அதிகார ப்பூர்வமாக தெரிவித்தது.
- ❖ இது முழுக்க முழுக்க சுற்றுலாப் பயணிகளைக் கொண்டு செல்லும் முதல் சுற்றுப் பாதை விமானமாகும்.
- ❖ 350 மைல் உயரத்திலுள்ள சுற்றுப் பாதையில் சுற்றி வரும் 13 அடி அகலமுள்ள ‘க்ரூ டிராகன்’ என்ற பயணிகள் பெட்டகத்தில் இந்தப் பயணிகள் மூன்று நாட்கள் செலவிட உள்ளனர்.
- ❖ டிராகன் பெட்டகமானது ஹப்பிள் விண்வெளி தொலைநோக்கிக்கு அப்பால் 573 கி.மீ உயரத்தில் நிறுத்தப்பட உள்ளது.

## TIME இதழின் 100 மிகவும் செல்வாக்குமிக்க நபர்கள் பட்டியல்




- TIME இதழானது தனது வருடாந்திரப் பட்டியலை வெளியிட்டுள்ளது.
- இப்பட்டியலானது சிறந்த நபர்கள், முன்னோடிகள், நிபுணர்கள், கலைஞர்கள், தலைவர்கள் மற்றும் புதுமைப் படைப்பாளர்கள் என ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டு உள்ளது.
- பிரதமர் நரேந்திர மோடி, மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி மற்றும் சீரம் இந்திய நிறுவனத் தலைமை நிர்வாக அலுவலர் அதார் பூனாவாலா ஆகியோர் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.
- தாலிபன் துணைப் பிரதமர் முல்லா அப்துல்கானி பராதரும் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.
- இந்தியா ஜவஹர்லால் நேரு, இந்திரா காந்தி மற்றும் மோடி போன்ற 3 முக்கியத் தலைவர்களைக் கொண்டது என TIME இதழ் தெரிவித்துள்ளது.


## AUKUS




- அமெரிக்கா, ஐக்கிய ராஜ்ஜியம் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இந்தப் புதியக் கூட்டிணைவினை அறிவித்துள்ளன.

- இது இந்தியப் பசிபிக் பகுதிக்கான ஒரு புதிய முத்தரப்புப் பாதுகாப்புக் கூட்டிணைவு ஆகும்.
- AUKUS கூட்டிணைவின் முதல் திட்டமானது அணுசக்தியுடன் இயங்கும் வழக்கமான ஆயுதங்கள் கொண்ட நீர்மூழ்கிக் கப்பல்களைப் பெற ஆஸ்திரேலிய நாட்டிற்கு உதவுவதாகும்.

## விரிவான மற்றும் முற்போக்கான பசிபிக் எல்லை கடந்த கூட்டிணைவு ஒப்பந்தம் – சீனா




- ஆசிய – பசிபிக் தடையில்லா வர்த்தகக் குழுமம் (அ) விரிவான மற்றும் முற்போக்கான பசிபிக் எல்லை கடந்த கூட்டிணைவு ஒப்பந்தத்தில் இணைவதற்கு சீனா விண்ணப்பம் செய்துள்ளது.
- இந்த ஒப்பந்தமானது முன்னாள் அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா அவர்களால் முன் வைக்கப் பட்ட பிசிபிக் எல்லை கடந்த கூட்டிணைவு ஒப்பந்தமாகும்.
- ஆனால் 2017 ஆம் ஆண்டில் டொனால்ட் டிரம்ப் இக்குழுவிலிருந்து அமெரிக்கா வெளியேறுவதாக அறிவித்தார்.
- அமெரிக்காவின் தற்போதைய அதிபர் ஜோ பிடன் இன்னும் இக்குழுவில் இணைய வில்லை.
- ஆரம்பத்தில் சீனா இக்குழுவில் சேர்க்கப்படவில்லை.
- இந்த ஒப்பந்தமானது ஆஸ்திரேலியா, புரூனே, சிலி, கனடா, ஜப்பான், மெக்சிகோ, மலேசியா, பெரு, நியூசிலாந்து, சிங்கப்பூர் மற்றும் வியட்நாம் ஆகிய 11 நாடுகளுக்கு இடையேயான ஒரு வர்த்தக ஒப்பந்தமாகும்.

## கைலாஷ் சத்யார்த்தி

- ஐக்கிய நாடுகள் அவையானது நோபல் பரிசு பெற்ற இந்தியரான கைலாஷ் சத்யார்த்தி என்பவரை நிலையான மேம்பாட்டு இலக்குகளுக்காக வேண்டி ஒரு பிரச்சாரகராக நியமித்துள்ளது.

- மைக்ரோசாப்ட் நிறுவனத் தலைவர் பிராட் ஸ்மித், STEM ஆர்வலர் வாலன்டினா முனோஸ் ரபானால் மற்றும் K. பாப் சூப்பர் ஸ்டார் BLACKPINK ஆகியோரும் புதிய நிலையான மேம்பாட்டு இலக்குகளுக்கான பிரச்சாரகர்களாக நியமிக்கப்பட்டு உள்ளனர்.
- நிலையான மேம்பாட்டிற்கான 2030 ஆம் ஆண்டின் செயல்பாட்டு நிரல்களை முன்னேற்றுவதற்கு இவர்களின் பங்கு ஒருங்கிணைந்ததாக இருக்கும்.




## எபோலா

- எபோலா கிருமி ஒழிக்கப்பட்டதாக ஜீன்-ஜாக்ஸ் மியும்பே என்பவர் கூறியுள்ளார்.
- இவர் 1976 ஆம் ஆண்டில் எபோலா வைரசினைக் கண்டுபிடித்த காங்கோ நாட்டைச் சேர்ந்த ஒரு தொற்றுநோயியல் நிபுணர் ஆவார்.
- இது காங்கோ மக்களாட்சிக் குடியரசில் உள்ள யாம்புகு எனுமிடத்தில் கண்டறியப் பட்டது.
- யாம்புகுவிற்கு அருகிலுள்ள ஒரு நதியின் பெயரால் இதற்கு எபோலா எனப் பெயரிடப் பட்டது.



## பல பில்லியன் டாலர் வாய்ப்பு: உணவு அமைப்புகளை மாற்ற விவசாய ஆதரவை மீண்டும் பயன்படுத்துதல்





- ❖ இந்த அறிக்கை உணவு மற்றும் விவசாய அமைப்பு நிறுவனம், ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்டம் ஆகியவற்றால் இணைந்து வெளியிடப் பட்டது.
- ❖ அதிகரித்து வரும் உற்பத்தி மீதான ஆதரவில் 87 சதவீதமானது 2030 ஆம் ஆண்டின் இலக்கிற்குத் தீங்கு விளைவிக்கும் என்று அது மதிப்பிடுகிறது.

## ICAO



- இந்தியாவைச் சேர்ந்த ஷெஃபாலி ஜுனேஜா அவர்கள் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பின் (ICAO - International Civil Aviation Organization) விமானப் பாதுகாப்புக் குழுவின் முதல் பெண் தலைவராக பதவி ஏற்று உள்ளார்.
- 12 வருட இடைவெளிக்குப் பிறகு விமானப் பாதுகாப்பு குழுவின் பொறுப்பை இந்தியா ஏற்றுள்ளது.
- இந்த மூலோபாயக் குழுவை வழி நடத்தும் முதல் பெண் ஜூனேஜா ஆவார்.
- ICAO என்பது கனடாவின் கியூபெக்கைத் தலைமையிடமாகக் கொண்ட ஒரு சிறப்பு ஐக்கிய நாடுகள் நிறுவனம் ஆகும்.
- இதற்கு 193 நாடுகள் நிதியளிக்கின்றன.

## உலகப் புத்தாக்கக் குறியீட்டுத் தரவரிசை 2021




- 2021 ஆம் ஆண்டிற்கான உலகப் புத்தாக்க குறியீட்டுத் தரவரிசையில் இந்திய நாடு இரண்டு இடங்கள் முன்னேறி 46வது இடத்தைப் பெற்றுள்ளது.
- இக்குறியீடானது உலக அறிவுசார் சொத்துரிமை அமைப்பினால் (World Intellectual Property Organization) வெளியிடப்படுகிறது.
- இந்த அமைப்பானது ஐக்கிய நாடுகள் அவையின் ஒரு சிறப்புப் பணி நிறுவனமாகும்.
- இந்தக் குறியீடானது 132 நாடுகளின் புத்தாக்கத் தரவரிசையின் பலபரிமாண அம்சங்களையும், அதன் பலதரப்பட்ட பகுப்பாய்வினையும் வெளிப்படுத்துவதாகும்.
- சுவிட்சர்லாந்து, சுவீடன், அமெரிக்கா மற்றும் ஐக்கிய ராஜ்ஜியம் ஆகிய நாடுகள் புத்தாக்கத் தரவரிசையில் தொடர்ந்து முன்னிலை வகிப்பதோடு அவை கடந்த 3 ஆண்டுகளாக முதல் 5 இடங்களைப் பெற்றுள்ளன.

- 2021 ஆம் ஆண்டில் கொரியக் குடியரசு முதல்முறையாக இக்குறியீட்டின் முதல் 5 இடங்களில் இடம் பெற்றுள்ளது.

***இந்தியாவின் செயல்திறன்***

- 2021 ஆம் ஆண்டில் இந்தியா புத்தாக்க உள்ளீடுகளைக் காட்டிலும் புத்தாக்க வெளியீடுகளில் சிறந்து செயலாற்றி வருகிறது.
- இந்த ஆண்டு புத்தாக்க உள்ளீடுகளில் இந்தியா 57வது இடத்தினைப் பெற்றுள்ளது.
- புத்தாக்க வெளியீடுகளில் இந்தியா 45வது இடத்தினைப் பெற்றுள்ளது.
- 34 குறைவான வருமானமுடைய நாடுகளில் இந்தியா 2வது இடத்தில் உள்ளது.
- மத்திய மற்றும் தெற்காசியாவைச் சேர்ந்த 10 நாடுகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளது.

## தூதர்களை திரும்ப அழைக்கும் பிரான்சு – AUKUS பாதுகாப்பு ஒப்பந்தம்

- அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களைக் கட்டமைப்பதற்காக அமெரிக்கா, ஐக்கிய ராஜ்ஜியம் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிடையே மேற் கொள்ளப் பட்ட முத்தரப்பு பாதுகாப்பு ஒப்பந்தத்தின் காரணமாக அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்து பிரான்சு தனது தூதர்களைத் திரும்ப அழைத்துள்ளது.
- AUKUS இராணுவ ஒப்பந்தமானது இந்திய பசிபிக் பகுதியில் நிலவும் இராணுவ அபாயங்களை எதிர்கொள்வதற்காகவும் ஆஸ்திரேலிய நாட்டிற்கு அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களை வழங்குவதற்காகவும் மேற்கொள்ளப்பட்டதாகும்.
- இந்த நீர்மூழ்கிக் கப்பல்கள் ஐக்கிய ராஜ்ஜியம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் ஆதரவோடு ஆஸ்திரேலிய நாட்டிலேயே கட்டமைக்கப்படும்.

## உலகின் மிக வயதான ஒத்த இரட்டையர்கள்

- கின்னஸ் உலக சாதனை அமைப்பானது ஜப்பான் நாட்டினைச் சேர்ந்த இரு சகோதரிகளை 'உலகின் மிக வயதான ஒத்த இரட்டையர்கள்' என சான்றளித்துள்ளது.
- கின்னஸ் சாதனை படைத்த அந்த இரட்டைச் சகோதரிகள் உமேனோ சுமியம்மா மற்றும் கவுமே கோடமா ஆகியோராவர்.
- இருவரும் 107 வயது ஆனவர்களாவர்.



## உணவு தானிய உற்பத்தி – இந்தியா

- இந்தியாவின் உணவு தானிய உற்பத்தியானது அதிக அரிசி உற்பத்தியுடன் 2021 ஆம் ஆண்டு காரீஃப் பருவத்தில் 150.50 மில்லியன் டன் என்ற உச்சத்தைத் தொடும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- வேளாண் அமைச்சகம் இத்தகவலைக் கூறியுள்ளது.
- அரிசு, கரும்பு மற்றும் பருத்தியில் உச்சகட்ட உற்பத்தியானது எதிர்பார்க்கப்படுகிறது.

## மின்சார வாகனங்களுக்கான மின்னேற்றி

- இந்திய வாகன ஆராய்ச்சிக் கூட்டமைப்பானது (ARAI - Automotive Research Association of India) மின்சார வாகனங்களுக்காக வேண்டி உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மின்னேற்றிகளை உருவாக்கியுள்ளது.
- ARAI அமைப்பானது AC001 என்ற ஓர் உள்நாட்டுத் தொழில்நுட்பத்தினை உருவாக்கி உள்ளது.
- இந்தத் தொழில்நுட்பமானது பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தினால் அதன் உற்பத்தி மற்றும் மேம்பாட்டுப் பணிக்காக பயன்படுத்தப்பட்டது.
- மகாராஸ்டிராவின் தாக்வே எனுமிடத்தில் ARAI தனது புதிய மையம் ஒன்றினையும் நிறுவியுள்ளது.

## 2050 ஆம் ஆண்டுக்குள் 3வது மிகப்பெரிய இறக்குமதி நாடாக மாற உள்ள இந்தியா

- 2050 ஆம் ஆண்டுக்குள் உலகின் 3வது மிகப்பெரிய இறக்குமதி நாடாக இந்தியா மாறும் வாய்ப்புள்ளது.
- ஐக்கிய ராஜ்ஜியத்தின் சர்வதேச வர்த்தகத் துறையினால் வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில் இத்தகவலானது கூறப்பட்டுள்ளது.
- 2050 ஆம் ஆண்டில் உலகளாவிய இறக்குமதியில் 5.9 சதவீத பங்களிப்புடன் இந்தியா உலகின் 3வது மிகப்பெரிய இறக்குமதி நாடாக மாறும்.
- சீனா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு அடுத்த நிலையில் இந்தியா இடம் பெறும்.
- உலகின் மிகப்பெரிய இறக்குமதி நாடுகளின் பட்டியலில் 2.8% பங்களிப்புடன் இந்தியா தற்போது 8வது இடத்தில் உள்ளது.
- உலகளாவிய வர்த்தகக் கண்ணோட்ட அறிக்கையின்படி, இந்தப் பட்டியலில் 2030 ஆம் ஆண்டுக்குள் 3.9% பங்களிப்புடன் இந்திய நாட்டின் நிலை 4வது இடத்திற்கு உயரும்.

**Upward trajectory**

India is ranked eighth among largest importing nations with a 2.8% global import share and is set to become the fourth largest importer by 2030.

| Rank | 2019 | 2030 | 2050 |
|---|---|---|---|
| 1 | United States | China | China |
| 2 | China | United States | United States |
| 3 | Germany | Germany | **India** |
| 4 | France | **India** | Germany |
| 5 | UK | UK | UK |
| 6 | Japan | Japan | France |
| 7 | Netherlands | France | Netherlands |
| 8 | **India** | Netherlands | Japan |
| 9 | Hong Kong | Hong Kong | Hong Kong |
| 10 | South Korea | Canada | Vietnam |

## உலக சுகாதார அமைப்பின் புதிய காற்றுத் தர நிர்ணய விதிமுறைகள்

- உலக சுகாதார அமைப்பானது 2005 ஆம் ஆண்டுக்குப் பிறகு தனது காற்றுத்தர நிர்ணய விதிமுறைகளின் முதல் மேம்பட்ட பதிப்பினை வெளியிட்டுள்ளது.
- 24 மணிநேர சராசரிக்கான p.m 2.5 விதிமுறையானது 2005 ஆம் ஆண்டிலிருந்த 25 மைக்ரோ – கி/மீ$^3$ என்பதற்குப் பதிலாக 15 மைக்ரோ – கி/மீ$^3$ என மாற்றப்பட்டுள்ளது.
- வருடாந்திர சராசரிக்கான p.m 2.5 விதிமுறையானது 2005 ஆம் ஆண்டிலிருந்த 10 மைக்ரோ – கி/மீ$^3$ என்பதற்குப் பதிலாக 5 மைக்ரோ – கி/மீ$^3$ என மாற்றப்பட்டுள்ளது.
- உலக சுகாதார அமைப்பினால் வெளியிடப்பட்ட காற்றுத் தரத்திற்கான இந்தத் திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களின்படி, ஆண்டின் பெரும்பாலான அளவில் இந்தியா முழுவதும் ஒரு மாசுபட்ட மண்டலமாக கருதப்படும்.

| Pollutant | Averaging time | 2005 AQGs | 2021 AQGs |
|---|---|---|---|
| $PM_{2.5}$, µg/m$^3$ | Annual | 10 | 5 |
| | 24-hour$^a$ | 25 | 15 |
| PM10, µg/m$^3$ | Annual | 20 | 15 |
| | 24-hour$^a$ | 50 | 45 |
| $O_3$, µg/m$^3$ | Peak season$^b$ | - | 60 |
| | 8-hour$^a$ | 100 | 100 |
| $NO_2$, µg/m$^3$ | Annual | 40 | 10 |
| | 24-hour$^a$ | - | 25 |
| $SO_2$, µg/m$^3$ | 24-hour$^a$ | 20 | 40 |
| CO, mg/m$^3$ | 24-hour$^a$ | - | 4 |




## உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநர்

- பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் இதர ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இணைந்து உலக சுகாதார அமைப்பின் தலைமை இயக்குநரான எத்தியோப்பியா நாட்டினைச் சேர்ந்த டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் என்பவரை 2வது முறையாக அந்தப் பதவிக்குப் பரிந்துரை செய்துள்ளன.
- ஐக்கிய நாடுகள் அமைப்பின் சுகாதார அமைப்பின் உயர்பதவிக்குச் சொந்த நாட்டினாலேயே ஒருவர் பரிந்துரைக்கப் படாதது இதுவே முதல்முறையாகும்.

## உணவுப் பாதுகாப்பு ஒப்பந்தம்

- ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்ட அமைப்பு மற்றும் மிதமான வறண்ட வெப்ப மண்டலப் பகுதிகளுக்கான சர்வதேசப் பயிர் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை இணைந்து உணவுப் பாதுகாப்பு குறித்த ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொண்டுள்ளன.
- இந்தியா முழுவதிலும் உணவு, ஊட்டச்சத்துப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரம் போன்றவற்றை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சி மீதான புரிந்துணர்வு ஒப்பந்தமும் கையெழுத்தானது.
- ICRISAT என்ற அமைப்பின் தலைமையிடமானது ஹைதராபாத்தின் பட்டன்சேரு என்னுமிடத்தில் அமைந்துள்ளது.
- 1961 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட உலக உணவுத் திட்ட அமைப்பின் தலைமையிடமானது ரோமில் அமைந்துள்ளது.

## சர்வதேசப் புத்தாக்க நிறுவன மையங்கள் தரவரிசை 2021

- இந்தத் தரவரிசையானது ஜீனோம் என்ற புத்தாக்க நிறுவனத்தின் வருடாந்திர உலகளாவியத் புத்தாக்க நிறுவனச் சூழலமைவு அறிக்கைக்காக (2021) வேண்டி அந்நிறுவனத்தினால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

- இதன்படி லண்டன், மும்பை மற்றும் பெங்களூரு ஆகியவை உலகின் முன்னணி புத்தாக்க நிறுவன மையங்களாக இடம் பெற்றுள்ளன.
- இதில் பெங்களூரு 24வது இடத்தினைப் பெற்றுள்ளது.
- இதில் டெல்லி 36வது இடத்தில் உள்ளது.
- செயல்திறன், நிதி, திறன் மற்றும் சந்தை ஆராய்ச்சி உள்ளிட்ட துறைகளில் வேகமாக வளர்ந்து வரும் சூழல் அமைவுகளை விஞ்சி அப்பிரிவில் மும்பை முதலிடத்தைப் பெற்றுள்ளது.
- உலகின் 4வது மிகப்பெரியத் தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கத் தொகுப்பமைவாக கர்நாடக மாநிலம் திகழ்கிறது.

## உலக தானக் குறியீடு – 2021

- தொண்டு உதவி அறக்கட்டளையானது (Charities Aid Foundation) இந்த அறிக்கையை சமீபத்தில் வெளியிட்டது.
- இந்தக் குறியீட்டில் இந்தியா 14வது இடத்தில் உள்ளது.
- இந்தக் குறியீட்டில் வேகமாக முன்னேறி வரும் நாடுகளில் இந்தியாவும் ஒன்று என இந்த அறிக்கை கூறுகிறது.
- இந்த அறிக்கையின்படி,
  - 2020 ஆம் ஆண்டு கோவிட்-19 தொற்றின் போது 61% இந்தியர்கள் அந்நியர்களுக்கு உதவி செய்துள்ளனர்.
  - 34% இந்தியர்கள் பணத்தை நன்கொடையாக அளித்துள்ளனர்.
  - 34% இந்தியர்கள் இந்தியாவில் சமூக நலன் சார்ந்த நடவடிக்கைகளுக்கான முன் வந்துள்ளனர்.
  - உலகின் மிகவும் தாராளமிக்க நாடாக இந்தோனேசியா உள்ளது.




## நிலவிலுள்ள பள்ளத்திற்கு மேத்யூ ஹென்சனின் பெயர்

- நிலவின் தென்துருவத்திலுள்ள பள்ளம் ஒன்றிற்கு ஆர்டிக் பகுதி ஆய்வாளரான மேத்யூ ஹென்சன் என்பவரின் பெயரை சர்வதேச வானியல் ஒன்றியம் சூட்டியுள்ளது.

- மேத்யூ ஹென்சன் என்பவர் 1909 ஆம் ஆண்டில் உலகின் உயரமான இடத்தில் ஏறி நின்ற முதல் மனிதர்களுள் ஒருவராவார்.



## பழமையான மனித கால்தடங்கள்

- 23,000 ஆண்டுகள் பழமையான கால்தடங்கள் அமெரிக்காவில் கண்டறியப் பட்டு உள்ளன.
- கடைசிப் பனிக்காலத்தின் முடிவிற்கும் முன்பாகவே வட அமெரிக்காவில் மனிதன் குடியேறினான் என்பதை இது அறிவுறுத்துகிறது.
- தற்போது நியூ மெக்சிகோ பாலைவனத்தின் ஒரு பகுதியாக இருக்கும் ஒரு நீண்ட காலமாக வறண்டு காணப்படும் ஏரியின் கரையின் சேற்றில் இந்த கால்தடங்கள் பதிந்துள்ளன.



## QUAD நாடுகளின் தலைவர்கள் உச்சி மாநாடு – 2021

- இந்தியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் நாற்கரப் பாதுகாப்புப் பேச்சு வார்த்தைக்கான முதல் தனிநபர் சந்திப்பானது வாசிங்டன்னில் நடத்தப் பட்டது.
- இந்தச் சந்திப்பில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களும் அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளின் தலைவர்களும் பங்கேற்றனர்.

- அமெரிக்க அதிபர் ஜோ பைடன் இவர்கள் அனைவரையும் வெள்ளை மாளிகையில் வைத்துச் சந்தித்தார்.
- 'குவாட் நாடுகளின் தடுப்பு மருந்து முன்னெடுப்பானது' இந்தோ பசிபிக் நாடுகளுக்கு உதவும் எனவும் பிரதமர் மோடி அவர்கள் கூறினார்.




## ஐக்கிய நாடுகள் பொதுச் சபை – பிரதமர் மோடி

- பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் நியூயார்க்கில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 76வது கூட்டத்தில் உரையாற்றினார்.
- இந்த ஆண்டின் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் மாநாட்டில் உரையாற்றிய முதல் உலகத் தலைவர் பிரதமர் நரேந்திர மோடி ஆவார்.
- 2019 ஆம் ஆண்டிற்குப் பிறகு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் ஒரு கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றுவது இரண்டாம் முறையாகும்
- 2021 ஆம் ஆண்டிற்கான பொது விவாதத்தின் கருப்பொருள் கோவிட்-19 தொற்றிலிருந்து மீண்டு நம்பிக்கையுடன் நிலையான புனரமைத்தல், புவிக் கிரகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்தல், மக்களின் உரிமைகளை மதித்தல் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்பைப் புத்துயிர் பெறச் செய்தல் போன்றவற்றின் மூலம் ஒரு நெகிழ்திறனைக் கட்டமைத்தல் என்பதாகும்.

## உலக சுகாதார நிதிக்கான உலக சுகாதார அமைப்பின் தூதர்



- உலக சுகாதார நிதிக்கான உலக சுகாதார அமைப்பின் தூதராக கார்டன் பிரவுன் என்பவரை உலக சுகாதார அமைப்பு நிர்ணயித்துள்ளது.
- இவர் ஐக்கிய ராஜ்ஜியத்தின் முன்னாள் பிரதமராவார்.
- 2009 ஆம் ஆண்டு லண்டனில் நடைபெற்ற G20 உச்சி மாநாட்டில் தனது தலைமைத்துவத்தின் மூலம் இரண்டாவது பெரும் பொருளாதார வீழ்ச்சி நிலையை தடுத்தப் பெருமைக்கு அவர் உரியவராவார்.

## AUKUS அமைப்பில் இந்தியா, ஜப்பான் ஆகிய நாடுகளின் இணைப்பினை அமெரிக்கா நிராகரிப்பு

- அமெரிக்க அதிபர் ஜோ பைடன், ஆஸ்திரேலியப் பிரதமர் ஸ்காட் மோரிசன் மற்றும் பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் ஆகியோர் இணைந்து AUKUS எனப்படும் ஒரு முத்தரப்புப் பாதுகாப்புக் கூட்டணியை உருவாக்க உள்ளதாக அறிவித்துள்ளனர்.
- இதன்கீழ், ஆஸ்திரேலியா முதல்முறையாக அணுசக்தியால் இயங்கும் நீர்மூழ்கிக் கப்பல்களைப் பெற உள்ளது.
- உத்திசார் இந்தோ பசிபிக் பகுதியில் 21 ஆம் நூற்றாண்டின் சவால்களை எதிர்கொள்ள ஆஸ்திரேலியா மற்றும் பிரிட்டன் ஆகியவற்றுடனான புதிய முத்தரப்புப் பாதுகாப்புப் கூட்டிணைவில் இந்தியா (அ) ஜப்பான் நாடுகளை இணைப்பதற்கு அமெரிக்கா நிராகரித்துள்ளது.

## தன்பாலினத் திருமணம் – சுவிட்சர்லாந்து

- சுவிட்சர்லாந்து நாட்டின் வாக்காளர்கள் தன்பாலினத் திருமணத்தைச் சட்டப் பூர்வமாக்க முடிவெடுத்துள்ளனர்.
- இதன் மூலம் இத்தகைய நடவடிக்கையை எடுத்த கடைசி ஐரோப்பிய ஒன்றிய நாடாக சுவிட்சர்லாந்து மாறியுள்ளது.
- இந்தத் திருத்தப்பட்ட சட்டத்தின் கீழ், தன்பாலினத் தம்பதியினர் உரிமையியல் சார்ந்த திருமணத்தை நடத்த முடியும்.
- ஈரினத் தம்பதியினருக்கு வழங்கப்படுவது போன்ற நிறுவன மற்றும் சட்டப்பூர்வ உரிமைகள் இவர்களுக்கும் வழங்கப்படும்.



# பொருளாதாரச் செய்திகள்

## நேரடிக் காப்பீட்டுத் தரகு நிறுவனம் – போன்பே




- Phonepe (போன்பே) நிறுவனமானது இந்தியாவின் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையத்திடமிருந்து நேரடிக் காப்பீட்டுத் தரகுமுறைக்கான ஒரு உரிமத்தினைப் பெற்றுள்ளது.
- இனி இந்த நிறுவனம் தற்போது ஒரு நேரடிக் காப்பீட்டுத் தரகு நிறுவனமாகச் செயல்படும்.
- Phonepe நிறுவனமானது வரையறுக்கப்பட்ட காப்பீட்டு 'பெருநிறுவன முகவர்' என்ற உரிமத்துடன் 2020 ஆம் ஆண்டில் காப்பீட்டுத் தொழில்நுட்பத் துறையில் நுழைந்தது.

## FY22 நிதியாண்டின் முதல் காலாண்டில் இந்தியாவின் GDP வளர்ச்சி




- ஜுன் 2021 வரையிலான காலாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி ஒரு சாதனை உச்சத்தை எட்டியது எனப் புள்ளி விவரங்கள் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகத்தின் தரவுகளில் கூறப்பட்டுள்ளது.
- 2020 ஆம் ஆண்டின் காலாண்டில் ஏற்பட்ட 24.4% சரிவுடன் ஒப்பிடுகையில் அதே கால கட்டத்திலான 2021 ஆம் ஆண்டின் 3 மாத காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 20.1% ஆக உயர்ந்துள்ளதாக தரவுகள் கூறுகிறது.
- காலாண்டு ரீதியிலான தரவுகள் வெளியிடப்பட தொடங்கியது முதல் இன்று வரையில் இதுவே இந்தியாவின் மிக வேகமான வளர்ச்சியாகும்.
- இந்த வளர்ச்சியானது இந்திய ரிசர்வ் வங்கியின் கணிப்பை (21.4%) விட சற்று குறைவானதேயாகும்.

## Bill Desk நிறுவனத்தினை வாங்கும் Payu நிறுவனம்

- நெதர்லாந்திலுள்ள பிரோசஸ் NV நிறுவனமானது Bill Desk எனும் இந்திய டிஜிட்டல் பணவழங்கீட்டு நிறுவனத்தினை வாங்கி அதனைத் தனது சொந்த நிதிச் சேவை வணிகமான Payu நிறுவனத்துடன் இணைக்க உள்ளதாக அறிவித்துள்ளது.
- இந்த ஒப்பந்தத்தின் மதிப்பு 4.7 பில்லியன் டாலர்களாகும்.
- இதன்மூலம் Payu மற்றும் Bill Desk ஆகிய ஒன்றிணைந்த நிறுவனமானது மொத்தப் பணவழங்கீட்டு அளவில் உலகளவில் மற்றும் இந்தியாவில் முன்னணி இணையப் பணவழங்கீட்டு நிறுவனமாக திகழும்.

## CBDC திட்டம்




- ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், மலேசியா, மற்றும் தென் ஆப்பிரிக்க நாடுகளின் மத்திய வங்கிகள் சமீபத்தில் மத்திய வங்கி டிஜிட்டல் பணத் திட்டம் (Central Bank Digital Currencies – CBDC) என்ற ஒரு திட்டத்தினைத் தொடங்கியுள்ளன.
- CBDC திட்டமானது மலிவான மற்றும் சுலபமான முறையில் பரிமாற்றம் செய்ய வழி வகை செய்கிறதா என்பதை மதிப்பிடுவதற்காக பல்வேறு மத்திய வங்கி டிஜிட்டல் பணத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் எல்லைகளுக்கிடையேயான ஒரு பண வழங்கீட்டு களச் சோதனையாகும்.
- CBDC என்பது ஏற்கனவே நடப்பில் உள்ள பணத்தின் ஒரு டிஜிட்டல் வடிவமாகும்.

## புதிய தலைமை நிறுவனங்கள் உரிமம் மீதான குழு

- இந்திய ரிசர்வ் வங்கியானது புதிய தலைமை நிறுவனங்கள் (New Umbrella Entity - NUE) உரிமத்திற்கான விண்ணப்பங்களை ஆராயவும், அது பற்றிய பரிந்துரைகளை வழங்கவும் வேண்டி ஒரு குழுவினை நியமித்துள்ளது.
- இந்த 5 உறுப்பினர்கள் கொண்ட குழுவிற்கு P. வாசுதேவன் தலைமை ஏற்க உள்ளார்.
- பெரிய பொருளாதாரத் தாக்கத்திலிருந்துப் பாதுகாப்பு இடர்கள் வரையிலான NUE உரிமத்தின் பல்வேறு அம்சங்களைக் கண்காணிப்பது இக்குழுவின் பொறுப்பாகும்.

*குறிப்பு*


- லாப நிறுவனங்கள் விற்பனைப் பிரிவுகளில் பணவழங்கீட்டினை மேலாண்மை செய்வதற்காக புதிய தலைமை நிறுவனங்கள் நிறுவப்படும்.
- இந்திய ரிசர்வ் வங்கியானது இந்தியத் தேசியப் பணவழங்கீட்டுக் கழகத்திற்கு இணையாக ஒரு புதிய தலைமை நிறுவனக் கட்டமைப்பினை உருவாக்க நிறுவனங்களுக்கு அழைப்பு விடுத்துள்ளது.





## சிறப்பு கடன் வாங்கும் உரிமைகள் – இந்தியாவிற்கான இடஒதுக்கீடு

- சர்வதேச நாணய நிதியமானது இந்தியாவிற்கு 12.57 மில்லியன் (N 17.86 பில்லியன் டாலர்) மதிப்பிலான சிறப்பு கடன் வாங்கும் உரிமைகளை வழங்கியுள்ளது.
- இத்தோடு இந்தியாவின் மொத்த சிறப்பு கடன் வாங்கும் உரிமையின் வைப்பானது 13.66 பில்லியனாக (19.41 பில்லியன் டாலருக்குச் சமம்) உயர்ந்துள்ளது.

- சிறப்பு கடன் வாங்கும் உரிமையானது இந்தியாவின் அந்நியச் செலாவணி இருப்புகளின் கூறுகளில் ஒன்றாகும்.
- எனவே அந்நியச் செலாவணி இருப்பும் தற்போது உயர்ந்துள்ளது.




## மாற்று முதலீட்டு நிதி




- இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்திடம் பதிவு செய்யப்பட்ட ASK முதலீட்டு மேலாண்மை நிறுவனமானது இந்தியாவிலுள்ள மிகப்பெரிய தொகுப்பு முதலீட்டு மேலாண்மை சேவை வழங்குநர் நிறுவனங்களுள் ஒன்றாகும்.
- இது இந்தியாவின் முதலாவது டிஜிட்டல் மாற்று முதலீட்டு நிதியை (Digital Alternate Investment Fund) தொடங்கியுள்ளது.
- மாற்று முதலீட்டு நிதி என்பது வழக்கமான முதலீட்டுப் பிரிவுகளில் சேராத நிதியியல் சொத்தாகும்.
- இதில் தனியார் பங்கு (அ) துணிகர முதலீடு, கொள்முதல் நிதி, நிர்வகிக்கப்பட்ட எதிர்காலம், கலை மற்றும் பழமையான பொருட்கள், சரக்குப் பொருட்கள் மற்றும் கொணர்வு ஒப்பந்தங்கள் ஆகியவை அடங்கும்.

## டிஜிட்டல் கட்டண மதிப்பீடு அட்டை

- ❖ பேங்க் ஆஃப் பரோடா வங்கியானது பிப்ரவரி மற்றும் மார்ச் 2021 மாதத்திற்கான MeitY (மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்) கட்டண மதிப்பீட்டில் முதலிடத்தில் உள்ளது.
- ❖ இந்த மதிப்பீட்டு அட்டையானது 44 வங்கிகளை (பொதுத்துறை வங்கிகள், தனியார் வங்கிகள், வெளிநாட்டு வங்கிகள், கொடுப்பனவு வங்கிகள், சிறு நிதி வங்கிகள்) டிஜிட்டல் வணிகத்தில் பல்வேறு அளவுகோல்கள் வழியே தரவரிசைப் படுத்துகிறது.

## PM – KUSUM திட்டம்

- ❖ சூரிய ஆற்றலூட்டப்பட்ட பம்புகளை (குழாய்) பொருத்திய முதல் மாநிலமாக ஹரியானா மாறியுள்ளது.
- ❖ இத்திட்டத்தின் கீழ், அம்மாநிலத்தில் 75% மானியத்துடன் சூரியசக்தி பம்புகள் பொருத்தப் பட்டு வருகின்றன.
- ❖ இவற்றை நீர்ப்பாசன வசதிக்காக மட்டுமே விவசாயிகள் நிறுவ முடியும்.

## தினை திட்டம்

- ❖ சத்தீஸ்கர் மாநிலமானது விவசாயிகளுக்காக தினை திட்டத்தினைத் தொடங்குகிறது.
- ❖ மாநில முதல்வர் பாகேல் அவர்கள் ஹைதராபாத்திலுள்ள இந்திய தினை ஆராய்ச்சி நிறுவனத்துடன் இது தொடர்பான ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்து இட்டார்.
- ❖ இது இம்மாநிலத்தை இந்தியாவின் தினை உற்பத்தி மையமாக மாற்ற உதவும்.
- ❖ 2023 ஆம் ஆண்டானது சர்வதேச தினை வருடமாக அனுசரிக்கப்படும்.

## PMGDISHA




- ❖ அனைத்து டிஜிட்டல் கிராமங்களின் மீதான 100% டிஜிட்டல் கல்வியறிவிற்காக வேண்டி PMGDISHA திட்டத்தின் கீழ் பிரதான் மந்திரி கிராமின் டிஜிட்டல் சக்சார்த்தா அபியான் (Pradhan Mantri Gramin Digital Saksharta Abhiyan) என்ற இயக்கமானது தொடங்கப் பட்டுள்ளது.
- ❖ இது கிராமப்புறப் பகுதிகளுக்காக அரசினால் தொடங்கப்பட்ட ஒரு முதன்மையான டிஜிட்டல் கல்வியறிவு திட்டமாகும்.
- ❖ இது 2020 ஆம் ஆண்டில் கிராமப்புறப் பகுதிகளிலுள்ள 6 கோடி நபர்களை டிஜிட்டல் கல்வியறிவைப் பெறச் செய்கிறது.

- டிஜிட்டல் கல்வியறிவினைப் பெறாத ஒவ்வொரு குடும்பத்திலிருந்தும் ஒரு நபருக்கு டிஜிட்டல் கல்வியறிவினை இது வழங்க உள்ளது.
- இந்த இயக்கத்தின் கீழ், கிராமப்புற மக்களுக்கு குறிப்பாக பெண்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு மூன்று நாள் அளவிலான ஒரு சான்றிதழ் பயிற்சி இயக்கம் நடத்தப் படும்.
- அனைத்து டிஜிட்டல் கிராமங்களையும் 100% டிஜிட்டல் கல்வியறிவு பெற்றதாக மாற்றும் வகையில் பொதுச் சேவை மையங்களும் நிறுவப்படும்.

## UPI மற்றும் Paynow

- இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகள் ஒருங்கிணைந்த பணவழங்கீட்டு இடைமுகம் மற்றும் Paynow ஆகியவற்றை இணைக்க உள்ளதைக் குறித்து அறிவித்து உள்ளன.
- பயனர்களுக்கு உடனடி மற்றும் குறைந்த விலை நிதிப் பரிமாற்றங்களைச் செய்திட உதவுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

## மாநிலங்களின் கடன்

- பொருளாதாரச் சந்தையிருந்து ரூ.15,721 கோடி அளவில் கூடுதல் நிதியினை கடனாகப் பெறுவதற்கு 11 மாநிலங்களுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.
- இந்த மாநிலங்கள் 2021-22 ஆம் நிதியாண்டின் ஜுன் வரையிலான காலாண்டுப் பகுதிக்காக நிதி அமைச்சகம் நிர்ணயித்த மூலதனச் செலவின இலக்குகளைப் பூர்த்தி செய்துள்ளன.
- அவற்றின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 0.25 சதவீதத்திற்குச் சமமான கூடுதல் பொதுச் சந்தைக் கடன் அனுமதியானது அவற்றிற்கு வழங்கப்பட்டது.
- மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் மீதான 4 சதவீதத்தின் மொத்த நிகரக் கடன் வரம்பில் 0.50 சதவீதமானது 2022 ஆம் நிதியாண்டின் போது மாநிலங்களுக்கு ஆகும் அதிகப் படியான மூலதனச் செலவினங்களுக்காக வேண்டி ஒதுக்கப்பட்டது.
- அந்த மாநிலங்களாவன: ஆந்திரப் பிரதேசம், பீகார், சத்தீஸ்கர், ஹரியானா, கேரளா, மத்தியப் பிரதேசம், மணிப்பூர், மேகாலயா, நாகாலாந்து, ராஜஸ்தான் மற்றும் உத்தரகாண்ட் ஆகியனவாகும்.

## பயிர்த்தாளடி எரிப்பு மீதான மானியம்

- மத்திய அரசானது உத்தரப் பிரதேசம், டெல்லி, பஞ்சாப் மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களில் பயிர்த்தாளடி எரிப்புப் பிரச்சினைக்கான இயந்திரத்திற்காக என்று மானியத் தொகையினை வழங்கியுள்ளது.

- ❖ இது 2021-22 ஆம் ஆண்டின் பயிர்த் தாளடிகளின் உள்ளக விவகாரம் (இடம் சார்ந்த) சார்ந்த மேலாண்மைக்காக தேவைப்படுகிறது.
- ❖ இது டெல்லி மற்றும் தேசிய நகர்ப்புறப் பகுதியில் நிலவும் காற்று மாசுபாட்டுப் பிரச்சினைக்குத் தீர்வு காணுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ அருகாமையிலுள்ள ஹரியானா, பஞ்சாப் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலுள்ள பயிர்த் தாளடி எரிப்புப் பிரச்சினையால் இந்த மாசுபாடு ஏற்படுகிறது.

## டிஜிட்டல் இந்தியா நிலப்பதிவுகளை நவீனமாக்கல் திட்டம்




- ❖ இது நிலவளத்துறையினால் மேற்கொள்ளப்படும் மத்திய அரசின் திட்டமாகும்.
- ❖ 3 மாநிலங்கள் தவிர பெரும்பாலான மாநிலங்கள் தங்களது நிலப்பதிவுகளை மத்திய அரசின் இணையதளத்தில் ஒருங்கிணைக்கின்றன என்று மத்திய அரசு தெரிவித்தது.
- ❖ இந்திய உணவுக் கழகம் என்ற தலைமை கொள்முதல் நிறுவனத்துடன் தங்களது டிஜிட்டல் நிலப்பதிவுகளை ஒருங்கிணைத்த மூன்று மாநிலங்களாவன: அசாம், உத்தரகாண்ட் மற்றும் ஜம்மு & காஷ்மீர் ஆகியன ஆகும்.
- ❖ கொள்முதல் செய்வதற்கு முன்பாக நிலப்பதிவுகளைச் சரிபார்ப்பது என்பது குறைந்த பட்ச ஆதார விலைப் பயன் என்பது வணிகர்களை அல்லாமல் சரியான விவசாயிகளைச் சென்றடைவதை உறுதி செய்ய உதவும்.
- ❖ விவசாயிகள் அவர்களது சொந்த நிலத்திலோ அல்லது குத்தகை நிலத்திலோ பயிரிடப் படும் பயிரானது அரசாங்கத்தினால் கொள்முதல் செய்யப்படும்.

## ஒழுங்குமுறைக் கட்டமைப்பின் கீழ் கூட்டிணைவு

- ❖ இந்திய ரிசர்வ் வங்கியானது ஒழுங்குமுறைக் கட்டமைப்பு (சாண்ட்பாக்ஸ்) என்பதின் கீழ் மூன்றாவது கூட்டிணைவுக்கான கருத்துருவை 'MSME Lending' என அறிவித்து உள்ளது.

- ஒழுங்குமுறைக் கட்டமைப்பு என்பது கட்டுப்படுத்தப்பட்ட/சோதனை ஒழுங்குமுறைச் சூழலில் புதிய தயாரிப்புகள் அல்லது சேவைகளின் நேரடி சோதனையைக் குறிக்கச் செய்வதால் அதற்காக வேண்டி கட்டுப்பாட்டாளர்கள் சோதனையின் வரையறுக்கப் பட்ட நோக்கத்திற்காக சில ஒழுங்குமுறைத் தளர்வுகளை அனுமதிக்கலாம் (அல்லது அனுமதிக்கலாம் இருக்கலாம்).
- முதல் கூட்டிணைவு - 2020 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தில் சில்லறைப் பண வழங்கீடுகள் மீது.
- இரண்டாவது கூட்டிணைவு - 2021 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்தில் எல்லை கடந்த கொடுப்பனவுகள் மீது.

## இராணுவத் தலைவர்களின் மாநாடு

- இந்திய இராணுவத் தலைவர்களின் 8வது மாநாடானது புதுடெல்லியில் நடத்தப் பட்டது.
- இது இந்திய இராணுவத்தின் தற்போதைய மற்றும் முன்னாள் இராணுவத் தலைவர்களின் சந்திப்பாகும்.
- இதில் இந்திய இராணுவத் தலைவர்களாகவும் இருந்த நேபாள இராணுவத்தின் முன்னாள் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.





## கண்காணிக்கப்படும் விமான நிலையம்

- மத்திய மறைமுக வரி மற்றும் சுங்கவரி வாரியமானது குஷிநகர் விமான நிலையத்தினை சுங்கவரி அமைப்பினால் கண்காணிக்கப்படும் ஒரு விமான நிலையமாக அறிவித்தது.
- இது புத்த யாத்ரீகர்கள் உள்ளிட்ட சர்வதேசப் பயணிகளின் பயணத்தினை எளிதாக்கச் செய்யும்.
- குஷிநகர் விமான நிலையமானது உத்தரப் பிரதேசத்தில் உள்ள ஒரு சர்வதேச விமான நிலையமாகும்.

## ஈக்வினாக்ஸ்

- இன்போசிஸ் நிறுவனமானது பல்வேறு நிறுவனங்களுக்கு உதவுவதற்காக வேண்டி இன்போசிஸ் ஈக்வினாக்ஸ் என்ற ஒரு தளத்தினைத் தொடங்கியுள்ளது.
- இது B2B மற்றும் B2C முறையில் ஈடுபடும் வரவு செலவு நிறுவனங்களுக்கு உயர்பிரிவு மிக்க, தனிப்பயனாக்கப்பட்ட பல்வேறு தரப்பட்ட ஒரு வர்த்தக அனுபவத்தினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## வர்த்தகம் மற்றும் மேம்பாட்டு அறிக்கை – 2021




- 2021 ஆம் ஆண்டில் இந்தியாவின் GDP வளர்ச்சியானது 7.2% ஆக உயரும் என ஐக்கிய நாடுகள் வர்த்தகம் மற்றும் வளர்ச்சி மாநாட்டு அமைப்பின் (UNCTAD) அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த வளர்ச்சி வீதத்துடன் சீனாவிற்கு அடுத்த நிலையில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரமாக இந்தியா திகழும்.
- 2022 ஆம் ஆண்டில் 6.7% என்ற மெதுவான வளர்ச்சியுடன் கூடிய நிலையிலும் இந்திய நாடு வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரமாகவே திகழும்.

## உணவு விநியோகம் – சரக்கு மற்றும் சேவை வரி

- இணைய வணிக நிறுவனங்களான ஸ்விகி & சோமெட்டோ ஆகியவை சரக்கு மற்றும் சேவை வரி விதிப்பின் கீழ் வர உள்ளன.
- அவை வழங்கி வரும் உணவகச் சேவைகளுக்கு தற்போது அவை சரக்கு மற்றும் சேவை வரியினை செலுத்த வேண்டும்.
- உணவு விநியோகிக்கப்படும் இடத்தில் (நுகர்வோரிடம்) வரி விதிக்கப்படுவதே இந்த நடவடிக்கைக்கான காரணமாகும்.

- இதற்கு முன்பாக உணவகங்கள் இந்த வரியைச் செலுத்தின.




## 'வணிகத்தை எளிதாக்கல்' தரவரிசை




- உலக வங்கிக் குழுமமானது தனது 'வணிகத்தை எளிதாக்கல்' என்ற தரவரிசை வெளியீட்டை நிறுத்த முடிவு செய்துள்ளது.
- 2020 ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில், தரவுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பாக பல முறைகேடுகள் பதிவாகியிருப்பதை உலக வங்கி கண்டறிந்தது.
- தொழில் செய்வதில் ஏற்பட்ட முறைகேடுகள் நான்கு நாடுகளைப் பாதித்தன.
- அவையாவன சீனா, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு நாடுகள் மற்றும் அஜர்பைஜான் ஆகும்.

## வாராக் கடன் வங்கி (Bad bank) அமைப்பு

- வங்கிகளில் இருந்து வாராக் கடன் சொத்துக்களைக் கையகப்படுத்தி அவற்றைச் சந்தையில் விற்க அரசாங்கம் இரண்டு புதிய நிறுவனங்களை அமைத்துள்ளது.
- அதைச் செயல்படுத்துவதற்கு உத்தரவாதமாக ரூ .30,600 கோடியைப் பயன்படுத்த அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.
- NARCL-IDRCL அமைப்பு ஆனது இந்தப் புதிய Bad bank ஆகும்.
- "தேசிய சொத்து மறுசீரமைப்பு நிறுவனம்" (NARCL - National Asset Reconstruction Company Limited) ஆனது நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் ஏற்கனவே இணைக்கப் பட்டுள்ளது.

- இது பல்வேறுக் கட்டங்களில் பல்வேறு வணிக வங்கிகளிடமிருந்து சுமார் 2 லட்சம் கோடி மதிப்புள்ள வாராக் கடன் சொத்துக்களைக் கையகப்படுத்தும்.
- மற்றொரு நிறுவனம் இந்தியக் கடன் தீர்வு நிறுவனம் ஆகும் (IDRCL - India Debt Resolution Company Ltd).
- பொதுத் துறை வங்கிகளைப் பாதிக்கும் மோசமான வாராக் கடன்களின் மீதான பிரச்சனையைத் தீர்க்க Bad bank அமைக்கப்பட்டுள்ளது.




## இந்தியாவின் முதல் யூரோ பசுமைப் பத்திரம்

POWER FINANCE CORPORATION LIMITED

- பவர் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் நிறுவனமானது தனது முதல் 300 மில்லியன் யூரோ மதிப்பிலான 7 ஆண்டு கால யூரோ மதிப்பிலான பத்திரத்தை வெளியிட்டுள்ளது.
- இது இந்தியாவின் மின் துறையில் உள்ள ஒரு முன்னணி வங்கி சாரா நிதி நிறுவனம் ஆகும்.
- இந்தியாவிலிருந்து யூரோ மதிப்பினைக் கொண்ட ஒரு பசுமைப் பத்திரம் வழங்கப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- இது இந்தியாவின் ஒரு வங்கி அல்லாத நிதி நிறுவனத்தின் முதல் யூரோ வெளியீடு ஆகும்.
- 2017 ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்தியாவிலிருந்து வெளியாகும் முதல் யூரோ பத்திரம் இதுவே ஆகும்.
- பசுமைப் பத்திரம் என்பது குறிப்பிட்ட காலநிலை தொடர்பான அல்லது சுற்றுச்சூழல் திட்டங்களை ஆதரிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு நிலையான, வருமானக் கருவி ஆகும்.

## 45வது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம்




- சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி - சரக்கு மற்றும் சேவை வரி) மன்றத்தின் 45வது கூட்டத்திற்கு நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமை தாங்கினார்.
- உத்தரப் பிரதேச தலைநகர் லக்னோவில் ஒரு ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டம் நடத்தப் படுவது இதுவே முதல் முறையாகும்.
- கோவிட் -19 தொற்றுக்குப் பிறகு ஜிஎஸ்டி கவுன்சிலின் முதல் நேருக்கு நேர் சந்திப்பு இதுவாகும்.
- ஜிஎஸ்டி கவுன்சில் உறுப்பினர்கள் ஜிஎஸ்டியின் கீழ் பெட்ரோலியப் பொருட்கள் சேர்க்கப் படுவதை விரும்பவில்லை என்று தெளிவுபடுத்தினர்.
- ஜிஎஸ்டி வரி விதிப்பிலிருந்துப் பின்வரும் உயிர் காக்கும் மருந்துகளுக்கு விலக்கு அளிக்க முடிவு செய்யப் பட்டுள்ளது.
- அவை Zolgngelsma மற்றும் Viltepso (விலை சுமார் ரூ 16 கோடி), தசைச் சிதைவுக்குச் சிகிச்சையளிப்பதற்கான மருந்துகள் ஆகியனவாகும்.
- கப்பல்கள் மற்றும் விமானங்கள் மூலம் ஏற்றுமதி செய்யப் படும் பொருட்களின் போக்குவரத்திற்கும் ஜிஎஸ்டியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.


## ஆசியாமணி 2021 கருத்துக் கணிப்பு

- HDFC வங்கிக்கு 'இந்தியாவின் மிகச்சிறந்த நிறுவனம்' என்ற விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- இந்த வங்கி தொடர்ந்து 4வது ஆண்டாக 'இந்தியாவின் மிகச்சிறந்த நிறுவனம் – வங்கித் துறை' என்று வாக்களிக்கப் பட்டுள்ளது.
- இந்த கருத்துக் கணிப்பானது பொது மக்களிடையே ஒரு சிறந்த நிறுவனத்தை அடையாளம் கண்டு அதனை அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டதாகும்.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


## அதிவேகமாகச் சுற்றி வரும் குறுங்கோள்

- அமெரிக்காவின் கார்னெகி அறிவியல் கல்வி நிறுவனத்தின் வானியலாளர்கள் சூரியக் குடும்பத்தில் இதுவரை கண்டறியப்படாத அதிவேகமாக சுற்றி வரும் ஒரு குறுங்கோளினைக் கண்டறிந்துள்ளதாக அறிவித்தனர்.
- 2021 PH27 எனும் அதிவேகமாக சுற்றி வரும் குறுங்கோளானது இருள் ஆற்றல் (டார்க் எனர்ஜி) புகைப்படக் கருவியைக் கொண்டு கண்டறியப் பட்டது.
- 1 கிலோமீட்டர் விட்டமுடைய இந்தக் குறுங்கோள் 113 புவி நாட்களில் தனது சுழற்சியை நிறைவு செய்கிறது.




## இனக் கலப்பு புரத அடிப்படையிலான கோவிட்-19 தடுப்பு மருந்து

- ரிலையன்ஸ் லைஃப் சயின்சஸ் என்ற நிறுவனமானது தனது இனக்கலப்பு புரத அடிப்படையிலான கோவிட்-19 தடுப்பு மருந்தின் மீதான சோதனைகளை (recombinant protein-based COVID-19 vaccine) நடத்த உள்ளது.
- இந்தத் தடுப்பு மருந்து SARS-CoV-2 வைரசினுடைய ஸ்பைக் வடிவம் (முள் போன்ற) போன்ற புரதத்தினை ஆன்டிஜனாக பயன்படுத்துகிறது.
- இது மனித உடலில் கோவிட்-19 தொற்றினை எதிர்த்துப் போராட வல்ல வகையில் வலுவான ஒரு உத்வேக எதிர்வினையினை அடையாளம் கண்டு உருவாக்குவதற்கு உதவும்.




## தாவர அடிப்படையிலான உலகின் முதல் திறன்மிகு காற்று சுத்திகரிப்பான் – "Ubreathe Life"



- இந்த தயாரிப்பானது ரூபார் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தின் தொடக்க நிறுவனமாக Urban Air Laboratory என்ற நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டு வருகிறது.
- இந்த தயாரிப்பானது சுவாசத்தினைத் தூய்மையானதாக மாற்றக் கூடிய உலகின் முதல் அதிநவீன திறன்மிகு உயிரி வடிகலன் என்று கூறப்படுகிறது.
- இதில் பயன்படுத்தப்பட்டுள்ள தொழில்நுட்பமானது 'Urban Munnar Effect' என்றும், நிலுவையிலுள்ள காப்புரிமை "Breathing Roots" என்று அழைக்கப் படுகிறது.
- இந்த நிறுவனமானது அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையினால் இயக்கப் படும் பிரத்தியேக iHub – AWaDH என்ற மையம் (வேளாண் மற்றும் தொழில் நுட்ப மேம்பாட்டு மையம்) ஆகும்.

## மிகப்பெரிய அறிவியல் பூர்வ ஒத்துழைப்பு


- இங்கிலாந்தின் நிபுணர்கள் தலைமையில் உலகெங்கிலும் உள்ள இந்திய மருத்துவமனைகளில் நடத்தப்பட்ட உலகளாவிய கோவிட்-19 ஆய்விற்கு உலகின் மிகப்பெரிய அறிவியல்பூர்வ ஒத்துழைப்பு என்ற கின்னஸ் உலக சாதனை அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.
- 116 நாடுகளிலுள்ள சுமார் 1,40,000 நோயாளிகளிடையே இந்த ஆய்வானது மேற் கொள்ளப் பட்டது.
- உடன் பணியாளர் மறுமதிப்பீடு குறித்த பல ஆசிரியர்களின் கல்வித்தாளுக்கான சாதனையானது தற்போது பர்மிங்காம் மற்றும் எடின்பர்க் பல்கலைக்கழகத்தின் வசம் உள்ளது.
- அறுவைச் சிகிச்சை நோயாளிகள் மீது கொரோனா வைரசின் தாக்கம் குறித்த முக்கிய ஆய்விற்குப் பங்களித்த உலகெங்கிலுமுள்ள 15,025 அறிவியலாளர்களின் பெயரில் இது வழங்கப்பட்டது.

## IISC மற்றும் ISRO – நுண்ணுயிர் பரிசோதனைகள்

- இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் மற்றும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் விண்வெளியில் நுண்ணுயிர் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான ஒரு கருவியை உருவாக்கியுள்ளனர்.
- இந்த நவீன, உள்ளடக்கக் கருவியினை நுண்ணுயிரிகளை உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தலாம்.
- இது விண்வெளியில் கூட உயிரியல் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டி விஞ்ஞானிகளுக்கு உதவும்.
- இந்த ஆய்வானது ஆக்டா ஆஸ்ட்ரோநாட்டிகா என்ற இதழில் வெளியிடப்பட்டது.
- ஸ்போரோசார்சினா பாஸ்டியூரி என்ற பாக்டீரியத்தின் வளர்ச்சியை ஊக்குவிக்கவும் கண்காணிக்கவும் இந்தக் கருவியை எவ்வாறு பயன்படுத்தலாம் என அறிவியலாளர்கள் விளக்கியுள்ளனர்.

## தொற்று மற்றும் எப்பொழுதும் நிலவும் தொற்று குறித்த நுண்ணறிவிற்கான மையம்

- உலக சுகாதார அமைப்பானது ஜெர்மனியின் பெர்லினில் ஒரு மையத்தைத் திறந்து உள்ளது.
- இங்கு அடுத்த உலக சுகாதார நெருக்கடியிலிருந்து உலகைத் தயார்படுத்துவதில் உதவுவதற்காக தகவல்கள் பகிரப்படும்.
- இந்த மையமானது தொற்று மற்றும் எப்பொழுதும் நிலவும் தொற்று குறித்த நுண்ணறிவிற்கான மையம் என அழைக்கப் படுகிறது.
- பெருந்தொற்று, தொற்றுநோய் மற்றும் எப்பொழுதும் நிலவும் தொற்றிலிருந்து தரவுகளைக் கண்காணித்து, ஆய்ந்து, அவற்றைப் பயன்படுத்தி சிறப்பான தயார் நிலையோடு அவற்றைக் கணித்து மேலாண்மை செய்தல் எனும் ஒரு நோக்கத்தோடு இந்த முன்னெடுப்பு தொடங்கப்பட்டுள்ளது.





## சந்திரயான் – 2

- சந்திரயான் விண்கலமானது நிலவைச் சுற்றி 9000 சுற்றுகளை நிறைவு செய்துள்ளது.
- இது நிலவின் மேற்பரப்பில் ஒரு தொலைவு உணர்வி மூலம் மாங்கனீசு மற்றும் குரோமியம் ஆகியவற்றின் சிறு கூறுகளை முதன்முறையாகக் கண்டறிந்துள்ளது.
- நிலவின் மீது இந்த மூலக்கூறுகளின் எடை 1 சதவீதத்திற்கும் குறைவானது என்பதால் இந்தக் கண்டுபிடிப்பானது ஓர் ஆச்சரியமாக உள்ளது.
- குரோமியம் மற்றும் மாங்கனீசு ஆகிய இரு மூலக்கூறுகளும் தீவிரமான சூரியப் புயல் நிகழ்வின் போது சில இடங்களில் கண்டறியப்பட்டது.
- இதுவரையில் நிலவின் மேற்பரப்பில் இந்த மூலக்கூறுகள் இருப்பது முந்தைய ஆய்வுகக் கலன்களின் மூலம் புவிக்கு கொண்டு வரப்பட்ட மண் மாதிரிகள் மூலம் மட்டுமே கண்டறியப்பட்டது.
- விண்வெளித் துறையின் செயலாளரும் இஸ்ரோவின் தலைவருமான K. சிவன் அவர்கள் இத்திட்டத்தின் அறிவியல் மற்றும் தரவுப் பொருள் ஆவணங்களை (data product documents) வெளியிட்டார்.

## PgSIT

- கலிபோர்னியாவின் ஆராய்ச்சியாளர்கள் கருத்தடையின் மூலமாக கொசுக்களின் நோய்ப் பரப்பிகளைப் பாதுகாப்பான முறையில் கட்டுப்படுத்துவதற்காக CRISPR என்ற தொழில்நுட்பம் அடிப்படையிலான ஒரு முறையைக் கண்டறிந்துள்ளனர்.
- இது PgSIT அல்லது புதிய துல்லியமான வழிகாட்டப்பட்ட பூச்சி கருத்தடைத் தொழில் நுட்பம் எனப்படுகிறது.
- PgSIT ஆனது புதிய அளவிடக் கூடிய மரபணு கட்டுப்பாட்டுத் தொழில்நுட்பமாகும்.
- இது ஆண் கொசுக்களின் கருவுறுதல் தன்மையுடன் இணைக்கப்பட்ட மரபணுக்களை மாற்றி மலட்டுத் தன்மையுடைய சந்ததிகளையும் ஏடிஸ் எஜிப்தி வகையில் பெண் கொசுக்களையும் உருவாக்குகிறது.
- ஏடிஸ் எஜிப்தி என்பது டெங்கு காய்ச்சல், சிக்குன் குன்யா மற்றும் சிகா போன்ற பெருமளவிலான நோய்களைப் பரப்பக் கூடிய கொசு இனமாகும்.
- CRISPR தொழில் நுட்பமானது அடிப்படையில் ஒரு மரபணுவின் வெளிப்பாட்டினை மாற்றுவதற்காக (அ) ஓர் உயிரினத்தின் மரபணுவை மாற்றுவதற்காக பயன்படுத்தப் படும் ஒரு மரபணு மாற்றத் தொழில்நுட்பமாகும்.




## ஆசியாவின் முதலாவது கலப்பினத் தன்மை கொண்ட பறக்கும் மகிழுந்து (கார்)

- மத்திய வான்வழிப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா ஆசியாவின் முதலாவது கலப்பினத் தன்மையுடைய பறக்கும் மகிழுந்தின் மாதிரியினை ஆய்வு செய்தார்.
- இந்தப் பறக்கும் கார்கள், மக்கள் மற்றும் சரக்குப் பொருட்களின் போக்குவரத்திற்கும் மருத்துவ அவசரநிலைகளுக்கும் பயன்படுத்தப்படும் என அமைச்சர் கூறினார்.
- இந்தக் கார் இரு பயணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய முழு சுயச்சார்புடைய கலப்பின மின்சார VTOL (vertical take-off and landing) வாகனமாக இருக்கும்.
- இது சென்னையிலுள்ள வினாதா ஏரோ மொபிலிட்டி என்ற ஒரு நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டு வருகிறது.




## இருளாற்றல்

- சமீபத்தில், சர்வதேச ஆராய்ச்சியாளர்கள் குழு ஒன்று இருளாற்றலை நேரடியாகக் கண்டறிந்துள்ளது.
- XENON1T பரிசோதனையில் அவர்கள் சில எதிர்பாராத முடிவுகளை கவனித்தது மட்டுமல்லாமல் இருளாற்றலே அதற்குக் காரணமாக இருக்கலாம் என்றும் தெரிவித்து உள்ளனர்.
- இருளாற்றல் என்பது ஈர்ப்பு விசைக்கு நேர்மாறாக செயல்படக் கூடிய எதிர்மறையான மற்றும் தள்ளுவிசையுடன் கூடிய அழுத்தத்தைக் கொண்ட ஒரு அனுமான வடிவ ஆற்றலாகும்.
- XENON1T என்பது உலகின் மிக முக்கியமான ஒரு கரும்பொருள் சோதனையாகும்.
- இது இத்தாலியில் உள்ள INFN நேசியோனலி டெல் கிரான் சாசோ என்ற ஆய்வகத்தில் நிலத்திற்கடியில் ஆழமான இடத்தில் இயக்கப் படுகிறது.

| Dark Matter | Dark Energy |
|---|---|
| Dark matter is a hypothetical form of matter thought to account for approximately 85% of the matter in the universe. | Dark energy is an unknown form of energy that is hypothesized to permeate all of space, tending to accelerate the expansion of the universe. |
| 27% of the universe is dark matter | 68% of the universe is dark energy |
| Dark matter works like an attractive force that holds our universe together. | Dark energy is a repulsive force that causes the expansion of our universe. |

## குவாண்டம் தொழில்நுட்ப மையம்

- டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனமானது குவாண்டம் தொழில் நுட்ப மையத்தினை நிறுவியுள்ளது.
- இந்த மையமானது டெல்லியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் மேற்கொள்ளப் படும் நடவடிக்கைகளில் ஒருங்கிணைவு மற்றும் ஒத்திசைவினைக் கொண்டு வரும்.

- இது DST மற்றும் இதர நிறுவனங்களின் பல முக்கிய திட்டங்களுக்காக முக்கியப் புலனாய்வாளர்களை அதில் ஈடுபடுத்தத் தேவையான ஆதரவுகளை வழங்குகிறது.

Centre for Quantum Technologies

# சுற்றுச்சூழல் செய்திகள்


## ஈயங்கலந்த பெட்ரோல் ஒழிப்பு



- ஐக்கிய நாடுகள் சுற்றுச்சூழல் திட்ட அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட சில அவதானிப்புகளின் அடிப்படையில் உலகில் ஈயங்கலந்த பெட்ரோலின் பயன்பாடு ஒழிக்கப் பட்டது.
- இந்த முடிவானது 1.2 மில்லியனுக்கும் அதிகமான அளவில் முன்கூட்டியே நிகழும் இறப்புகளைத் தடுக்கும்.
- இது ஆண்டுதோறும் 2.4 டிரில்லியன் டாலருக்கும் அதிகமான அளவில் உலகப் பொருளாதாரத்தைச் சேமிக்கும்.
- உலகில் இந்த எரிபொருளைப் பயன்படுத்திய கடைசி நாடு அல்ஜீரியா ஆகும்.
- இந்திய நாட்டில் 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே இது தடை செய்யப்பட்டு விட்டது.

## காற்றுத்தர வாழ்வு குறியீட்டு அறிக்கை

- உலகில் மிகவும் மாசுபட்ட நாடாக உள்ள வகையில் இந்தியாவின் மக்கள் தொகையில் சுமார் 40% வட இந்தியாவில் உள்ள இந்திய-கங்கைச் சமவெளிகளில் வாழ்கின்றனர்.
- அங்கு உலகில் வேறு எங்கும் இல்லாததை விட அதிக அளவில் மாசு அளவு தொடர்ந்து அதிகரித்த வண்ணம் உள்ளது.
- சிகாகோ பல்கலைக்கழகத்தினால் வெளியிடப்பட்ட காற்றுத்தர வாழ்வு குறியீட்டு அறிக்கையில் இது கூறப்பட்டுள்ளது.
- வட இந்தியாவில் வாழும் மக்கள் தங்கள் சராசரி வாழ்நாள் எதிர்பார்ப்பு நாட்களில் 9 வருடங்களுக்கும் மேல் இழக்கும் நிலையில் இருப்பதாக இந்த அறிக்கை கூறுகிறது.
- மேலும் மத்தியப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களில் தற்போது மாசுபாடு அதிகரித்துள்ளதாகவும் இந்த அறிக்கை கூறுகிறது.
- உதாரணமாக, இந்த மாநிலங்களில் வாழும் ஒரு நபர் 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்துடன் ஒப்பிடுகையில் கூடுதலாக 2.5 முதல் 2.9 வருடங்கள் வரையிலான ஆயுட்காலத்தினை இழக்கிறார்.



## செந்நிற காதுடைய ஆமை

- ஒரு செந்நிற காதுடைய ஆமையானது இடுக்கியில் உள்ள மலங்கரா அணையில் தற்செயலாகக் கண்டறியப்பட்டது.
- இந்த ஆமை இனம் தெற்கு அமெரிக்கா (மிசிசிபி நதி) மற்றும் வடக்கு மெக்சிகோ ஆகிய பகுதிகளைப் பூர்வீகமாகக் கொண்டது.
- இது அயற்பண்புடையதாக அடையாளம் காணப்பட்டு, உலகின் 100 ஆக்கிரமிப்பு இனங்கள் (invasive species) என்ற பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.
- இது சால்மோனெல்லா போன்ற மனித தொற்று பாக்டீரியத்தின் கடத்தியாக அறியப் படுகிறது.



## இந்தியக் கடற்கரையின் அரிப்பு

- இந்தியாவின் 32% கடற்கரையானது அரிப்புக்கு உள்ளாகியுள்ளது எனவும், அதில் 27% கடற்கரைப் பகுதி 1990 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளில் அதிக அரிப்பிற்கு விரிவடைந்துள்ளது எனவும் தெரிய வந்துள்ளது.
- மத்தியப் புவி அறிவியல் அமைச்சகத்தின் கீழ் இயங்கும் தேசியக் கடற்கரை ஆராய்ச்சி மையத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இது கூறப்பட்டுள்ளது.
- மேற்கு வங்காளத்தின் கடற்கரையானது 60% அரிப்பிற்குள்ளாவதினால் குறிப்பிடத் தக்க அளவில் எளிதில் பாதிக்கப்படக் கூடியதாக உள்ளது.
- தமிழகக் கடற்கரையானது 41% அரிப்பிற்கு உள்ளாகியுள்ளது.
- ஒடிசா கடற்கரையானது 51% வரை அரிப்பிற்கு விரிவடைந்துள்ளது.
- தமிழக கடற்கரையானது 22% வரை அரிப்பிற்கு விரிவடைந்துள்ளது.


## வானிலை, காலநிலை மற்றும் நீர் போன்றவற்றால் ஏற்படும் தீவிர நிலைகளினால் நிகழும் இறப்பு மற்றும் பொருளாதார இழப்புகளுக்கான தொகுப்பு (1970-2019)

- இது ஐ.நா.வின் உலக வானிலை அமைப்பால் வெளியிடப்பட்டது.
- கடந்த ஐந்து தசாப்தங்களில் கடுமையான வானிலை நிகழ்வுகள் காரணமாக வளர்ந்த நாடுகள் 3.6 டிரில்லியன் டாலர் என்ற அளவிற்குப் பொருளாதார இழப்பைச் சந்தித்துள்ளன.

- ஏழை நாடுகளில் அதிக இறப்பு எண்ணிக்கையானது தீவிர மீட்பு நடவடிக்கையால் ஓரளவு குறைக்கப்பட்டுள்ளது.
- உலகின் 10 மிக மோசமான பேரழிவுகளில் 2017 ஆம் ஆண்டில் மட்டும் ஹார்வி ($ 96.9 பில்லியன்), மரியா ($ 69.4 பில்லியன்) மற்றும் இர்மா ($ 58.2 பில்லியன்) என்ற மூன்று சூறாவளிகள் நிகழ்ந்துள்ளன.




## ஆசியா மற்றும் பசிபிக்கில் மணல் மற்றும் தூசிப் புயல்கள் போன்ற ஆபத்துகள் மீதான மதிப்பீடு




- இந்தக் கண்டுபிடிப்புகள் 'ஆசிய மற்றும் பசிபிக் பேரிடர் தகவல் மேலாண்மை மேம்பாட்டு' அறிக்கையில் வெளியிடப்பட்டன.
- ஆசிய மற்றும் பசிபிக் பேரிடர் தகவல் மேலாண்மை மேம்பாட்டு அமைப்பு என்பது ஐக்கிய நாடுகளின் ஆசியா மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கான பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தின் ஒரு பிராந்திய நிறுவனமாகும்.

- இந்த அறிக்கையானது 'கிழக்கு மற்றும் வடகிழக்கு ஆசியா', 'தெற்கு மற்றும் தென்மேற்கு ஆசியா', 'மத்திய ஆசியா' மற்றும் 'பசிபிக்' ஆகியவை ஆசியா-பசிபிக்கின் நான்கு முக்கிய மணல் மற்றும் தூசி புயல் உருவாகும் இடங்களாக அடையாளம் கண்டுள்ளது.
- இப்பகுதி கனிமத் தூசியை வெளியிடுவதில் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- மணல் மற்றும் தூசிப் புயல்கள் தென்மேற்கு ஆசியாவில் (கராச்சி, லாகூர் மற்றும் டெல்லி) மோசமான காற்றின் தரத்திற்கு கணிசமாகப் பங்களிக்கின்றன.
- மணல் மற்றும் தூசிப் புயல்கள் ஒரு எல்லை தாண்டிய வானிலைப் பேரிடராகும்.
- இந்த தூசியின் பெரும்பகுதி அதிக உப்பைக் கொண்டுள்ளதால், இது தாவரங்களுக்கு நச்சுத் தன்மையை ஏற்படுத்துகிறது.
- இது மகசூலைக் குறைப்பதோடு, பருத்தி மற்றும் பிற பயிர்களின் உற்பத்திக்குக் குறிப்பிடத் தக்க அச்சுறுத்தலாகவும் உள்ளது.
- இந்தியாவில் 500 மில்லியனுக்கும் அதிகமான மக்களும், துர்க்மெனிஸ்தான், பாகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், தஜிகிஸ்தான் மற்றும் ஈரான் இஸ்லாமியக் குடியரசு ஆகிய நாடுகளின் மொத்த மக்கள்தொகையில் 80 சதவீதத்திற்கும் அதிகமான மக்களும் மணல் மற்றும் தூசிப் புயல்களால் நடுத்தர மற்றும் மிகக் குறைந்த தரம் கொண்ட காற்றைச் சுவாசிப்பதற்கு உள்ளாக்கப் பட்டுள்ளனர்.
- இமயமலை-இந்து குஷ் மலைத்தொடர் மற்றும் திபெத்தியப் பீடபூமி ஆகிய பகுதிகளில் அதிக தூசி படிதல் நிகழ்வும் ஏற்படுகிறது.
- ஆசியாவில் 1.3 பில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு நன்னீர் ஆதாரமாக இருக்கும் இந்தப் பீடபூமி 'மூன்றாவது துருவம்' என்று அழைக்கப்படுகிறது.


## இந்தியத் தொழில் கூட்டமைப்பு - National Energy Leader விருது




- ஜிஎம்ஆர் தலைமையிலான டெல்லி சர்வதேச விமான நிலையமானது இந்தியத் தொழில் கூட்டமைப்பின் 'தேசிய ஆற்றல் தலைவர்' (National Energy Leader) மற்றும் 'சிறந்த ஆற்றல் திறன் அலகு' ஆகிய மதிப்புமிக்க விருதுகளை வென்றுள்ளது.

- ஜிஎம்ஆர் ஹைதராபாத் சர்வதேச விமான நிலையமும் இந்தியத் தொழில் கூட்டமைப்பின் 'தேசிய ஆற்றல் தலைவர்' மற்றும் 'சிறந்த ஆற்றல் திறன் அலகு' விருதுகளை வென்றுள்ளது.
- இது 22வது தேசிய விருது வழங்கும் விழாவில் ஆற்றல் மேலாண்மையில் சிறந்து விளங்குவதால் வழங்கப்பட்டது.
- இது இந்தியத் தொழில்துறை கூட்டமைப்பு - பசுமை வணிக மையத்தினால் 22வது 'ஆற்றல் திறன் உச்சி மாநாட்டின்' போது ஏற்பாடு செய்யப்பட்டது.
- இந்த விருதுகளின் குறிக்கோள், அன்றாடச் செயல்பாடுகளில் சிறந்த நடைமுறைகள் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தை ஏற்றுக் கொள்ளும் ஆற்றல்-திறன் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களை அங்கீகரிப்பதாகும்.
- வானூர்தி நிலையங்களுக்கான பன்னாட்டுக் குழுவின் விமான நிலையக் கரிம அங்கீகாரத் திட்டத்தின் கீழ் ஆசிய பசிபிக்கின் முதல் நிலை 4+ (மாற்று நிலை) அங்கீகாரம் பெற்ற விமான நிலையம் டெல்லி சர்வதேச விமான நிலையமாகும்.
- கரிமச் சமநிலை கொண்ட ஒரு விமான நிலையமான ஐதராபாத் சர்வதேச விமான நிலையமானது கார்பன் நிலை 3 + "சமநிலை" அங்கீகாரத்தைக் கொண்டுள்ளது.

## அச்சுறுத்தப்பட்டப் பிரிவிலிருக்கும் உயிரினங்களின் சமீபத்திய சிவப்புப் பட்டியல்




- இந்த அறிக்கையை இயற்கைப் பாதுகாப்புக்கான சர்வதேச ஒன்றியம் வெளியிட்டு உள்ளது.
- சமீபத்திய சிவப்புப் பட்டியலின் படி சுமார் 902 இனங்கள் அதிகாரப்பூர்வமாக அழிந்து விட்டன.
- மதிப்பிடப்பட்ட உயிரினங்களில் (38,543), 30% உயிரினங்கள் (138,374) அழிவின் அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றன என்பதையும் சிவப்புப் பட்டியல் காட்டுகிறது.

- இதன் படி காடுகளில் வாழும் சுமார் 80 இனங்கள் அழிந்து விட்டன, 8,404 இனங்கள் மிகவும் அருகி வரும் நிலையில் உள்ளன, 14,647 இனங்கள் அருகி வரும் நிலையில் உள்ளன, 15,492 இனங்கள் எளிதில் பாதிக்கப்படக் கூடியவை மற்றும் 8,127 இனங்கள் அச்சுறுத்தலுக்கு அருகில் உள்ளன.
- அட்லாண்டிக் ப்ளூஃபின் டுனா என்ற மீனானது அருகி வரும் நிலையில் இருந்து குறைந்த பட்ச அக்கறை நிலைக்கு நகர்ந்துள்ளது.
- தெற்கு ப்ளூஃபின் டுனா என்ற மீனானது மிகவும் அருகி வரும் நிலையில் இருந்து அருகி வரும் நிலைக்கு நகர்ந்துள்ளது.
- உலகின் மிகப்பெரிய உயிருள்ள பல்லியான கொமோடோ டிராகன் ஆனது எளிதில் பாதிக்கப்படக்கூடிய நிலையில் இருந்து அருகி வரும் நிலைக்கு நகர்ந்துள்ளது.
- இந்த இனமானது இந்தோனேசியாவில் மட்டுமே காணப்படுவதோடு உலகப் பாரம்பரிய வகைக்காக பட்டியலிடப்பட்ட கொமோடோ தேசியப் பூங்காவில் மட்டுமே காணப்படுகிறது.

## மகரந்த நாள்காட்டி

- சண்டிகர் தனது முதல் மகரந்த நாள்காட்டியினைப் பெறுகிறது.
- மகரந்த நாள்காட்டிகள் என்பவை ஒரு குறிப்பிட்ட புவியியல் பகுதியில் வான்வழி மகரந்தப் பட்டியலின் நேர இயக்கவியலின் வரைகலை பிரதிநிதித்துவங்கள் ஆகும்.
- மனிதர்களில் ஒவ்வாமை நாசியழற்சி, ஆஸ்துமா மற்றும் அடோபிக் டெர்மடிடிஸ் ஆகியவற்றுக்குக் காரணமான மகரந்தங்கள் வெளிப்புற ஒவ்வாமைகளாக கருதப் படுகின்றன.

## சுறாக்களின் நிலை

- சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியத்தின் புதிய சிவப்புப் பட்டியலில் 2014 ஆம் ஆண்டிலிருந்து சுறாக்கள் மற்றும் திருக்கை மீன்களின் எண்ணிக்கையில் சரிவு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.
- சுறாக்கள் தற்போது அழிந்து போகும் அபாய நிலையில் உள்ளன.
- 2021 ஆம் ஆண்டு நிலவரப் படி, உலகெங்கிலுமுள்ள 37% சுறாக்கள் மற்றும் திருக்கை மீன்கள் அருகி வரும் இனங்களாகக் கருதப்படுகின்றன.

## மெல்லிய மரபல்லி – கோவா

- ஹெமிபிலோடாக்டைலஸ் கோயென்சிஸ் (Hemiphyllodactylus goaensis) எனும் ஒரு சிறிய மெல்லிய மரபல்லி இனமானது கோவா மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலையின் வடக்குப் பகுதியில் புதியதாக கண்டறியப்பட்ட ஒரு இனமாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.
- இது "A New Species of genus Hemiphyllodactylus Bleeker, 1860" என்ற தலைப்பில் zootaxa என்ற ஒரு விலங்கியல் இதழில் வெளியிடப்பட்டது.
- இந்த மெல்லிய மரபல்லி இனமானது இந்தியாவின் மிகச்சிறிய இனங்களுள் ஒன்றாகும்.

- இது மனிதனின் கட்டை விரலில் அமரக் கூடிய வகையில் 32 மி.மீ. அளவிலானதாகும்.
- ஹெமிபிலோடாக்டைலஸ் கோயென்சிஸ் இனமானது இந்த இனத்தின் 8வது இந்திய இனமும் உலகளவில் 44வது இனமும் ஆகும்.
- கோவா பல்கலைக்கழகத்தில் விவரிக்கப்பட்ட முதல் விலங்கினமும் இதுவேயாகும்.



## மிகப்பெரிய திறந்தவெளி படர்ச்செடி வளர்ப்பிடம்

- இந்தியாவின் மிகப்பெரிய திறந்தவெளி படர்ச்செடி வளர்ப்பிடமானது உத்தரகாண்ட் மாநிலத்தின் ராணிக்கேட் என்னுமிடத்தில் திறக்கப்பட்டுள்ளது.
- இது பாலிஹவுஸ்/நிழல் கூடாரங்கள் கீழ் அமைக்கப்படாத இயற்கைச் சூழலில் அமைந்த நாட்டின் முதலாவது திறந்தவெளி படர்ச்செடி வளர்ப்பிடமாகும்.
- இது திருவனந்தபுரத்திலுள்ள ஜவஹர்லால் நேரு வெப்ப மண்டலத் தாவரவியல் பூங்கா மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தையடுத்து மிக அதிக படர்ச்செடியினங்களைக் கொண்ட 2வது வளர்ப்பிடமாகும்.
- இது மத்திய அரசின் இழப்பீட்டு வன மேலாண்மை நிதிகள் மேலாண்மை மற்றும் திட்டமிடல் ஆணையத் திட்டத்தின் கீழ் உருவாக்கப் பட்டுள்ளது.



## கார்பன்டை ஆக்சைடைச் சேகரிக்கும் இந்தியாவின் முதல் ஆலை




❖ டாடா ஸ்டீல் நிறுவனமாகது இந்தியாவில் முதலாவது கார்பன் டை ஆக்சைடு சேகரிப்பு ஆலையினைத் தொடங்கி உள்ளது.

❖ இது ஜாம்ஷெட்பூர் தொழிற்சாலைகளின் ஊது உலை வாயுவிலிருந்து கார்பன் டை ஆக்சைடை நேரடியாகப் பிரித்தெடுக்கிறது.

❖ இந்தச் சாதனையின் மூலம், இத்தகைய கார்பன் சேகரிப்புத் தொழில்நுட்பத்தினை நிறுவிய நாட்டின் முதல் எஃகு ஆலையாக டாடா ஸ்டீல் மாறியுள்ளது.

❖ இந்த ஆலையானது ஒரு நாளைக்கு 5 டன் அளவிலான கார்பன்படை ஆக்சைடைச் சேகரிக்க வல்லது.

❖ இந்த ஆலையானது மலிவு விலையிலான கார்பன் சேகரிப்புத் தொழில்நுட்பத்தில் உலகளவில் முன்னணியில் உள்ள கார்பன் கிளீன் என்ற அமைப்பின் தொழில்நுட்ப உதவியுடன் செயல்படுத்தப்பட்டது.

## முரா – திராவா – தனுபே

❖ முரா – திராவா – தனுபே பகுதியானது ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பினால் (யுனெஸ்கோ) உலகின் முதலாவது 5 நாடுகளின் பகுதிகளை உள்ளடக்கிய 'உயிர்க் கோளக் காப்பகம்' என அறிவிக்கப்பட்டுள்ளது.

❖ இந்த உயிர்க்கோளக் காப்பகமானது முரா, திராவா மற்றும் தனுபே ஆறுகளின் 700 கிலோ மீட்டர் பகுதியை உள்ளடக்கியதாகும்.


❖ இந்தக் காப்பகமானது ஆஸ்திரியா, சுலோவேனியா, குரோசியா, ஹங்கேரி மற்றும் செர்பியா ஆகிய நாடுகள் வரை பரவிக் காணப்படுகிறது.

***இந்தியாவிலுள்ள உயிர்க்கோளக் காப்பகங்கள்***


❖ தற்போது இந்தியாவில் 18 உயிர்க்கோளக் காப்பகங்கள் உள்ளன.

❖ இந்தியாவிலுள்ள 12 உயிர்க்கோளக் காப்பகங்கள் யுனெஸ்கோவின் மனிதன் மற்றும் உயிர்க் கோளக் காப்பகத் திட்டத்தின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

- பன்னா உயிர்க்கோளக் காப்பகமானது (மத்தியப் பிரதேசம்) சமீபத்தில் இந்தப் பட்டியலில் சேர்க்கப் பட்டது.




## கருங்கரிம (கார்பன்) உமிழ்வு – சர்வதேச கடல்சார் அமைப்பு





- ஆர்க்டிக் பகுதியின் கோடைகாலப் பனி அளவானது அதன் 12வது மிகக்குறைந்த அளவை எட்டியுள்ள நிலையில், கப்பல்களிலிருந்து வெளிவரும் கருங்கரிம உமிழ்வினை துரித கதியில் குறைப்பதற்கு தூய ஆர்க்டிக் கூட்டணியானது அழைப்பு விடுத்துள்ளது.
- சர்வதேசக் கடல்சார் அமைப்பில் நவம்பர் மாதம் நடைபெற உள்ள 77வது கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுவின் சந்திப்பிற்கு முன்பாக இது திட்டமிடப்பட்டுள்ளது.

## பருவநிலை குறிகாட்டிகள் மற்றும் நிலையான மேம்பாட்டு அறிக்கை

- உலக வானிலை அமைப்பானது ஒரு புதிய அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கைக்கு "பருவநிலை குறிகாட்டிகள் மற்றும் நிலையான மேம்பாடு : ஒருங்கிணைவின் செயல்விளக்கம்" (Climate Indicators and Sustainable Development: Demonstrating the Interconnections) என்று தலைப்பிடப்பட்டுள்ளது.
- உலகளாவியப் பருவநிலைக்கும் நிலையான மேம்பாட்டு இலக்கிற்கும் இடையிலான தொடர்பினை விளக்கிக் காட்டும் நோக்கத்தோடு இந்த அறிக்கையினை உலக வானிலை அமைப்பு வெளியிட்டுள்ளது.

- தற்போதைய நூற்றாண்டின் இறுதியில் உலக வெப்பமயமாதலை 2°C வரை குறைக்கவோ (அ) 1.5°C வரை குறைக்கவோ இது முயல்கிறது.





## யுனெஸ்கோவின் 33வது கூட்டம்



- யுனெஸ்கோ அமைப்பின் மனிதன் மற்றும் உயிர்க்கோளம் என்ற திட்டத்தின் சர்வதேச ஒருங்கிணைப்புச் சபையின் 33வது கூட்டமானது நைஜீரியாவிலுள்ள அபுஜா எனுமிடத்தில் கலப்பு முறையில் நடைபெற்றது.
- இந்தக் கூட்டமானது ஆப்பிரிக்கக் கண்டத்தில் நடத்தப்படுவது இதுவே முதல் முறை ஆகும்.
- 21 நாடுகளிலுள்ள 20 புதிய இடங்கள் உலக உயிர்க்கோளக் காப்பக கட்டமைப்பில் சேர்க்கப் பட்டன.
- இது உயிர்க்கோளக் காப்பகங்களின் எண்ணிக்கையை 727 ஆக (131 நாடுகளில்) உயர்த்தியது.
- லெசோதோ (மாட்செங் உயிர்க்கோளக் காப்பகம்), லிபியா (அஷாஃபீன் உயிர்க்கோளக் காப்பகம்) மற்றும் சவுதி அரேபியா (ஜீசூர் ஃபாரசன் உயிர்க்கோளக் காப்பகம்) ஆகிய இடங்கள் முதல்முறையாக இப்பட்டியலில் சேர்க்கப் பட்டுள்ளன.
- யுனெஸ்கோ அமைப்பின் உயிர்க்கோளக் காப்பகங்கள் தற்போது புவியின் நிலப் பரப்பில் 5%க்கும் மேல் பரவி உள்ளன.

## பருவநிலை மாற்றம் 2021 : இயற்பியல் அறிவியல் அறிக்கை



- பருவநிலை மாற்றம் குறித்த அரசுகளுக்கிடையிலான குழுவானது சமீபத்தில் இந்த அறிக்கையை வெளியிட்டது.
- இந்த அறிக்கையானது தெளிவான பருவநிலை நடவடிக்கைகளை கோருகிறது.
- இது பின்வரும் காட்சிகளை விளக்குகிறது.
    - குறைவான மற்றும் மிகக்குறைவான பசுங்குடில் வாயு உமிழ்வு – இங்கு உமிழ்வுகள், நூற்றாண்டின் மையப் பகுதியில் நிகரச் சுழியமாக குறையும். பின்னர் அதற்கு அப்பால் அது நிகர எதிர்மறையாக இருக்கும்.
    - இடைநிலை பசுங்குடில் வாயு உமிழ்வு – இந்த உமிழ்வானது 2100 ஆம் ஆண்டில் தற்போதைய அளவை விட இரட்டிப்பாகும்.
    - அதிக மற்றும் மிக அதிக பசுங்குடில் வாயு உமிழ்வு – இந்த உமிழ்வானது 2050 ஆம் ஆண்டில் தற்போதைய அளவை விட இரட்டிப்பாகும்.
- சராசரி உலக வெப்பநிலையானது தொழில்துறைக் காலத்திற்கு முன்பை விட தற்போது 1.09°C அதிகமாக உள்ளது.
- 1850 ஆம் ஆண்டில் 285 PPM ஆக இருந்த வளிமண்டல கார்பன் டை ஆக்சைடு செறிவானது தற்போது 410 PPM ஆக உள்ளது.

## பெருங்கடல் நிலை அறிக்கை – 5

- கோபர்நிகஸ் கடல்சார் சுற்றுச்சூழல் கண்காணிப்புப் பணி அமைப்பானது 5வது பெருங்கடல் நிலை அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- உலகிலுள்ள பெருங்கடல்கள் இயற்கை மாற்றங்கள், அதிகப்படியான சுரண்டல் மற்றும் மானுடவியல் தாக்கங்கள் போன்றவற்றினால் கடுமையான மாற்றங்களுக்கு உள்ளாகின்றன என்று இந்த அறிக்கை கூறுகிறது.
- இந்த மாற்றங்கள் 1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் 2020 ஆம் ஆண்டு மே மாதம் வரையிலான காலகட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் 3.1 மில்லி மீட்டர் வரை கடல் மட்டத்தை உயர்த்தியுள்ளதாக இந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.
- ஆர்க்டிக் கடலில் உள்ள பனிப்படலம் படிப்படியாக குறைந்து வருவதாகவும் இந்த அறிக்கை கூறுகிறது.

| Oceans/ Seas | Sea level rise |
|---|---|
| Baltic Sea | 4.5 mm per year |
| Iberian Biscay Ireland Seas | 3.6 mm per year |
| Pacific Islands (Total Area) | 3.4 mm per year |
| North West Shelf | 2.9 mm per year |
| Mediterranean Sea | 2.5 mm per year |
| Black Sea | 1.7 mm per year |

## அறிவியலில் ஒருங்கிணைவு 2021 – உலக வானிலை அமைப்பு

- உலக வானிலை அமைப்பானது சமீபத்தில் அறிவியலில் ஒருங்கிணைவு 2021 என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டது.
- இது சமீபத்தியப் பருவநிலை சார்ந்த அறிவியல் தகவல்களின் பல்முனை உயர்மட்டத் தொகுப்பாகும்.
- இந்த அறிக்கையானது உலக வானிலை அமைப்பினால் ஒருங்கிணைக்கப் பட்டது.
- இது ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பு, உலக சுகாதார அமைப்பு, பருவநிலை மாற்றம் மீதான அரசுகளுக்கு இடையிலான குழுமம், உலக கார்பன் திட்டம், உலக பருவநிலை ஆராய்ச்சித் திட்டம் மற்றும் வானிலை அலுவலகம் (ஐக்கிய ராஜ்ஜியம்) ஆகியவற்றிலிருந்து உள்ளீடுகளைப் பெற்றது.




# மாநிலச் செய்திகள்

## விமானப்படைப் பாரம்பரிய மையம்

- சண்டிகர் நிர்வாகம் மற்றும் இந்திய விமானப்படை ஆகியவை இணைந்து சண்டிகரில் ஒரு “விமானப்படைப் பாரம்பரிய மையத்தை” அமைப்பதற்கான ஒரு கொள்கைசார் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.
- இது நாட்டின் முதலாவது விமானப்படைப் பாரம்பரிய மையமாகும்.
- தேசியப் பாதுகாப்பு மற்றும் இராணுவத்தில் இந்திய விமானப்படையில் பங்கு மற்றும் பங்களிப்பு ஆகியவை குறித்து அப்பகுதியினரிடையே குறிப்பாக மாணவரிடையே இது விழிப்புணர்வை ஏற்படுத்தும்.




## உலகத்தரமிக்க அறிவியல் நகரம் – மகாராஷ்டிரா

- புனே அருகே உள்ள பிம்ப்ரி-சிஞ்ச்வாத் என்னுமிடத்தில் உலகத்தரமிக்க அறிவியல் நகரை அமைக்க மகாராஷ்டிரா மாநில அரசு முடிவு செய்துள்ளது.
- மாணவர்களிடையே அறிவியல் கண்ணோட்டத்தை உருவாக்கச் செய்வதற்காகவும் வருங்காலத்தில் அவர்களை சிறந்த மாணவர்களாக தயார் செய்வதற்காகவும் வேண்டி இது உருவாக்கப்பட உள்ளது.
- இதற்கு 'பாரத் ரத்னா ராஜீவ் காந்தி அறிவியல் புத்தாக்க நகரம்' எனப் பெயரிடப்பட உள்ளது.

## ஐக்கிய நாடுகள் உலகப் புவிசார் தகவல் மாநாடு




- 2வது ஐக்கிய நாடுகள் உலகப் புவிசார் தகவல் மாநாடானது 2022 ஆம் ஆண்டில் தெலங்கானாவின் ஹைதராபாத்தில் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த நிகழ்வானது இந்தியாவின் வளர்ந்துவரும் புவிசார் சுற்றுச்சூழல் அமைப்பினைப் பற்றிய பார்வையை உலகிற்கு வழங்குகிறது.
- இது உலக புவிசார் தகவல் மேலாண்மை மீதான ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவினால் ஏற்பாடு செய்யப்படுகிறது.

- இது 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது.
- முதலாவது மாநாடானது 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் சீனாவில் நடத்தப் பட்டது.
- 2வது மாநாட்டின் கருத்துரு, 'Geo enabiling the global village' என்பதாகும்.

## மிகுந்த மொழிசார் வேற்றுமை

- இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான மொழிகள் பேசப்படும் மாநிலங்களில் பெங்களூரு முதலிடத்தில் உள்ளது.
- பெங்களூருவில் 107 மொழிகளுடன் 22 பட்டியலிடப்பட்ட மற்றும் 84 பட்டியலிடப்படாத மொழிகள் உட்பட பல்வேறு மொழிகள் பேசப்படுகின்றன.
- பெங்களூருவில் 44.5% மக்கள் கன்னட மொழியினையும், 15% மக்கள் தமிழ் மொழியினையும், 14% மக்கள் தெலுங்கு மொழியினையும், 12% மக்கள் உருது மொழியினையும், 6% மக்கள் இந்தி மொழியினையும் மற்றும் 3% மக்கள் மலையாள மொழியினையும் பேசுகின்றனர்.
- 100 மொழிகளுக்கு மேல் பேசப்படும் இதர மாவட்டங்கள் நாகாலாந்திலுள்ள திமாப்பூர் (103) மற்றும் அசாமிலுள்ள சோனித்பூர் (101) ஆகியனவாகும்.
- குறைவான பன்மொழி வேற்றுமையுடைய மாவட்டங்கள் புதுச்சேரியிலுள்ள ஏனாம், பீகாரிலுள்ள கைமூர், உத்தரப் பிரதேசத்திலுள்ள கௌசாம்பி மற்றும் கான்பூர் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள அரியலூர் ஆகியவனவாகும்.
- இந்த மாவட்டங்களில் 20க்கும் குறைவான மொழிகளே பேசப்படுகின்றன.
- இதற்கான தரவுகளில் பேச்சுவழக்கு மொழிகள் இடம் பெறவில்லை ஆதலால் பட்டியலிடப் பட்ட மற்றும் பட்டியலிடப் படாத மொழிகள் மட்டுமே இடம் பெற்றுள்ளன.



## இணையதள விளையாட்டு – கர்நாடகா

- 1963 ஆம் ஆண்டு கர்நாடக காவல்துறைச் சட்டத்தை அமல்படுத்துவதன் மூலம் மாநிலத்தின் இணைய தள சூதாட்டம் (அ) பந்தயங்களைத் தடை செய்வதற்கு கர்நாடக அமைச்சரவை முடிவு செய்துள்ளது.
- தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா மற்றும் கேரளா ஆகிய மாநிலங்களில் ஏற்கனவே ரம்மி விளையாட்டுகள் தடை செய்யப்பட்டுள்ளன.
- 1930 ஆம் ஆண்டு தமிழ்நாடு விளையாட்டுச் சட்டத்தில் 2020 ஆம் ஆண்டில் மேற் கொள்ளப்பட்ட ஒரு சமீபத்தியத் திருத்தத்தினை 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது.

## கர்பி அங்லாங் அமைதி ஒப்பந்தம்

- இது இந்திய அரசு, அசாம் மாநில அரசு மற்றும் கர்பி மக்களின் ஆறு பிரிவினர் ஆகியோருக்கு இடையே மேற்கொள்ளப்பட்ட ஒரு ஒப்பந்தமாகும்.
- இந்த ஒப்பந்தத்தின் படி, ஒப்பந்தம் கையெழுத்தான தேதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஆயுதக் குழுக்கள் தங்களது வன்முறைப் பாதையை கைவிட வேண்டும்.
- கர்பி அங்லாங் நிர்வாகச் சபையின் அலுவல் மொழியாக கர்பி மொழியை அறிவிக்கச் செய்வதற்கான ஒரு முன்மொழிதலை அசாம் அரசு சாதகமான முறையில் பரிசீலனை செய்யும்.
- ஆங்கிலம், இந்திய மற்றும் அசாமி ஆகிய மொழிகள் அங்கு தொடர்ந்து அலுவல் மொழிகளாகப் பயன்படுத்தப்படும்.

## வதன் பிரேம் யோஜனா

- இது குஜராத் அரசின் மாதர்–இ–வதன் என்ற திட்டத்தின் ஒரு மறுதொகுப்புத் திட்டம் ஆகும்.
- மாதர்-இ-வதன் திட்டத்தின் பெயரானது பாரசீக மொழியோடுத் தொடர்புடைய ஒரு காரணத்தால் அதன் பெயர் மாற்றப்பட்டது.
- இது மேம்பாட்டுப் பணிகளில் பொது மக்களின் பங்கேற்பினை ஊக்குவிப்பதற்கான ஒரு மிகப்பெரியப் பிரச்சாரமாகும்.
- இத்திட்டத்தின்கீழ் குஜராத் மாநிலத்தில் வசிக்காதவர்கள் மற்றும் வெளிநாடுவாழ் இந்தியர்கள் கிராம அளவிலான திட்டப்பணிகளின் செலவில் 60 சதவீதத்தினைப் பங்களிக்க இயலும்.

## சத்தீஸ்கர் குடியிருப்புச் சான்றிதழ்

- சத்தீஸ்கர் மாநில அரசானது குடியிருப்புச் சான்றிதழை வழங்க முடிவு செய்துள்ளது.
- இது சத்தீஸ்கர் மாநில அரசினால் வழங்கப்படும் ஒரு அரசு முறை ஆவணமாகும்.
- இது ஒரு குறிப்பிட்ட மாநிலத்தில் அந்த நபர் வசிக்கிறார் என்பதற்கான ஆதாரமாகக் கருதப் படும்.
- இது வெளி மாநிலத்திற்குச் சென்று கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்படும்.

## மாதிரி குத்தகைச் சட்டம்

- இந்தச் சட்டத்தினைச் செயல்படுத்திய முதல் மாநிலமாக அசாம் மாறியுள்ளது.
- இத்துடன் 1972 ஆம் ஆண்டு அசாம் நகர்ப்புறப் பகுதிகள் வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டமானது ரத்து செய்யப்படும்.

## மாநில மீன் – சிக்கிம்

- சிக்கிம் அரசானது உள்ளூரில் 'கட்லி' என அறியப்படும் 'கூப்பர் மஹ்சீர்' என்ற மீனை மாநில மீனாக அறிவித்துள்ளது.
- இந்த மீனின் அறிவியல் பெயர் நியோலிசோசிலஸ் ஹெக்ஸகோனோலெபிஸ் (Neolissochilus hexagonolepis) என்பதாகும்.
- கட்லி மீனின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கவும், அதன் வளங்காப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கவும் வேண்டி இந்த முடிவானது மேற் கொள்ளப் பட்டுள்ளது.
- இந்த மீன் சிக்கிம் மாநிலத்தில் அதிக சந்தை மதிப்பினைக் கொண்டது.
- இது அம்மாநில மக்களால் அதிகம் விரும்பப்படும் மீன் வகையாகும்.
- மேலும் அந்த மாநிலத்தின் நீர்த்தேக்கங்களில் மீன்பிடிப்பு நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப் படும் எனவும் சிக்கிம் அரசு அறிவித்துள்ளது.
- அந்த நீர்த்தேக்கங்கள் வடக்கு சிக்கிமில் சுங்தாங், மேற்கு சிக்கிமில் லெஷெப் மற்றும் கிழக்கு சிக்கிமில் மக்சு மற்றும் ரோரத்தாங் ஆகிய இடங்களில் உள்ளன.




## ஹதே மிளகாய் மற்றும் நமேங்லாங் மாண்டரின் ஆரஞ்சு

- மணிப்பூர் மாநிலத்தின் புகழ்பெற்றத் தயாரிப்புகளான, தனித்துவமிக்கச் சுவைக்கு பெயர் பெற்ற உக்ரூல் மாவட்டத்தில் காணப்படுகின்ற ஹதே மிளகாய் மற்றும் தமேங்லாங் மாண்டரின் ஆரஞ்சு ஆகியவற்றிற்குப் புவிசார் குறியீடு வழங்கப் பட்டு உள்ளது.
- ஹதே மிளகாயானது ஒரு நல்ல எதிர் ஆக்சிகரணியாகச் செயல்படுவதோடு இது கால்சியம் மற்றும் வைட்டமின் சி போன்றவற்றையும் அதிகளவில் கொண்டுள்ளது.
- இது அமெரிக்க மசாலா வர்த்தகச் சங்கத்தின் மிக உயரிய வண்ண மதிப்பீட்டினைக் (164) கொண்டுள்ளது.

- இந்த மிளகாயிலிருந்துப் பிரித்தெடுக்கக் கூடிய நிறம் பொதுவாக ASTA சங்கத்தின் மதிப்பீடுகளைக் கொண்டு வெளியிடப்படுகிறது.
- தமேங்லாங் மாண்டரின் ஆரஞ்சு அதன் அளவில் மிகப் பெரியதாகும்.
- இது ஒரு தனித்துவமான இனிப்பு மற்றும் புளிப்புச் சுவையினைக் கொண்டது.
- இதில் அதிகளவு சாறு நிறைந்துள்ளதோடு (சுமார் 45%) இதில் அஸ்கார்பிக் அமிலம் (48.12 மில்லிகிராம்/100 மி.லி) அதிகளவில் நிறைந்துள்ளது.



## பஞ்சாப் மாநிலத்தின் புதிய முதல்வர்

- பஞ்சாப் மாநிலத்தின் புதிய முதல்வராக சரண்ஜித் சிங் சன்னி என்பவர் நியமிக்கப் பட்டுள்ளார்.
- பஞ்சாப் அரசின் தொழில்நுட்பக் கல்வி மற்றும் தொழில்துறைப் பயிற்சி அமைச்சர் தற்போது பஞ்சாப் மாநிலத்தின் புதிய முதல்வராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- கேப்டன் அமரிந்தர் சிங் பதவி விலகியதையடுத்து இவர் முதல்வராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- பஞ்சாப் மாநிலத்தின் முதல்வராக ஒரு பட்டியலினச் சாதியினர் சமூகத்தைச் சேர்ந்தவர் பொறுப்பேற்பது இதுவே முதல் முறையாகும்.



## ஐக்கிய ஜனநாயகக் கூட்டணி அரசு – நாகாலாந்து

- ❖ நாகலாந்திலுள்ள அனைத்து ஆளும்கட்சி மற்றும் எதிர்க் கட்சிகள் இணைந்து எதிர்க் கட்சியில்லா அரசினை உருவாக்க முடிவு செய்துள்ளன.
- ❖ அது ஐக்கிய ஜனநாயகக் கூட்டணி அரசு என்ற அழைக்கப்படும்.
- ❖ நாகாலாந்தில் அனைத்துக் கட்சி ஆட்சி நடைபெறுவது இரண்டாவது முறையாகும் (எதிர்க்கட்சி இல்லாத அரசு).
- ❖ 2015 ஆம் ஆண்டில் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளும் கட்சியான NPF தலைமையிலான நாகாலாந்து ஜனநாயகக் கூட்டணியில் இணைந்தனர்.
- ❖ இருப்பினும் 2021 ஆம் ஆண்டில் UDA அரசானது எந்தவோர் இணைப்புமின்றி ஒரு கூட்டணியாக அமைக்கப்பட்டுள்ளது.

## ராஜஸ்தான் கட்டாய திருமணப் பதிவு (திருத்தம்) மசோதா, 2021

- ❖ முதல்வர் அசோக் கெஹ்லாட் அவர்களின் அரசானது 2009 ஆம் ஆண்டு சட்டத்தைத் திருத்துவதற்காக 2021 ஆம் ஆண்டு ராஜஸ்தான் கட்டாய திருமணப் பதிவு (திருத்தம்) என்ற ஒரு மசோதாவினை குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றியுள்ளது.
- ❖ ராஜஸ்தானின் இந்தப் புதிய திருமண மசோதாவானது மணமகனும் மணமகளும் 30 நாட்களுக்கும் மேலாக தாம் வசிக்கும் இடத்திலுள்ள திருமணப் பதிவு அதிகாரியிடம் தங்களது திருமணப் பதிவிற்காக விண்ணப்பிக்கலாம் எனக் கூறுகிறது.
- ❖ 21 வயது பூர்த்தியடையாத மணமகனுக்கும் 18 வயது பூர்த்தியடையாத மண மகளுக்கும் நடைபெற்ற திருமணத்தை, திருமணமான 30 நாட்களுக்குள் அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் பதிவு செய்யலாம்.





## இணையதள விளையாட்டுகளைத் தடை செய்யும் மசோதா - கர்நாடகா

- ❖ கர்நாடகச் சட்டப் பேரவையானது 1963 ஆம் ஆண்டு கர்நாடக காவல் சட்டத்தைத் திருத்தவதற்கான ஒரு மசோதாவினை நிறைவேற்றியுள்ளது.
- ❖ இணையதள விளையாட்டுகளைத் தடை செய்யவும் இணையதளச் சூதாட்டத்தைக் குறைக்கவும் இந்தச் சட்டம் முயல்கிறது.

- ❖ எனினும் திறன் சார்ந்த இணையதள விளையாட்டுகளுக்கு இந்த சட்டம் பொருந்தாது.
- ❖ மேலும் இது வாய்ப்பு சார்ந்த இணைய விளையாட்டுகளை மட்டுமே தடை செய்கிறது.

## நாகாலாந்தின் இனிப்பு வெள்ளரி




- ❖ நாகாலாந்தில் விளையும் இனிப்பு வெள்ளரிக்கு புவிசார் குறியீடானது வழங்கப்பட்டு உள்ளது.
- ❖ 1999 ஆம் ஆண்டு பொருட்களுக்கான புவிசார் குறியீடுகள் (பதிவு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின் விதிகளின் கீழ் இந்த குறியீடானது வழங்கப் பட்டுள்ளது.
- ❖ நாகாலாந்து மாநிலமானது இப்பழத்தின் சாகுபடிக்கான பரப்பளவில் 5வது இடத்திலும் அதன் உற்பத்தியில் 3வது இடத்திலும் உள்ளது.
- ❖ இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை, மரத் தக்காளி மற்றும் பிரபலமான நாகா கிங் மிளகாய் போன்றவற்றின் பிராந்திய வகைகளுக்கும் புவிசார் குறியீடு வழங்கப்பட்டு உள்ளது.

## அசாம் மாநிலத்தின் ஜூடிமா எனும் அரிசி மது – புவிசார் குறியீடு

- ❖ ஜூடிமா என்ற பானமானது புவிசார் குறியீடு பெற்ற முதலாவது வடகிழக்குப் பகுதியினைச் சேர்ந்த ஒரு பானமாகும்.
- ❖ ஜூடிமா என்பது பாரம்பரிய மூலிகைகளுடன் சேர்த்து வேக வைக்கப்பட்டு கலக்கப் பட்ட ஒட்டும் தன்மையிலான அரிசியிலிருந்துத் தயாரிக்கப்படும் ஒரு அரிசி மது பானம் ஆகும்.
- ❖ அசாம் மாநிலத்திலுள்ள டிமாசா என்ற பழங்குடிச் சமுதாயத்தினரால் இந்த மது பானம் தயாரிக்கப் படுகிறது.
- ❖ இது பாரம்பரியமாக பெண்களால் தயாரிக்கப் படுகிறது.

- இந்த மதுபானமானது ஒரு தனித்துவமான இனிப்புச் சுவை உடையதாகும்.
- இதனைத் தயாரிக்க ஒரு வாரமாவதோடு இதனைப் பல ஆண்டுகளுக்குச் சேமித்து வைக்கலாம்.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## டாக்டர் பசந்த் குமார் மிஷ்ரா

- ஒடிசாவில் பிறந்த நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் பசந்த் குமார் மிஷ்ராவிற்கு அமெரிக்க நரம்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் சங்கத்தின் மதிப்புமிக்க நரம்பியல் அறுவைச் சிகிச்சைக்கான சர்வதேச வாழ்நாள் சாதனையாளர் விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இந்த விருதினைப் பெற்ற முதல் இந்திய மருத்துவர் மிஷ்ரா ஆவார்.
- கணினி வழிகாட்டுதலுடன் தமனி விரிதல் அறுவை சிகிச்சையினை செய்த உலகின் முதல் அறுவை சிகிச்சை நிபுணரும் இவரே ஆவார்.
- மேலும் 2018 ஆம் ஆண்டில் சிறந்த மருத்துவர் எனும் பிரிவில் மதிப்பு மிக்க டாக்டர். B.C. ராய் தேசிய விருதினையும் (இந்தியாவின் மருத்துவத் துறையில் உயர்ந்த விருது) இவர் பெற்றுள்ளார்.



## ரமோன் மகசேசே விருது

- 2021 ஆம் ஆண்டின் ராமன் மக்சேசே விருது பெற்றவர்களின் பெயர்கள் அறிவிக்கப் பட்டுள்ளன.
- வெற்றியாளர்களுக்கு பிலிப்பைன்ஸின் மணிலாவிலுள்ள ரமோன் மகசேசே மையத்தில் அரசு முறையில் விருதுகள் வழங்கப்படும்.
- வெற்றி பெற்றவர்கள்
    - வங்காள தேசத்தின் தடுப்பு மருந்தின் முன்னோடி டாக்டர் ஃபிர்தோசி காத்ரி,
    - பாகிஸ்தானின் முகமது அம்ஜத் சாகிப்
    - பிலிப்பைன்ஸ் நாட்டின் மீன்வள மற்றும் சமுதாய சுற்றுச்சூழல் ஆர்வலர் ராபெர்டோ பேலோன்
    - அமெரிக்க குடிமகன் ஸ்டீவன் முன்சி மற்றும்
    - புலனாய்வு விசாரணைக்கான இந்தோனேசிய கண்காணிப்பு அமைப்பு ஆகும்
- ரமோன் மகசேசே விருதானது ஆசியாவின் மிக உயரிய விருதாகும்.
- இது 1957 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நிறுவப்பட்டது.
- இது ஆசியாவில் நோபல் பரிசுக்கு இணையான ஒன்றாகக் கருதப்படுகிறது.
- இது ஆசியாவில் வறுமை ஒழிப்பு மற்றும் சமூக மேம்பாட்டிற்காக தலை சிறந்தப் பங்களிப்புகளை வழங்கியோருக்கு அளிக்கப்படும் ஒரு விருதாகும்.




## டோர்ஜே ஆங்சுக்

- டோர்ஜே ஆங்சுக் என்பவர் சர்வதேச வானியல் அமைப்பின் கௌரவ உறுப்பினராக நியமிக்கப் பட்டுள்ளார்.
- இவர் லடாக் பகுதியிலுள்ள ஹான்லே எனுமிடத்தில் அமைந்த இந்திய வானியல் இயற்பியல் கல்வி நிறுவனத்திற்குச் சொந்தமான இந்திய வானியல் ஆய்வகத்தின் ஒரு பொறியிலாளர் ஆவார்.
- இந்த மதிப்புமிக்க அமைப்பில் இத்தகைய பொறுப்பினை பெற்ற முதல் மற்றும் ஒரே இந்தியன் ஆங்சுக் ஆவார்.




## கடல் ஆமை வளங்காப்பிற்கான உலக விருது



- இந்திய உயிரியியலாளர் சைலேந்திர சிங் என்பவருக்கு பெஹ்லர் கடல் ஆமை வளங் காப்பு விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- அவருக்கு இவ்விருதானது மிகவும் அருகி வரும் மூன்று ஆமை இனங்களை அழிவின் விளிம்பிலிருந்து மீட்டதற்காக வேண்டி வழங்கப்பட்டுள்ளது.
- அந்த 3 இனங்களாவன
    - சிவப்பு நிறத் தலையுடன் கூடிய ஓடுடைய ஆமை (படாகூர் கச்சுகா)
    - வடக்கு நதி டெராபின் (படாகூர் பஸ்கா) மற்றும்
    - கருநிற மிருதுவான ஓடுடைய ஆமை (நில்சோனியா நிக்ரிகன்ஸ்)
- இந்தியாவில் 29 நன்னீர் வாழ் நில ஆமைகளும் கடல் ஆமைகளும் உள்ளன.

## ஆண்டின் சிறந்த பறவை புகைப்படக் கலைஞர்



- மெக்சிகோ நாட்டைச் சேர்ந்த புகைப்பட கலைஞர் அலிஜென்ட்ரோ ப்ரீட்டோ (Alejandro Prieto) என்பவர் 2021 ஆம் ஆண்டின் சிறந்த பறவை புகைப்படக் கலைஞர் என்ற ஒரு பெருமையைப் பெற்றுள்ளார்.
- அமெரிக்கா மற்றும் மெக்சிகோ இடையேயுள்ள முள்வேலியுடன் கூடிய எல்லைச் சுவரை உற்று நோக்கும் கிரேட்டர் ரோட்ரன்னர் (greater roadrunner) என்ற ஒரு பறவையினைப் புகைப்படமெடுத்ததற்காக இவர் இப்பெருமையைப் பெற்றார்.
- இந்தப் புகைப்படத்திற்கு "Blocked" என தலைப்பிடப்பட்டுள்ளது.

## திறன் மேம்பாட்டிற்கான சங்கத்தின் சிறந்த விருது 2021




- இந்திய மின்சாரக் கட்டமைப்பு கழக நிறுவனத்திற்கு (POWERGRID – Power Grid Corporation of India Limited) 2021 ஆம் ஆண்டின் திறன் மேம்பாட்டிற்கான சங்கத்தின் சிறந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- POWERGRID நிறுவனமானது இந்திய அரசின் எரிசக்தி அமைச்சகத்தின் கீழான மகா ரத்தின வகையைச் சேர்ந்த மத்திய பொதுத்துறை நிறுவனமாகும்.

- ❖ உலகம் முழுவதிலுமான 71 அமைப்புகளில் POWERGRID நிறுவனம் 8வது இடத்தினைப் பெற்றுள்ளது.
- ❖ இந்த விருதினை வெல்லும் ஒரே பொதுத்துறை நிறுவனமும் முதல் 20 இடங்களில் இடம் பெற்ற இரு இந்திய நிறுவனங்களுள் ஒன்றாகவும் POWERGRID மாறியுள்ளது.

## ஆற்றல் தலைமை விருது – 2021





- ❖ ராமகுண்டத்திலுள்ள தேசிய அனல்மின் நிலையக் கழகத்திற்கு இந்திய தொழில் துறைக் கூட்டமைப்பின் 2021 ஆம் ஆண்டிற்கான ஆற்றல் தலைமை விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- ❖ இந்தப் புகழ்மிக்க விருதினை ராமகுண்டம் NTPC நிறுவனம் தொடர்ந்து 3வது ஆண்டாகப் பெற்றுள்ளது.
- ❖ ISO 50001 தரநிலைகளின்படி ஆற்றல் மேலாண்மை அமைப்பினைச் செயல்படுத்தச் செய்தல், ஆற்றல் செயல்திறன் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய பகுதிகளில் ஆற்றப்படும் முன்மாதிரியான செயல்திறன் மற்றும் பங்களிப்பு ஆகியவற்றிற்காக ஆற்றல் தலைமை விருதானது வழங்கப்படுகிறது.

## யாமின் ஹசாரிகா - வுமன் ஆஃப் சப்ஸ்டேன்ஸ் விருது

- எழுத்தாளர் நமிதா கோகாய் ஏழாவது யாமின் ஹசாரிகா 'வுமன் ஆஃப் சப்ஸ்டென்ஸ்' என்ற விருதுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- அவர் ஜெய்ப்பூர் இலக்கிய விழாவின் இணை நிறுவனர் மற்றும் இணை இயக்குனர் ஆவார்.
- இந்த விருது 2015 ஆம் ஆண்டு முதல் பெண் தொழில் வல்லுநர்களின் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது
- இந்த வருடாந்திர விருதானது வடகிழக்கு இந்தியாவில் இருந்து DANIPS என்ற சேவைக்கு (Delhi, Andaman and Nicobar Island Police Service) தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண் யாமின் ஹசாரிகாவைக் கௌரவிக்கிறது.
- DANIPS என்பது 1977 ஆம் ஆண்டில் டெல்லி மற்றும் ஒன்றியப் பிரதேசங்களை நிர்வகிக்கும் ஒரு கூட்டாட்சி போலீஸ் சேவை ஆகும்.



## சுவாமி பிரம்மானந்த் விருது 2021



- கணிதவியலாளர் ஆனந்த் குமார் என்பவருக்கு 2021 ஆம் ஆண்டிற்கான சுவாமி பிரம்மானந்த் விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- "Super 30" என்ற அவருடைய முன்னெடுப்பின் மூலம் கல்வித் துறையில் அவர் ஆற்றிய பங்களிப்பிற்காக வேண்டி அவருக்கு இது வழங்கப்பட்டுள்ளது.

- இது பின்தங்கிய மாணவர்களுக்கு இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் சேர்வதற்கு வேண்டிய நுழைவுத் தேர்விற்கான பயிற்சியினை வழங்குகிறது.
- "Super 30" என்பது பாட்னாவில் உள்ள இவருக்குச் சொந்தமான ராமானுஜ கணிதக் கல்வி மையத்தின் ஒரு பயிற்சித் திட்டமாகும்.
- இது சமூகத்தில் பொருளாதார ரீதியில் பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்த 30 மாணவர்களைக் கண்டறிந்து அவர்கள் மதிப்பு மிக்க இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களின் நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற அவர்களுக்குப் பயிற்சி அளிக்கிறது.


## தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருது 2021

- குஜராத்தின் சர் சயாஜிராவ் பொது மருத்துவமனையில் பணிபுரியும் பானுமதி கீவாலா என்ற ஒரு செவிலியருக்கு இது வழங்கப்படும்.
- புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருதானது இந்தியச் செவிலிய மன்றத்தால் வழங்கப் படுகிறது.
- சுகாதார ஊழியர்களின் பங்களிப்புகளை அங்கீகரிக்க செய்கின்ற இது சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு சட்டப்பூர்வ நிறுவனமாகும்.



## யுனெஸ்கோ எழுத்தறிவுப் பரிசு

- கல்வி அமைச்சகத்தினால் நடத்தப்படும் தேசிய திறந்தநிலைப் பள்ளியானது இந்த உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது.
- தொழில்நுட்பம் மூலம் இயக்கப்பட்ட அனைவரையும் உள்ளடக்கிய கற்றல் மூலம் மாற்றுத் திறனாளிகளுக்குக் கல்வி கற்பிக்கச் செய்ததற்காக இந்த அங்கீகாரம் அதற்கு கிடைத்துள்ளது.



- இந்தப் பள்ளியானது இந்திய சைகை மொழி அடிப்படையிலான உள்ளடக்கத்தின் மீது ஒரு குறிப்பிட்ட கவனம் செலுத்துகிறது.

## ராஜ்பாஷா கீர்த்தி புரஸ்கார்

- மிகவும் மதிப்புமிக்க ‘ராஜ்பாஷா கீர்த்தி புரஸ்கார்’ விருதானது விசாகப்பட்டினம் எஃகு ஆலைக்கு வழங்கப்பட்டுள்ளது (முதல் பரிசு).
- இந்தியை ஆட்சி மொழியாகச் செயல்படுத்தச் செய்வதற்கான முயற்சிகளை அங்கீகரிக்கச் செய்த்தற்காக இந்த விருது வழங்கப்படுகிறது.
- தேசியக் கனிம மேம்பாட்டு நிறுவனமானது பொதுத் துறை நிறுவனங்கள் என்ற பிரிவில் 3வது பரிசினைப் பெற்றுள்ளது.
- தேசியக் கனிம மேம்பாட்டு நிறுவனமானது எஃகு அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது.
- கடந்த மூன்று ஆண்டுகளாக இந்நிறுவனம் இந்த விருதை வென்று வருகிறது.



## பேராசிரியர் S.K. ஜோஷி சிறந்த ஆய்வக விருது

- இது இந்தியத் தரநிலைச் சபையினால் சமீபத்தில் தொடங்கப்பட்ட விருதாகும்.
- இது நாட்டில் இது போன்ற முதலாவது சிறந்த ஆய்வக விருதாகும்.

## எர்த்ஷாட் பரிசு

- உலகெங்கிலும் உள்ள 5 இறுதிப் போட்டியாளர்களிலிருந்து இரண்டு இந்தியத் திட்டங்கள் இப்பரிசிற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.
- அவற்றுள் ஒன்று தமிழகத்தைச் சேர்ந்த வினிஷா உமா சங்கர் என்பவரால் வடிவமைக்கப் பட்ட சூரிய சக்தியால் இயங்கக் கூடிய இஸ்திரி வண்டி (Solar Powered Ironing Cart) ஆகும்.
- இரண்டாவது டெல்லியைச் சேர்ந்த வித்யுத் மோகன் என்பவருடன் இணைந்து தக்சாச்சர் என்பவரால் உருவாக்கப்பட்ட ஒரு வேளாண் கழிவு மறுசுழற்சி என்ற கருதுகோள் ஆகும்.

- இது 2020 ஆம் ஆண்டில் பிரிட்டனின் இளவரசர் வில்லியம் (கேம்பிரிட்ஜ் அரசர்) மற்றும் டேவிட் அட்டன்பெர்க் ஆகியோரால் தொடங்கப்பட்ட முதலாவது சுற்றுச்சூழல் பரிசாகும்.
- இது இங்கிலாந்தில் ராயல் பவுண்டேசன் என்ற அமைப்பினால் வழங்கப்படுகிறது.




## படைப்பிரிவுத் தலைவர் S.V. சரஸ்வதி



- இராணுவ செவிலியச் சேவைப் பிரிவின் துணைத் தலைமை இயக்குநரான படைப் பிரிவுத் தலைவர் (பிரிகேடியர்) S.V. சரஸ்வதி என்பவருக்கு 2020 ஆம் ஆண்டிற்கான தேசிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- ஒரு செவிலிய நிர்வாகியாக இராணுவச் செவிலிய சேவையில் இவர் ஆற்றிய மகத்தான பங்களிப்பிற்காக இவருக்கு இந்த விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- இவர் ஆந்திரப் பிரதேசத்தின் சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்தவராவார்.
- இந்த விருதானது சுயநலமற்ற அர்ப்பணிப்பு மற்றும் சிறப்பான தொழில்முறைக்காக ஒரு செவிலியர் பெறக் கூடிய மிக உயரிய அங்கீகாரம் ஆகும்.

## 73வது எம்மி விருது 2021

**Outstanding Drama Series:** The Crown
**Outstanding Comedy Series:** Ted Lasso
**Outstanding Variety Talk Show:** Last Week Tonight with John Oliver
**Outstanding Limited Series:** The Queen's Gambit
**Outstanding Actor–Comedy:** Jason Sudeikis (Ted Lasso)
**Outstanding Actor–Drama:** Josh O'Connor
**Outstanding Actor–Limited Series or Movie:** Ewan McGregor (Halston)
**Outstanding Actress–Comedy:** Jean Smart (Hacks)
**Outstanding Actress–Drama:** Olivia Colman (The Crown)
**Outstanding Actress–Limited Series or Movie:** Kate Winslet (Mare of Easttown)
**Outstanding Supporting Actor–Comedy:** Brett Goldstein (Ted Lasso)
**Outstanding Supporting Actor–Drama:** Tobias Menzies (The Crown)
**Outstanding Supporting Actor–Limited Series or Movie:** Evan Peters (Mare of Easttown)
**Outstanding Supporting Actress–Comedy:** Hannah Waddingham (Ted Lasso)
**Outstanding Supporting Actress–Drama:** Gillian Anderson (The Crown)
**Outstanding Supporting Actress–Limited Series or Movie:** Julianne Nicholson (Mare of Easttown)
**Outstanding Director–Comedy:** Lucia Aniello (Hacks)
**Outstanding Director–Drama:** Jessica Hobbs (The Crown)
**Outstanding Director–Limited Series, Movie or Dramatic Special:** Scott Frank (The Queen's Gambit)
**Outstanding Writing–Comedy:** Lucia Aniello, Paul W Downs and Jen Statsky (Hacks)
**Outstanding Writing–Drama:** Peter Morgan (The Crown)
**Outstanding Writing–Limited Series, Movie Or Dramatic Special:** Michaela Coel (I May Destroy You)

- 73வது எம்மி விருது வழங்கும் விழாவானது கலிஃபோர்னியாவிலுள்ள லாஸ் ஏஞ்செல்சில் நடத்தப் பட்டது.
- தொலைக்காட்சி கலை மற்றும் அறிவியல் அகாடமியினால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமெரிக்காவின் சிறந்த பிரதான ஒளிபரப்பு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு இந்த விருதானது வழங்கப்பட்டது.
- எம்மி விருது (அ) எம்மி என்பது தொலைக்காட்சித் துறையில் சிறந்து விளங்கும் நபர்களுக்கு வழங்கப்படும் ஒரு அமெரிக்க விருதாகும்.

## இமாலயத் திரைப்பட விழா – 2021

- முதலாவது இமாலயத் திரைப்பட விழாவானது (2021) லடாக்கின் லே எனுமிடத்தில் செப்டம்பர் 24 முதல் 28 வரை நடைபெற உள்ளது.
- இந்தத் திரைப்பட விழாவானது லடாக் ஒன்றியப் பிரதேச நிர்வாகத்தினால் நடத்தப் படுகிறது.
- இந்த விழாவானது இந்திய அரசின் தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகத்தின் திரைப்பட விழாக்களின் இயக்குநரகத்துடன் இணைந்து நடத்தப்படுகிறது.




## நிலையான மேம்பாட்டு இலக்கு முன்னேற்ற விருது



- வங்காளதேசப் பிரதமர் ஷேக் ஹசீனா அவர்களுக்கு நிலையான மேம்பாட்டு இலக்கு முன்னேற்ற விருதானது (SDG Progress Award) வழங்கப்பட்டுள்ளது.
- இந்த விருதானது ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஆதரவு பெற்ற நிலையான மேம்பாட்டுத் தீர்வு கூட்டமைப்பினால் வழங்கப்படுகிறது.
- வறுமையை ஒழிப்பதற்கான உலகளாவிய நடவடிக்கைகளுக்கு ஏற்ப செயல் பட்டதிலும், கிரகத்தைப் பாதுகாத்தல் மற்றும் அனைவருக்கும் அமைதியையும் செழிப்பையும் உறுதி செய்தல் ஆகியவற்றிலும் சிறப்பாகச் செயலாற்றி வரும் வங்காள தேசத்தின் நிலையான போக்கிற்காக இந்த விருதானது அவருக்கு வழங்கப் பட்டது.

*குறிப்பு*

- 9வது வருடாந்திர நிலையான மேம்பாட்டு மாநாடானது செப்டம்பர் 20 அன்று நடத்தப் பட்டது.
- இந்த நிகழ்வின்போது, 'இந்த நாளின் மகுடத்தில் ஓர் அணிகலன்' (jewel in the crown of the day) என்று ஷேக் ஹசீனா அறிமுகப்படுத்தப்பட்டார்.

## விமானப் படைத் தலைவர் – விவேக் ராம் சௌத்ரி

- இந்திய விமானப் படையின் துணைத் தலைவரான விமானப் படைத்தளபதி விவேக் ராம் சௌத்ரி விமானப் படையின் அடுத்த தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.
- தற்போதைய விமானப்படைத் தலைவரான தலைமைத் தளபதி R.K. பதௌரியா செப்டம்பர் 30 அன்று ஓய்வு பெற உள்ளார்.
- சௌத்ரி இந்த ஆண்டு ஜூலை 01 அன்று விமானப் படைத் தளபதி H.S. அரோரா ஓய்வு பெற்றதை அடுத்து துணைத் தலைவராக பொறுப்பேற்றார்.
- இவர் பரம் விசிஷ்ட சேவா பதக்கம், அதி விசிஷ்ட சேவா பதக்கம் மற்றும் வாயு சேனா போன்ற பதக்கங்களைப் பெற்றவராவார்.



## உலகளாவிய இலக்குகள் விருது 2021

- பில் & மெலிந்தா கேட்ஸ் அறக்கட்டளையானது தனது வருடாந்திர கோல்கீப்பர்ஸ் '2021ஆம் ஆண்டு உலகளாவிய இலக்குகள் விருதுகளை' அறிவித்துள்ளது.
- கோல்கீப்பர்ஸ் என்பது நிலையான மேம்பாட்டு இலக்குகளை (உலகளாவிய இலக்குகள்) நோக்கிய முன்னேற்றத்தை துரிதப்படுத்த இந்த அறக்கட்டளையினால் தொடங்கப்பட்ட ஒரு இயக்கமாகும்.
- தென்னாப்பிரிக்காவின் பம்சில் மிலம்போ – இங்குகா என்பவருக்கு 2021 ஆம் ஆண்டின் உலகளாவிய கோல்கீப்பர் விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- கொலம்பியாவைச் சேர்ந்த ஜெனீபர் கோல்பாஸ் என்பவருக்கு 2021 ஆம் ஆண்டின் முன்னேற்ற விருதானது வழங்கப்பட்டுள்ளது.
- லைபீரியாவைச் சேர்ந்த சட்டா செரீஃப் என்பவருக்கு 2021 ஆம் ஆண்டின் பிரச்சார விருதானது வழங்கப்பட்டுள்ளது.



## 2020-21 ஆம் ஆண்டின் சிறந்த சட்டமன்ற உறுப்பினர்

- கர்நாடகா சட்டப் பேரவையானது அம்மாநிலத்தின் முன்னாள் முதல்வரான B.S. எடியூரப்பா அவர்களை 2020-21 ஆம் ஆண்டின் சிறந்த சட்டமன்ற உறுப்பினராக அறிவித்துள்ளது.
- தென்னிந்தியாவின் முதல் பா.ஜ.க கட்சி சார்ந்த முதல்வர் எடியூரப்பா ஆவார்.
- இவர் கர்நாடக மாநிலத்தின் 19வது முதல்வராக பணியாற்றினார்.



## CSIR புத்தாக்க விருது




- குடியரசுத் துணைத் தலைவர் M. வெங்கய்யா நாயுடு அவர்கள் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றத்தின் புத்தாக்க விருதினை வழங்கினார்.
- இந்த விருதுகளானது உடுப்பி மாவட்டத்தைச் சேர்ந்த 10 ஆம் வகுப்பு பயிலும் இரு மாணவர்களுக்கு காணொலி வாயிலாக நடைபெற்ற விழாவில் வழங்கப் பட்டது.
- அவர்கள் கிராமத்திலுள்ள சாரமக்கி நாராயண செட்டி நினைவு அரசு உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த அனுஷா மற்றும் ரக்சிதா நாயக் ஆகியோர் ஆவர்.
- "சமையல் எரிவாயு சேமிப்புக் கருவி" என்ற அவர்களது திட்டத்திற்கு இந்த விருதானது வழங்கப் பட்டுள்ளது.
- 14 பள்ளிகளில் இந்த விருதினைப் பெறும் ஒரே அரசுப் பள்ளி சாரமக்கி நாராயண செட்டி நினைவு அரசு உயர்நிலைப் பள்ளியாகும்.

### ஹுனர்பாஸ் விருதுகள்




- ஹைதராபாத்திலுள்ள தேசிய ஊரக மேம்பாடு மற்றும் பஞ்சாயத்து ராஜ் கல்வி நிறுவனமானது ஊரக மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தின் கீழ், 15 மாநிலங்களைச் சேர்ந்த 75 மாற்றுத் திறனாளிகளுக்கு ஹுனர்பாஸ் விருதுகளை வழங்கியது.
- இந்த விருது வழங்கும் விழாவானது அந்த்யோதயா திவாஸ் தினத்தினை நினைவு கூறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

# விளையாட்டுச் செய்திகள்

### நொய்சியல் சர்வதேச ஓபன் 2021 சதுரங்கப்போட்டி

- இந்தியக் கிராண்ட் மாஸ்டர் P இனியன் நொய்சியல் சர்வதேச ஓபன் 2021 சதுரங்கப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.
- 7.5 மதிப்புகளைப் பெற்ற உக்ரனைச் சேர்ந்த கிராண்ட்மாஸ்டர் யூரி சோலோ டோவ்நிசென்கோவினை (Yuri Solodovnichenko) இனியன் அரைப் புள்ளியில் முந்தினார்.
- பிரான்சு நாட்டின் சர்வதேச மாஸ்டர் கம்ப்ரத் யான்னிக் மூன்றாம் (Kambrath Yannick) இடத்தைப் பெற்றார்.



## டோக்கியோ பாராலிம்பிக்ஸ் 2020 – புதிய தகவல்கள்




- ❖ மல்யுத்த வீரராக இருந்து ஈட்டி எறியும் வீரராக மாறிய சுமித் அண்டில் தங்கம் வென்று வரலாறு படைத்துள்ளார்.
- ❖ F64 என்ற வரம்பில் 68.55 மீ என்ற ஒரு உலக சாதனையின் மூலம் அவர் தங்கப் பதக்கத்தினை வென்றார்.
- ❖ துப்பாக்கிச் சுடுதல் வீராங்கனையான அவனி லேக்கரா பாராலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்ற முதல் இந்தியப் பெண்மணி என்ற வரலாற்றினைப் படைத்துள்ளார்.
- ❖ மகளிருக்கான 1 0மீ ஏர் ரைபிள் ஸ்டான்டிங் SH1 போட்டியின் இரண்டாம் சுற்றில் அவர் தங்கம் வென்றார்.
- ❖ இவர் மொத்தம் 249.6 புள்ளிகள் பெற்று உலக சாதனையையும் புதிய பாராலிம்பிக் சாதனையையும் படைத்துள்ளார்.
- ❖ ஆடவருக்கான F56 போட்டியில் வட்டு எறியும் வீரர் யோகேஷ் கத்தூனியா வெள்ளிப் பதக்கம் வென்றார்.
- ❖ ஆடவருக்கான F46 ஈட்டி எறிதல் இறுதிச் சுற்றில் தேவேந்திர ஜஜாரியா வெள்ளியும் சுந்தர் சிங் குர்ஜார் வெண்கலமும் வென்றனர்.

## நிசாத் குமார் – வெள்ளிப் பதக்கம்



- இந்தியாவைச் சேர்ந்த நிசாத் குமார் 2020 ஆம் ஆண்டு டோக்கியோ பாராலிம்பிக்ஸ் போட்டிகளின் ஆடவருக்கான உயரம் தாண்டுதலுக்கான T47 என்ற ஒரு போட்டியில் வெள்ளிப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- இது டோக்கியோ 2020 பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் இந்தியாவிற்குக் கிடைத்த இரண்டாவது பதக்கமாகும்.
- 23 வயதான நிசாந்த் 2.06 மீட்டர் வரை தாண்டியதன் மூலம் ஆசிய அளவிலான ஒரு சாதனையைப் படைத்துள்ளார்.
- இவர் வெள்ளிப் பதக்கத்தினை வென்ற அமெரிக்காவின் டல்லாஸ் வைஸ் என்ற வீரருக்கு இணையான உயரத்தைத் தாண்டி அவரைச் சமன் செய்தார்.

## பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் இரண்டு பதக்கங்களை வென்ற முதல் இந்திய பெண்மணி




- அவனி லேக்ரா அவர்கள் மகளிர் 50 மீ ரைபிள் 3 நிலை SH1 போட்டியில் வெண்கலப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் இரண்டு பதக்கங்களை வென்ற முதல் இந்தியப் பெண்மணி எனும் பெருமையை இவர் பெற்றுள்ளார்.
- மேலும் இவர் 10 மீ ஏர் ரைபிள் ஸ்டாண்டிங் SH1 போட்டியில் தங்கப் பதக்கத்தினையும் வென்றுள்ளார்.

## பிரவீன் குமார் – ஆசிய சாதனை

- பிரவீன் குமார் அவர்கள் 2.07 மீ உயரம் தாண்டி (ஆசிய சாதனை) வெள்ளிப் பதக்கத்தினை வென்றுள்ளார்.
- 2.10 மீ வரை தாண்டிய கிரேட் பிரிட்டனைச் சேர்ந்த ஜோனாதன் பூரூம் எட்வர்டை அடுத்து இவர் இரண்டாமிடத்தினைப் பெற்றார்.
- நிசாத்குமார், மாரியப்பன் தங்கவேலு மற்றும் சரத் குமார் ஆகியோரை அடுத்து டோக்கியோ போட்டிகளில் ஆடவர் உயரம் தாண்டுதல் போட்டியில் இந்தியாவிற்கான 4வது பதக்கத்தினை வென்றவர் ஆவார்.




## 50 மீ கலப்பு பிஸ்டெல் – டோக்கியோ பாராலிம்பிக்ஸ்



- அசாகா துப்பாக்கி சுடுதல் பயிற்சிக் களத்தில் நடைபெற்ற P4 கலப்பு 50மீ பிஸ்டல் SH1 இறுதிப் போட்டியில் இந்தியத் துப்பாக்கி சுடும் வீரர்களான மணீஷ் நர்வால் மற்றும் சிங்ராஜ் அதானா ஆகியோர் முறையே தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளனர்.
- 19 வயதான மணீஷ் தங்கப் பதக்கத்திற்கான 218.2 புள்ளிகளைப் பெற்று பாராலிம்பிக் சாதனையைப் படைத்துள்ளார்.
- சிங்ராஜ் டோக்கியோ பாராலிம்பிக்ஸ் போட்டிகளில் தனது 2வது பதக்கத்தினை வென்றுள்ளார்.

## ஆசிய குத்துச்சண்டை சாம்பியன்சிப் – இளநிலை & இளையோர் பதிவு

- துபாயில் நடைபெற்ற இப்போட்டியில் இந்தியா வெற்றிகரமாக 14 தங்கங்கள் உட்பட 39 பதக்கங்களை வென்றுள்ளது.
- முன்னதாக நடந்த இளநிலைப் போட்டியில் (junior event) 8 தங்கம், 5 வெள்ளி மற்றும் 6 வெண்கலப் பதக்கங்கள் உள்பட 19 பதக்கங்களை இந்தியா வென்றுள்ளது.

- இளையோர் குத்துச்சண்டை வீரர்கள் (youth boxers) மேலும் 20 பதக்கங்களை (6 தங்கம், 9 வெள்ளி மற்றும் 5 வெண்கலம்) இந்தியாவிற்குப் பெற்றுத் தந்துள்ளனர்.

**(YOUTH EVENT)**

**(MEN): GOLD:** Bishwamitra Chongtham (51kg), Vishal (80kg); SILVER: Vishvanath Suresh (48kg), Vanshaj (64kg) and Jaydeep Rawat (71kg); BRONZE: Daksh (67kg), Deepak (75kg), Abhimanyu (92kg) and Aman Singh Bisht (92+kg).

**(WOMEN): GOLD:** Neha (54kg), Preeti Dahiya (60kg), Sneha Kumari (66kg) and Khushi (75kg); SILVER: Nivedita Karki (48kg), Tamanna (50kg), Simran Verma (52kg), Preeti (57kg), Khushi (63kg) and Tanishbir Kaur Sandhu (81kg); BRONZE: Lashu Yadav (70kg).

**(JUNIOR EVENT)**

**(BOYS): GOLD:** Rohit Chamoli (48kg) and Bharat Joon (+81kg); SILVER: Gaurav Saini (70kg); BRONZE: Ashish (54kg), Anshul (57kg) and Ankush (66kg).

**(GIRLS): GOLD:** Vishu Rathee (48kg), Tanu (52kg), Nikita Chand (60kg), Mahi Raghav (63kg), Pranjal Yadav (75kg) and Kirti (+81kg); SILVER: Muskan (46kg), Aanchal Saini (57kg), Rudrika (70kg) and Sanjana (81kg); BRONZE: Devika Ghorpade (50kg), Aarzoo (54kg) and Supriya Rawat (66kg).

## துராந்த் கோப்பை




- 130வது துராந்த் கோப்பைப் போட்டியானது கொல்கத்தாவில் உள்ள விவேகானந்தா யுப பாரதி கிரிரங்கன் என்ற இடத்தில் தொடங்கியது.
- இது ஆசியாவின் க்ளப் அணிகளுக்கான மிகப் பழமையான ஒரு கால்பந்துப் போட்டி ஆகும்.
- இது முதன்முதலாக இமாச்சலப் பிரதேசத்திலுள்ள தக்சாய் எனுமிடத்தில் 1888 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது.
- மோர்டிமர் துராந்தின் நினைவாக இப்போட்டிக்கு இப்பெயர் சூட்டப்பட்டது.
- இவர் அப்போதைய இந்திய வெளிநாட்டுச் செயலாளராகப் பணியாற்றிய நபராவார்.

## கின்னஸ் உலக சாதனை – ரொனால்டோ

- போர்ச்சுக்கீசியக் கால்பந்து அணியின் தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ ஆடவர் சர்வதேசக் கால்பந்து விளையாட்டில் அதிக கோல்கள் அடித்ததற்கான உலகச் சாதனையை முறியடித்துள்ளார்.
- ஈரானிய நாட்டின் ஸ்டிரைக்கர் அலி டெயினுடைய 109 சர்வதேச கோல்கள் என்ற ஒரு நீண்டகாலச் சாதனையை ரொனால்டோ விஞ்சியுள்ளார்.



## அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி 2021

- ரஷ்யாவின் டேனி மெட்வடெவ் ஆடவர் பிரிவில் செர்பியாவின் நோவாக் ஜோகோவிச்சை வீழ்த்தி தனது முதலாவது கிராண்ட் ஸ்லாம் கோப்பையை வென்று உள்ளார்.
- மகளிர் பிரிவில், பிரிட்டனின் டென்னில் வீரர் எமா ரடுகானு (Emma Raducanu) கனடாவின் லெய்லா அனீ பெர்னான்டசை வீழ்த்தினார்.



## ஜஸ்கரன் மல்ஹோத்ரா

- சண்டிகரில் பிறந்த அமெரிக்காவின் ஜஸ்கரன் மல்ஹோத்ரா பப்புவா நியூ கினியா அணிக்கு எதிரான போட்டியில் 6 சிக்சர்களை விலாசினார்.
- சர்வதேச சதம் அடித்த முதல் அமெரிக்க கிரிக்கெட் வீரர் என்ற ஒரு பெருமையையும் இவர் பெற்றுள்ளார்.
- இதன் மூலம் இவர் ஹெர்சல் கிப்ஸ் (தென் ஆப்பிரிக்கா), யுவ்ராஜ் சிங் (இந்தியா) மற்றும் கீரன் பொல்லார்டு (மேற்கு இந்தியத் தீவுகள்) ஆகியோரின் பட்டியலில் இணைந்துள்ளார்.
- சர்வதேச கிரிக்கெட் போட்டியில் 6 சிக்சர்களை அடித்த பெருமையையும் இவர்கள் கொண்டுள்ளனர்.



## 2022 ஆம் ஆண்டின் ஆசியப் போட்டிகள்




- 2022 ஆம் ஆண்டிற்கான ஆசியப் போட்டிகள் சீனாவின் ஹாங்ஜோவ் என்னுமிடத்தில் நடத்தப் பட உள்ளது.
- இது 8 காணொளி அல்லது வீடியோ முறையிலான விளையாட்டுப் போட்டிகளை பதக்கத்திற்குரிய போட்டிகளாக நடத்த உள்ளது.
- 2022 ஆம் ஆண்டு ஆசியப் போட்டிகளில் சேர்க்கப்படவுள்ள வீடியோ முறையிலான அந்த 8 விளையாட்டுப் போட்டிகளாவன – அரேனா ஆஃப் வாலெர், டோட்டா 2, டிரீம் த்ரீ கிங்டம்ஸ் 2, EA ஸ்போர்ட்ஸ் FIFA, ஹெர்த்ஸ்டோன், லீக் ஆஃப் லெஜென்ட்ஸ், PUBG மொபைல் மற்றும் ஸ்டிரீட் பைட்டர் V ஆகியன.
- ஆசியப் போட்டிகள் வீடியோ முறையிலான விளையாட்டுகளைப் பதக்கத்திற்குரியப் போட்டிகளாக அங்கீகரித்து நடத்தப்படுவதன் முதல் ஆண்டினை 2022 ஆம் ஆண்டின் ஆசியப் போட்டிகள் குறிக்கின்றது.

## விராட் கோலி

- இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் விராட் கோலி 2021 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் துபாயில் நடைபெற உள்ள ஆடவர் T20 உலகக் கோப்பைப் போட்டிக்குப் பிறகு இந்திய கிரிக்கெட் அணியின் T20 போட்டிக்கான அணித் தலைவர் பொறுப்பிலிருந்து விலக உள்ளார்.
- எனினும் இவர் ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் அணிக்குத் தொடர்ந்து தலைமை வகிப்பார்.




## 70வது கிராண்ட் மாஸ்டர் – R. ராஜா ரித்விக்

- இந்தியாவைச் சேர்ந்த R. ராஜா ரித்விக் 2500 என்ற ELO தரவரிசையைக் கடந்ததை அடுத்து சதுரங்கப் போட்டியின் கிராண்ட் மாஸ்டராக உருவெடுத்துள்ளார்.
- 17 வயதான இவர் ஹங்கேரியின் புதாபெஸ்ட் எனுமிடத்தில் நடைபெற்ற வெசெர்கெப்சோ கிராண்ட் மாஸ்டர் செஸ் போட்டியில் கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை வென்றார்.
- இதன்மூலம் இவர் இந்தியாவின் 70வது கிராண்ட் மாஸ்டராக உருவெடுத்துள்ளார்.
- வாரங்கல்லைச் சேர்ந்த ரித்விக், N.V.S. ராமராஜு என்ற புகழ்பெற்ற ஒரு பயிற்சியாளரிடம் மேம்பட்ட பயிற்சியினைப் பெற்று வருகிறார்.



## மகளிருக்கான 1500 மீட்டர் ஓட்டப்பந்தயம் – தேசிய சாதனை

- பஞ்சாபைச் சேர்ந்த ஹர்மிலன் கௌர் பைன்ஸ் மகளிருக்கான 1500 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் ஒரு புதிய தேசியச் சாதனையைப் படைத்துள்ளார்.
- தெலங்கானாவிலுள்ள ஹனம் கொண்டா எனுமிடத்தில் அமைந்த ஜவஹர்லால் நேரு அரங்கில் நடைபெற்ற 60வது தேசிய திறந்தவெளி தடகள சாம்பியன்சிப் போட்டியில் 4:05:39 என்ற மணிக் கணக்கில் ஓடி தங்கம் வென்றார்.
- இந்தச் சாதனையின் மூலம், பூசானில் 2002 ஆம் ஆண்டு மேற்கொள்ளப் பட்ட ஆசியப் போட்டிகளின் 1500 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் 4:06:03 என்ற மணிக் கணக்கில் ஓடி சாதனை படைத்த சுனிதா ராணி என்பவரின் 19 ஆண்டுகாலச் சாதனையை இந்த 23 வயதுப் பெண்மணி முறியடித்துள்ளார்.




## ஆசிய ஸ்னூக்கர் சாம்பியன்சிப் 2021

- இந்திய நாட்டைச் சேர்ந்த பங்கஜ் அத்வானி அமீர் சர்கோஷ் என்பவரை வீழ்த்தி 2021 ஆம் ஆண்டு ஆசிய ஸ்னூக்கர் சாம்பியன்சிப் போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.
- இவர் தொடர்ந்து 2வது முறையாக இப்போட்டியில் வெற்றி பெற்றுள்ளார்.
- 2019 ஆம் ஆண்டில் நடைபெற்ற கடைசி ஆசிய ஸ்னூக்கர் சாம்பியன்சிப் போட்டியின் வெற்றியாளரும் இவரே ஆவார்.



- 2019 ஆம் ஆண்டில் அனைத்து வகையான பில்லியர்ட்ஸ், ஸ்னூக்கர், 6 ரெட்ஸ் மற்றும் 10 ரெட்ஸ் போட்டிகளிலும் வெற்றி பெற்ற ஒரே வீரர் பங்கஜ் ஆவார்.
- இந்த சாம்பியன்சிப் பட்டத்தை வென்ற மற்ற இந்தியர்கள் யாசின் மெர்சண்ட் (1989, 2001), அலோக் குமார் (2004), ஆதித்யா மேத்தா (2012) ஆகியோர் ஆவர்.

## பிரைம் கைப்பந்து போட்டி

- ஃபேன்டசி விளையாட்டு தலைமை அமைப்புகள் A23 என்ற அமைப்பினால் நிதி வழங்கப் படும் பிரைம் கைப்பந்து சாம்பியன்சிப் போட்டியானது ஹைதராபாத்தில் தொடங்கப் பட்டது.
- இது 6 அணிகளைக் கொண்டு நடத்தப் படுகிறது.
- அந்த 6 அணிகளாவன; காளிகட் ஹீரோஸ், கொச்சி ஃப்ளூ ஸ்பைடர்ஸ், அகமதாபாத் டிஃபென்டர்ஸ், ஹைதராபாத் பிளாக் ஹாக்ஸ், நடப்பு சாம்பியன் சென்னை பிளிட்ஸ் மற்றும் பெங்களூரு டார்பிடோஸ் ஆகியவையாகும்.

## பிரவீன் சித்திரவேல்

- தமிழகத்தைச் சேர்ந்த பிரவீன் சித்திரவேல் தேசிய ஓபன் தடகள சாம்பியன்சிப் போட்டியில் மும்முறை உயரம் தாண்டுதல் போட்டியில் தங்கம் வென்றார்.
- இவர் 16.88 மீட்டர் உயரம் வரை தாண்டியுள்ளார்.
- இதன் மூலம் இவர் ரஞ்சித் மகேஷ்வரி (17.30) மற்றும் அர்பீந்தர் சிங் (17.17) ஆகியோரை அடுத்து 3வது சிறந்த இந்தியராக உருவெடுத்துள்ளார்.



## ரஷ்ய கிராண்ட் பிரிக்ஸ் 2021

- லூயிஸ் ஹாமில்டன் (மெர்சிடஸ்-கிரேட் பிரிட்டன்) F1 ரஷ்ய கிராண்ட் பிரிக்ஸ் 2021 என்ற பந்தயத்தில் வெற்றி பெற்றார்.
- இது இவரது 100வது கிராண்ட் பிரிக்ஸ் வெற்றியாகும்.
- இது இந்தத் தொடரில், ஹாமில்டனின் 5வது வெற்றியாகும்.
- மேலும் ஜூலை மாத கிராண்ட் பிரிக்ஸ் பந்தயத்திற்குப் பிறகு அவர் பெற்ற முதல் வெற்றி இதுவாகும்.




## 2021 உலக வில்வித்தை சாம்பியன்சிப்

- 2021 ஆம் ஆண்டு உலக வில்வித்தை சாம்பியன்சிப் போட்டியில் இந்திய வில்வித்தை அணி 3 வெள்ளிப் பதக்கங்களை வென்றுள்ளது.
- இப்போட்டியானது அமெரிக்காவின் தெற்கு டகோடா மாகாணத்தின் யாங்டன் என்னுமிடத்தில் நடத்தப் பட்டது.
- மகளிர் கூட்டுத் தனிநபர், மகளிர் கூட்டு அணி மற்றும் கலப்பு அணி ஆகிய பிரிவுகளில் இந்த 3 வெள்ளிப் பதக்கங்கள் வெல்லப் பட்டன.
- இது தவிர விஜயவாடாவைச் சேர்ந்த வென்னம் சுரேகா உலக சாம்பியன்சிப் போட்டியில் 3 வெள்ளிப் பதக்கங்களை வென்ற முதல் இந்தியப் பெண் வில்வித்தை வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.




# முக்கிய தினங்கள்

## உலக தேங்காய் தினம் – செப்டம்பர் 02

- இத்தினமானது 2009 ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் அனுசரிக்கப்பட்டு வருகிறது.
- இத்தினமானது இந்த வெப்பமண்டலப் பழத்தைப் பற்றி விளம்பரப் படுத்தவும் இதனுடைய ஆரோக்கியப் பயன்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்யவும் வேண்டி அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டு இத்தினத்தின் கருத்துரு, "கோவிட்-19 தொற்று காலம் மற்றும் அதற்கு அப்பாற்பட்ட காலகட்டத்தில் ஒரு பாதுகாப்பான, நெகிழ்திறன் வாய்ந்த மற்றும் நிலையான தேங்காய் உற்பத்தி சமுதாயத்தினைக் கட்டமைத்தல்" (Building a Safe Inclusive Resilient and Sustainable Coconut Community Amid COVID-19 Pandemic & Beyond') என்பதாகும்.

## தேசிய ஊட்டச்சத்து வாரம் 2021 – செப்டம்பர் 01 முதல் 07 வரை

- நல்ல ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியம் குறித்த ஒரு விழிப்புணர்வினைப் பரப்பச் செய்வதற்காக வேண்டி இந்த வார அளவிலான நிகழ்வு அனுசரிக்கப்படுகிறது.
- இந்த ஆண்டு தேசிய ஊட்டச்சத்து வாரத்திற்கான கருத்துரு, "Feeding Smart Right From Start" என்பதாகும்.




## கழுகு குறித்த விழிப்புணர்விற்கான சர்வதேச தினம் – செப்டம்பர் 04

- ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் முதல் சனிக் கிழமையன்று இத்தினம் அனுசரிக்கப் படுகிறது.
- கழுகுகளின் வளங்காப்பு மற்றும் அது குறித்த விழிப்புணர்வை எடுத்துரைப்பதே இதன் நோக்கமாகும்.

- இந்த முன்னெடுப்பானது தென் ஆப்பிரிக்காவிலுள்ள அருகி வரும் வனவிலங்குகள் அறக்கட்டளையின் இரையுண்ணும் பறவைகள் திட்டம் மற்றும் இங்கிலாந்திலுள்ள பருந்துகளின் வளங்காப்பு அறக்கட்டளை ஆகியவற்றால் இணைந்து ஏற்பாடு செய்யப் படுகிறது.

## சர்வதேச தொண்டு தினம் - செப்டம்பர் 05




- இது அன்னை தெரசாவின் நினைவு நாளை முன்னிட்டு இந்நாள் இந்த தேதியில் அனுசரிக்கப்படுகிறது.
- அன்னை தெரசா 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் 5 அன்று இறந்தார் (87).
- அவர் 1979 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசைப் பெற்றார்.
- இந்நாள் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் 2012 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது.
- இது முதலில் ஹங்கேரியக் குடிமைச் சமூகத்தால் ஹங்கேரி அரசாங்கத்தின் ஆதரவுடன் கொண்டாடப் பட்டது.

## ஆசிரியர் தினம் - செப்டம்பர் 05




- டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்களையும் மற்றும் நாட்டில் உள்ள அனைத்து ஆசிரியர்களையும் கௌரவிக்கும் விதமாக 1962 முதல் ஆண்டுதோறும் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.
- டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணன் அவர்கள் இந்தியாவின் முதல் துணை குடியரசுத் தலைவர் (1952-1962) மற்றும் நாட்டின் இரண்டாவது குடியரசுத் தலைவர் (1962-67) ஆவார்.
- அக்டோபர் 5 ஆம் தேதி அன்று அனுசரிக்கப் படும் உலக ஆசிரியர் தினத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பே இந்தியாவில் ஆசிரியர் தின விழா கொண்டாடப்படுகிறது.

## நீல வானத்திற்கான சுத்தமான காற்று சர்வதேச தினம் - செப்டம்பர் 07

- 'ஆரோக்கியமான காற்று, ஆரோக்கியமான கிரகம்' (Healthy Air, Healthy Planet) என்பது இந்த ஆண்டின் கருப்பொருள் ஆகும்.
- 2020 ஆம் ஆண்டில் இந்த தினம் முதல் முறையாக சர்வதேச அளவில் அனுசரிக்கப் பட்டது.
- ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இது தொடர்பான தீர்மானத்தை 2019 ஆம் ஆண்டில் ஏற்றுக் கொண்டது.

## சர்வதேச எழுத்தறிவு தினம் – 8 செப்டம்பர்




- 1966 ஆம் ஆண்டில் யுனெஸ்கோ அமைப்பானது செப்டம்பர் 8 ஆம் தேதியை சர்வதேச எழுத்தறிவு தினமாக அறிவித்தது.
- இந்த ஆண்டின் கருப்பொருள் 'Literacy for a human-centered recovery, Narrowing the digital divide' (மனிதனை மையப்படுத்திய ஒரு மீட்சிக்காக வேண்டி எழுத்தறிவு, எண்ம எழுத்தறிவின் இடைவெளியினைக் குறைப்பது) என்பதாகும்
- ஐ.நா.வின் நிலையான வளர்ச்சி இலக்கு 4 மற்றும் நிலையான வளர்ச்சிக்கான ஐ.நா.வின் 2030 ஆம் ஆண்டிற்கான இலக்கில் கல்வியறிவுப் பிரச்சினை ஒரு முக்கிய அங்கமாகும்.

## உணவு பதப்படுத்தும் வாரம் - செப்டம்பர் 6 முதல் 12 வரை

- இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் ஆனதை நினைவு கூரும் வகையில், இந்திய அரசு 'ஆசாதி கா அமிர்த மஹோத்ஸவ்' என்ற நிகழ்வைக் கொண்டாடுகிறது.

- அந்தக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக, உணவு பதப்படுத்தும் தொழில்துறை அமைச்சகமானது இந்த 'உணவு பதப்படுத்தும் வாரத்தை' கடைபிடித்தது.




## இயன்முறை சிகிச்சை தினம் – 8 செப்டம்பர்




- உலகெங்கிலும் உள்ள இயன்முறை சிகிச்சையாளர்களை (physical therapists) நினைவு கூர்வதற்காக இந்நாள் அனுசரிக்கப்படுகிறது.
- மக்களின் நல்வாழ்வு மற்றும் ஆரோக்கியத்தை மேம்படுத்தச் செய்வதில் இத்தொழிலின் முக்கியப் பங்கு பற்றிய விழிப்புணர்வை ஊக்குவிக்கச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1996 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட இந்த நாளானது உலக பிசியோதெரபி (World Physiotherapy) அமைப்பு மூலம் ஊக்குவிக்கப்படுகிறது.
- கடந்த ஆண்டின் கருப்பொருளே இந்த ஆண்டும் கடைபிடிக்கப்படுகிறது (Rehabilitation and Long Covid-19 – புனர்வாழ்வு மற்றும் நீண்ட கோவிட் 19 தொற்றுக் காலம்).

## கல்வியை ஆபத்திலிருந்துப் பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் – 9 செப்டம்பர்


- இது 2020 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் ஒருமித்த முடிவால் நிறுவப் பட்ட ஒரு சர்வதேச அனுசரிப்பாகும்

- இத்தினத்தைப் பிரகடனப்படுத்தும் ஒரு தீர்மானத்தை கத்தார் நாடு வழங்கியது.
- யுனெஸ்கோ மற்றும் யுனிசெஃப் ஆகிய அமைப்புகள் ஐநா அமைப்புக்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள துணை அமைப்புகளின் நெருக்கமான ஒத்துழைப்புடன் இதனை ஆண்டுதோறும் அனுசரிக்க வேண்டிய உதவிகளைச் செய்யும்.




## உலகத் தற்கொலை தடுப்பு தினம் – 10 செப்டம்பர்

- 2003 ஆம் ஆண்டில் ஸ்வீடனின் ஸ்டாக்ஹோம் நகரில், தற்கொலைத் தடுப்புக்கான சர்வதேசச் சங்கமானது உலக சுகாதார அமைப்புடன் (WHO) இணைந்து இதை உருவாக்கியது.
- இந்த ஆண்டு இந்நாளுக்கான கருப்பொருள் "செயலின் மூலம் ஒரு நம்பிக்கையை உருவாக்குதல்" என்பதாகும்.





## தேசிய வனத் தியாகிகள் தினம் – 11 செப்டம்பர்

- 1730 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 அன்று நடந்த கெஜார்லி படுகொலையின் நினைவாக இது அனுசரிக்கப் படுகிறது.
- ராஜஸ்தானில் மகாராஜா அபய் சிங் ஆட்சியின் போது, கெஜார்லி மரங்களை வெட்ட உத்தரவிடப் பட்டது.
- அச்சமயம் அமிர்தா தேவி என்பவரின் தலைமையில் 360க்கும் மேற்பட்ட பிஷ்னாய்

பழங்குடியினர் வனத்திலுள்ள மரங்களை அழிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

- 2013 ஆம் ஆண்டில், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகமானது இந்த நாளை அனுசரிக்க அதிகாரப் பூர்வமான அறிவிப்பினை அறிவித்தது.
- மேலும், சிப்கோ இயக்கமானது பிஷ்னோய் சமூகத்தின் இந்த துணிச்சலான செயலால் ஊக்குவிப் பட்டது.
- சிப்கோ இயக்கம் 1973 ஆம் ஆண்டில் உத்தரகாண்டின் இமயமலைப் பகுதியில் (அப்போதைய உத்தரப் பிரதேசத்தின் ஒரு பகுதி) துவங்கப்பட்டது.
- காந்தியச் சமூக ஆர்வலர் சாந்தி பிரசாத் பட் அவர்கள் மண்டல் கிராமத்தில் முதல் சிப்கோ இயக்கத்திற்குத் தலைமை தாங்கினார்.
- பின்னர் இந்த இயக்கம் சுற்றுச்சூழல் ஆர்வலரான சுந்தர் லால் பகுகுணாவின் கீழ் ஈர்ப்பைப் பெற்றது.
- "சூழலியல் என்பது நிரந்தரப் பொருளாதாரம்" என்ற ஒரு முழக்கத்திற்காக பகுகுணா சிறப்பாக நினைவு கூறப் படுகிறார்.




## தெற்கு தெற்கு ஒத்துழைப்புக்கான சர்வதேச தினம் – 12 செப்டம்பர்

- தெற்கில் உள்ள பிராந்தியங்கள் மற்றும் நாடுகளால் சமீபத்திய ஆண்டுகளில் மேற்கொள்ளப் பட்ட பொருளாதார, சமூக மற்றும் அரசியல் முன்னேற்றங்களை இந்த நாள் கொண்டாடுகிறது.
- தெற்கு-தெற்கு ஒத்துழைப்பின் வரலாறானது 1949 ஆம் ஆண்டில் பொருளாதார மற்றும் சமூக மன்றத்தால் ஐ.நா. தொழில்நுட்ப உதவித் திட்டத்தை நிறுவியதிலிருந்தும் 1969 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்டத்தை உருவாக்கியதிலிருந்தும் தொடங்குகிறது.

## சர்வதேச நிரலியாளர்கள் தினம் – 13 செப்டம்பர்

- நமது அன்றாட வாழ்க்கையை மேம்படுத்த நிரலியாளர்கள் செய்யும் நேர்மறையான மாற்றங்களை இது கொண்டாடுகிறது.
- இது ஒவ்வோர் ஆண்டும் அதன் 256வது நாளான செப்டம்பர் 13 அன்று அல்லது லீப் ஆண்டுகளில் செப்டம்பர் 12 அன்று கொண்டாடப்படுகிறது.
- 256 என்பது 365 என்பதை விடக் குறைவான இரண்டின் அதிகபட்ச பெருக்கடுக்காகும் (2 power 28).

## இமாலய தினம் – செப்டம்பர் 09

- இது உத்தரக்காண்ட் மாநிலத்தில் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.
- தூய கங்கைக்கான தேசியத் திட்டமானது 'ஆசாதி கா அம்ரித் மகோத்சவ்' என்ற கொண்டாட்டத்தின் ஓர் அங்கமாக நவ்லா அறக்கட்டளையுடன் இணைந்து இமாலய திவாஸ் என்ற நிகழ்வினை ஏற்பாடு செய்தது.
- 'இமாலயத்தின் பங்களிப்பு மற்றும் நமது பொறுப்புகள்' என்ற கருத்துருவுடன் இத்தினம் அனுசரிக்கப்பட்டது.

## உலக மின்சார வாகன தினம் – செப்டம்பர் 09

- மின்சார வாகனப் போக்குவரத்தினை கொண்டாடும் விதமாக இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இது கீரின் டிவி எனப்படும் நீடித்த நிலைத்தன்மை என்ற ஒரு ஊடக நிறுவனத்தினால் தொடங்கப் பட்டதாகும்.
- உலக மின்சார வாகன தினமானது முதல்முறையாக 2020 ஆம் ஆண்டில் அனுசரிக்கப் பட்டது.
- சீன நாடானது உலகின் மிகப்பெரிய மின்சார வாகனச் சந்தையாகத் திகழ்கிறது.
- ஜப்பான் நாட்டின் சுசுகி நிறுவனம் இந்தியாவில் மின்சார வாகனத்தினை அறிமுகப் படுத்த உள்ளதாக அறிவித்துள்ளது.
- தற்போது இந்தியாவில் வாகனத் தொழில்துறையானது உலகளவில் 5வது மிகப்பெரிய நாடாக உள்ளது.
- இது 2030 ஆம் ஆண்டில் 3வது மிகப்பெரிய நாடாக மாற வேண்டி இலக்கு ஒன்று நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

## உலக முதலுதவி தினம் – செப்டம்பர் 11

- இது செப்டம்பர் மாதத்தின் இரண்டாம் சனிக்கிழமையன்று கடைப்பிடிக்கப் படுகிறது.
- இது சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்களின் கூட்டமைப்பினால் அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "முதலுதவி மற்றும் சாலைப் பாதுகாப்பு" என்பதாகும்.

## இந்தி தினம் – செப்டம்பர் 14


- இந்திய அரசின் இரண்டு அலுவல் மொழிகளுள் ஒன்றாக தேவநாகரி எழுத்து வடிவத்திலுள்ள இந்தி மொழி அறிவிக்கப்பட்டதைக் குறிக்கும் விதமாக இத்தினம் ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.
- அரசியலமைப்பின் 343வது சட்டப்பிரிவின் கீழ், இந்தி மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளும் இந்திய அரசின் அலுவல் மொழிகளாகும்.
- முதலாவது இந்தி திவாஸ் தினமானது 1953 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- உலக இந்தி தினமானது ஜனவரி 10 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 ஆம் தேதியன்று இந்தி மொழியானது இந்தியாவின் அலுவல் மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.,
- இந்த ஆண்டின் இத்தேதியானது பியோஹர் ராஜேந்திர சிம்ஹா அவர்களுடைய 50வது பிறந்த நாளாகும்.
- பியோஹர் ராஜேந்திர சிம்ஹா அவர்கள் ஹசாரி பிரசாத் திவேதி, காகா கலேல்கர், மைதிலி சரண் குப்தா, மற்றும் சேத் கோவிந்த் தாஸ் ஆகியோருடன் இணைந்து இந்தி மொழியை இந்தியாவின் அலுவல் மொழியாக அறிவிப்பதற்காக அரசியலமைப்பு நிர்ணய சபையில் அயராது விவாதித்து அதற்காக கடினமாக உழைத்தவராவார்.
- இந்தி மொழியானது இந்திய-ஐரோப்பிய மொழிக் குடும்பத்தின் இந்திய-ஆரிய கிளையைச் சார்ந்ததாகும்.
- ‘இந்தி’ என்ற சொல் பாரசீக மொழியில் தோன்றியதாகும்.
- முதலாவது இந்திக் கவிதையானது புகழ்பெற்ற பாரசீக கவிஞர் அமீர் குஷ்ரூ அவர்களால் இயற்றப்பட்டது.
- 1977 ஆம் ஆண்டில் இந்தியாவின் முதல் வெளியுறவுத் துறை அமைச்சர் அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்கள் ஐக்கிய நாடுகள் அவையில் முதல்முறையாக இந்தியில் உரையாற்றினார்.
- 1918 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி அவர்கள் இந்தி மொழியை இந்தியாவின் தேசிய மொழியாக அறிவிப்பது குறித்து முதல் முறையாக பேசினார்.

## சர்வதேச ஜனநாயக தினம் – செப்டம்பர் 15

- 2007 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அவையானது இது தொடர்பான தீர்மானத்தினை நிறைவேற்றியது.
- சர்வதேச ஜனநாயக தினத்தை முன்கொண்டு வருவதற்கான முயற்சிகளை கத்தார் நாடு மேற்கொண்டது.
- ஜனநாயகம் குறித்த சர்வதேசப் பிரகடனமானது 1997 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 அன்று பாராளுமன்றங்களுக்கிடையேயான ஒன்றியத்தினால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.
- இது தேசியப் பாராளுமன்றங்களின் ஒரு சர்வதேச அமைப்பாகும்.
- 2021 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அமைப்பு ஒரு எதிர்கால நெருக்கடியின் மத்தியில் ஜனநாயக மீள்திறனை வலுப்படுத்த வேண்டி அழைப்பு விடுக்கின்றது.


## பொறியாளர்கள் தினம் – செப்டம்பர் 15

- இந்தியாவின் தலைசிறந்த பொறியாளரான மோக்ச குண்டம் விஷ்வேஷ்வரய்யா அவர்களுக்குக் கௌரவம் அளிக்கும் விதமாக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இவர் மைசூர் நகரில் அமைந்துள்ள கிருஷ்ணராஜ சாகர் அணைக்கட்டின் தலைமைப் பொறியாளர் ஆவார்.
- ஹைதராபாத் நகரின் வெள்ளப் பாதுகாப்பு அமைப்பின் தலைமைப் பொறியாளர்களில் ஒருவராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.
- 1903 ஆம் ஆண்டில் புனேயிலுள்ள கதக்வாசலா நீர்த்தேக்கத்தில் தானியங்கு வெள்ளத் தடுப்பு மதகுகளை இவர் வடிவமைத்தார்.
- இத்தினத்திற்கான கருத்துரு, "நலமானக் கிரகத்திற்கான பொறியியல் – யுனெஸ்கோவின் பொறியியல் அறிக்கையினைக் கொண்டாடுதல்" என்பதாகும்.
- இந்திய அரசு 1968 ஆம் ஆண்டில் விஸ்வேஸ்வரய்யாவின் பிறந்த தினத்தை பொறியியலாளர் தினமாக அறிவித்தது.
- அவர் நவீன மைசூரின் தந்தை என அறியப் படுகின்றார்.
- இந்தியாவின் திட்டமிட்ட பொருளாதாரம் மற்றும் இந்தியாவினை மீள்கட்டமைத்தல் போன்ற பலதரப்பட்ட புத்தகங்களையும் அவர் எழுதி உள்ளார்.




## ஓசோன் அடுக்கினைப் பாதுகாப்பதற்கான சர்வதேச தினம் – செப்டம்பர் 16

- இது 1994 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் அறிவிக்கப்பட்டது.
- இது 1987 ஆம் ஆண்டில் ஓசோன் அடுக்கினைப் பாதிக்கும் பொருட்கள் மீதான மான்ட்ரியல் கோட்பாடு கையெழுத்தான தினத்தின் நினைவாக இத்தினமானது அறிவிக்கப் பட்டது.
- இது கையெழுத்தான 30 ஆண்டுகளுக்குப் பிறகு ஓசோன் அடுக்கிலுள்ள துளை மூடப் பட்டதாகக் கண்டறியப் பட்டது.




## உலக நோயாளிப் பாதுகாப்பு தினம் – செப்டம்பர் 17

- ❖ நோயாளிகளின் பாதுகாப்பு குறித்த ஒரு உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்தச் செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ மேலும் நோயாளிகளுக்கு நிகழும் பாதிப்பினைக் குறைப்பதற்கு அனைத்து நாடுகள் மற்றும் சர்வதேச கூட்டிணைவு அமைப்புகள் ஒன்றிணைந்து ஒற்றுமையாகச் செயல்படவும் இது அழைப்பு விடுக்கிறது.
- ❖ உலக சுகாதார அமைப்பின் இந்தப் பிரச்சாரத்திற்கான இந்த ஆண்டு முழக்கமானது "பாதுகாப்பான மற்றும் மதிப்பு மிக்க குழந்தைப் பேறுக்காக வேண்டி இப்பொழுதே செயல்படுங்கள்" என்பதாகும்.
- ❖ இந்த ஆண்டிற்கான கருத்துரு, "பாதுகாப்பான தாய் சேய் நலப் பராமரிப்பு" என்பது ஆகும்.
- ❖ இது 72வது உலக சுகாதார மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் 2019 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.

## உலக நிணநீர் நாளப் புற்றுநோய் விழிப்புணர்வு தினம் – செப்டம்பர் 15

- ❖ இத்தினமானது நிணநீர் நாளப் புற்றுநோய் (lymphoma) குறித்த ஒரு விழிப்புணர்வை பரப்புவதற்காக அர்ப்பணிக்கப் பட்டுள்ளது.
- ❖ இது 2002 ஆம் ஆண்டில் லிம்போமா கூட்டிணைவு அமைப்பினால் தொடங்கப்பட்டது.

## சர்வதேச சம ஊதிய தினம் – 18 செப்டம்பர்

- ❖ ஐக்கிய நாடுகள் பொது அவையின் முன்னெடுப்பின் கீழ் இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.

- முதலாவது சர்வதேச சம ஊதிய தினமானது 2020 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- பாலின ஊதிய இடைவெளி தொடர்பான பாலினப் பாகுபாட்டினை முடிவுக்குக் கொண்டு வருவதன் முக்கியத்துவத்தினை இது எடுத்துக் காட்டுகிறது.
- ஊதியம் பெறும் வேலைவாய்ப்புகளில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வழங்கப் படும் வருமானத்தில் உள்ள வேறுபாட்டினை இது குறிக்கிறது.
- தற்போதைய வேகத்தில், பொருளாதாரப் பாலினச் சமநிலையை அடைய இன்னும் 257 ஆண்டுகள் ஆகலாம்.

## உலகத் தண்ணீர் கண்காணிப்புத் தினம் – 18 செப்டம்பர்

- இது உலகெங்கிலும் உள்ள நீர்வள ஆதாரங்களைப் பாதுகாத்தல் மற்றும் நீர் ஆய்வு ஆகியவற்றில் ஈடுபடுதல் மற்றும் அது பற்றிய விழிப்புணர்வைப் பொது மக்களிடையே அதிகரித்தல் போன்ற நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் ஒரு சர்வதேச முயற்சி ஆகும்.
- இத்தினமானது 2003 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் தூய நீர் என்ற அறக்கட்டளையால் உருவாக்கப் பட்டது.

## சர்வதேச சிவப்புப் பாண்டா தினம் – 18 செப்டம்பர்




- இது ஒவ்வோர் ஆண்டின் செப்டம்பர் மாதத்தினுடைய மூன்றாம் சனிக்கிழமையன்று அனுசரிக்கப் படுகிறது.
- இத்தினமானது 2010 ஆம் ஆண்டில் சிவப்புப் பாண்டா வலையமைப்பு என்ற ஒரு அமைப்பினால் தொடங்கப்பட்டது.
- சிவப்புப் பாண்டாக்களின் வாழ்விடங்களில் 50 சதவீதமானது கிழக்கு இமாலயப் பகுதிகளில் அமைந்துள்ளது.

- இது கிழக்கு இமாலயப் பகுதி மற்றும் வடமேற்கு சீனா ஆகிய பகுதிகளைப் பிறப்பிடமாகக் கொண்டது.
- இது IUCN சிவப்புப் பட்டியலில் அருகி வரும் ஒரு இனமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்த விலங்குகள் தனது வாழ்வின் பெரும்பகுதியை மரங்களிலேயேச் செலவிட்டு அவற்றிலேயே உறங்கவும் செய்கின்றன.
- அவை கூடு அமைக்கும் மரங்கள் மற்றும் மூங்கில்கள் ஆகியவற்றில் ஏற்பட்டுகின்ற அழிவானது சிவப்புப் பாண்டாக்களின் எண்ணிக்கையில் சரிவை ஏற்படுத்துகிறது.


## சர்வதேசப் பல்கலைக் கழக விளையாட்டுத் தினம் – 20 செப்டம்பர்




- சர்வதேசப் பல்கலைக் கழக விளையாட்டுக் கூட்டமைப்பானது 2015 ஆம் ஆண்டில் பல்கலைக் கழக விளையாட்டிற்கென அர்ப்பணிக்கப்பட்ட ஒரு தினத்தினை அங்கீகரிக்க UNESCO அமைப்பிடம் முன்மொழிந்தது.
- இத்தினமானது உலகிலுள்ள பெரும்பாலான நாடுகளின் கல்வியாண்டுத் தொடக்க தினத்துடன் ஒத்துப் போகிறது.
- மேலும் இத்தினமானது 1924 ஆம் ஆண்டில் முதல் உலக மாணாக்கர் சாம்பியன்சிப் போட்டி நடைபெற்ற தேதியாகும்.

## இரயில்வே பாதுகாப்புப் படைத் தினம் – 20 செப்டம்பர்

- இரயில்வே பாதுகாப்புப் படைக்கு ஆயுதப் படை எனும் அந்தஸ்து வழங்கப்பட்டதன் நினைவாக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இப்படையானது 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 அன்று இந்தியாவின் மற்ற துணை இராணுவப் படைகளுக்கு இணையாக அறிவிக்கப்பட்டது.
- இப்படையானது 1957 ஆம் ஆண்டு இரயில்வே பாதுகாப்புப் படைச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு பாதுகாப்புப் படையாகும்.
- இது இரயில்வே அமைச்சகத்தின் கீழ் இயங்குகிறது.




## 57வது இந்தியத் தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தினம் – 15 செப்டம்பர்

- இது 1964 ஆம் ஆண்டில் இந்திய வெளியுறவு அமைச்சகத்தினால் நிறுவப்பட்டது.
- இது இந்தியாவின் வளர்ச்சி அனுபவம் மற்றும் சரியான தொழில்நுட்பங்களை வளர்ந்து வரும் நாடுகளுக்கு வழங்குவதற்கான தினமாகும்.





## 36வது சர்வதேச கடற்கரையைச் சுத்தப் படுத்துதல் தினம் – 18 செப்டம்பர்

- இத்தினமானது 1986 ஆம் ஆண்டு முதல் செப்டம்பர் மாதத்தின் மூன்றாம் சனிக் கிழமையன்று பாரம்பரியமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.
- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “குப்பையை குப்பைத் தொட்டியில் போடுங்கள், கடலில் அல்ல” என்பதாகும்.
- இத்தினமானது ‘பெருங்கடல் வளங்காப்பு’ என்ற அமைப்பினால் நிறுவப்பட்டது.

## உலக மூங்கில் தினம் – 18 செப்டம்பர்

- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "#PlantBamboo : இது மூங்கில் நட வேண்டிய சமயம்" என்பதாகும்.
- மூங்கிலானது போவாசியே என்ற குடும்பத்தைச் சேர்ந்த உயரமான மரம் போன்ற ஒரு புல் இனம் ஆகும்.
- இத்தினமானது 2009 ஆம் ஆண்டில் உலக மூங்கில் அமைப்பினால் அறிவிக்கப்பட்டது.




## சர்வதேச அமைதி தினம் – 21 செப்டம்பர்

- இது ஐக்கிய நாடுகளினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு விடுமுறையாகும்.
- இது முதன்முறையாக 1981 ஆம் ஆண்டில் கடைபிடிக்கப் பட்டது.
- இத்தினத்தைத் தொடங்குவதற்காக நியூயார்க் நகரில் அமைந்த ஐக்கிய நாடுகள் அவையின் தலைமையகத்தில் ஐ.நா. அமைதி மணியானது ஒலிக்கப் பட்டது.
- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "ஒரு சமமான மற்றும் நிலையான உலகிற்கான சிறப்பான மீள்வு" என்பதாகும்.

## உலக மறதிநோய் (அல்சைமர்) தினம் – 21 செப்டம்பர்

- அல்சைமர் நோயானது டிமென்சியாவின் (மறதிநோயின்) மிகவும் பொதுவான வகையிலான நோயாகும்.
- இந்த நோய்க்கு எவ்வித சிகிச்சையும் இதுவரையில் இல்லை.
- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Know Dementia, Know Alzheimer" என்பதாகும்.
- "Journey through the diagnosis of dementia" என்று தலைப்பிடப்பட்ட உலக அல்சைமர் அறிக்கையானது வெளியிடப்பட உள்ளது.

## பூஜ்ஜிய உமிழ்வு தினம் – செப்டம்பர் 21

- வளிமண்டலத்திலிருந்து கார்பன் உமிழ்வுகளைக் குறைப்பதற்கு உதவுவதற்காக வேண்டி இத்தினமானது தொடங்கப்பட்டது.
- இது புதைபடிவ எரிபொருட்களுக்குப் பதிலாக புதுப்பிக்கத் தக்க ஆற்றலைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கான தினமாகும்.
- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Giving our planet a day off a year" என்பதாகும்.

## பாம்புக்கடி பற்றிய விழிப்புணர்விற்கான சர்வதேச தினம் – செப்டம்பர் 19

- இந்த ஆண்டு 4வது பாம்புக்கடி பற்றிய விழிப்புணர்விற்கான சர்வதேச தினமானது அனுசரிக்கப் பட்டது.
- மரணம் மற்றும் இயலாமை போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தி உலகம் முழுவதும் உள்ள மக்களைப் பாதித்து ஒரு பெரிய பொது சுகாதாரப் பிரச்சினையாக நிலவி வரும் பாம்புக்கடியானது ஒரு புறக்கணிக்கப்பட்ட பிரச்சினையாக உள்ளது.
- 2018 ஆம் ஆண்டு செப்டம்பர் 19 அன்று முதலாவது பாம்புக்கடி பற்றிய விழிப்புணர்விற்கான சர்வதேச தினமானது அனுசரிக்கப்பட்டது.
- இத்தினமானது பாம்புக்கடியினால் ஏற்படும் பாதிப்புகளின் சுமைகளை எதிர் கொள்வதற்கான நடவடிக்கைகள் மற்றும் அது குறித்த விழிப்புணர்வினை வலியுறுத்துகின்றது.

## சர்வதேச காதுகேளாதோர் வாரம் – செப்டம்பர் 20 முதல் 26 வரை

- ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் கடைசி ஞாயிறு வரையிலான முழு வாரமும் சர்வதேச காது கேளாதோர் வாரமாக அனுசரிக்கப்படுகிறது.
- செப்டம்பர் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமையானது உலக காது கேளாதோர் தினம் (அ) சர்வதேச காது கேளாதோர் (செப்டம்பர் 26, 2021) தினமாக அனுசரிக்கப் படுகிறது.
- 2021 ஆம் ஆண்டிற்கான சர்வதேச காது கேளாதோர் தினத்தின் கருத்துரு, "Celebrating Thriving Deaf Communities" என்பதாகும்.




*குறிப்பு*

- இது உலக காது கேளாதோர் கூட்டமைப்பின் ஒரு முன்னெடுப்பாகும்.

- இது முதன்முதலாக 1958 ஆம் ஆண்டில் இத்தாலியின் ரோம் நகரில் நடைபெற்ற உலக காது கேளாதோர் கூட்டமைப்பின் முதல் உலக மாநாட்டின் நினைவாக தொடங்கப் பட்டது.

## உலக ரோஸ் தினம் – 22 செப்டம்பர்

- இத்தினமானது அஸ்கின்ஸ் டியூமர் எனப்படும் ஓர் அரிய வகை இரத்தப் புற்று நோயினால் பாதிக்கப்பட்ட கனடாவைச் சேர்ந்த 12 வயது சிறுமி மெலிந்தா ரோசின் நினைவாக அனுசரிக்கப்படுகிறது.
- புற்றுநோய் நோயாளிகளின் நலனுக்காக செப்டம்பர் 22 அன்று உலக ரோஸ் தினமானது ஆண்டுதோறும் அனுசரிக்கப்படுகிறது.
- உலகப் புற்றுநோய் தினமானது பிப்ரவரி 4 அன்று அனுசரிக்கப்படுகிறது.

## உலக காண்டாமிருக தினம் – 22 செப்டம்பர்





- காண்டாமிருகத்தின் 5 இனங்களையும் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதற்காக இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- அந்த 5 இனங்கள்,
  - கருப்பு நிற காண்டாமிருகம்,
  - வெள்ளை நிற காண்டாமிருகம்,
  - ஒற்றைக் கொம்பு காண்டாமிருகம்,
  - சுமத்திரா காண்டாமிருகம் மற்றும்
  - ஜாவா காண்டாமிருகம்

- ❖ உலக காண்டாமிருக தினமானது 2010 ஆம் ஆண்டில் தென் ஆப்பிரிக்காவின் உலக வனவிலங்கு நிதியத்தினால் முதன்முதலில் அறிவிக்கப்பட்டது.
- ❖ 2011 ஆம் ஆண்டு முதல் இத்தினமானது அனுசரிக்கப்பட்டு வருகிறது.

## உலக மகிழுந்து அற்ற தினம் – 22 செப்டம்பர்

- ❖ மகிழுந்து வாகனத்தைப் பயன்படுத்தாமல் இருப்பதன் நன்மைகளை முன்னலைப் படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- ❖ இத்தினமானது உலகெங்கிலும் உள்ள வாகன ஓட்டிகள் தங்களது மகிழுந்துகளை ஒரு நாள் மட்டும் இயக்காமல் இருக்குமாறு ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர் 22 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- ❖ காற்று மாசுபாட்டுக் குறைவு மற்றும் பாதுகாப்பான சூழலில் நடைப்பயிற்சி மற்றும் சைக்கிள் ஓட்டுதல் போன்றவற்றினை ஊக்குவித்தல் போன்ற பல நன்மைகளை மக்களுக்கு இத்தினமானது எடுத்துரைக்கிறது.

## இலையுதிர் கால சம பகல் இரவு நாள் – 23 செப்டம்பர்




- ❖ இலையுதிர் கால பகல் – இரவு நாளானது செப்டம்பர் 21 மற்றும் 24 ஆகிய நாட்களுக்கு இடையில் எப்போது வேண்டுமானாலும் நிகழலாம்.
- ❖ இந்த ஆண்டு செப்டம்பர் 23 அன்று நிகழ்ந்தது.
- ❖ சம பகல் – இரவு நாள் என்பது புவியானது சூரியனைச் சுற்றி வருகையில் அதன் அச்சில் பூமி சாய்ந்திருப்பதால் ஏற்படும் ஒரு வானியல் நிகழ்வாகும்.
- ❖ இந்த நாளில், புவியின் அச்சானது அதன் சுற்றுப்பாதைக் கோட்டிலிருந்து 23.5 டிகிரி அளவிற்குச் சாய்ந்திருக்கும்.


## சர்வதேச சைகை மொழிகள் தினம் – 23 செப்டம்பர்

- ❖ இத்தினமானது உலகம் முழுவதும் ஆண்டுதோறும் செப்டம்பர் 23 அன்று அனுசரிக்கப் படுகிறது.

- சைகை மொழிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சைகை மொழிகளின் நிலையை வலுப்படுத்தவும் வேண்டி இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- 2021ஆம் ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "We sign for Human Rights" என்பதாகும்.

## வானிஜ்ய சப்தா – செப்டம்பர் 20 முதல் 26 வரை

- செப்டம்பர் 20 முதல் 26 ஆம் தேதி வரை 'வானிஜ்ய சப்தா' என்ற நிகழ்வை அனுசரிக்க வர்த்தக அமைச்சகம் முடிவு செய்துள்ளது.
- இதில் இந்தியாவின் வளர்ந்து வரும் பொருளாதாரச் சக்தியை நாடு முழுவதும் வெளிப்படுத்தும் நோக்கில் பல்வேறு நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் நிகழ்வுகளானது ஏற்பாடு செய்யப்படும்.
- இந்திய வெளிநாட்டு வர்த்தகக் கல்வி நிறுவனமானது நாட்டின் 5 பகுதிகளில் 5 தேசிய கருத்தரங்கங்களை ஏற்பாடு செய்ய உள்ளது.




## நாட்டு நலப்பணித் திட்ட தினம் – 24 செப்டம்பர்

- நாட்டு நலப்பணித் திட்டமானது இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தினால் செயல்படுத்தப்படும் ஒரு பொதுச் சேவைத் திட்டடமாகும்.
- இது சமூக சேவையை வழங்குவதில் இளம்மாணவர்களுக்கு ஒரு நல்ல அனுபவத்தை வழங்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- நாட்டு நலப்பணித் திட்டமானது 1969 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி அவர்களுடைய பிறந்த நாள் மீதான நூற்றாண்டின் போது தொடங்கப் பட்டது.


- இத்திட்டமானது இந்திய அரசின் இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகத்தினால் செயல்படுத்தப்படும் மத்திய அரசின் ஒரு திட்டமாகும்.




## உலக மருந்தாளுநர் தினம் – 25 செப்டம்பர்

- ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் மருந்தாளுநர்களின் பங்கினைக் குறித்த ஒரு விழிப்புணர்வை உருவாக்கும் விதமாக இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இத்தினமானது சர்வதேச மருந்தாளுகைக் கூட்டமைப்பின் சபையுடன் சேர்ந்து அந்த அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு முன்னெடுப்பாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Pharmacy : Always trusted for your health" என்பதாகும்.
- இத்தினமானது 2009 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப் பட்டது.

## அந்த்யோதயா திவாஸ் – 25 செப்டம்பர்



- பண்டித தீன்தயாள் உபாத்யாயாவின் பிறந்தநாள் நிறைவினைக் குறிக்கும் வகையில் இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இத்தினமானது 2014 ஆம் ஆண்டு செப்டம்பர் 25 அன்று மோடி அரசினால் அறிவிக்கப் பட்டது.
- அந்த்யோதயா என்பதன் பொருள் 'ஏழை எளியோரை முன்னேற்றுதல்' என்பதாகும்.

## ஐரோப்பிய மொழிகள் தினம் – 26 செப்டம்பர்

- இத்தினமானது மொழி கற்றல் மற்றும் மொழியியலின் பன்முகத்தன்மை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக நன்முறையில் நிறுவப்பட்ட ஒரு வருடாந்திர வாய்ப்பாகும்.
- இது 2001 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட தொடங்கிய இத்தினமானது ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐரோப்பியச் சபையினால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டதாகும்.




## உலக ஆறுகள் தினம் 2021 – 26 செப்டம்பர்

- இத்தினமானது 2005 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டிலும் செப்டம்பர் மாதத்தின் 4வது ஞாயிற்றுக்கிழமை அன்று அனுசரிக்கப் படுகிறது.
- உலகெங்கிலும் உள்ள நதிகளுக்கான ஆதரவுகளை வழங்கி, அவற்றைப் பாதுகாத்து, அவற்றின் வளங்களைக் காப்பதற்கான அவசியம் குறித்த ஒரு உலகளாவிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டி இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- 2021 ஆம் ஆண்டில் செப்டம்பர் 26 அன்று உலக ஆறுகள் தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “Waterways in our Communities” என்பதாகும்.

## உலக சுற்றுச்சூழல் நலன் தினம் – 26 செப்டம்பர்

- சர்வதேச சுற்றுச்சூழல் நலக் கூட்டமைப்பானது ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 26 ஆம் தேதியினை உலக சுற்றுச்சூழல் நலன் தினமாக அனுசரிக்குமாறு அறிவித்தது.
- உலகெங்கிலும் சுற்றுச்சூழல் நலன் வழங்கும் பணிகள் குறித்த முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை வழங்க வேண்டி இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.

- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, 'உலகளாவிய மீட்சியில் நலமான சமூகத்திற்காக சுற்றுச்சூழல் நலனுக்கு முன்னுரிமை அளித்தல்' என்பதாகும்.




## உலக கருத்தடைத் தினம் – 26 செப்டம்பர்

- தம்பதிகள் மற்றும் தனிநபர்கள் தாங்கள் எத்தனை குழந்தைகளைப் பெற வேண்டும் என்பதற்காகவும் குழந்தை பெறுவதற்கான கால இடைவெளி குறித்தும் சுதந்திரமாகவும் வெளிப்படையாகவும் முடிவெடுக்கும் உரிமைகள் மீது கவனத்தை ஈர்க்கும் பொருட்டும் இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இத்தினமானது முதன்முதலாக 2007 ஆம் ஆண்டில் அனுசரிக்கப்பட்டது.
- கருத்தடை என்பது தேவையற்ற கர்ப்பத்தைத் தடுக்க தேவையான ஒரு பிறப்புக் கட்டுப்பாட்டு முறையாகும்.

## அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றத்தின் 80வது நிறுவன தினம் – 26 செப்டம்பர்

- அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றமானது இந்த ஆண்டு தனது 80வது நிறுவன தினத்தைக் கொண்டாடியது.
- இந்தக் கழகமானது சமகாலத்திய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பாகும்.
- இந்தக் கழகமானது "CSIR@80 : நோக்கம் & உத்தி 2022 - புதிய இந்தியாவிற்கான புதிய CSIR" என்பதில் இடம் பெற்றுள்ளது.
- CSIR அமைப்பானது உலகளாவிய 1587 அரசு நிறுவனங்களில் 37வது இடத்தில் உள்ளது.
- மேலும் சைமாக்கோ நிறுவனங்களுக்கான 2021 ஆம் ஆண்டு உலகத் தரவரிசையின் படி, முதல் 100 உலக அரசு நிறுவனங்களில் இடம் பெற்ற ஒரே இந்திய நிறுவனம் இதுவே ஆகும்.
- இக்கழகமானது ஆசிய அளவில் 7வது இடத்தினைப் பெற்று இந்திய நாட்டை முன்னணியில் நிலை நிறுத்தி வருகிறது.

## உலக சுற்றுலா தினம் – 27 செப்டம்பர்

- சர்வதேச சமூகத்தில் சுற்றுலாவின் பங்கு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த தினம் அனுசரிக்கப் படுவதற்கான ஒரு நோக்கமாகும்.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "உள்ளார்ந்த வளர்ச்சிக்கான சுற்றுலா" என்பதாகும்.
- 1980 ஆம் ஆண்டு முதல் இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.




## உலக வெறிநாய்க்கடி நோய் (ரேபிஸ்) தினம் – 28 செப்டம்பர்

- இந்த வைரஸ் நோயின் தாக்கம் மற்றும் அதை எவ்வாறு தடுப்பது என்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- வெறிநாய்க்கடி நோய்க்கான முதல் தடுப்பு மருந்தினை உருவாக்கிய லூயிஸ் பாஸ்டர் அவர்களுடைய நினைவு நாளை நினைவுகூறும் வகையில் உலகளவில் இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "வெறிநாய்க்கடி நோய் : உண்மைகள், பயம் அல்ல" (Rabies : Facts, not fear) என்பதாகும்.



## உணவு இழப்பு மற்றும் சேதம் பற்றிய சர்வதேச விழிப்புணர்வு தினம் – 29 செப்டம்பர்

- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது இத்தினத்தை அறிவித்தது.
- 12வது நிலையான மேம்பாட்டு இலக்கினை (பொறுப்புடன் கூடிய நுகர்வு மற்றும் உற்பத்தி) பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்த நாள் அனுசரிக்கப் படுகிறது.
- இத்தினமானது உணவு மற்றும் வேளாண் அமைப்பு மற்றும் ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட அமைப்பு ஆகியவற்றால் இணைந்து அனுசரிக்கப் படுகிறது.




## உலக இருதய தினம் – 29 செப்டம்பர்

- இது உலக இருதயக் கூட்டமைப்பினால் அனுசரிக்கப்படுகிறது.
- இருதய நோய் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கத்தோடு இத்தினமானது அனுசரிக்கப் படுகிறது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "Use Heart to Connect" என்பதாகும்.




## உலக கடல்சார் தினம் – 30 செப்டம்பர்


- கடல் போக்குவரத்துப் பாதுகாப்பு, கடல்சார் பாதுகாப்பு மற்றும் கடல்சார் சுற்றுச்சூழல் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்த ஒரு விழிப்புணர்வை பரப்புவதே இத்தினத்தின் நோக்கமாகும்.

- 1958 ஆம் ஆண்டில் சர்வதேச கடல்சார் அமைப்பின் மாநாடானது நடத்தப் பட்ட தினத்தினை நினைவு கூறும் வகையில் 1978 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் முதல் முறையாக உலக கடல்சார் தினமானது அனுசரிக்கப் பட்டது.
- இந்த ஆண்டின் இத்தினத்திற்கான கருத்துரு, "Seafarers : at the core of shipping's future" என்பதாகும்.
- இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 05 அன்று தேசியக் கடல் தினமானது அனுசரிக்கப் படுகிறது.




## சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் – 30 செப்டம்பர்

- மொழிபெயர்ப்பாளர்கள் போன்ற மொழிசார்ந்த தொழில் முறையினருக்கு கௌரவம் அளிக்கும் வகையில் இந்த சிறப்பு தினமானது உருவாக்கப் பட்டது.
- இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "United in Translation" என்பதாகும்.
- புனித ஜெரோம் என்ற தேவாலயத்தின் ஒரு பாதிரியாரான பைபிள் புத்தகத்தின் மொழி பெயர்ப்பாளரைக் கொண்டாடும் வகையில் இந்த தேதியானது தேர்ந்தெடுக்கப் பட்டது.
- இவர் மொழிபெயர்ப்பாளர்களின் புரவலர் எனவும் கருதப்படுகிறார்.



# இதரச் செய்திகள்

## உலகப் பல்கலைக்கழக தரவரிசை 2022

- டைம்ஸ் உயர்கல்வி (THE) எனும் இதழில் 2022 ஆம் ஆண்டு உலகப் பல்கலைக்கழக தரவரிசையானது அறிவிக்கப்பட்டுள்ளது.
- இதில் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் முதலிடத்தில் உள்ளது.
- கலிபோர்னியா தொழில்நுட்பக் கல்வி கழகம் மற்றும் ஹார்வர்டு பல்கலைக்கழகம் முறையே 2வது மற்றும் 3வது இடத்தில் உள்ளன.
- பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் 301 முதல் 350 இடையிலான இடத்தை பெற்றுள்ளது.
- இந்தத் தரவரிசையானது சமன்செய்யப்பட்ட 13 செயல்திறன் குறிகாட்டிகளின் (13 balanced performance indicators) அடிப்படையிலானதாகும்.

*குறிப்பு*

- பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் – 301/350 வரம்பு
- ரூபாரின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் – 351/400 வரம்பு
- இந்தூரின் இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் – 401/500 வரம்பு.

**INDIAN INSTITUTES IN THE'S WORLD UNIVERSITY RANKINGS 2021**

| Institute | 2020 | 2021 |
|---|---|---|
| IISc | 301-350 | 301-350 |
| IIT Ropar | 301-350 | 351-400 |
| IIT Indore | 351-400 | 401-500 |
| Banaras Hindu University | 601-800 | 601-800 |
| ICT, Mumbai | 501-600 | 601-800 |

Full results at https://www.timeshighereducation.com/world-university-rankings/2021/world-ranking#!/page/0/length/25/sort_by/rank/sort_order/asc/cols/stats
NR = Not Ranked

Source: Times Higher Education

## ஹருன் இந்தியா வருங்கால யூனிகார்ன் பட்டியல் – 2021

- ஹருன் ஆராய்ச்சி நிறுவனமானது சமீபத்தில் இப்பட்டியலை வெளியிட்டது.
- இதன்படி இந்தியா உலகின் 3வது மிகப்பெரிய யூனிகார்ன் (புத்தாக்க நிறுவனங்கள்) நிறுவனங்களுக்கான சூழலமைப்பாகக் கூறப்பட்டுள்ளது.
- இப்பட்டியலில் அமெரிக்கா முதலிடத்திலும் சீனா இரண்டாமிடத்திலும் உள்ளன.
- இதன்படி, இந்தியாவில் 51 யூனிகார்ன்கள் உள்ளன.

- இந்தியத் தரவரிசையில் சிலிங்கோ முதலிடத்தில் உள்ளது.
- சிலிங்கோவின் தலைமையகம் சிங்கப்பூரில் உள்ளது.
- ஒரு நகரில் அதிக யூனிகார்ன் தலைமையகங்களைக் கொண்ட முன்னணி இந்திய நகரம் பெங்களூரு ஆகும்.
- பெங்களூரு 31 யூனிகார்ன்களையும் மும்பை 12 யூனிகார்ன்களையும் கொண்டுள்ளது.




## ZEEL மற்றும் SPNI

- Zee பொழுதுபோக்கு நிகழ்ச்சி நிறுவனமானது (ZEEL) சோனி பிக்சர்ஸ் நெட்வொர்க் இந்தியா (SPNI) என்ற நிறுவனத்துடன் இணைவதாக அறிவித்துள்ளது.
- இதன் இணைப்பிற்கு ZEEL வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த இணைக்கப்பட்ட நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரியாக புனீத் கோயங்கா தொடர்ந்து செயல்படுவார்.
- புனீத் கோயங்கா Zee பொழுதுபோக்கு நிகழ்ச்சி நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஆவார்.

ZEE
Extraordinary Together

SONY
PICTURES
NETWORKS

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★